

என் உயிரில்
கலந்த உயிரே
அருணா நந்தினி

# என் உயிரில் கலந்த உயிரே



## 1

கந்த புராணத்தைப் படித்துக் கொண்டிருந்த கோகிலா... மாடியிலிருந்து மகன் இறங்கி வருவதை உணர்ந்து நிமிர்ந்து பார்த்தார்.

காரின் சாவியை சுழற்றியவாறு இறங்கிக் கொண்டிருந்தான் ராஜ்குமார். தோற்றத்தில் கம்பீரமும்... நடையில் மிடுக்கும் பாரம்பரிய சொத்தாய் அவனுக்கு வந்திருப்பது... கூடவே வசீகரமும்.. வாட்ட சாட்டமாய்... ஆறடிக்கு வளர்ந்து நின்ற மகனைப் பெருமையுடன் பார்த்தாள் தாய்.

இவன் என் பிள்ளை... பூரிப்பு அவரது முகத்தில்..

''புறப்பட்டு விட்டாயா... ராஜா... போட்டோவை எடுத்துக் கொண்டாய் தானே..'' என்று நினைவூட்டினார்.

''அடடா... மறந்து விட்டேனே.. எங்கே அந்த போட்டோ...'' என்று கேட்டான் ராஜ்குமார்.

''இரு... நானே கொண்டு வருகிறேன்'' என்று எழுந்து சென்று... அலமாரியில் பத்திரமாய் வைத்திருந்த புகைப் படத்தை எடுத்து வந்தார்.

மகனிடம் கொடுப்பதற்கு முன் மீண்டும் அந்தப் புகைப் படத்தில் இருக்கும் பெண்ணை உற்றுப் பார்த்தார்.

''இவள் மேனகாவோட பொண்ணா... என்னால் நம்பவே முடியவில்லை ராஜா... குழந்தையில் என்னமாய் கொழு கொழுன்னு சிவப்பா... பொம்மையாட்டம் இருப்பா... இப்பவும் கொழுக் மொழுக்குன்னுதான் இருக்கா... ஆனா... நிறம்... மும்பை போனா கறுத்து விடுவார்களா ராஜா... அது போகட்டும்.. இப்படி பல்லு துருத்திக் கொண்டு... ஒன்றரைக் கண்ணா... இவ மேனகாவோட பொண்ணுன்னு சத்தியம் செய்தாகூட யாரும் நம்ப மாட்டார்கள்... போ'' அங்கலாய்ப்புடன் சொன்னார் கோகிலா.

''குழந்தையில் இருக்கிற மாதிரியே இருக்க முடியு மாம்மா... வளர வளர... மாறத்தான் செய்வார்கள்.. அது இருக்கட்டும்... திடீர் என்று இந்தப் பெண் வருவதற்கு என்ன காரணம்... சோமனாத மாமா உங்ககிட்ட ஏதும் சொன்னா ராம்மா...'' என்று மகன் கேட்டதும்...

''நம்மையெல்லாம் பார்க்கணுமாம்... இந்த எஸ்டேட் எல்லாம் சுத்திப் பார்க்கும் ஆசையாம்... மும்பை அலுத்து விட்டது... ஒரு மாற்றத்திற்கு அங்கு வருகிறாள் என்றார் சோமனாத மாமா... எத்தனை நாள் இந்தக் கிழவனையேப் பார்த்துக் கொண்டிருக்க முடியும் என்கிறார் தமாஷாக. தாயில்லாப் பொண்ணு ராஜா... நம்மை விட்டா அவளுக்கு



யார் இருக்கா... நாமும் கொஞ்ச நாள் இங்கே வச்சுப்போம்... ஏதோ... ஆசையா வருகிறாள் குழந்தை...'' என்றாள் தாய்...

இருந்தும் ராஜ்குமாருக்கு ஏர்போர்ட் செல்ல மனமில்லை.

''யாரையாவது விமான நிலையத்திற்கு அனுப்பி வைத்திருப்பேன்... ஆனால் மாமாவே சொன்னதால் விமான நிலையத்திற்கு நானே போக வேண்டி இருக்கிறது... அங்கே போய் மணிக்கணக்காய் காத்திருக்க வேண்டுமே என்கிற எரிச்சல் தான் எனக்கு... சரிம்மா... அதைக் கொடுங் கள். புறப்படுகிறேன்...'' என்று புகைப்படத்தை வாங்கிக் கொண்டான்.

அதைக் கொடுக்கும்போதே எச்சரித்தார் தாய் ''பத் திரம்ப்பா... எங்கேயாவது தொலைத்து விடாதே. அப்புறம் அந்தப் பொண்ணை அடையாளம் கண்டு பிடிக்க உன்னால் முடியாது..''

''இந்த முகத்தை எப்படி மறக்க முடியும்மா... ஏர்போர்ட்டில் வந்து இறங்குகிறவர்களில் எடுப்பான பல்லும்... கோணக், கண்களும் யாருக்கு இருக்கிறதோ அவள் தான் ஊர்மிளா...''

''பாவம் டா...''

''வேடிக்கைப் பேச்சும்மா... அடையாளத்திற்கு சொன்னது... வரட்டுமா...''

போக வேண்டுமே என்று சலித்துக் கொண்டு செல்லும் மகனை புன்சிரிப்புடன் பார்த்துக் கொண்டிருந்தார் கோகிலா.

விமான நிலையம் அவசரக் கதியில் இயங்கிக் கொண் டிருந்தது.

வரும் விருந்தாளிகளை வரவேற்க ஆவலுடன் காத் திருக்கும் உறவுகள்... கையில் பெயர் அட்டைகளுடன் நின்றிருக்கும் பொறுமைசாலிகள்...

கணவனுக்காக.. இல்லை... காதலனுக்காக தவிப்புடன் காத்திருக்கும் அன்பு உள்ளங்கள்...

நீண்ட காலமாகப் பிரிந்திருந்த பிள்ளைகளைப் பார்க்க தவமிருக்கும் பாசம் மிக்கப் பெற்றோர்கள்...

இவர்களுடன் ராஜ்குமாரும்... பொறுமையை இழுத்துப் பிடித்துக் கொண்டு வரப்போகும் ஊர்மிளாவிற்காகக் காத்திருந்தான்... அவனது சகிப்புத் தன்மை கொஞ்சம் கொஞ்சமாய் குறைவதை அவனது தாடையின் இறுக்கம் காட்டியது.

பொறுமை... அதற்கும் அவனுக்கும் ரொம்ப இடை வெளி... நேரத்தை வீண் செய்வது அவனுக்குப் பிடிக்காத விஷயம்...

இதோ.. இப்போதும் அப்படித்தான்... நேரத்தைப் போக்கிக் கொண்டு... வீணாய் நிற்க வேண்டியிருக்கிறது... யாரோ ஒரு ஊர்மிளாவிற்காக...

இல்லை... அவள் யாரோ ஒருத்தி இல்லை... அப்படி இருந்திருந்தால்... அவன் இங்கு வந்திருக்க மாட்டானே... தன் காரை அனுப்பி வைத்து... டிரைவரிடம் சொல்லி அழைத்து வரச் செய்திருப்பான்...

ஆனால்... இந்தப் பெண் சோமனாத மாமாவின் அருமந்த... செல்லப் பேத்தியாயிற்றே!

அவளே வரட்டும் என்று விட்டுவிட முடியுமா...

''ராஜ்.. முதன் முறையாய் அவளை அனுப்பி வைத்திருக்கிறேன். அதுவும் தன்னந்தனியாய்... எனக்கு அதில் விருப்பம் இல்லை. ஆனால் அவள் விடவில்லை. அடம் பிடித்துக் கிளம்பி விட்டாள். அவளோடு வர.. என் உடல் நிலையும் இடம் தரவில்லை.. நீயே விமான நிலை யத்திற்குப் போய் அவளை அழைத்துச் செல்ல வேண்டும்.



அப்போதுதான் எனக்கு நிம்மதி.. மை சன்'' என்று போனில் பேசும்போது சொன்னாரே... அவரது அன்புக் கட்டளையை மீறவும் முடியாதே...

அவள் துடுக்குக்காரி... தீராத விளையாட்டுப் பெண்... ஏதாவது குறும்பு செய்து கொண்டிருப்பாள். அதனால் தான் வற்புறுத்துகிறேன் என்றும் கூறினார்...

அது மட்டும் அல்ல.. ஊர்மிளாவும் அவனுக்குக் கடிதம் எழுதியிருந்தாள்.. அதுவும் எப்படி...

''ஹலோ... நான் ஊர்மிளா... ஊருக்குப் புறப்பட் டாச்சு... வரவேற்கத் தயார்தானே... விமான நிலையத்தில் என்னைத் தேடி... குழம்பித் தவிக்க வேண்டாமே என்ற கரிசனத்தில்... இதோ என் அங்க அடையாளங்களை எழுதியிருக்கிறேன்... உருப்போட்டு.. நினைவில் வைத்துக் கொள்ளவும். உயரம் ஐந்தடி... அழகா இருக்கிறேன் என்று அடிக்கடி தாத்தா... வேலைக்காரியிடம் சொல்லி.. திருஷ்டி சுத்திப் போடச் சொல்வார்.. பார்க்க அமுல் பேபியாட்டம் கொஞ்சம் குண்டா இருப்பேன்... தாத்தா செல்லம் ஆயிற்றே... நிறம் மட்டும்தான்... கறுப்பு என்றே வச்சுக்கலாம். (குயில் கறுப்புதான்... அழகா இல்லையா என்ன...? வட்ட முகம்... கொஞ்சம் மாறுகண்.. அதாவது உங்கள் பாஷையில் ஒன்றரைக் கண்.. என் முன் பற்கள் அழகாக... எடுப்பாகவே இருக்கும். இந்த அடையாளங்கள் போதும் தானே.. உங்களுக்கு குழப்பம் இருக்காதே... சரி.. இருக்கட்டுமே என்று முன்னெச்சரிக்கையாக என் போட் டோவை இத்துடன் அனுப்பியுள்ளேன். (அதுவும் தாத்தா வின் நச்சரிப்புக்காக... யாராவது என்னை 'கிட்நாப்' பண்ணி விடுவார்களோ என்ற பயம்!)

பின்குறிப்பு: ஹலோ... என் புகைப்படத்தைப் பார்த்துவிட்டு மயங்கி விடாதீர்கள்... இப்பவே உங்களுக்கு

எச்சரிக்கை... எனக்கு திருமணம் நிச்சயமாகி விட்டது... என் வருங்கால கணவனின் பெயர் மனோஜ்... இந்தக் காதல்... ஊதல் சமாச்சாரங்கள் எல்லாம் கூடாது. ஓ.கே.!

விசித்திரமான பெண்!

வினோதமான எச்சரிக்கை...

அவள் அனுப்பி வைத்திருந்த புகைப்படத்தைப் பார்த்து விட்டுச் சிரிப்புத்தான் வந்தது அவனுக்கு.

மயக்கமா... இந்த முகத்தைப் பார்த்தா... சாரி... கொஞ்சம் ஓவராகவே பட்டது அவனுக்கு.

'அந்த மனோஜ் இவளை மணக்கிறான் என்றால்... ஒருவேளை அவனும் சுமாராக இருப்பான் போலும்... அல்லது... பணம் அழைக்கின்றதோ என்னவோ... யாருக்குத் தெரியும்...

அடுத்த கணமே... சேச்சே... சோமனாத மாமாவின் அருமைப் பேத்தியைப் பற்றி இப்படி மட்டமாக நினைப்பது தவறு. மாமாவை அவமானப்படுத்துவது போலாகும் என்று எண்ணினான். ஆனால் ஒன்று மட்டும் நிச்சயமாய் தெரிந்தது... தான் அழகில்லை என்ற தாழ்வு மனப்பான்மை... அந்தப் பேத்திக்கு இல்லவே இல்லை... நிதர்சனத்தை எதிர்கொள்ளும் மனப்பான்மை அவளிடம் இருக்கிறது.. நிச்சயம் அதைப் பாராட்டத்தான் வேண்டும்.

தவிர... கடிதத்தைப் பார்த்தால்... குறும்புக்காரியாகத் தெரிகிறாள். இன்னும்... வந்தால் என்ன செய்வாளோ... இவள் வரவால்... தன் அமைதியான வாழ்க்கை பாதிக்கப் படுமோ.'

தெளிந்த நீரோடையாய்... சலனமில்லாத நீர் படுகையாய் இருக்கும் வாழ்க்கையில் இந்தப் பெண் சுழியாய் சுழன்று நிம்மதியைக் கெடுத்து விட்டால்... நினைக்கவே எரிச்சலாக இருந்தது.



நல்லவேளை... விமானம் வந்து இறங்கி விட்டது. அப்பாடா... பெருமூச்சு விட்டான் அவன்.

காத்துக் கிடந்தவர்களிடையே சலசலப்பு... தவமிருந்த கொக்குகளாய் நின்றவர்கள் அவசரத்துடன் பெயர் அட்டைகளை உயர்த்திப் பிடித்தனர்.

கையசைவுகள்... அணைப்புகள்... உபசார வார்த்தைகள்... கால்களைத் தொட்டு நமஸ்கரிப்புகள்... கைக்குலுக்கல்கள்... அறிமுகங்கள் என்று விதவிதமான வரவேற்புகள்...

இங்கே ராஜ்குமார் தன் பொறுமையை மெல்ல தாரை வார்த்துக் கொண்டிருந்தான்.

எல்லோரும் வந்தாகி விட்டது. இந்தக் குண்டுப் பெண்ணை மட்டும் காணோம்!

மறுபடியும் ஒரு. தடவை புகைப்படத்தை எடுத்துப் பார்த்துக் கொண்டான்...

ஊகூம்... அவள் குறிப்பிட்ட அங்க லாவண்யத்தில் யாரும் வரவில்லை.

தனித்து வந்த பெண்கள் மூன்று பேர்தான்.

ஒருத்தி நாற்பத்தைந்து வயது... 'பாப்' தலையுடன்...

கறுப்புக் கண்ணாடி அணிந்து... ப்ச்சு...

இருபத்து எட்டு வயதிருக்கும்... இன்னொருத்தி... சல்வாரில் வட இந்தியப் பெண்... ஊகூம்.

மற்றொரு பெண்... பதினெட்டு வயதுதான்... ஆனால் வெகு அழகு... நல்ல உயரம்... ஐந்தடி நான்கு அங்குலம்... ஜீன்ஸும்... டீ ஷர்ட்டும் கொடி உடலுக்கு வாகாய் இருந்தது. சின்ன மூக்கின் மீது கர்வமாய் இருக்கும். குளுகுளு கண்ணாடி!

இந்த அழகி எங்கே.. அந்தப் பெண் எங்கே!

பின்னே... அவள்...? வரவே இல்லையோ...

அப்படி இருந்தால் மாமா உடனே தெரிவித்திருப்பாரே...

அந்தப் பெண்ணும் யாரையோ எதிர்பார்த்துக் காத்திருப்பது தெரிந்தது...

தன் கைப்பையிலிருந்து ஒரு போட்டோவை எடுத்து பார்ப்பதும் தெரிந்தது.

ஊருக்குப் புதிது போலும்...

'சரி... இனி பிரயோசனம் இல்லை... போகலாம்.' என்று திரும்பியவனை... ''மன்னிக்கவும்'' என்று தேனாய் குழைந்த குரல் ஒன்று நிறுத்தியது.

அவள்தான்...

தன் கையிலிருந்த புகைப்படத்தைக் காட்டினாள்... அவனது போட்டோ! இவளிடமா?! குழப்பத்துடன் அவளை ஏறிட்டவனின் மூளைக்குள் 'பளிச்'சென்று ஒரு மின்னலின் வெளிச்சம்...

''ஊர்மிளா'' என்று கூவினான்.

''எஸ்... ஊர்மிளாவே தான்...'' குறுஞ்சிரிப்புடன் சொன்னாள் அந்தப் பெண்.

அவளை நன்றாகப் பார்த்தான். கண்கள்... பாலில் விழுந்த திராட்சைகளாய் அலை பாய்ந்தன...

தாயின் நிறத்தைக் கொள்ளவில்லை தான்... இருந்தும் நல்ல நிறம்தான். சருமம், பட்டு போல மிருதுவாய்... மினுமினுப்பாய்... முகத்தில் தந்தையின் சாடையும் தெரிந்தது. ஓவல் வடிவ முகத்தில் சின்ன மூக்கும்... ஆரஞ்சு சுளை உதடுகளும் வனப்பைக் கூட்டிக் காட்டியது நிஜம்... தோள் மட்டும் மயிலின் தோகை போல புரளும் கேசம்... தந்தையின் வளர்த்திதான்.



சிரித்தபோது முல்லைச் சரம் பூத்தது...

இந்த அழகியா...? பின்...? யோசனையுடன் தன் கையில் இருந்த போட்டோவை எடுத்துப் பார்த்தபோது அவனுக்கு சிரிப்பு வந்தது... அடக்கிக் கொண்டான்.

வந்த உடனே குறும்புத்தனமா... சோமனாத மாமா சொன்னது சரிதான்.

''என்ன சார்... அப்படிப் பார்க்கிறீர்கள்... என்னடா எத்துப்பல்... கோண விழியுடைய குண்டுப் பெண் எங்கே போனாள் என்றா... எல்லாம் ஒரு தமாஷுக்குத்தான். உங்களைக் கொஞ்சம் திண்டாட விட்டு வேடிக்கைப் பார்க்கத்தான் இப்படி ஒரு போட்டோவைத் தேடிப் பிடித்து அனுப்பினேன்...''

கன்னம் குழிய... நாசி சுருங்க அவள் சிரிக்கும்போது அவளது அழகு இன்னும் கூடித் தெரிந்தது.

அவனது வேக நடைக்கு இணையாய் நடந்தவாறே கேட்டாள் ஊர்மிளா.

''ஆமாம்... உங்கள்ள எப்படிக் கூப்பிடட்டும்... இனி உங்களுடன் இருக்க வேண்டும் என்பதால் இந்த 'சார்'... 'மோர்' எல்லாம் சரிப்படாது... இல்லையா... உங்களை 'அங்கிள்' என்று அழைக்கணும்னு தாத்தா சொன்னார். ஆனால் உங்களைப் பார்த்தால் அப்படியொன்றும் வயது ஆனது மாதிரி தெரியவில்லையே... 'அங்கிள்'னு கூப்பிட்டால் உங்களுக்கு கோபம் வராதே...''

''என்னை 'ராஜ்' என்றே கூப்பிடு... போதும்...'' என்றான் அவன்.

''அதுதானே பார்த்தேன்... எந்த ஆண் பிள்ளைத் தனக்கு வயதாகி விட்டது என்று ஒப்புக் கொள்வான்...''

மென்குரலில் அவள் முணுமுணுக்க...

''என்ன சொன்னாய்'' என்று அவன் கேட்டான்.

''உங்கள் வீடு ரொம்ப தூரமான்னு கேட்டேன்...''

என்றாள் ஊர்மிளா.

கண்களில் குறும்பு கொப்பளித்தது.

'காரில் போவதால் தெரியாது' என்று அவனது வாய் சொன்னாலும் மனது எதையோ நினைத்தது.

கடவுளே.. இவளை எப்படி சமாளிப்பது. ரொம்பவும் விஷமக்காரியாய் தெரிகிறாளே... வந்தவுடனே ஆரம்பித்து விட்டாள்... இன்னும் என்னவெல்லாம் செய்யப் போகிறாளோ...

ஓரப் பார்வையில் அவளைப் பார்த்தான்... வெளியே மரத்தில் தொங்கி ஊஞ்சலாடும் குரங்குக் குட்டியை ஆர்வத்துடன் ரசித்துக் கொண்டிருந்தாள் ஊர்மிளா.

''ஒரு நிமிடம் ராஜ்... ப்ளீஸ்... வண்டியை நிறுத்துங்களேன். ஒரு 'க்ளிக்' பண்ணி விடுகிறேன்...''

ராஜ் வண்டியை ஒரு ஓரமாய் நிறுத்தினான்.

அவள் தன் காமெராவில் குரங்குக் குட்டியை படம் பிடித்தாள்.

அது மட்டுமா... பசுமையான மலை முகடை... பச்சைப் பசேல் வயலை... ஓடையில் இரைக்காகக் காத்திருக்கும் கொக்கினத்தை... எல்லாவற்றையும் 'கிளிக்'கினாள்.

ராஜ்சேகர் எரிச்சலுடன் கைகடிகாரத்தைப் பார்த்தான்.

அவனுக்கு அவசர வேலை காத்திருந்தது...

''ஊர்மிளா... போகலாமா...'' என்றான்... பொறுமை இழந்தவனாக...



''ஓ'' என்று ஓடிவந்து காரில் அமர்ந்தாள் ஊர்மிளா.

''இந்த போட்டோவையெல்லாம் தாத்தாவிடம் காட்டத் தான்...'' கண்ணடித்து சொல்லும் அவளிடம் கோபமும் காட்ட முடியாததுதான்...

ஆனால் தன்னுடைய நேரத்திற்கும் பொறுமைக்கும் சோதனையாய் இருக்கும் இவளை அனுப்பி வைத்த அந்த சோமனாத மாமாவைத்தான் சொல்ல வேண்டும்...

அந்த கோபத்தை வண்டியின் மீது காட்ட... வண்டி மின்னல் வேகம் பிடித்தது...



## 2

அனக்கொண்டா பாம்பு போல வளைந்து ஓடிய நெடுஞ்சாலையில் கார் வழுக்கிக் கொண்டு ஓடியது.

ஏனோ தன் தலை வீங்கிக் கொண்டு வருவது போல இருந்தது. ராஜ்குமாருக்கு... இரு காதுகளும் 'ஜிவ்'வென்று வளர்ந்து பிரம்மாண்டமாவது போல உணர்வு...

வளவளவென்று விடாமல் பேசிக் கொண்டிருந்தாள் ஊர்மிளா...

மும்பையின் அவசர வாழ்க்கை... தாத்தாவோட பொழுது போக்கு தன் கல்லூரி வாழ்க்கை... மனோஜின் விருப்பு வெறுப்புகள்.. இத்யாதி... இத்யாதி...

கடவுளே... கேட்கும் தனக்கே இப்படி என்றால்... விடாமல் பேசிக் கொண்டிருக்கும் இவளுக்கும் வாய் வலிக்காதா என்ன...

''உங்களைப் பத்தியும் தாத்தா அடிக்கடி சொல்லுவார்... ராஜ்... சினிமா ஹீரோ மாதிரி நீங்க இருப்பீங்களாம்.. உங்களுக்கு கராத்தே தெரியுமாம்... குதிரை சவாரியும் வருமாமே... அப்புறம் நீச்சலில் உங்களை யாரும் மிஞ்ச முடியாதுன்னு சொன்னார்... இன்னும் ... ம்ம்... ஆங்... கால் பந்தாட்டத்தில் சாம்பியன்னு சொன்னார்... அதெல்லாம் உண்மையா ராஜ்... இல்லை. எங்க தாத்தா சும்மா 'ரீல்' விடுகிறாரா...''

''நானும் சொல்லிவிட்டு வந்திருக்கிறேன்... இதையெல் லாம் கண்ணால் பார்த்தப்புறம் தான் நம்புவேன்னு... உங்களுக்கு 'செஸ்' ஆட வருமா ராஜ்... எனக்கு ரொம்ப நல்லா வரும். தாத்தாவைத் தோற்கடிச்சிடுவேன். தாத்தா வும் அழுகுணி ஆட்டம் ஆடுவார் தெரியுமா. மனோஜுக்கு சுத்தமா ஆடவராது.. கல்யாணம் ஆனதும் முதல் வேலையா அவனுக்கு 'செஸ்' சொல்லித் தரணும்னு இருக்கேன்...''

ராஜ்குமார் அவளை வியப்புடன் பார்த்தான். இவள் அப்பாவியா... வெகுளியா...

''அது சரி.. ராஜ்... நீங்கள் ஏன் இன்னும் கல்யாணம் பண்ணிக் கொள்ளவில்லை... ஏதாவது காதல் **தோல்வியா...**'' கடைசி வார்த்தையை மட்டும் கிசுகிசுப்பாய் கேட்டாள்.

மூச்சை இழுத்துப் பிடித்து விட்டான் ராஜ்குமார். தன் அந்தரங்கத்தையெல்லாம் வெளிப்படையாய் கேட்கிறாளே. உண்மையில் வெகுளியேதான்...

''என்ன ராஜ்... நான் கேட்டது உங்களுக்குப் பிடிக்க வில்லையா... சரி... விடுங்க... என்னை எஸ்டேட் சுற்றிக் காட்டுவீர்கள்தானே. அப்புறம்... நான் குதிரை சவாரி



கத்துக்கணும் ராஜ்... கத்துக் கொடுப்பீர்களா... உங்ககிட்ட குதிரையும் இருக்காமே... தாத்தா சொன்னதுதான்... ஊட்டி ரேஸ் பந்தயத்திற்கு குதிரைகளை வாங்கி... பழக்கி அனுப்பு கிறீர்கள் இல்லையா... அதுவும் தெரியுமே...''

'போதும் தாயே... நிறுத்து' என்று அலற வேண்டும் போல இருந்தது அவனுக்கு.

இப்படியா... தகர டப்பாவில் கல்லைப் போட்டு ஆட்டுவது போல.. லொட... டொலவென்று... எப்படித் தான் பொறுத்துக் கொண்டாரோ சோமனாத மாமா.. ஒரு வேளை அவருக்கும் காது வீங்கித்தான் இங்கே அனுப்பி விட்டாரோ... கொஞ்ச நாள் ஹாயாக இருக்கலாம் என்ற எண்ணத்துடன்... அப்படித்தான் இருக்க வேண்டும்.

ஊர்மிளா இன்னும் பேசிக் கொண்டிருந்தது தெரிந்தது. அடை மழை மாதிரி வாயிலிருந்து வார்த்தைகள்!

''ஸ்விம்மிங் பூல் இருக்கிறதா ராஜ். தாத்தா கிட்டே சவால் விட்டு வந்திருக்கேன் தெரியுமா... உங்ககிட்ட எல்லாம் கத்துக் கொண்டு வருவேன்னு... மனோஜிடமும் தான்... சொல்லிவிட்டு வந்திருக்கேன்... சாதித்து வரு கிறேன்னு...'' சொல்லிவிட்டுச் சிரித்தாள் அவள்.

தொண தொணவென்று அவளுடைய பேச்சு அவனுக்கு புதிது... பழக்கமில்லாதது... காதில் பஞ்சைத் திணித்துக் கொள்ள வேண்டும் இருந்தது.

''அடக் கடவுளே... இப்படி ஒரு வாயாடியா... எத்தனை நாள் தங்கப் போகிறாளோ... புலம்பி... புலம்பியே என் தலையை வெடிக்கச் செய்திடுவாள் போலிருக்கிறது. இந்த சலிப்பில் வீடு கூட இன்னும்... இன்னும் என்று தள்ளிச் செல்வது போல அல்லவா தெரிகிறது...

எப்போதடா வீடு வரும்... எப்போது இந்தப் புலம்பல் சுமையை தாயிடம் தள்ளுவோம் என்று வினாடித்

துளிகளைக் கணக்கிட ஆரம்பித்தான்... பாவம்... அடுத்த கணமே அவனுக்கு உறுத்தல் ஏற்பட்டது. அதிசயமாய் தன் பேத்தியை அனுப்பி வைத்திருக்கிறார் அந்த மனிதர்... அதுவும் என் மீது நம்பிக்கை வைத்து... முதல் முறையாக ஊருக்கு வந்திருக்கும் இவளை ஒரு சுமை என்று சலித்துக் கொள்வது சரியில்லையே... ஊர்மிளாவின் தாத்தா சோமனாதர் ராஜ்குமாரின் தந்தைக்கு உயிர் நண்பர்... வயது வித்தியாசம் நட்புக்குத் தடையாக வரவில்லை.

சோமனாதர் சந்திரசேகரை விட ஏழு வயது மூத்தவர். இருவரும் சகோதரர்களைப் போல பழகினார்கள். சோமனாதர் இளம் வயதில் திருமணம் ஆகியவர். மனைவி சாரதா தேவி உண்மையில் தேவி சாரதாவே தான். படித்தவள். குடும்பத்தை நிர்வகிக்கும் பொறுப்பை அந்தப் பெண்மணி ஏற்றுக் கொண்டு நடத்தியதால் சோமனாதரால் வியாபாரத்தில் அதிகக் கவனம் செலுத்த முடிந்தது.

சோமனாதர் சந்திரசேகருடன் சேர்ந்து ஏலக்காய் வியாபாரத்தை ஆரம்பித்தார். நல்ல தரமுள்ள சரக்காய் வாங்கி உயர் மட்ட வியாபாரிகளுக்கு சப்ளை செய்ய ஆரம்பித்தார். வட இந்தியாவில் பல இடங்களை அவர்கள் வளைத்துப் போட்டனர்... வெளிநாட்டிற்கும் சரக்கு ஏற்றுமதியாயிற்று. அவரது காலமும் நன்றாக இருந்தது. போட்டியும் பொறாமையும் குறைந்திருந்த காலம் அது...

மளமளவென்று பணம் சேர... அவர்களே எஸ்டேட் என்றும்... பண்ணையென்றும் வாங்கிப் போட்டனர்.. வெறும் ஏலக்காயுடன் இல்லாமல் கிராம்பு, லவங்கப் பட்டை, மிளகு என்று விரிந்தது.

நடுத்தர வர்க்கமாய் இருந்தவர்களின் அந்தஸ்து உயர்ந்தது. பணக்கார வட்டத்திற்குள் நுழைந்தனர். நட்பும் இறுகி விட்டது. சோமனாதருக்கு கலையுணர்வு அதிகம். அவருக்கு வாய்த்த மனைவியும் அழகுணர்ச்சி மிகுந்தவர்...



அவருடைய மாளிகை பார்த்து.. பார்த்துக் கட்டப் பட்டது. முன்னால் அழகிய புல்வெளி... நடுவில் ரோஜா பதியங்கள் சுவரில் படர்ந்து வளரும் படர் கொடிகள்... தொங்கும் பூச்சட்டிகள்...

வீட்டினுள்ளும் கொள்ளை அழகு... எங்கிருந்து வாங்கி வந்து நிரப்பினாரோ... தெரியவில்லை...

கொள்ளு தாத்தா காலத்து ஆள் உயர கடிகாரம்... வண்ண வண்ண ஓவியங்கள்... கண்ணைக் கவரும் சித் திரங்கள். அதுவும் மாடிப்படி வளைவில் மாட்டியிருக்கும் பெண் ஓவியம்... வெகு அற்புதம்! கையில் விளக்குடன் இருக்கும் ஒரு பெண்ணின் சித்திரம்.

இருட்டில் விளக்கு வெளிச்சம் மட்டுமே... தீபஒளி அந்தப் பெண்ணின் முகத்தில் பட்டு... அதில் உண்டான ஜொலிப்பு! அழகு என்றால் கொள்ளை அழகு!

இளம் வயதில் எத்தனையோ தடவை அந்தப் படத்தின் முன் நின்று ரசித்திருக்கிறான். பார்த்துக் கொண்டே இருக்கலாம் போல தெவிட்டாத அழகு!

இன்னும்... பீங்கான் பொம்மைகள்... பீங்கான் சாடிகள்.. வேலைப்பாடமைந்த மரச் சாமான்கள்... தொங்கும் சர விளக்குகள்... ரத்தினக் கம்பளங்கள்... கலை நுணுக்கம் மிகுந்த நடராசர்... கணேசன் சிலைகள் என்று பட்டியல் நீளும்... ஒவ்வொன்றும் கலைப் பெட்டகம் தான்...

அந்த மாளிகையில் காலம் கழித்ததாலோ என்னவோ ராஜ்குமாருக்கும் அந்தக் கலை உணர்வும் இருந்தது. சோமனாதரிடம் இருந்து நிறையவே கற்றுக் கொண்டான். அவருடைய மகன் ராம்சுந்தர் தந்தை அளவு இல்லை என்றாலும் அழகுப் பொருள்களை ரசிக்கத் தெரிந்தவன். அதனால் தானோ என்னவோ அழகுச் சிலையாய் இருந்த ஒருத்தியை விரும்பி மணந்து கொண்டான்.

ராம் சுந்தரின் மனைவி உண்மையிலே தேவலோக மேனகைதான்... பெயரும் மேனகா... அவள் நடப்பது ம் அழகுதான்... வண்ண பொம்மைக்கு சாவிக் கொடுத்தால் நடப்பதுபோல... ராம் சுந்தரின் தங்கையும் அழகிதான் என்றாலும் மேனகாவின் முன் ஏதும் இல்லைதான்.

பிரம்மன் யாருக்கு சவால் விடுத்து படைத்தானோ... தெரியாது... பார்த்தவுடன் சொக்க வைக்கும் அழகியாய் மேனகையைப் படைத்திருந்தான்.

கருவண்டு கண்களில் கவிதை தெரியும்.

எள்ளுப்பூ நாசியின் அழகு மனதைக் கொள்ளைக் கொள்ளும் கொவ்வைச் செவ்வாயின் குமிண் சிரிப்பில் உள்ளம் குளிரும்... சந்தன நிற மேனியழகு சிந்தையை மயக்கும்... மொத்தத்தில் பிரமிக்க வைத்த அழகு..! தெய்வீக அழகு!

அந்தப் பங்களாவில் சேகரிக்கப்பட்ட அழகு மிக்க கலைப் பொருள்களில் மேனகாவும் ஒன்று... அப்படித்தான் அவள் கருதப்பட்டாள். கண்ணாடிப் பாத்திரத்தைக் கையாளுவது போல நாசூக்காய் நடத்தப்பட்டாள்.

தரையில் நடந்தால் பாதம் நோகும்... பனிக்காற்றுப் பட்டால் மேனி வலிக்கும் என்று கண்ணின் மணியாய் காக்கப்பட்டாள்.

ராஜ்குமார் ராம் சுந்தரை விட பத்தொன்பது வயது இளையவன்... இளம் வயதிலேயே மணமாகி.... அடுத்த வருடமே ராம்சுந்தருக்கு தந்தையானார் சோமனாதர். சந்திரசேகர் அப்படி இல்லை... முப்பத்தெட்டு வயது வரை பிரம்மச்சரியத்தைக் காப்பாற்றி பின்பு கோகிலாவை மணந்து கொண்டவர்... அவருடைய மத்திய வயதில் தான் ராஜ்குமார் பிறந்தது... இந்த ஒரு மகனே போதும் என்று முடிவு செய்தனர் தம்பதியினர்.



ராம் சுந்தர்... ராஜ்குமாரை தனது தம்பியாகவே எண்ணி னான். எதற்கெடுத்தாலும் ராமைத் தேடி வருவான் ராஜ்.

மேனகாவின் அதீத அழகு சிறுவனான ராஜ்குமாரை பிரம்மிக்க வைத்தது... ஏதோ... தேவலோகத்தில் இருந்து இறங்கி வந்த தேவதைப் போல அவன் பார்ப்பான்.

மேனு ஆன்ட்டீ அவனுடைய இனிய தோழியானாள். இரண்டு வருட காலம் அவளுக்கு குழந்தையில்லாமல் இருந்ததால்... ராஜ்குமார் அந்த வீட்டின் செல்லப் பிள்ளையாக நடத்தப்பட்டான்.

ஊர்மிளா பிறக்கும் முன்பே ராம்சுந்தரும் மேனகாவும் மும்பை சென்றுவிட்டனர். அங்கிருந்தவாறு வியாபாரத்தை கவனிக்கும் உத்தேசம்... வடமாநிலத்தில் செழிக்க ஆரம்பித்த வணிகத்தை கவனிக்க ஒருவர் அங்கிருக்க வேண்டுமே.

மும்பை சென்றதும் ஊர்மிளா பிறந்தாள்.

இங்கே மகிழ்ச்சி மிகுதியில் சோமனாதர் ஊருக்கே விருந்து வைத்துக் கொண்டாடினார்.

சில வருடங்கள் கழிந்ததும் சோமனாதருக்கு தனிமை கசந்தது... சொந்த மகனுடன் கடைசி காலத்தைக் கழிக்கும் ஆசையில் இங்கிருக்கும் தொழிலை தன் நண்பனிடம் ஒப்படைத்துவிட்டு மும்பைக்கு சென்று விட்டார்... அங்கு நடக்கும் நிகழ்வுகளையெல்லாம் கடிதம் வாயிலாகவும் தொலைபேசி வாயிலாகவும் பகிர்ந்து கொள்வார்...

ஊர்மிளாவின் விளையாட்டுக்கள்... செய்யும் குறும்புத் தனங்கள்... வணிகம் பற்றிய செய்திகள்... வியாபாரத்தின் நிலை... ராஜ்குமாரின் படிப்பு... வணிகத்துறையில் உயர் கல்வி பெற மேனாட்டுக்குச் சென்றது... அனைத்துச் செய்திகளும் கடிதப் போக்குவரத்து மூலம் பரிமாற்றம் செய்து கொள்ளப்பட்டன.

இரு குடும்பங்களுக்கிடையே இருந்த நட்பு அறுந்து போகாமல் தொடர்ந்தது.

சந்திரசேகரின் ஓய்வுக்குப் பின் ராஜ்குமார் பொறுப் பேற்று தொழிலை விரிவுபடுத்தினான்...

எப்போதும் ஆனந்தம் நிலைத்திருப்பதில்லையே...

ராம் சுந்தரும் மேனகாவும் உறவினர் வீட்டுக் கல்யாணத் திற்காக காரில் பயணம் செய்தபோது... விபத்து நடந்து அதில் பலியாகிவிட... சாரதா அதே துக்கத்தில் உயிர் ஒடுங்கி... மீளாத் தூக்கத்தில் ஆழ்ந்தாள்.

பெற்றவள் ஆயிற்றே...

அடிமேல் அடி... அதுவும் மரண அடி!

ஆடிப்போனார் சோமனாதர்... பசுந்தளிர்கள் காலனின் சீற்றத்தில் உதிர்ந்துபோய் விட்டதே... காய்ந்த சருகான தான் மட்டும் உயிர் வாழ வேண்டிய கொடுமை... நொந்து போனார் பெரியவர்.

இருந்த ஒரு மகளும்... எங்கே தன் தலைமேல் சுமை வந்து விடுமோ என்று ஒதுங்கி விட்டாள்... தாய் இறந்ததோடு மகளின் உறவும் அறுந்து விட்டது.

குழந்தை ஊர்மிளாவின் சிரிப்பும்... கொஞ்சும் மழலையும் தான் சஞ்சீவினியாய் அவரை உயிர் வாழ வைத்தது.. பேத்திக்காகவே வாழ்ந்தார்...

கல்லூரி படிப்புக்கு அவள் வந்ததும் நல்லதொரு விடுதியில் சேர்த்துவிட்டார்.

நடுவே... இருமுறை ஊருக்கு வந்து போனவர்தான்.

சந்திரசேகர் மாரடைப்பில் இறந்தபோது வந்தவர்... அத்துடன் தன் வருகையை நிறுத்திக் கொண்டார். மூப்பு தான் காரணம்.



இப்போது... பழைய உறவை மறக்காமல்... தன் பேத்தியை அனுப்பி வைத்திருக்கிறார்... உறவாட வேறு எந்த உறவும் இல்லையே... நாமும் சலித்துக் கொள்வது எந்தவிதத்தில் நியாயம்...

கூடாது... கொஞ்ச நாட்கள் இங்கே விருந்தாளியாய் தங்க வந்திருப்பவளிடம் முகம் கோணக்கூடாது. சிரித்த முகத்துடன் பழகி... அன்பாகப் பேசி... விருந்தோம்பி.. அவளை மகிழ்வித்து ஊருக்கு அனுப்பினால்... பெரியவர் சந்தோஷப்படுவார்.

இத்தனையும் அவருக்காக செய்ய வேண்டும்... அவர் என் மீது காட்டிய பாசத்திற்காக... அவருக்கு நான் காட்டும் நன்றி அதுதான்...

புது தீர்மானத்தின் காரணமாக... ஊர்மிளாவின் சளசளப்பிற்கு அவன் தலையாட்டிக் கொண்டிருந்தான். ஆனால் அவள் பேசியது எதுவும் தலைக்குள் செல்லவில்லை... ஏன்... காதுக்குள்ளேயே நுழையவில்லை!

ஒரு வழியாய் தன் எஸ்டேட் வந்துவிட்டது... அம்மாடி... தப்பினோம் என்ற நிம்மதியும் வந்தது.

இனி என் வேலை முடிந்துவிட்டது... இனிமேல் இவள் பாடு அம்மா பாடு...

அம்மாவிற்கும் பெண் பிள்ளை என்றால் கொள்ளைப் பிரியம் ஆயிற்றே... நன்கு பார்த்துக் கொள்வாள்.

என்னை விட்டால் போதும்.. அம்மா... பிடி... இவளை... என்று அம்மாவிடம் ஒப்படைத்து விட்டு கை கழுவிக் கொள்ள வேண்டியதுதான்.

வெண்கல மணியாய் கலகலக்கும் இவளுடன் பேசிக் கொண்டிருந்தால் என் தலை வெடித்து விடும். அப்புறம் வேலைப் பார்த்த மாதிரிதான்... தேவையா... நினை

வோட்டத்தில் இயந்திரமாய் காரை ஓட்டினவன் வளைந்து திரும்பினான்...

கண் முன்னே வெண்மை நிறக்கட்டிடம் தெரிந்தது. விரிந்து பரந்திருந்த அந்த மாளிகையைப் பார்த்ததும்

'வாவ்...' என்று கூவினாள் ஊர்மிளா.

இருபக்கமும் படர்ந்திருந்த புல் படுகை நடுவே... செந்நிற கற்கள் பதித்த வழிப்பாதையில் சென்று அந்த கம்பீரமான பங்களாவின் முன் நிறுத்தினான் அவன்.

"இதுதான் உங்கள் பங்களாவா... ரொம்ப ரொம்ப அழகு! தாத்தா சொன்னது நிஜம்தான் ராஜ்... அந்த பங்களாவைப் பார்த்தா உனக்கு திரும்பி வரவே மனசிருக்காதுன்னு சொன்னார். இங்கே இருக்கப் போறேன்னு நினைக்கிறப்போ... எனக்கு குஷி தாங்கவில்லை ராஜ்... ஏன் ராஜ்... இந்த எஸ்டேட்டை சுத்திக் காட்டுவீங்க தானே... சாக்கு போக்கெல்லாம் சொல்லக் கூடாது... என்ன" அப்போதைக்கு அவன் தலையசைத்து வைத்தான்.

கடவுளே... இவள் மட்டும் கொஞ்சம் வாயை மூடிக் கொண்டிருந்தால்...

விண்ணென்று வலிக்க ஆரம்பித்த தலையைத்தட்டிக் கொண்டான்.

வீடும் வந்தாயிற்று... இந்தத் தொண தொணப்பு மூட்டையை அம்மாவிடம் ஒப்படைத்துவிட்டு கைகளை உதறிக் கொள்ள வேண்டும்... இந்த தலைவலியே வேண்டாம்... மீண்டும் மனத்திரைக்குள் சோமனாத மாமாவின் பாசமுகம் எட்டிப் பார்த்தது... 'சாரி... மாமா... என்னால் சமாளிக்க முடியவில்லை. அத்தனை பொறுமை எனக்கில்லையே' என்று மானசீகமாய் மன்னிப்புக் கேட்டுக் கொண்டான்.



ஊர்மிளா படிகளில் விரைந்து ஏறினாள்.. தொல்லை விட்டது என்று நிம்மதி பெருமூச்சு விட்டான் ராஜ்... பாவம்... தலைவலியே இனிமேல்தான் என்பதை அவன் அப்போது அறிந்திருக்கவில்லை.



3

Uploaded by Naghu

"பா...ட்...ட்...டி."

உள்ளே ஓடிவந்த ஊர்மிளா... கூடத்தில்... ஊஞ்சலில் அமர்ந்து கந்தபுராணத்தை வாசித்துக் கொண்டிருந்த கோகிலாவின் மேல் விழுந்து.. அவரது கழுத்தைக் கட்டிக் கொள்ள...

அதைச் சற்றும் எதிர்பார்க்காத அவர்.. நிலை குலைந்து விழப் பார்த்து... பிறகு ஒருவாறு சுதாரித்துக் கொண்டார்.

ஊர்மிளாவின் பின்னால் வந்து நின்ற மகனை வியப்புடன் பார்த்தார்.

இவளா... இவளா ஊர்மிளா... குண்டுப் பெண்.. கோணல் விழி இல்லையே... அத்தனையும் பொய்யா...

பார்வையில் கேள்வி தெரிந்தது.

அவனும் புன்னகையுடன் தலையசைத்தான்.

இனிமேல் இவளைச் சமாளிப்பது உங்க பாடு என்பது போல தாயைப் பார்த்தான்.

கோகிலா... ஊர்மிளாவை அருகில் அமர்த்திக் கொண்டு நலம் விசாரிக்க ஆரம்பித்தார்... சோமனாதரைப் பற்றிக் கேட்டாள்.

ஊர்மிளாவின் வாய் இயந்திர கதியில் பதில் சொன்ன போதிலும்... கண்கள் மட்டும் துறுதுறுவென்று அலை பாய்ந்தன. அங்கிருந்த ஒவ்வொரு பொருள் மீதும் பார்வை படிந்து... வலம் வந்தது.

''சரிம்மா... போய் முகம் கழுவிவா... எப்போ சாப்பிட்டாயோ... பசித்திருப்பே... டிபன் சாப்பிடலாம்...'' என்று கோகிலா சொல்ல...

''குளித்து விட்டே வருகிறேன் பாட்டி... அப்போத்தான் 'பிரஷ்ஷா' இருக்கும்... அதுவரைக்கும் இதை வைத்திருங்கள்...'' என்று சொல்லிவிட்டு... தன் ஜீன்ஸ் பாக்கெட்டிலிருந்து கைநிறைய காட்பரீஸ் சாக்லெட்டை எடுத்து நீட்டினாள் ஊர்மிளா.

''விமானப் பணிப் பெண்கள் கவனிக்காதபோது எடுத்து உள்ளேப் போட்டுக் கொண்டேனாக்கும்...'' என்று கண் சிமிட்டினாள்...

''சரி... பாட்டி.... என் அறை எங்கே... மாடியிலா...'' என்று விசாரித்து தெரிந்து கொண்டு... குதித்து ஓடினாள் ஊர்மிளா.

அவள் செல்வதையே பார்த்துக் கொண்டிருந்து விட்டு மகன் பக்கம் திரும்பினார் கோகிலா.

''என்ன ராஜா... புயலைப் பெண்ணாக்கி அனுப்பி வைத்திருக்கிறாரா அந்தப் பெரியவர். சூறாவளிக் காத்து அடிச்சு ஓய்ந்தது மாதிரி இருக்கு... சாந்தமான மேனகாவிற்கு இப்படி ஒரு பொண்ணா.. என்னால் நம்பவே முடியவில்லை. ராஜா.. என்னமாய் நம்மைக் குழப்பிவிட்டு



விட்டாள். குண்டு உடம்பாம்... எடுப்பான பல்லாம்... கோணக் கண்ணு வேறே. நல்ல குறும்புக்காரிதான்...!'' சிரித்தார் கோகிலா.

''அது மட்டுமா... வாயாடி வேறு... வாய் மூடாமல் லொடலொடலவென்று பேச்சு... என் தலை வீங்கியிருக்கிறதா என்று பாருங்கள்... எப்படித்தான் சகித்துக் கொண்டிருக்கிறாரோ மாமா... ஒருவேளை... இவளின் தொணதொணப்பு தாங்க முடியாமல்தான் இங்கு அனுப்பி விட்டாரோ என்னவோ...'' நெற்றியை அழுக்கிக் கொண்டே சொன்னான் ராஜ்குமார்.

''தாயில்லாத குழந்தை இல்லையா... அதான்.. தாத்தா செல்லம் வேறு... அதான் சிட்டுக் குருவி மாதிரி நிற்காம சுத்தறா.. கொஞ்ச நாளில் சரியாகிவிடும் பார்.. இவளா ஊர்மிளான்னு சொல்ற மாதிரி அடங்கிடுவா...''

மகனைப் போலவே தாயும் ஊர்மிளாவைத் தப்புக் கணக்கு போட்டு விட்டாள்...

ஊர்மிளா... எப்போதும் அணை போட்டுத் தடுக்க முடியாத காட்டாற்று வெள்ளம் போன்றவள் என்பதை அவர்கள் அறிந்திருக்கவில்லை.

''யாரும்மா... புதுசா வந்திருக்கிற பொண்ணு...'' கேட்டுக் கொண்டே வந்தாள் அஞ்சலை... வேலைக்காரி...

அவளும் இள வயதுதான். பத்தொன்பது வயது இருக்கும். கிட்டத்தட்ட தன் வயதை ஒத்தவள் சிறு பிள்ளையாய் குதித்தோடிச் சென்றதைக் கண்டு வியப்படைந்தாள். இதுவரைக்கும் தான் பார்த்திராத இந்தப் புதுப்பெண் யாராக இருக்கும் என்ற ஆர்வம்...

''உனக்கு தெரிந்திருக்க முடியாது அஞ்சலை. உன் அம்மாவுக்குத் தெரியும். சோமனாதர்னு தெரிந்தவர்...

அவரோட பேத்தி இவள்.. இனிமே அந்தப் பொண்ணை கவனிச்சுக்கற வேலையை உனக்குத் தர்றேன்... ரொம்பவும் குறும்புன்னு தெரிகிறது. பார்த்து நடந்து கொள்... என்ன'' என்று எச்சரித்தார் கோகிலா...

''என்கிட்டே விடுங்கம்மா... நான் பாத்துக்கறேன்...'' என்று சொல்லிவிட்டு சென்றாள் அஞ்சலை...

தலையை வாரிக் கொண்டிருந்த ஊர்மிளா அவளைப் பார்த்துவிட்டு சிநேகமாய் சிரித்தாள்... ''உன் பெயர் என்ன...'' என்று கேட்டதும் முகமெல்லாம் சிரிப்பு அஞ்சலைக்கு.

''அஞ்சலைம்மா... உங்களுக்கு எதாச்சும் வேணுமான்னு கேட்டுட்டுப் போக வந்தேன்ங்க... சோப்பு... துண்டு எல்லாம் அங்கேயே வச்சிருக்கேன்... பாத்திங்க இல்லே...''

''எனக்கு எதுவும் தேவையில்லை அஞ்சலை... கேட்டதற்கு நன்றி... அப்புறம் உனக்கு கல்யாணம் ஆயிடுச்சா...'' வெட்கத்தோட இல்லையென்று தலையசைத்தாள் அந்தப் பணிப்பெண்...

''வெட்கத்தைப் பார்த்தால்... ஏதோ ஒரு விஷயம் இருக்குன்னு தெரிகிறது... என்னது அது... அஞ்சலை...'' ஆள் காட்டி விரலை ஆட்டியவாறு பரிகாசமாய் கேட்டாள் ஊர்மிளா...

''போங்கம்மா...'' நாணத்தில் குழைந்தவளாய் தலை குனிந்து கொண்டாள் அஞ்சலை...

''அப்போ... யாரையோ காதலிக்கிறே... ரைட்...''

''அய்யோ... என்னம்மா...''

''ஏய்... ஏய்... நிஜம்தானே... ஓகே... உன் வீட்டில் ஒப்புக் கொண்டாச்சா... என்ன... இல்லையா... ப்ச்சு.. கவலைப் படாதே அஞ்சலை... உன் காதலுக்கு உதவ நானிருக்கேன்...



உன் கல்யாணம் நிச்சயம் நடக்கும்... பாரேன்... அஞ்சலை...''

கூந்தலை இழுத்து ஒரு 'கிளிப்'பில் அடக்கியவாறே ஊர்மிளா சொன்னாள்.

கேட்க வேண்டுமா... அஞ்சலையை, பூரித்துப் போனாள். அப்புறம் என்ன... அவள் சரணாகதிதான்...

''ரொம்ப நல்ல பொண்ணும்மா... என்னமா பழகுது. தங்கமான மனசு அம்மணிக்கு...''

ஊர்மிளாவிற்கு உடனே சான்றிதழும் தந்துவிட்டாள். அடுத்த பதினைந்து நிமிடங்களில் வண்ணத்துப்பூச்சியாய் பறந்து வந்தாள் ஊர்மிளா.

பெயர் தெரியாத ஏதோ ஒரு மாடர்ன் உடையில் இருந்தாள்...

மாடியிலிருந்து மானாய் குதித்து வந்தவளைப் பார்த்து விட்டு கலவரத்துடன் மகனைப் பார்த்தார் கோகிலா.

''ராஜா... காற்றாய் சுத்தும் இந்தப் பொண்ணை இரண்டு மூன்று மாதம் எப்படிக் கட்டிக் காக்கப் போறோம்னு தெரியலையே... இப்பவே லேசாய் வயிற்றைக் கலக்க ஆரம்பித்து விட்டதுப்பா... 'என்ன செய்யலாம்' என்ன செய்யலாம் கண்கள் விஷமத்தனமாய் சுத்தறது... என்ன செய்வதுன்னு தெரியலேப்பா...'' என்றார் தாய்.

''அழைத்து வந்து விட்டதோடு என் வேலை முடிந்து விட்டது. இனி நீங்கள் ஆயிற்று... ஊர்மிளா ஆயிற்று. ஆளை விடுங்கள்... இப்போது வீணா வீட்டுக்குப் போக வேண்டும். நேரமாகி விட்டது. வருகிறேன்...''

காபியை குடித்துவிட்டு எழுந்தான்.

''பாட்டி... நான் ரெடி... எனக்கு பசி வயிற்றைக் கிள்ளி எடுக்கிறது... சாப்பிட என்ன இருக்கிறது... ஒரு... ஹே...

ராஜ்... எங்கே... 'ஜம்'மென்று புறப்பட்டு விட்டீர்கள்... நானும் வரட்டுமா...''

பசியை மறந்து ஊர்மிளா கெஞ்சவும்...

தாயைப் பரிதாபமாய் பார்த்தான் ராஜ்குமார்...

அந்தப் பார்வையைப் புரிந்து கொண்ட தாயும் உடனே உதவிக்கு வந்தார்.

''ஊர்மிளா... இப்போ தான் வந்திருக்கே... ஓய்வு எடுத்துக்கோம்மா... நாளைக்கு வெளியே சுத்தலாம்...'' என்றாள்.

சிரித்தாள் ஊர்மிளா...

''ஓய்வா... பாட்டி.... வயதானவர்களுக்குத்தான் பயணம் செய்து வந்த அலுப்பும் களைப்பும்... என்னை மாதிரி இளைஞிகளுக்கு அதெல்லாம் வராது பாட்டி... எப்போதும் சுறுசுறுப்புதான்... சரி போகலாமா... ராஜ்... எங்கேயாவது ஓட்டலில் சாப்பிடுவோம்... என்ன...''

அவனது கரத்தைப் பற்றிக் கொண்டு சின்னக் குழந்தையின் ஆர்வத்தோடு அவள் கேட்டதும்... இப்போது என்ன செய்வது என்று விழித்தான் ராஜ்.

''என்னம்மா... ஊர்மிளா... இப்போது இவன் எங்கே போகிறான் தெரியுமா... தன் வருங்கால மனைவியை சந்திக்கத்தான்.. நீ உடன் போவது நாகரீகமா... சொல்லு...''

'கடவுளே... வந்த அன்றைக்கே... பொறுமையை சோதிக் கிறாளே இந்தப் பெண்... இவளை வைத்துக் கொண்டு என்ன செய்யப் போகிறேன்... தெரியலையே.' மனசுக்குள் புலம்பினாள் கோகிலா.

''ஓ! வருங்கால மனைவியா... அப்படின்னா... ஃபியான்சி.. அதை தைரியமா சொல்ல வேண்டியதுதானே ராஜ்... இந்த



காலத்தில் பெண்களே பரவாயில்லை... வெட்கப்படுவ தில்லை... மனோஜும் அப்படித்தான் பாட்டி... எங்கே யாவது சென்றால்...'' திகைத்து நின்ற மகனுக்கு சைகை காட்டி அனுப்பி விட்டு ஊர்மிளா சொல்வதை கவனத் துடன் கேட்டாள். ஊர்மிளாவும் மும்பை நிகழ்ச்சியை மகிழ்ச்சியுடன் விளக்க ஆரம்பித்தாள்.

வெளியே வந்ததும் வழிந்த வியர்வையைத் துடைத்துக் கொண்டான் ராஜ்.

அன்றைய அனுபவமே அவனுக்குப் போதும் போதும் என்று ஆகிவிட்டது. வரும்போது செய்து கொண்ட உறுதி மொழி கற்பூரமாய் கரைந்து விட்டது.

சோமனாத மாமாவுக்காகவாவது ஊர்மிளாவிடம் பொறுமையாக... கனிவாக இருக்க வேண்டும் என்று நினைத்ததை செயல்படுத்த முடியாது போலிருக்கிறதே...

இவளை எப்படி தினம் தினம் சமாளிப்பது... நினைப்பே திகிலாக இருந்தது... பெருமூச்சு விட்டான்.

வீணாவைப் பார்த்துவிட்டு வீடு திரும்ப மணி பத்துக்கு மேல் ஆகிவிட்டது.

கூடத்தில் கோகிலா மட்டுமே இருந்தாள்.

ராஜ்குமாரின் கண்கள் பரபரப்புடன் அலைவது கண்டு கேட்டார் தாய்.

''யாரைத் தேடுகிறே ராஜா... ஊர்மிளாவையா...''

''ஆமாம்மா... தூங்கிட்டாளா...''

''ஒரு வழியாய் மாடியேறினாள்... அதுவும் வலுக்கட்டாய மாய் அனுப்பி வைத்தேன். ஒரு நிமிஷமும் சும்மா இருக்க முடியவில்லை அவளால்... நீ போனதும்... ஏதாவது விளை யாடணும்னாள்... அஞ்சலையோடு 'ஷெட்டிலா'மே...

அதை விளையாடினாள்.. அஞ்சலைக்கு சொல்லிக் கொடுத்தாள். இருட்டினதும்... உள்ளே வாம்மா... குளிர் காத்து உடம்புக்கு ஆகாதுன்னதும் அரை மனசோட வந்தாள்... வீட்டுக்குள்ளே பொழுதை போக்க நல்ல ஆட்டம் இருக்குன்னு பரமபதம் அட்டையைக் கொண்டு வரச் சொன்னேன்... நம்ம அஞ்சலையை... ஆர்வத்தோட ஆடினாள்... நாங்க பாம்பில் இறங்கறப்போ, குழந்தைத் தனமா கைத்தட்டல் வேறு... ஆட்டம் முடிந்ததும் போய் படும்மான்னேன்... அஞ்சலை சும்மா இருக்காமல்... பல்லாங்குழி ஆட்டம் இன்னும் ஜோரா இருக்கும்னு சொல்லி விட்டாள்... ஆடலாமேன்னு குதிக்க ஆரம்பித்து விட்டாள் ஊர்மிளா... நாளைக்குப் பார்த்துக்கலாம்... நீ போ அஞ்சலைன்னு அவளை அனுப்பிவிட்டு... ஊர்மிளாவையும் படுக்க அனுப்பி வைத்தேன்... உஸ்ஸ்... போதும் போதும் என்று ஆகிவிட்டது ராஜா..."

"ஒரு வழியாய் கடக்காமல்... சுழன்ற சூறைக் காற்றை அடக்கி ஓய்வெடுக்க வைத்து விட்டீர்கள்.. அப்படித் தானேம்மா..." சிரித்தவாறு சொன்னான் ராஜ்குமார்.

"பாவம் ராஜா... தொணதொணப்பும்... குறும்புத் தனமும் இருந்தாலும்.. ஊர்மிளா கபடு இல்லாதப் பொண்ணா இருக்கா... குழந்தை மாதிரிதான்... தாய் இருந்தா வேறே மாதிரி வளர்த்திருப்பா.. பெரியவர் செல்லமா வளர்த்த தால்... கொஞ்சம் பிடிவாதம் இருக்கு... தாத்தா.. பேத்தியை அவள் போக்கில் சுதந்திரமா விட்டதால் கட்டுக் கடங்காமல் வளர்ந்து விட்டாள்... அவள் அன்புக்கு ஏங்கியிருக்கிறாள்ன்னு நான் நல்லா புரிந்து கொண்டுவிட்டேன்... அதே அன்பால் தான் அவளை சரிப்படுத்தணும்... அதுக்கு பொறுமை அவசியம்..."

"சத்தியமா எனக்கு இல்லை... என் வழிக்கு அவள் வராமல் இருந்தால் சரி..."



"அப்புறம் சொல்ல மறந்துவிட்டேனே... சோமனாதர் போன் பண்ணியிருந்தார்..."

"என்னவாம்..."

"ஊர்மிளா நல்லபடியா வந்து சேர்ந்ததற்கு நீ தகவல் சொன்னேயாம்... ஊர்மிளாவும் 'செல்'லில் நம்மைப் பற்றி அளந்திருக்கிறாள் போல... அதான் போன் பண்ணி பேசியிருக்கிறார். பாவம்... ரொம்பவும் உணர்ச்சி வசப் பட்டுட்டார். ஊர்மிளா இதுவரைக்கும் எங்கேயும் போனதில்லை... முதல் முறையா அவளை அனுப்பி வைத்திருக் கிறேன்... உன்னிடத்தில் இருந்தால் எனக்கு எந்தவிதக் கவலையும் கிடையாது. ராஜ் மீது எனக்கு கொள்ளை நம்பிக்கை... கண்மணியாய் கவனித்துக் கொள்வான்னு... சொன்னார்..."

ராஜ்குமாரின் மனதில் உறுத்தல்... மனிதர் எத்தனை நம்பிக்கை வைத்து அனுப்பி வைத்திருக்கிறார்... அவர் மீது எரிச்சல் பட்டோமே..

"இன்னும் என்ன சொன்னார் தெரியுமா ராஜா... ஒரு தாய் வளர்க்கிறதுக்கும்... தாத்தா வளர்க்கிறதுக்கும் நிறைய வித்தியாசம் இருக்கும்மா... தாயால் கண்டிக்க முடியும். என்னால் அது சாத்தியம் இல்லை... தாய்... பொண்ணா வளர்த்திருப்பாள். நான் அவளைக் குழந்தையாகவே நடத்தறேன்.. அதுதான் இன்னும் குழந்தையாகவே இருக் கிறாள்... அவளது விளையாட்டுத்தனம் குறைந்தா போதும்... நீ தான் அவளுக்கு இதமா எடுத்துச் சொல்லி மாத்தணும் கோகிலான்னு சொன்னப்போ... எனக்கு பரிதாபமா இருந்தது ராஜா... ஒண்ணும் கவலைப்படாதீங்க... நான் பார்த்துக்கறேன்னு சொன்னதும் அமைதியானார்..."

"எப்படியோ... காற்றைக் கட்டிப் போடப் பார்க் கிறீர்கள்.. கடல் அலையை சிமிழுக்குள் அடக்கப் போகி

தீர்கள்... குட்... செய்யுங்கள்... என்னோட வாழ்த்துக்கள்...'' கேலி செய்தான் மகன்.

''என்ன செய்யறது... பெண் குழந்தையாச்சே... அதுவும் தாயில்லாப் பொண்ணு... புத்திமதி சொல்லி தான் அவளைத் திருத்தணும்... அவளது குழந்தைத் தனத்தையும்.. குதியாட்டத்தையும் மாத்திட்டா போதும்... ராஜா... மத்தபடி அவள் தங்கம்தான்... சரி... நீ போய் தூங்குப்பா... நாளைக்கு நீ சீக்கிரம் எழுந்திருக்கணுமே... உடற்பயிற்சி... குதிரை சவாரின்னு புறப்பட்டு விடுவே... சீக்கிரமா படுத்துக்க...'' தன் அறைக்கு செல்ல எழுந்தார்.

''ஒரு நிமிஷம்மா...'' ராஜ்குமார் அன்னையை அழைத் தான்.

''என்னப்பா... சாப்பிடலையா... ஏதாச்சும் வேணுமா... அதைக் கேட்காமல் ஏதேதோ பேசிக் கொண்டிருந்து விட்டேனே... பசிக்குதா ராஜா...'' தவித்துப் போய் கேட்டார் தாய்.

''அதில்லைம்மா... நான் வீணா வீட்டிலேயே சாப்பிட்டு விட்டேன்... கவலைப் படாதீர்கள்... நான் சொல்ல வந்தது வேறே... காலை நேரத்தில் நான் குதிரை சவாரிக்குப் போவேன் என்ற விஷயத்தை ஊர்மிளாவிடம் சொல்ல வில்லை தானே...'' என்றான் ராஜ்குமார்.

''ஏம்ப்பா... எதுக்கு கேட்கிறே...''

''அவளுக்குத் தெரிந்தால் அவளும் புறப்பட்டு விடுவாள். வரும்போதே நச்சரிப்பு... குதிரை ஓட்டக் கத்துக்க வேண்டுமாம்... அதான்... அவளுக்குத் தெரியாமல் புறப்பட வேண்டும்...''

''நல்லவேளை... அவ்விடம் எதுவும் சொல்லவில்லை... தவிர... அலுப்பில் அவள் எழுந்திருக்க மாட்டாள்.



மும்பையில் வளர்ந்த பொண்ணு ஆச்சே... எட்டு... ஒன்பது மணிக்குத்தான் விழிப்பாள். கவலைப்படாதே.. ராஜா...''

அங்கேயும் தப்புக் கணக்கு!

ஊர்மிளாவைப் பற்றி சரியாக தெரிந்து கொள்ளவில்லை...

மாடியில்... ஊர்மிளா குதிரை சவாரி கனவுகளுடன் உறங்கிக் கொண்டிருந்தாள்.

அருகே இருந்த டீபாயில்... அதுக்கு வாகாய் உடுத்த பொருத்தமான உடை!

ஆழ்ந்த தூக்கத்திலும் அவளின் இதழ்களில் கீற்றுப் புன்னகை.

கனவுகளா... இருக்க வேண்டும்...



# 4

விடிவெள்ளி இன்னும் கண் சிமிட்டிக் கொண்டிருந்தது.

ஐந்து மணி!

குளிர்ந்த காற்று ஜிலுஜிலுவென்று... இதமாய்.. உடலை வருடிக்கொண்டிருக்கும் அதிகாலைப் பொழுது...

ராஜ்குமார் உற்சாக நடையுடன் குதிரை இலாயம் நோக்கி சென்று கொண்டிருந்தான்...

அவனுக்காகவே காத்திருந்தது... அவனது செல்லக் குதிரை.

உடற்பயிற்சிகளில் மிகசிறந்த பயிற்சி குதிரை சவாரி தான் என்பது அவன் அனுபவத்தில் கண்ட உண்மை... மேலும் சோமனாதர் அடிக்கடி சொல்வார்... எஸ்டேட்டை விரைவாய் சுற்றிப் பார்க்க குதிரைதான் சரி என்று... இண்டு... இடுக்கு விடாமல் சுற்றிப் பார்க்க முடியும். அதுவும் நூற்றுக்கு நூறு உண்மையே.

''ராஜா... குதிரை சவாரி செய்... உடம்பு உன் பேச்சைக் கேட்கும்... உடம்பில் கொஞ்சமும் சதை போடாது. ராம் சுந்தருக்கு எவ்வளவோ சொல்லிப் பார்த்து விட்டேன். அவனுக்கு அதில் ஈடுபாடே இல்லை. நீயாவது என் பேச்சைக் கேளப்பா..'' என அடிக்கடி சொல்லுவார்.

சோமனாதருக்கு குதிரை சவாரி என்றால் படு விருப்பம். அவர்களின் நண்பர்களில் வெள்ளைக்கார துரைகளும் இருந்தனர். அவர்களிடம் இருந்து வந்த மோகம்...

மேலும் உயர்ந்த ஜாதிக் குதிரைகளை வாங்கிப் பழக்கி பெங்களூர்... ஊட்டிக்கு பந்தயத்திற்காக அனுப்பி வைக்க ஆரம்பித்த பின்பு அது இன்னும் கூடியது.

நல்ல குதிரைகளைத் தனக்காக வைத்துக் கொள்வார்... கார் சவாரியை விட அவருக்குப் பிடித்தது குதிரைதான். சிறு பிள்ளை ராஜ் நேரம் கிடைக்கும்போதெல்லாம் குதிரை லாயத்திற்கு சென்று அந்தக் குதிரைகளைத் தடவிக் கொடுப்பான்.

''உனக்கு ஆசையாக இருந்தா சொல்லு ராஜா... ஒரு சின்னக் குதிரையை உனக்கு அன்பளிப்பாக தந்து விடுகிறேன்... வேணுமா...'' என்று அவர் கேட்டதும்...

''அப்பா...'' என்று தயங்கினான் ராஜ்குமார்.

''அவனை விடு... நான் சொல்லிக் கொள்கிறேன். என்னை மாதிரியே நீயும் நல்ல 'ஹார்ஸ் ரைடிங்கி'ல் திறமை



சாலியாக ஆகணும்... அப்படி வருவேங்கிற நம்பிக்கை எனக்கு இருக்கு கண்ணா... நாளைக்கே பார்... ஒரு அழகான குட்டிக் குதிரை இங்கே இருக்கும்... போதுமா...'' என்றார் உறுதியாக.

''வேண்டாம்...'' அழுத்தமாய் சொன்னான் சிறுவன்...

''வேண்டாமா... ஏம்பா... அப்பா திட்டு வாங்க என்றா...''

''இல்லை... குட்டிக் குதிரை வேணடாம்... இந்த மாதிரி பெரிய குதிரையா வேண்டும்...''

'ஹா... ஹா...' என்று வாய்விட்டு சிரித்து விட்டார் பெரியவர்...

''என் சிஷ்யப்பிள்ளைடா நீ... பார்... உன்னை என் வாரிசாக்குகிறேன்... நாளையிலிருந்து உனக்குப் பாடம் ஆரம்பம்...''

சொன்னபடியே நல்ல குருவாக இருந்து கற்றுத் தந்தார். குருவையே மிஞ்சும் சிஷ்யனாய் தேர்ச்சி பெற்றான்.

சோமனாதர் வாயால் 'சபாஷ்' வாங்கினான்.

''எந்தக் காரணத்துக்காகவும் இதை விட்டுடாதேப்பா... எங்க காலத்துக்குப் பிறகு இந்தப் பயிற்சியில் ஆர்வம் மங்கிப் போகலாம்... குதிரை சவாரி என்பதே வினோதமாய் படலாம். இது பணக்காரர்களுக்கு மட்டுமே உரிய விளையாட்டுன்னு கூட ஆகலாம். ஆனால் நீ மட்டும் விட்டு விடாதே... நான் ஆசையாகக் கற்றுத் தந்ததற்காக வாவது தொடர்ந்து செய்... செய்வாய்தானே ராஜா...!''

அவனும் செய்வதாக உறுதிமொழி தந்ததும் மகிழ்ந்தார். அவர் எஸ்டேட்டில் இருக்கும்வரை இருவரும் சேர்ந்து சவாரி செய்வது வழக்கமாகிப் போனது... சில சமயங்களில் போட்டியும் வரும்... சோமனாதரை ஜெயித்துக் காட்டு வான் ராஜ்...

சோமனாதர் மும்பை போனதும்... ராஜுக்கு தனிமையில் செல்லவும் மனமில்லை... ஆனால் அவருக்குக் கொடுத்த வாக்குறுதிக்காக அந்தப் பயிற்சியைத் தொடர்ந்தான்.

சோமனாதர் வாங்கித் தந்த குதிரை பெண் குதிரை. அந்த குதிரையின் மீது உயிரையே வைத்திருந்தான். சிறு பிள்ளை யான ராஜ். அதற்குத்தான் எத்தனை அறிவு!

ஒரு முறை மேலிருந்த கிளைத் தட்டியதில் நிலை குலைந்து அருகில் இருந்த கிடுகிடு பள்ளத்தில் அவன் உருண்டு விழ... அந்த வாயில்லா ஜீவன் தவித்து... அவன் விழுந்த இடத்தில் தவம் கிடந்தது. அவனுக்கு நினைவு வரும் மட்டும் அங்கேயே நின்று கொண்டிருந்தது... அவன் விழித்ததும்... சந்தோஷ மிகுதியில் அது கனைத்த கனைப் பில் அந்த இடம் முழுக்க அதிர்ந்து போனது!

அதைப் பார்த்து நெக்குருகிப் போனான் ராஜ்.

அன்றையிலிருந்து அது அவனின் உயிர்த் துணையாக மாறியது... வயதாகிப் போனாலும் அதைப் பிரியாமல் இருந்தான்.

அது இறந்தபோது அவன் அழுத அழுகை... இதயம் உடைந்து போனதுபோல் துடித்துப் போனான்.

அந்த டீன் ஏஜ் பருவத்தில் அது பெரிய இழப்பாகப் பட்டது. தாயை உரித்துப் பிறந்திருந்த அழகான குதிரைக் குட்டி அவனது வேதனைக்கு மருந்தாக இருந்தது... அதுவும் பெண் குதிரைதான்...

இப்போது இருப்பது பேரக்குட்டியான 'டெவில்!' கறுப்பு நிறத்தில் மிடுக்காய் நிறகும் ஆண் குதிரை! தன்னைக் காப்பாற்றிய அந்தத் தாய் பிராணியின் மீதிருந்த நன்றியும் பாசமும் தொடர்ந்து... டெவில் மீது அன்பாகியது. அதன் மீது சவாரி செய்வதில் ஒரு அலாதி சுகம்! இருட்டுப் பிரியாத



விடியலில் டெவில் மீது அமர்ந்து... சில்லென்ற காற்றின் ஊடே வலம் வருவது அவனுக்குப் பிடித்தமான செயல்...

இப்போதும்... டெவிலைப் பார்க்கப் போகும் உற்சாகத் துடன் நடந்தவனை... ஒரு குரல் இழுத்து நிறுத்தியது.

''அலோ... குட்மார்னிங்...''

திரும்பாமலே அவனுக்குத் தெரிந்துவிட்டது. யார் அது என்று...

உற்சாகம் எல்லாம் கரைய... மெல்லத் திரும்பினான்.

ஓடி வந்து அருகில் நின்றாள். மேலும் கீழுமாய் மூச் சிரைத்தது.

''குதிரை சவாரிதானே... நானும் வருகிறேனே...'' என்றாள் ஊர்மிளா.

''இந்த நேரத்தில் நான் செல்வேன் என்று உனக்கு யார் சொன்னது...'' சந்தேகத்துடன் கேட்டான் அவன். கன்னம் குழிய சிரித்த அவள் ''அஞ்சலை'' என்று கண் சிமிட்ட...

''இடியட்'' என்று அடிக்குரலில் உறுமினான் அவன்.

''அஞ்சலையிடம் நான்தான் கேட்டுத் தெரிந்து கொண்டேன் ராஜ்... எத்தனை மணிக்கு... எங்கே என்று விசாரித்துக் கொண்டேன்... அலாரம் வச்சு காலையில் எழுந்து விட்டேன்...'' குதூகலத்துடன் சொன்னாள் அவள்.

பற்களைக் கடித்துக் கொண்டான் அவன்.

''கழுத்தில் கட்டிய சுமையாட்டம் தொல்லை...'' வாய்க்குள்ளே முணுமுணுத்துக் கொண்டான்.

''சீக்கிரமா எழுந்து வந்திருக்கேன்னு பாராட்டுகிறீர்களா ராஜ்... எனக்குத் தெரியும். நீங்க முகம் சுணங்க மாட்டீங் கன்னு... தாத்தா என்ன சொன்னார் தெரியுமா... ராஜ்குமாருக்கு கற்றுத் தந்தது நான்தான்... அதே மாதிரி

அவன் உனக்கு கற்றுத் தருவான் பாரேன் என்று... உங்களிடம் குதிரை இருக்குமா என்றுகூட சந்தேகத்துடன் கேட்டேன்... நிச்சயம் இருக்கும்... ராஜ்குமாருக்கு அந்தக் குதிரை மேல் உயிர்... யாருக்கும் கொடுக்க மாட்டான்னு சொன்னார்... நானும் கொஞ்சம் கத்துக் கொண்டேன் ராஜ்... அதான்... பீச்சில் இருக்குமே. டம்மி சவாரி... அதுதான் ப்ச்சு... திருப்தியா இல்லை... உங்ககிட்டே கத்துக்கணும்ங்கற லட்சியத்தோட வந்துவிட்டேன். தாத்தா சொன்ன மாதிரி நீங்க எனக்குக் கத்துத் தருவீங்கதானே... ராஜ்.''

இக்கட்டான நிலை... பலவீனமான இடத்தைத் தொட்டுக் கேட்டால் எப்படி மறுப்பது... முடியாதே...

சோமனாதர் ஆர்வத்துடன்... வெகு சிரத்தையாய் தனக்கு கற்றுத் தந்தது காட்சியாய் மனத்திரைக்குள் வந்தது. குதிரை மீது ஏறும் விதம்... எப்படி அமர வேண்டும்... குதிரையின் ஓட்டத்திற்கு இசைவாய் உடலை எப்படி அசைந்துக் கொடுக்கணும்... அப்படிச் செய்தால் உடம்பு வலிக்காது... குதிரையை எப்படித் தட்டி வேலை வாங்க முடியும்... குதிரையை கொழுக்க விடாமலிருக்க என்னவெல்லாம் செய்ய வேண்டும். இதையெல்லாம் அவரிடமிருந்து கற்ற பாடங்கள் ஆயிற்றே. அதை அப்படியே திருப்பி அவரது வாரிசுக்குச் சொல்லித் தர முகம் சுளிக்கிறேனே என்று மனம் குன்றிப் போனான்.

''ஒ.கே... என்னுடன் வா... உனக்கு கற்றுக் கொடுக்க ஏற்பாடு செய்கிறேன்...'' என்றான் உடனே.

''ஒரு குதிரை தானே இருக்கு ராஜ்... எப்படி... முடியும்...'' சந்தேகத்துடன் கேட்டாள் அவள்.

''என் குதிரையைத் தவிர இன்னொன்றும் இருக்கிறது. எனக்குப் பிரியமான குட்டி.... இப்போ கொஞ்சம் வளர்ந்து



விட்டது... உனக்கு அது போதும்... முதலில் அதில் ஏறவும் இறங்கவும் நீ பழகிக் கொள்ள வேண்டும் ஊர்மிளா. அதுதான் நீ கற்க வேண்டிய முதல் பாடம்... தெரிகிறதா... தவிர...'' சட்டென்று நிறுத்திக் கொண்டான்...

அடசே! நானும் ஏன் இப்படி வளவளக்க ஆரம்பித்து விட்டேன்... பழக்க தோஷமா... கடவுளே!

''ஆமாம் ராஜ்... குதிரைகளுக்கு பெயர் இல்லையா...''

வியப்புடன் ஊர்மிளாவைப் பார்த்தான்.

''அதற்கில்லை... சின்னச் சின்ன நாய்... பூனைக்கெல்லாம் பெயர் வைக்கிறோம்... பெரிய குதிரையாச்சே... எப்படி பெயர் இல்லாமல்...''

அவனையும் மீறி சிரிப்பு வந்தது... சிரித்து விட்டான். 'வெளீர்' நிறப் பற்கள் 'பளீர்' என்று தெரிய... அவன் சிரிப்பதை கண் கொட்டாமல் பார்த்தாள் அவள்.

''சிரிக்கிறபோது அழகாகத்தான் இருக்கீங்க... ஏன் அடிக்கடி சிரிக்க மாட்டேங்கறீங்க ராஜ்...''

விரிந்த உதடுகள் மறுபடியும் 'கப்'பென்று ஒட்டிக் கொள்ள... அவனுக்கு புரை ஏறியது...

பெண்ணின் அழகை ஆண் புகழ்வது தான் வழக்கம்... ஆனால் இவள்... இப்படி வெளிப்படையாய் புகழ்கிறாளே... ''எனக்கு ஒரு சந்தேகம் ராஜ்... ஜீப்... கார் என்றெல்லாம் வசதி வந்தும் குதிரையில் ஏறி செல்கிறீர்களே... இங்கு எல்லோருமே அப்படித்தானா...'' அவனது அகன்ற நடைக்கு இணையாக ஓடியவாறு கேட்டாள் அவள்.

''உன் தாத்தா சொல்லவில்லையா... குதிரை மாதிரி நல்லதாய்... நம்பிக்கையாய் உழைப்பது வேறு எதுவுமே இல்லை என்று... முதலில் இங்கிருந்தவர்கள் எல்லோரும் வெள்ளைக்காரத் துரைகள்... அவர்களிடம் இருந்து வந்த

பழக்கம் இது... இப்போது அவ்வளவு ஆர்வமாக யாரும் இல்லை... யாரோ ஒன்று... இரண்டு பேர் விடாமல் பயிற்சியாக சவாரி செய்கிறார்கள். மற்றபடி.... ஜீப்... கார்தான்...''

இதென்ன... மறுபடியும் வார்த்தைகளை கொட்டுகிறேன். இவளுடன் பேசி... பேசி... எனக்கும் வாயாட வந்து விட்டதா... என்ன.

மூச்... இனிமே வார்த்தைகளை அளந்துதான் பேச வேண்டும்.. தீர்மானித்துக் கொண்டான்.

பெயருக்கு ஏற்றாற்போல உடம்பு முழுக்க இருட்டுக் கறுப்பாய் இருந்தது குதிரை.

டெவில்!

ராஜ்குமாரைப் பார்த்ததும் செல்லமாய் கனைத்தது.

எஜமானைக் கண்ட சந்தோஷம்!

அருகில் சென்று வாஞ்சையுடன் தடவிக் கொடுத்தான் அவன்.

சந்தோஷத்தில் அதன் உடல் சிலிர்த்துக் கொண்டது.

அதை அனுபவம் உள்ளவர்களால்தான் உணர முடியும்.

லாயத்தைக் காவல் காக்கும் ஜோசப் மரியாதையுடன் சலாமடித்தான்... நம்பகமான ஊழியன்...

குதிரையைப் பற்றி அத்துப்படி....

அவனுடைய தந்தை ஆங்கிலேயத் துரையிடம் 'ஸ்டேபில் பாய்'யாக வேலை பார்த்தவர்... குதிரையுடனே வாழ்ந்த மனிதர்...

தந்தையைப் போலவேதான் தனயனும்...

துரையிடம் இருந்து தான் கற்ற குதிரைகளின் சாமுத்திரிகா லட்சணத்தை மகனுக்கும் கற்றுக் கொடுத்



திருந்தார். ஒரு குதிரையை இவன்முன் நிறுத்தி விட்டால் போதும்... அதன் ஜாதகத்தையே முழுவதுமாய் கணித்து விடுவான் ஜோசப்.

குழந்தைப் பருவத்திலிருந்தே இந்தக் கொட்டிலில் தான் வாசம். குதிரைகள் தான் நண்பர்கள்...

ஜோசப்... தன் பிள்ளைகள் மீது கூட அத்தனை பாசம் வைத்திருப்பானோ... சந்தேகமே!

ஊர்மிளா கண்கள் மின்ன குதிரையின் அருகே வந்தாள் புதுமுகத்தைக் கண்டதும் முகத்தைத் திருப்பிக் கொண்டு லேசாய் கனைத்தது டெவில்...

அதனை தடவிக் கொடுத்தான் ராஜ்... 'நம் மனிதர்டா...' என்றான்... அதற்கு அறிமுகப்படுத்தும் வகையில்...

கிசுகிசுப்பான குரலில் 'தொடட்டுமா' என்று கேட்டாள் ஊர்மிளா.

அவன் தலைசயைக்க... குதிரையை வருடித் தந்தாள்.

மென்மையான... பட்டுப் போன்ற கைப் பட்டதும் முதலில் உடல் விறைத்து ஒதுங்கப் பார்த்த டெவில்... பின்பு சந்தோஷத்தில் சிலிர்த்துக் கொண்டது... ஊர்மிளாவின் வருடலை செல்லக் கனைப்புடன் ஏற்றுக் கொண்டது.

கொஞ்சம் துணிவு வர இன்னும் நெருங்கி நின்றாள். அதன் முகத்திற்கு அருகில் தன் முகத்தை வைத்து கொஞ்சினாள். குதிரையின் தனிப்பட்ட வாசனை அவளது மூக்கைத் துளைத்து... ராஜ்குமாரைப் பார்த்து முகம் களித்து... சிரித்தாள்.

''இன்னொரு குதிரை இருக்குன்னீங்களே ராஜ்... அது எங்கே:.. காணோம்'' ஆவலுடன் கேட்டாள்.

''ஜோசப்... போய் அழைத்து வா.'' என்றான் ராஜ்.

வெள்ளை நிற குதிரை! 'போனி!' இன்னும் குட்டிதான். அழகிப் போட்டியில் நடப்பதுபோல ஒய்யாரமாய்... குதி நடை போட்டுக் கொண்டு வந்த அழகை கண் கொட்டாமல் பார்த்துக் கொண்டிருந்தாள்.

குள்ளமாய்... குண்டாய்... கருநிறக் கண்களை உருட்டிக் கொண்டு கர்வத்துடன் தலை உயர்த்தியவாறு வந்து நின்றது அந்தக் குட்டி குதிரை...

''ப்யூட்டி ஃபுல்... க்யூட்... ராஜ்...'' கூவினாள் ஊர்மிளா.

அதன் கழுத்தைக் கட்டிக் கொண்டு கொஞ்சிவிட்டு... ''என்ன பெயர் ராஜ்'' என்று கேட்டாள்.

''பெயர் இன்னும் வைக்கவில்லை...'' என்றான் பதிலுக்கு.

''நான் வைக்க வா.''

''ம்ம்...''

''என்ன பெயர் வைக்கலாம்... டோனி?''

அவன் சிரித்து விட்டான்.

''ஏன் ராஜ்... அந்தப் பெயர் நல்லா இல்லையா...''

''இது பெண் குதிரை...'' குறுஞ்சிரிப்புடன் சொன்னான் அவன்.

''ஓ! அதுவா... இதுக்கு 'ஏஞ்சல்'னு வச்சா பொருத்தமா இருக்கும்... இல்லே ராஜ்... உங்கள் குதிரை டெவில்னா... என்னோடது ஏஞ்சல்... எப்படி... சரி... இனி உன் பெயர் ஏஞ்சல்... என்ன...'' என்று முத்தமிட்டாள்.

''ராஜ்... இதுமேல் சவாரி செய்யட்டுமா... ப்ளீஸ்...'' என்று கெஞ்சவும்.

''ஜோசப்... இந்தப் பெண் நம் விருந்தாளி... குதிரை யேற்றம் கற்றுக் கொள்ளும் ஆசை... நீதான் முறைப்படி



அதைக் கற்றுத் தரணும்... என்ன'' என்று சொல்லிவிட்டு டெவில் மீது குதித்து லாவகமாக ஏறினான் ராஜ்.

தலையைச் சொறிந்தவாறு ''அய்யா... இதை இன்னொருத் தருக்கு பேசியாச்சுன்னீங்களே...'' என்றான் ஜோசப்.

''பரவாயில்லை... அவர்களுக்கு நான் சொல்லிக் கொள் கிறேன்... ஊர்மிளா... எத்தனை சீக்கிரம் நீ கற்றுக் கொள் கிறாயோ... அத்தனை சீக்கிரத்தில் என்னுடன் சேர்ந்து சவாரி செய்யலாம்...''

சொல்லிவிட்டு... அவளது பதிலையும் எதிர்பார்க்காமல்... விட்டால் போதும் என்பதுபோல குதிரையைத் தட்டி விட்டுக் காற்றாய் விரைந்தான்.

கம்பீர அழகுடன் ஓடிய கறுப்பு குதிரையையும்... அதன் மீது கிரேக்க சிலை போல ராஜ்குமார் அமர்ந்து சென்றதையும் ரசனையோடு பார்த்துக் கொண்டிருந்தாள் ஊர்மிளா...

''தாத்தா... ராஜ்குமார் உங்களைவிட வேகமா ஓட்டு வாரா...''

''என்னையா... அவனுக்கு நான்தானே குரு... அவனால் முடியாது... ஆனால் சில நேரங்களில் பாவம்... போகட்டும்னு விட்டுக் கொடுத்து விடுவேன்...''

தாத்தா சொன்னது இப்போது நினைவுக்கு வர... அவளது இதழ்களில் சிரிப்பு மலர்ந்தது.

கண்ணிலிருந்து அவன் மறையும் வரை கண் கொட்டாமல் பார்த்துக் கொண்டிருந்தாள்.... நாளும் இதே மாதிரி பறக் கணும் உடலும் உள்ளமும் பரபரத்தது.



# 5

Uploaded by Naghu

'ஜோசப்... ராஜ் சொன்னதுபோல சீக்கிரமே நான் கற்றுக் கொள்ளணும்... முடியுமா...'' ஆர்வமாய் கேட்டாள் ஊர்மிளா.

''இன்னிக்கே ஆரம்பிச்சுடலாம் அம்மணி... கொஞ்சம் பொறுங்க... முதல்ல குதிரையைப் பத்தி நீங்க நல்லாத் தெரிஞ்சுக்கணும் தாயி... குதிரையை எங்கு தொட்டால் அமைதியா இருக்கும்... எந்த இடத்தில் தொட்டுட்டா முரண்டு பிடிக்கும்னு புரிஞ்சு வச்சுக்கணும். குதிரையும் நம்ம மாதிரிதான் அம்மணி... நாம் சொல்றதை நல்லா புரிஞ்சுக்கும்.. இதை மிருகம்னு நினைச்சுப் பழகக் கூடாது...''

தன் உயிருக்கு இணையாக நினைத்திருக்கும் குதிரையைப் பற்றி ஆர்வமாய் கேட்டுப் பழக முன் வந்திருக்கிறாளே என்பதில் பரம சந்தோஷம் ஜோசப்புக்கு.

ஊர்மிளாவும் வெகு சிரத்தையாய் ஒவ்வொன்றையும் கேட்டுத் தெரிந்து கொண்டாள்.

அடேயப்பா! நாலு கால் பிராணி என்று நினைத்தோமே... இதில் இத்தனை விஷயங்களா! அதிசயத்துப் போனாள் அவள்.

எப்படியாவது அதைக் கற்றுக் கொண்டு... 'ஜம்'மென்று குதிரை சவாரி செய்து ராஜ்குமாரை அசத்த வேண்டும். அது மட்டுமா... 'டெவிலை'யும் முந்திக் கொண்டு... காற்று வேகத்தில் பறந்து... ராஜை ஜெயித்துக் காட்ட வேண்டும்...



மனசுக்குள் வேகம் எழுந்தது...

அதே நினைவிலும் தூங்கிப் போனாள்...

அதனால்தானோ என்னவோ இரவில் ஒரு அழகான கனவு...

கரும் மேகமாய் இருந்த 'டெவில்' மீது அமர்ந்து காற்றாய் கடுகிப் பறக்கிறான் ராஜ்.

அவனைத் தாண்டிச் செல்லும் ஏஞ்சல்.. அதன் மீது அமர்ந்தலாய் ஊர்மிளா!

இது எப்படி இருக்கிறது என்று கூவிக் கொண்டு செல்கிறாள்.

ராஜ்குமாரின் முகத்தில் ஏமாற்றம் தெரிகிறது.

அதைப் பார்த்து கலகலவென்று சிரித்து ஏஞ்சலைப் பெருமையுடன் தட்டிக் கொடுத்தவாறு பறக்கிறாள் அவள். ஏஞ்சலை நினைக்கப் பெருமையாக இருக்கிறது.

''டியர் ஏஞ்சல்'' முணுமுணுத்தவாறு தலையணையை அணைத்துக் கொண்டாள் ஊர்மிளா.

ஆயிற்று... ஊர்மிளா வந்து பதினைந்து நாட்கள் ஓடி விட்டன!

இப்போது அவளுடைய வளவளப் பேச்சும்... குறும்புத் தனங்களும் சகஜமாகி விட்டன.

கோகிலாவிற்கு, ஊர்மிளா மீது பிடித்தமும் ஏற்பட்டு... ஒட்டுதலும் வந்தது. அதுமட்டுமல்ல... தாய் பாசம் என்றால் என்ன என்று அறியாத அந்த வெகுளிப் பெண் மீது தனிப்பாசமும் உண்டானது.

ஒவ்வொரு நாளும் ஒரு புதுக் கதையுடன் வருவாள் அவள். அன்றாடம் நடந்த நிகழ்வை... சந்தித்த மனிதர்

களை... இப்படி எதையாவது கதையளப்பாள்... பாட்டியும் திறந்த வாய் மூடாமல் கேட்பார்...

ஒன்றா... இரண்டா...

ஜோசப்பை தவிக்கச் செய்து... வேகமாய் குதிரையை ஓட்டியது. எஸ்டேட் மானேஜரின் மகனான அஸ்வத்தைப் பிடித்து உலுக்கி... மிரட்டிய ஒரு முரடனிடம் சண்டை போட்டு அவனை விரட்டியது... சின்ன வாண்டுப் பயல்களின் நட்பு... அவர்களுடன் சேர்ந்து சுனையில் மீன்களைப் பிடித்து மறுபடியும் நீரில் விட்டது. புளிய மரத்தில் ஏறி பிஞ்சு புளியங்காயைப் பறித்துக் கொண்டு வந்தது... இதுபோலத் தன் வீர... தீர பிரதாபக் கதைகள்...

அதை சுவாரசியமாய் அவள் வர்ணிக்கும் விதமே தனி தான்...

அந்தக் கதைகளைக் கேட்க அஞ்சலையும் உட்கார்ந்து விடுவாள்...

அசுவத்தின் பரிச்சயம் நட்பாக மாறியதை அறிந்ததும் கோகிலா துணுக்குற்றாள்...

இது ஏதடா வம்பு... அசுவத் நல்ல பையன்தான். ஆனாலும் வயது வந்த ஒரு பெண்ணும் ஆண் பிள்ளையும் சுற்றுவது என்பது... ஊகூம்... சரியாகப் படவில்லையே.

ஊர்மிளா வெகுளிப் பெண்... அந்தப் பையனும் பக்குவப்படாத இளைஞன்... நாளைக்கு ஏதாவது ஏடா கூடமாகி விட்டால்.... சோமனாதருக்கு பதில் சொல்வது யார்... அதுவும் இவளுக்குக் கல்யாணம் வேறு நிச்சயமாகி விட்டது... பெயர் கெட்டு விட்டால்... அது அசிங்கமாக அல்லவா ஆகிவிடும்...

கூடாது... முளையிலேயே கிள்ளி விடணும்... அந்த முடிவில் ஊர்மிளாவிற்கு இதமாய் எடுத்துச் சொன்னார்.



''அம்மாடி! இந்த மாதிரி கண்ட நேரத்தில் கண்ட பையன் களுடன் சுற்றுவது தப்புமா...

''பாட்டி.... இது நவீன யுகம்... கட்டுப்பெட்டியா இருந்த காலம் போயாச்சு... நான் மும்பையில் வளர்ந்தவள்... தாத்தாவும் எதுவும் சொல்ல மாட்டார்.. தெரியுமா...''

''அது இல்லேம்மா... நாலு பேர் பார்த்தா கண்டபடி பேசுவாங்க... அதுவும் வயதுப் பையனுடன் இப்படிப் பழகினால்...''

''என்ன... கர்ப்பம் ஆகி விடுவேனா...''

''சிவ... சிவ...'' காதைப் பொத்திக் கொண்டார் கோகிலா.

''பார்த்தீர்களா பாட்டி.... கர்ப்பம் என்று பேர் சொன் னாலே முஞ்சி சுளிக்கிற காலத்தைச் சேர்ந்தவங்க நீங்க... கர்ப்பத்தைப் பத்தி விவரமா பள்ளியில் படித்து தெரிந்து கொள்ளும் காலத்தைச் சேர்ந்தவ நான்...'' என்றவள் அருகில் வந்து கோகிலாவின் மடியில் சாய்ந்தாள்.

''பாட்டி... பார்க்கத்தான் நாங்க இளகின மாதிரி தெரிவோம்... ஆனா... உள்ளத்தைப் பொறுத்தவரை உறுதியான டாடா ஈங்க... அவ்வளவு சீக்கிரம் விழுந்து விட மாட்டோம்... நட்புக்குன்னு ஒரு எல்லைக்கோடு வைத்திருக்கிறோம்... ஏதாவது மீறினால்... அவ்வளவுதான்... கராத்தே டேகம்... பயப்படவே வேண்டாம். பாட்டி...'' என்று சொல்லிவிட்டு துள்ளி எழுந்து ஓடினாள்.

அவளது பேச்சில் கடைசி வார்த்தைகள் மட்டுமே தன் காதில் விழ...

''என்னம்மா...'' ஏதோ... கராத்தே... பயம் என்று சொல்லிவிட்டுப் போகிறாள் ஊர்மிளா... ஏதாவது புதுப் பிரச்சனையா...'' என்று கேட்டான் ராஜ்.

"அது ஒண்ணும் இல்லேப்பா... நம்ம மேனேஜர் பையன் அசுவத்தோட அதிகம் சுத்த வேண்டாம்... அளவோடு பழகும்மான்னேன். அதற்கு இத்தனைப் புராணம்... என்னவோப்பா... வயித்தில் நெருப்பைக் கட்டிக் கொண்டது மாதிரி இருக்கு... எந்த நேரத்தில் என்ன நடக்குமோ... எந்தப் பிரச்சனையைக் கொண்டு வருவாளோங்கற பயம்தான் எனக்கு..." அங்கலாய்ப்புடன் சொன்னார், தாய்.

"அம்மா... ஊர்மிளா இந்தக் காலத்துப் பொண்ணு... அவள் சொல்வதுபோல எல்லை மீறி நடக்க மாட்டாள். நானும் அவள்மீது ஒரு கண் வைத்திருக்கிறேன்.. கவலையே வேண்டாம்..." என்றான் மகன்.

"ஒரு கண் போதாதுப்பா.. ஆயிரம் கண்கள் இருந்தாலும் விழித்துக் கொண்டு கவனிக்கனும்... எப்போதப்பா இரண்டு மாதம் முடியும்... இவளை பத்திரமா திருப்பி அனுப்பி வைப்போம்னு இருக்கு..."

"சரிம்மா... இப்போ நான் வந்த விஷயமே வேறு... வியாபாரம் சம்பந்தமா இன்னிக்கு ஒரு 'பார்ட்டி' வருகிறது. நம் வீட்டில் அவர்களுக்கு விருந்து கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டும்... அப்புறம்... ஊர்மிளாவிடம் சொல்லி வையுங்கள்... ஒழுங்காக உடை அணிந்து வர வேண்டும் என்று... ஜீன்ஸ்... டீ ஷர்ட் இதெல்லாம் கூடாது என்று சொல்லுங்கள்..."

"நானா... வேண்டாம் ராஜா... இதை நான் சொல்லப் போய்... இதோ... இப்போ பேசிவிட்டுப் போனதுபோல நீங்க அந்தக் காலத்து மனுசி... உங்களுக்கு எதுவும் தெரியாது என்று அடித்துப் பேசிவிடுவாள்... நீயே சொல்கிற விதத்தில் சொல்லி விடு..."

பெருமூச்சு விட்டான் அவன்... அது எளிதான காரிய மாகப் படவில்லை... இருந்தாலும் சொல்லத்தான் வேண்டும்.



ஊர்மிளாவைச் சந்திக்கக் காத்திருந்தான்... மாலையில் தான் அவள் கிடைத்தாள்.

"ஊர்மிளா... இங்கே வா..." கொஞ்சம் கண்டிப்பு தெரிய அவன் அழைத்ததும்...

"யெஸ்... பாஸ்..." என்று சல்யூட் அடித்துக் கொண்டு வந்து நின்றாள்.

அவளது செய்கையைக் கண்டு சிரிப்பு வந்தாலும்... அதை அடக்கிக் கொண்டு... முகத்தை தீவிரமாக வைத்துக் கொண்டு சொன்னான்.

"இன்றைக்கு இரவு நம் வீட்டில் தொழில் சம்பந்தமாய் சில விருந்தாளிகள் வர இருக்கிறார்கள். விருந்துக்கும் ஏற்பாடு நடந்து கொண்டிருக்கிறது... இந்த மாதிரியெல்லாம் உடையணியாமல் ஒழுங்காக வரவேண்டும்... என்ன..."

குனிந்து ஒரு தடவை தன்னைப் பார்த்துக் கொண்டாள்... நீல நிற சாயம் போன ஜீன்ஸ் உடலைக் கவ்வியவாறு... அதன் மேல் 'சிக்'கென்ற டீ ஷர்ட்.... இந்த உடைக்கு என்ன குறை...?

அதைக் கேட்டே விட்டாள்...

"வேண்டாம் என்றால் வேண்டாம்... வருகிறவர்கள் எல்லோருமே பெரிய மனிதர்கள்... வயதில் பெரியவர்கள். அவர்கள் முன்னால் அழகாய் புடவை... வேண்டாம்.. நல்ல சுரிதார் அணிந்து வா.. என்ன... புரிந்ததா..."

தாடையை சுருக்கிக் கொண்டு சிணுங்கினாள் அவள்..

"ராஜ்... என்னிடம் இருப்பது எல்லாமே இந்த மாதிரி தான். இது வேண்டாம் என்றால்... மினி ஸ்கர்ட்... டாப் அணியட்டுமா... என்ன... வேணாமா... ப்ளீஸ்... ராஜ்..." ராஜ்குமார் உறுதியோடு மறுத்ததும் அல்லாமல்... உடனே

கடைக்குச் சென்று தந்த நிறத்தில் சுரிதார் செட்டை வாங்கியும் வந்து விட்டான்.

சரி... வாங்கி வந்ததை "உடுத்திக் கொள்" என்று மென்மையாய் சொல்லியிருந்தாலும் பரவாயில்லை.

"இதோ பார் ஊர்மிளா... இதைத்தான் போட்டுக் கொண்டு வரவேண்டும்... இது என் உத்திரவு..." என்று அதிகாரமாக சொன்னதுதான் தப்பாயிற்று.

ஊர்மிளாவுக்குள் உறங்கிக் கொண்டிருந்த முரட்டுக் குதிரை சிலுப்பிக் கொண்டு... திமிறி எழுந்தது.

"இதைப் போட்டுக் கொள்ளணுமாமே. இவர் யார் எனக்கு உத்திரவு போட... இவர் சொல்லி நான் கேட்க... நான் என்ன இவரது ஆளா... நான் யாருடைய அதிகாரத் திற்கும் தலை வணங்க மாட்டேன் என்பதைக் காட்ட வேண்டும்..." மனசுக்குள் கறுவிக் கொண்டான்.

கோகிலாவும் விருந்துக்கு 'மெனு' சொல்ல சமையற் காரரைத் தேடிப் போனாள்.

விருந்து என்றால் எல்லாமே தான். மதுபானமும் இருக்கும் என்று தெரியும்...

கணவரிடமிருந்து எத்தனையோ விஷயங்களைத் தெரிந்து கொண்டிருக்கிறாள். தொழில் சம்பந்தமாய் வரும் வாடிக்கை யாளர்களின் நெளிவு சுளிவுகளை அறிந்து கொண்டு... அதற்கு ஏற்றவாறு நடந்தும்... அவர்களது தேவைகளை அறிந்து அதைப் பூர்த்தி செய்து... அவர்களது நம்பிக் கையைப் பெற்று ஒப்பந்தத்தை முடிக்க வேண்டும். அதுதான் வியாபாரத் தந்திரம்...

ஆனால் அதற்கும் ஒரு வரம்பு வைத்திருக்க வேண்டும்... வரம்பு மீறி நடப்பவர்களை அருகில் சேர்க்கவும் கூடாது என்பது சந்திரசேகரின் வாதம்...



வந்திருக்கும் வாடிக்கையாளர்களுக்கு 'கம்பெனி' தர கொஞ்சமே கொஞ்சம் மது அருந்துவதில் தவறில்லை என்பார் அவர்...

விருந்தில் அனைவரின் கையிலும் மதுக்கிண்ணம் ஏறியதும்... நாசூக்காய் ஒதுங்கிக் கொண்டாள் கோகிலா.

வந்திருப்பவர்களிடம் இதமாய் பேசி... வியாபார விசயங்களை தெளிவுபடுத்தி... அவர்கள் ஒப்புக் கொள்ளும் படி செய்து... பல விதங்களில் உபசரித்து.. மதுவருந்தி முடிந்ததும் - விருந்துண்ண எழும் வரை அவனுக்கு ஊர்மிளா வின் நினைவு சத்தியமாய் வரவில்லை...

அனைவரையும் அழைத்து வந்து சாப்பாட்டு மேஜை முன் அமர்ந்தபோதுதான் அவளது நினைவு வந்தது. தாயிடம் கேட்டான்.

"என்னம்மா... ஊர்மிளா எங்கே... காணோமே..."

"தெரியவில்லையே ராஜா... கீழே வரவே இல்லை... இரு... அஞ்சலையை அனுப்பி பார்க்கச் சொல்கிறேன்" என்று எழுந்து சென்றாள் கோகிலா.

கழுவிய பாத்திரங்களை துணியால் துடைத்துக் கொண் டிருந்த அஞ்சலையிடம் "அஞ்சலை... விருந்தாளிங்க அங்கே காத்துக் கொண்டிருக்காங்க... போய் ஊர்மிளாவை வரச் சொல்..." என்று சொன்னாள்.

அஞ்சலையும் விரைந்தாள்.

கண்ணாடி முன் நின்று... மேனியை இப்படியும் அப்படியுமாய் அசைத்து தன்னை ரசித்துக் கொண்டிருந்த ஊர்மிளா காலடி ஓசைக் கேட்டு திரும்பிப் பார்த்தாள். அஞ்சலையைப் பார்த்ததும் கண் சிமிட்டி விட்டு "அஞ்சலை... நான் அழகா இருக்கேனா..." என்று கேட்டாள்.

வாயைப் பிளந்தாள் பணிப்பெண்.

"அம்மா... இப்படியே வா போகப் போறீங்க..." என்று தயங்கியவாறு கேட்டாள்.

"ஏன்... நல்லா இல்லே... நீ இந்திப் படம் பார்ப்பியா அஞ்சலை..."

"இல்லேம்மா..."

"அதான்... அதில் கதாநாயகி இப்படித்தான் வருவாள். ப்ரீத்தி... ராணி முகர்ஜி... இவர்கள் எல்லோருமே இந்த மாதிரிதான் உடுத்தியிருக்காங்க... தெரியுமா..."

"அட... அப்படியாம்மா..." கண்களை விரித்து வியப்புடன் கேட்டாள் அஞ்சலை.

"இப்ப சொல்லு அஞ்சலை... நான் எப்படி இருக்கேன்.. தலையை சொரிந்தாள் அஞ்சலை.

"நீங்க நல்லாத்தான் இருக்கீங்கம்மா... ஆனா... அய்யா.. ஏதாச்சும்..."

"அவ்வளவுதானே... நான் பார்த்துக்கறேன்.. ஆமா... எல்லோரும் வந்தாச்சா அஞ்சலை..."

"ஆங்... அதுக்குத்தான் வந்தேம்மா... அம்மா உங்களை உடனே வரச் சொன்னாங்க... எல்லோரும் காத்திருக்காங்களாம்..."

"நானும் தயார்தான்... வா..."

"நான் போய் அம்மாகிட்டே சொல்றேன்... நீங்க வாங்கம்மா" என்று விரைந்தாள் அஞ்சலை.

ஊர்மிளா வந்து கொண்டிருக்கிறாள் என்று தெரிந்ததும் அப்பாடா என்றிருந்தது கோகிலாவிற்கு.

ஊர்மிளாவும் வந்தாள்.



ஆனால்... வந்த விதம்...

திகு... திகு என்று பற்றிக் கொண்டு வந்தது ராஜ்குமாருக்கு... பற்களை நறநறத்தான்.

அவனது கோபத்தைக் கண்டு கொள்ளவில்லை ஊர்மிளா. பதிலுக்கு கண்ணடித்தாள் அவள்... "எப்படி இருக்கு..."

கோகிலாவோ... சொல்லவே வேண்டாம்...

நெருப்பு படுக்கை கூட தன்மையாய் இருக்கும்...

முள் இருக்கைகூட உறுத்தாமல் இருக்கும்...

அதை விட மோசமாய் உணர்ந்தாள்... அந்த சூழ்நிலையை... எப்படிச் சமாளிப்பது என்ற தவிப்பு வேறு...

எதையும் பொருட்படுத்தாமல் "அலோ ராஜ்..." என்றாள் ஊர்மிளா... இதழ்களில் விஷமச் சிரிப்புடன்!



## 6

தாத்தாவின் செல்லமாய் வளர்ந்த ஊர்மிளா... செட்டுக் குருவியாய்... கட்டுப்பாடின்றி இருந்தவள்... இதுவரை யாரும் அவளை அதட்டியதும் இல்லை.

தாத்தாவின் மோவாயைப் பிடித்து கெஞ்சினாலே போதும்... அப்படியே அவர் மெழுகாய் கரைந்து விடுவார். அவள் எது சொன்னாலும் சரிதான்... மறுப்பே கிடையாது.

அதே சமயம்... அதிக சுதந்திரத்தினால் அவள் வழி தவறி செல்லவும் மாட்டாள் என்ற நம்பிக்கையும் பெரியவருக்கு இருந்தது.

மனதளவில் அவள் இன்னும் குழந்தைதான் என்று அவர் நினைத்ததால்... அவளது குறும்புகளை பெரிசுபடுத்துவதில்லை...

பதிலாய் அவற்றை ரசித்து மகிழ்ந்தார்.

எதையாவது பேசி தாயில்லாத அந்தக் குழந்தையை நோக வைக்கக் கூடாது என்ற நினைப்பு.

ஆனால்... அதற்கு நேர் மாறாய்... இங்கே ராஜ்குமார் கண்டிப்புடன் உத்திரவு போட்டதுதான் ஊர்மிளாவிற்கு எரிச்சலைத் தந்தது.

தாத்தாவே ஒருநாளும் என்னை அதட்டியதில்லை... ஏவியதும் கிடையாது.

இவர் யார் என்னை அடக்க...

அதனால் தான் தன் எதிர்ப்பை விசித்திரமாய் காட்டினாள். அதாவது நீ சொல்லி... நான் என்ன கேட்பது என்ற தோரணையில்...

ஜீன்ஸ்தான்.. ஆனால் ஆங்காங்கே ஒட்டுப் போட்ட மாதிரி டிஸைன்! தொளதொளவென்று சட்டை... ஆண் பிள்ளை சட்டை... அதை ஒரு பக்கம் உள் செருகி... இன்னொரு பக்கம் வெளிவிட்டிருந்தாள். முகத்தில் துளியும் ஒப்பனை இல்லை... நெற்றியில் பொட்டோ... கைகளில் வளைகளோ இல்லை... மொத்தத்தில் சோளக் கொல்லை பொம்மை மாதிரி தெரிந்தாள்.

எல்லாம் போகட்டும்... அந்த ஹேட்! தொப்பி! வட்ட வடிவில் அகன்ற தொப்பி... வெயிலுக்கு அணிவது... அது எதற்கு...

வந்திருந்த விருந்தினர் கண்களில் அதிர்ச்சி... யார் இந்த பெண்... இப்படி கோமாளிக் கூத்தாய்...



ராஜ்குமார் முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடிப்பதைப் பார்த்து நமுட்டுச் சிரிப்பைக் காட்டினாள் ஊர்மிளா...

இதைத்தானே எதிர்பார்த்து அவள் வந்தது...

கோகிலாவோ கையைப் பிசைந்தார்.

அய்யோ... இந்தப் பெண் இப்படி மானத்தை வாங்குகிறதே!

''ஹலோ அங்கிள்ஸ்.''

அவளே முந்திக் கொண்டு வந்தவர்களுக்கு வணக்கம் செலுத்தியதும் தான் ராஜ்குமாருக்கு உறைத்தது... அந்த அங்கிள்ஸ் முகங்களிலும் அசடு வழிந்தது...

வாயைப் பிளந்தவாறு அவளையேப் பார்த்துக் கொண்டிருக்கிறோமே!

அவளை வந்தவர்களுக்கு அறிமுகம் செய்து வைத்தான் ராஜ்.

வெளியே சுமுகமாகக் காட்டிக் கொண்டாலும் உள்ளுக்குள் கொதி நிலை!

அத்தனை சொல்லியும்... இப்படி 'ஜோக்கர்' மாதிரி வந்திருக்கிறாளே... இவளை...

''ரொம்பவும் முகத்தைச் சுளிக்காதீர்கள் ராஜ்... அப்புறம் சுருக்கிக் கொள்ளப் போகிறது.'' அவன் அருகே இருந்த இருக்கையில் அமர்ந்தவள் அவன் பக்கம் சிறிது சாய்ந்து கிண்டலாய் சொல்ல...

அடிக்குரலில் சீறினான் அவன். ''இதென்ன விளையாட்டு ஊர்மிளா... நான் என்ன சொன்னேன்.. நீ எப்படி வந்திருக்கிறாய்...''

''என்ன இருக்கும் மிஸ்டர் ராஜ்குமார்... நீங்கள் செய்தது அதிகாரம்... உத்தரவு... நான் யாருடைய அதிகாரத்திற்கும் பணிய மாட்டேன்... எனக்கு யார் உத்தரவுப் போட்டாலும் பிடிக்காது... என் தாத்தா கூட என்கிட்டே தணிந்து

தான் சொல்வார்... தெரியுமா... அதான்... இப்படி... இனிமே... ''ப்ளீஸ்.. ஊர்மிளா... செய்ம்மா'' என்று சொன்னா... கேட்பேன்... ஓகே...'' கிசுகிசுத்த குரலில் அவள் சொன்னாள்.

''திரும்பி சாப்பிடு... விருந்தாளிகள் கவனிக்கிறார்கள்'' என்று உறுமிவிட்டு வந்தவர்களிடம் உபசாரமாய் பேச ஆரம்பித்தான்...

ஊர்மிளாவிற்கு சுத்தமாய் 'போர்' அடித்தது... ப்ச்சு.. வெறும் வியாபாரத்தைப் பத்திதான் பேச்சு... சாப்பிடும் நேரத்திலுமா... சே!

பாட்டியைப் பார்த்தாள். கோகிலா கண் சாடையில் எதை பரிமாறவேண்டும் என்பதை பணியாட்களுக்கு உணர்த்துவதில் மும்முரமாக இருந்தது தெரிந்தது...

சலித்துப் போனாள்.

எல்லோருமே வயதானவர்கள்... ராஜ் ஒருத்தரை தவிர.. அவருக்கும் என்ன வயதிருக்கும்... முப்பது ஆகியிருக்குமோ...

ப்ச்சு... இந்த வயசு கணக்கு எதுக்கு...

அதைவிட ஒவ்வொருவரையும் கூர்ந்து கவனித்தால் அவர்களது முகபாவம்... மேனரிசம்... இவையெல்லாம் சுவாரசியமாய்... பொழுதுபோக்காய் இருக்குமே.. அதான் சரி...

வந்திருந்த நான்கு பேர்களின் பெயர்களும் நினைவில் தங்கவில்லை... எப்படித் தங்கும்... கடனுக்கு அறிமுகப்படுத்தினான் ராஜ்... இவளும் அவன் முகம் போன போக்கை ரசிப்பதில் குறியாய் இருந்ததில்... அவர்களின் முழுப் பெயர்களையும் காதில் போட்டுக் கொள்ளவில்லை... எதிரில் அமர்ந்திருப்பவர்... என்னவோ 'பட்'டாம்... கேசம்



முழுக்க உதிர்ந்துபோய்... முலாம் பழத்திற்கு மூக்கும் கண்ணும் வைத்த மாதிரி முக அமைப்பு... இல்லாத தலை முடியை சொரிந்தவாறு பேசும் 'மேனரிஸம்'!

அடுத்து அமர்ந்திருப்பவர்... அசோக் சர்மாவோ... வர்மாவோ... ஒல்லியான தேகம்... கழுகு மாதிரி கூர்மையான வளைந்த மூக்கு... சின்ன கண்கள்... ஒடுங்கிய முகம்... மூக்கின் மேல் ஒட்டிக் கொண்டிருந்த கண்ணாடியை அவ்வப்போது விழாமல் நிறுத்தி வைப்பது போல தொட்டு அழுத்துவது தவிர... சொல்லும்படியாய் மேனரிஸம் ஏதும் இல்லை...

அவருக்கு அருகே இருப்பவரின் பெயர்... ம்ம்... என்ன பெயர் சொன்னார் ராஜ்... சியாம்! எஸ்... சியாம்தான்... நால்வரில் கொஞ்சம் சுமாராய் தெரிபவர்... ஆனால் உயரம் கம்மி... பெண் போல முகம் வழவழப்பு... மைனஸ் மீசை என்றால்... ஸ்திரீ பார்ட்டுக்கு கன கச்சிதம்... மேனரிஸம்... ஜைகூடம்.

அந்த நாலாவது மனிதர்... திரிவேதி என்றார் ராஜ். உடைந்த ஆங்கிலத்தில் பேசி இம்சைப் படுத்தும் மனிதர் கூடிய வரையில் அவரைப் பேச விடாமல்... மற்றவர்கள் மட்டுமே பேசினார்கள். தங்கப் பல் கட்டியிருக்கிறாராம் அதைக் காட்டிக் கொள்ளவே அடிக்கடி சிரிக்கிறார் போல...

நால்வரின் தோற்றத்திலும் வட இந்தியர் என்ற முத்திரை நன்றாகவே தெரிந்தது...

நால்வரும் மத்திய வயதினர் தான்... பார்ப்பதற்கும் சுமார்தான்... அப்படியொன்றும் வயதிற்கேற்ற கம்பீரமும் இல்லை...

அவர்கள் முன்னே... ராஜ் உண்மையில் ராஜகுமாரன் போல அமர்ந்திருப்பதைக் கண்டாள்...

அப்போதுதான் அவனை சரியாகக் கவனித்தாள்... முதன் முதலாய் பார்ப்பதுபோல உன்னிப்பாய்... அடர்த்தியான கேசம்... அகலமான நெற்றி... கவர்ச்சியான காந்தக் கண்கள்... துளை போடும் கூரிய பார்வை... நீண்ட... எடுப்பான நாசி... அதன் கீழ் அழகான கரு கரு மீசை... அழுத்தமான உதடுகள்... மொத்தத்தில் ஆண் அழகர்தான்...

ஆனால் அடிக்கடி சிரிக்காததுதான் பெருங்குறை... முகத்தைப் பாறையாகக் காட்டுகிறது...

மனிதர் சிரிக்க காசு கேட்பார் போல... ஆகா... சிரிக்கிறாரே. ஓகோ... வந்திருக்கும் வாடிக்கையாளர்களை வளைத்துப்போட இந்த வசீகரப் புன்னகையோ... இருக்கும்... நாளை... இவருக்கு திருமணமானால்... அந்த வீணா பாவம்... கெஞ்சி கெஞ்சி சிரிப்பைப் பார்க்கணும்... சரி... இவர் ஆசையாக முத்தமிடுவாரா... இல்லை... அதுவும் கடுப்புடனா... உம்மண்ணா மூஞ்சியாய் குனிந்து... தபால் முத்திரையை ஒத்தி எடுத்தாற்போல...

மானசீகக் காட்சியில் சிரிப்பு வர... அடக்க முயன்றாள்... அதெல்லாம் இருக்கட்டும்... இப்போது... அந்த உதடுகளில் நான் முத்தமிட்டால்... அய்யோ... ராஜ்குமார் முகம் எப்படி மாறும்... இவர்கள் முகம் எப்படிக் கோணும்... அஷ்டக் கோணலாய்... இதழ்கள் விஷமத்தனமாய் சுழித்தன... கன்னத்தில் குழியிட குறும்புடன் சிரித்தாள்.

அதே சமயம் எதேச்சையாய் அவள் பக்கம் திரும்பிய ராஜ்குமாரின் கண்களில் அது பட்டுவிட... அவனுள் 'பகீர்' உணர்வு.

இவளை நம்புவதற்கில்லை... எதற்கோ அடிப் போடுகிறாள். முதலில் இவளை இங்கிருந்து அனுப்பி வைக்க வேண்டும். நல்லவேளையாய்... விருந்தும் கடைசி கட்டத்திற்கு வந்து விட்டதால் தாயிடம் கண் சாடைக்காட்டி ஊர்மிளாவை அழைத்துச் செல்லும்படி சொன்னான்.



ஊர்மிளாவிற்கும் அந்த விருந்து ரசிக்காததால்... மறுப்பு ஏதும் சொல்லாமல் சமர்த்தாய் எழுந்து சென்றாள்.

போகுமுன் 'குட்நைட் அங்கிள்ஸ்' என்று சொல்லி விட்டுச் செல்லவும் மறக்கவில்லை.

அவள் அங்கிருந்து சென்றபின்புதான் வயிற்றுக்குள் பாம்பாய் சுருண்டு இருந்த இறுக்கம் இளகியது.

அன்றைக்கு இரவு யோசனையில் தூக்கம் வர மறுத்தது. ஊர்மிளாவை கொஞ்சம் மாற்ற வேண்டும்... எப்படி... மூளையைக் கசக்கிக் கொண்டான்... தலைவலிதான் வந்தது.

மறுநாள்...

வெகு அதிசயமாய் ஊர்மிளாவைத் தன்னுடன் சேர்ந்து குதிரை சவாரி செய்ய அழைத்தான் ராஜ்குமார்.

நானா...? கண்களை விரித்துக் கேட்டாள் அவள்.

''எந்த அளவிற்கு தேர்ச்சி பெற்றிருக்கிறாய் என்று நான் தெரிந்து கொள்ள வேண்டாமா... வா...''

ஊர்மிளாவிற்கு ஒரே சந்தோஷம்... தன் திறமையைக் காட்ட இதுவே தக்க சமயம்... ராஜிடம் இருந்து இன்றைக்கு பாராட்டு வாங்க வேண்டும்.

உற்சாகத்துடன் கிளம்பினாள்.

ஜோசப் நல்லாசானாய் இருந்து கற்றுத் தந்தாலும்... இவளும் வெகு சிரத்தையாய் பழகிக் கொண்டதாலும்... வெகு விரைவில் தேர்ச்சியடைந்து விட்டாள்...

திறமையுடன் தாவி அவள் ஏஞ்சல் மீது அமர்ந்தது கண்டு ராஜ்குமாரின் கண்களில் பாராட்டுதல் தெரிந்தது. பெருமையுடன் தலை நிமிர்ந்து பார்த்தாள்.

''டக்... டக்'' என்ற குதிரையின் ஜதி நடைக்கு ஏற்றபடி... அதன் ஓட்டத்திற்கு இணையாய்... அவள் உடல் அசைந்து கொடுப்பது கண்டு ''வெரிகுட்...'' என்று மெச்சினான்.

"ஓகே... ராஜ்... இப்ப நாம் எங்கே போகிறோம்..." என்று வினவினாள் அவள்.

"வீணாவின் வீட்டிற்கு..."

என்ன ஆச்சர்யம்... இன்றைக்கு இன்னொரு அதிசயம் வேறு!

வீணாவின் வீட்டிற்கா... ஒருநாளும் வாவென்று அழைக்காத ராஜ். என்னை விட்டால் போதும் என்று ஓட்டம் பிடித்த ராஜ்... இன்றைக்கு உடன் வரச் சொல்கிறான் என்றால்...

"ஏதாவது காரணம் இருக்க வேண்டும்..."

உரக்கவே வந்தன வார்த்தைள்.

"பரவாயில்லையே... என்னவோ நினைத்தேன்... புத்திசாலிதான். வீணாவை நீ சந்திக்க வேண்டும்... அவள் பழகும் முறை... பேசும் விதம்... ஒரு பெண்ணிற்கு இலக்கணமாய் எப்படி நடந்து கொள்கிறாள் என்பதை நீ பார்த்து தெரிந்து கொள்ள வேண்டும் என்றுதான் உன்னை அங்கே அழைத்துப் போகிறேன்..." என்றான் அவன்.

ஊர்மிளாவும் யோசித்தாள்.

அவளுக்கும் துடிப்புதான். அந்த வீணா யார். அவள் எப்படி இருப்பாள்.. ராஜுக்கு ஏற்ற ஜோடி தானா. இந்த வீட்டின் மருமகளாக வர இருப்பவள்... அவளைப் பார்க்க ஆர்வம் இருந்தது...

ராஜ்குமார் சொல்வதைப் பார்த்தால்... மங்கையர் திலகமாய் இருப்பாள் போலிருக்கிறதே... பார்த்துவிட வேண்டும்.

அந்த ஆவலில்... எந்த மறுப்பும் இல்லாமல் வெகு வினயமாய் "ஓ... போகலாமே.." என்று சாதுவாய் ஒப்புக் கொண்டதும் ராஜ் சந்தேகத்துடன் பார்த்தான்.



இதற்குப் பின்னால் ஏதாவது திட்டம் இருக்கிறதோ...

இவனை உடனே நம்பவும் முடியவில்லையே...

பெருமூச்சு விட்டாள் அவள்.

ஆனால் அவனோ... எஞ்சலைப் பற்றியும்... குதிரை சவாரி பற்றியும் வளவளத்துக் கொண்டு வந்தான்...

வீணாவின் வீடு எப்போது வரும் என்று ஆயிற்று அவளுக்கு... அவர்களது வீடு கண்ணில் பட்டதும் அப்பாடா என்று இருந்தது...

அவளது புலம்பலுக்கு முற்றுப்புள்ளி.

பெரிய வீடு... விஸ்தாரமான இடத்தில் கட்டப்பட்ட வீடு. சுற்றியும் பசுமையான மரங்கள்... சுற்றுப்புறமே குளு குளுவென்று இருந்தது.

வீட்டிலிருந்து வீணா வெளிப்பட்டாள்.

ராஜ்குமாருடன் ஊர்மிளாவைப் பார்த்ததும் முதலில் திகைப்பு ஏற்பட்டாலும்... சாமர்த்தியமாய் அதை மறைத்துக் கொண்டு... முகத்தை மலர்ச்சியாய் மாற்றிக் கொண்டு அவர்களை வரவேற்றாள்.

வீணாவுடன் ராஜ்குமார் முன் நடக்க... அவர்களைப் பின் தொடர்ந்தாள் ஊர்மிளா.

ஒய்யாரமாய் இடை அசைத்து நடக்கும் வீணாவைப் போல நடைபயில முயன்று விட்டு முடியாமல் 'களுக்' கென்று சிரித்தாள் அவள்.

இருவரும் திரும்பிப் பார்த்தனர்.

ராஜ் புருவங்கள் உயர அவளிடம் கேட்டான்.

"எதற்கு இந்த சிரிப்பு... ஊர்மிளா..."

அவளோ கன்னம் குழியச் சிரித்தாள். "ரகசியம்... சொல்ல மாட்டேன் ராஜ்..."

“சின்னப் பொண்ணு... எதற்கோ சிரிக்கிறாள் ராஜ்... அதை ஏன் பெரிசு படுத்துகிறீர்கள்” என்றாள் வீணா... அது சமாதான வார்த்தைகளாகத் தெரியவில்லை. அவள் சிறுமி... உங்களுக்கு இணையில்லை... நினைவிருக்கட்டும் என்ற எச்சரிக்கையோ... ராஜும் அதை மேலும் வளர்க்காமல் நடந்தான். அவனிடம் கொஞ்சிப் பேசிக் கொண்டு வந்தாள் வீணா...

ஓ! பெண்ணின் இலக்கணத்தில் இதுவும் ஒன்றோ... இப்படித்தான் கொஞ்சிக் குலாவியவாறு பேச வேண்டும் போல... ஊர்மிளா உதட்டைச் சுளித்தாள்.

ராஜ்குமாரும் வீணாவின் தந்தையும் தொழில் சம்பந்த மான விசயங்களைப் பேசிக் கொண்டிருந்தனர்.

ஊர்மிளாவிற்கு போர் அடித்தது.

ஒரே இடத்தில் ஆணி அடித்தது போல உட்காரப் பிடிக்க வில்லை...

“வீட்டை சுற்றிப் பார்க்கட்டுமா ராஜ்...” மெல்லிய குரலில் கேட்டாள்.

“தாராளமாய் பாரம்மா... உள்ளே வீணா இருப்பாள். போய் பேசு...” என்றார் காமேசுவரன்.

கூடத்தைத் தாண்டிச் சென்றாள்... சாப்பிடும் இடம்... தேக்கு மர மேசையும்... வேலைப்பாடமைந்த நாற்காலி களுடன்... அதன் மீது குவளையில் பழங்கள்... தட்டு வைக்க சின்ன விரிப்புகள்...

சுவரில் இருந்த கண்ணாடி கதவுகளுடன் கூடிய அல மாரி... அதில் விதவிதமான பீங்கான்... கண்ணாடி சாமான்கள்.. ஒவ்வொன்றையும் ரசனையுடன் பார்த்துக் கொண்டிருந் தாள் ஊர்மிளா...

திடீர் என்று சமையல் அறையினுள் இருந்து சத்தம்.. பீங்கான் பொருள் கீழே விழுந்து உடைந்த சத்தம்... அதைத்



தொடர்ந்து 'பளீர்' என்று அறையும் ஓசை! கூடவே 'அய்யோ... அம்மா...' என்று ஈனக்குரலில் அலறல்...

“வேலை செய்யும்போது வேலையில் கவனம் இருக்கணும்டி... கழுதை... விலை கொடுத்து வாங்கி வந்த அருமையான சாசர்... இப்படிக் கீழே போட்டு சுக்கு நூறா உடைத்து விட்டாயேடி சனியனே... போ... போய் துடப்பம் எடுத்து வந்து இதைச் சுத்தம் பண்ணு... மரம் மாதிரி நிற்காதே...”

வீணாவின் குரல்! ஆகா... தேனாய் பேசிய அந்த குரலா... இப்படி இடி குரலாய் ஒலிக்கிறது!

கொஞ்சிப் பேசிய வாய்தானா இப்படி நஞ்சைக் கக்குகிறது. இது ராஜின் காதில் விழாமல் போனதே.

சமையலறை ரொம்பவும் உள்பக்கம் என்பதால் கூடத்தில் அமர்ந்தவர்களுக்கு எதுவும் கேட்காது என்ற தைரியம். ஆக வீணா என்ற நாணயத்தின் ஒரு பக்கம் மட்டுமே ராஜ் அறிந்தது... இந்த பத்ரகாளி ரூபம் அவன் அறியாதது.

இருக்கட்டும்...

எதும் அறியாதவள் போல கூடத்திற்கு வந்து... அங்கிருந்த கலைநயப் பொருட்களை ரசிக்க ஆரம்பித்தாள்... ஆனால்... உள்ளுக்குள் கோபம் கொப்பளித்துக் கொண்டிருந்தது... பாவம்... அந்தப் பணிப்பெண்... எப்படி அலறினாள். ராட்சச அறையை தாங்க முடியாமல் தான்...

இந்த ராட்சசியா பெண்ணின் இலக்கணம்... உள்ளம் பொருமியது.

“ஏய்... வீணா... உன் முகத்திரையைக் கிழித்து உன் சுயரூபத்தைக் காட்டத்தான் போகிறேன் பார்...” என்று மனதுக்குள் கறுவிக் கொண்டாள் ஊர்மிளா.



# 7

"ஊர்மிளா... வந்து உட்கார்ந்து கொள்."

ராஜ்குமார் அழைத்தவுடன் நாய்குட்டியாய் ஓடிவந்து அருகில் அமர்ந்து கொண்டாள் அவள்.

என்றைக்கும் இல்லாத பணிவு கொஞ்சம் அதிகமாகவே அவளிடம் தென்பட்டதைப் பார்த்து குழம்பிப் போனான் ராஜ்குமார்.

ஏன்... எதற்காக இந்தக் குழைவு... எதையாவது மறைக்க வா...

புயலுக்குப் பின்தான் அமைதி என்பார்கள்... ஆனால் இவள் விஷயத்தில் எதிர்மறையாய் புயலுக்கு முன்னாலா... ஊகூம்... எதுவோ சரியில்லை...

சந்தேகக் கண்களுடன் அவளைப் பார்க்க... அவளோ அவனைப் பார்த்து ஒரு குழந்தை சிரிப்பு சிரித்தாள்... நிச்சயமாய் எதற்கோ திட்டம் போட்டு விட்டாள் என்று மட்டும் தெரிந்தது.

அது என்ன...?

கேட்டு விடலாமா என்று வாயெடுத்தபோது...

பணிப்பெண் தொடர வந்தாள் வீணா...

முகத்தில் சாந்தம்... இதழ்களில் புன்னகை... மேனியில் அடக்கம்.. ஆகா... என்ன நடிப்பு!



இகழ்ச்சியுடன் நினைத்தாள் ஊர்மிளா.

"பாரதி... எல்லோருக்கும் சர்பத் கொடும்மா..."

சர்பத்தில் மட்டுமா ஜில் இருந்தது... வீணாவின் குரலிலும் தான்... அடடா.. என்ன குழைவு...

ஊர்மிளா பாரதியைக் கூர்ந்து கவனித்தாள்.

அந்தச் சிறுமியின் இடது கன்னம் பழுத்து... சிவந்திருந்தது... கண்கள் கலங்கிப் போயிருந்தன.

இந்த இரக்கமில்லாத அரக்கியை மாதர் குல மாணிக்கம் என்றொரு ராஜ்... பாவம்...

வீணாவின் பசப்பான வார்த்தைகளையும்... ராஜ் குமாரிடம் வழிவதையும் காண சகிக்கவில்லை ஊர்மிளா விற்கு.

மெல்ல எழுந்து வெளிநடந்தாள்.

தோட்டம் போல மரங்கள் அடர்ந்து நின்றிருந்தன.

பூமிக்கு குடை பிடித்துக் கொண்டிருப்பதுபோல... இலைகளைப் போல பரப்பிக் கொண்டிருந்தன மரங்கள்......

விடுதி வாயிலை நோக்கிப் போய்க் கொண்டிருந்த அவளின் குறுக்கே குட்டிப் பூனை ஒன்று பாய்ந்து செல்ல... அவள் நின்று விட்டாள்.

"க்யூட்" என்று இதழ்கள் முணுமுணுத்தன. அதைப் பிடிக்க முன்னே சென்றாள்.

பயத்தில் அந்தப் பூனைக் குட்டி மரத்தில் தாவி ஏறியது. வெள்ளை உல்லன் நூல் உருண்டை போல இருந்த அந்த பூனை தாவும் அழகை ரசித்து நின்றாள்.

கிளைமேல் இருந்து இவளைப் பார்த்து சன்னமான குரலில் 'மியாவ்' என்றது அந்தக் குட்டி...

தனது செந்த... செப்பு வாயைத் திறந்து கூவிய அழகில் சொக்கிப் போனாள் ஊர்மிளா.

"அய்யோ... என்ன அழகு..."

"ப்ப்ஸ்ஸ்..." செல்லமாய் அதை அழைத்தாள்... அது கீழே இறங்க முயன்று தடுமாறிக் கொண்டிருந்தது.

ஒருவேளை அதுக்கு இறங்கத் தெரியவில்லையோ... பாவமே... பயந்து போய் ஏறிவிட்டது... இப்போ இறங்க முடியாமல் தவிக்கிறது... கீழே விழுந்து விட்டால்... நினைக்கவே உடம்பு நடுங்கியது.

மெல்ல தன் அழைப்பினால் அதனை வசியம் செய்தவாறு மெல்ல மெல்ல மரம் ஏறினாள்.

கிளையில் காலைப் பதித்து கொஞ்சம் கொஞ்சமாய் நகர்ந்தாள்... ஆயிற்று... பூனையின் அருகேயும் சென்று அதனை கையிலயும் எடுத்துக் கொண்டு விட்டாள்.

ஆனால்...

பூனை சின்னது... அந்தப் பூவுடம்பைக் கிளைத் தாங்கும்.

ஆனால்... ஊர்மிளாவின் எடையைத் தாங்கும் சக்தி அந்தக் கிளைக்கு இல்லாமல் போனதே!

சடசடவென்று அந்தக் கிளை முறிந்து கீழே விழுந்தது.

கூடவே ஊர்மிளாவும்... அவள் கையில் இருந்த பூனையும் தான்!

"வீல்" என்ற அலறலுடன் விழுந்தாள் அவள்.

கண் மூடித்திறக்கும் நேரத்தில் நடந்து விட்டது.

பூனைக்கு ஏதும் ஆகிவிடக் கூடாதே என்ற அச்சத்தில் அதை பத்திரமாய் பிடித்தவாறு... உடம்பை வளைத்து சமாளிக்க முயன்று அது இயலாமல் கீழே சரிந்தவள்...



விழாமல் இருக்க... காலை ஊன்றி நிற்க முயன்றபோது... கால் நழுவி பள்ளத்தினுள் நுழைந்தது.

சத்தத்தைக் கேட்டு பதறி ஓடி வந்தான் ராஜ்குமார்...

அவனைத் தொடர்ந்து வீணாவும்... அவளது பெற்றோரும்... அனைவரின் முகத்திலும் கலவரமும்... விழுந்து கிடந்த ஊர்மிளாவைப் பார்த்து அதிர்ச்சியும்..

ஊர்மிளாவின் கையில் இருந்த பூனைக்குட்டி பயத்தில் அவளது கையை பிராண்டி... துள்ளிக்குதித்து ஓடிவிட்டது.

ராஜ்குமார் சுதாரித்துக் கொண்டவனாய் ஊர்மிளாவின் அருகே ஓடினான்.

காலை ஊன்றிக்கொண்டு எழ நினைத்து.. அது இயலாமல் அமர்ந்து விட்டாள் ஊர்மிளா.

"ராஜ்... என் காலில் வலி... முடியல்லே..." கண்களில் நீர் மல்க சொன்னாள்.

காலைப் பரிசோதித்தான் அவன்.

எலும்பு முறிவு ஆனதாய் தெரியவில்லை.. இருந்திருந் தால் புஸ" புஸ"வென்று வீக்கம் வந்திருக்கும்.

வெறும் உள்காயம் மட்டுமே... அதன் அடையாளமாய் ரத்தம் கன்றி நீலம் கட்டியிருந்தது.

கீழே புல்தரை என்பதால் இந்த மட்டோடு போனது...

பொங்கி வந்த ஆத்திரத்தை அடக்கியவனாய் கேட்டான்.

"எதற்கு மரம் ஏறினே..."

"பூனைக்குட்டி... பாவம்... மரத்தின் மீது ஏறிவிட்டு இறங்கத் தெரியாமல் தவித்தது... அதுதான்..."

"இடியட். பூனைக்குட்டிக்கு மரம் ஏறவும் தெரியும். இறங்கி வரவும் தெரியும். கடவுள் இயற்கையிலேயே

அதற்கு அந்தத் திறமையை கொடுத்திருக்கிறார். உனக்கு தான் ஏறவும் இறங்கவும் தெரியாது...''

''என் மீது கோபமா... ராஜ்...'' கெஞ்சும் குரலில் அவள் கேட்டதும்... ஏதோ புரியாத வார்த்தைகளை முணுமுணுத் தான்.

குழந்தைபோல அவளைத் தன் கைகளில் ஏந்திக் கொண்டு தன் குதிரை மீது அமர வைத்தான். டெவில் மீது சவாரி என்றதும் கால் வலியும் மறந்து போனது.

''ஏஞ்சல்?'' என்று கேட்டான்.

அவளுக்கு பதில் சொல்லாமல்... காமேசுவரனிடம் திரும்பி ''ஜோசப்பை அனுப்புகிறேன்... ஏஞ்சலை அவ னிடம் அனுப்பி வையுங்கள்'' என்று கூறிவிட்டு அவள் பின்னே அமர்ந்தான்.

புறப்படுமுன் ஊர்மிளாவின் பார்வை வீணாவின் முகத்தில் படர்ந்தது... அவளது முகத்தில் கடுப்பு தெரிந்தது...

அதை ராஜ் கவனிக்கவில்லை என்றும் தெரிந்தது...

கால் வலியையும் மீறி சிரிப்பு பூத்தது.

'மிஸ் வீணா... உன் காதலரை நான் கவர்ந்து செல் கிறேன்' என்று கூவினால்... இப்போது அவளது முகம் என்னமாய் மாறும்... நினைப்பில் 'களுக்' என்று சிரிப்பு வெடித்தது.

''மறுபடியும் சிரிப்பாக்கும்... எதுக்கு சிரித்தாய்... ம்ம் எரிச்சல் மாறாமல் கேட்டான் ராஜ்குமார்.

''பரம ரகசியம்... சொல்ல மாட்டேனே...'' குறும்பாய் பதில் வந்தது.

''ஓகோ... தயக்கமாக்கும்... அதுவும் உனக்கா...''



''எனக்கா... தயக்கமா... நீங்க கேட்கத் தயார் என்றால் நான் சொல்லத் தயார்தான்... ராணி சம்யுக்தையை பிருத்விராஜ் கடத்திக் கொண்டு சென்றதாய் சொல்வார் தாத்தா. அவர்கள் இப்படித்தான் போயிருப்பார்களோன்னு நினைத்தேன். போதுமா... ஆ!'' அவனைப் பார்க்க உடலை அசைத்ததால் காலில் 'சுருக்' வலி.

''ஏன் கேட்டோம்'' என்று எழுந்த கோபத்தை... குதிரை ஓட்டும் வேகத்தில் காட்டினான் அவன்.

ஊர்மிளாவை தூக்கிக் கொண்டு மகன் வருவதைக் கண்டதும் என்னவோ... ஏதோ என்று பதறிக் கொண்டு வந்தார் கோகிலா...

பயப்படும்படி ஏதும் இல்லை என்று அறிந்து சமாதானம் அடைந்தார் அவர்...

டாக்டரும் வந்து சோதித்து விட்டு... அடி ஒன்றும் பலமாக இல்லை... ஒரு வாரத்தில் சரியாகி விடும்... நான்கு நாட்கள் ஓய்வாக இருந்தால் போதும்... ஐஸ் நீரில் துணியை நனைத்து காயம் பட்ட இடத்தில் ஒத்தடம் கொடுங்கள் என்று சொல்லிவிட்டு வலி தெரியாமல் இருக்க ஒரு ஊசியும் போட்டு விட்டுச் சென்றார்.

பாட்டியிடமும்... அஞ்சலையிடமும் பூனைப் பிடிக்கப் போன சாகச செயலை விலாவாரியாக வருணித்தாள் ஊர்மிளா.

''நல்லவேளை... இத்துடன் போச்சு... எலும்பு முறிவு ஏதாச்சும் ஆகியிருந்தா என்ன ஆகியிருக்கும்... உங்க தாத்தாவிற்கு பதில் சொல்லியாகணுமே... இனிமேலாவது இந்த மாதிரி வீரவிளையாட்டெல்லாம் செய்யாமல் இரும்மா ஊர்மிளா...'' ஆதங்கத்துடன் சொன்னார் கோகிலா... சிரித்துவிட்டு சொன்னாள் அந்தப் பேத்தி.

''எனக்கு ஒண்ணும் ஆகாது பாட்டி...''

''சொன்னா கேளும்மா...''

''ஓகே... பாட்டி போதுமா... இப்ப எனக்கு அசுர பசி எடுக்கிறது... என்ன இருக்கு பாட்டி.... சாப்பிடறதுக்கு..'' சிணுங்கிக் கேட்டாள் சின்னவள்.

''அடடா... பசியாடா... இதோ... கொண்டு வரச் சொல்கிறேன்... இரு..'' என்று எழுந்து சென்றார் கோகிலா.

''பழம் ஏதாவது சாப்பிட்றீங்களாம்மா'' என்று அஞ்சலை கேட்க...

''ஊகூம்... பசியெல்லாம் இல்லை அஞ்சலை... பாட்டி இருந்தா நீளமா புத்திமதி சொல்லிக் கொண்டு இருப்பாங் கன்னுதான் பசின்னேன்... எப்படி...'' என்று அஞ்சலையோடு சேர்ந்து சிரித்தாள்...

சின்ன வயது என்பதால் சீக்கிரத்தில் கால் குணமாகி விட்டது...

பழைய ஊர்மிளாவாக குதித்தோட ஆரம்பித்து விட்டாள்.

அஸ்வத்தை சந்திக்க அன்று சென்றாள்...

நடந்ததை அவனிடம் சொல்ல வேண்டும்... அவனும் அதையெல்லாம் ரசித்துக் கேட்டான்...

வழக்கமாய் சந்திக்கும் இடம்தான். ஆனால் அவன் இல்லை. சில நிமிடங்கள் காத்திருந்துவிட்டு புறப்படும் போது தான் அஸ்வத்தின் நண்பன் என்று சொல்லிக் கொண்ட ஒருவனை சந்தித்தாள்.

அஸ்வத் வரச் சொல்லியிருந்தானாம்...

ரொம்பவும் வேடிக்கையாகப் பேசினான்... அவனது பேச்சில் நகைச்சுவை உணர்வு இருந்தது... சுபாவமும் கலகலப்பு... நிறைய ஜோக்ஸ்களை எடுத்து விட்டான்... கடி



ஜோக்ஸ்... வீடு திரும்பும்போதுதான் நினைவுக்கு வந்தது... அடடா... பெயரைக் கேட்க மறந்து விட்டேனே... அடுத்த முறை சந்திக்கும்போது கேட்டுத் தெரிந்து கொள்ளணும்... அவனுடன் பேசியதில் பொழுது போனதும் தெரியவில்லை....

அசுவத் பழகுவதற்கு இனிமையானவன்தான். ஆனால்... இந்தப் புதியவனைப் போல தமாஷாக பேச வராது... இவன் எத்தனை ஜோக்ஸ் சொல்கிறான்... அவற்றையெல்லாம் அஞ்சலையிடம் சொன்னால் சிரிப்பாள்...

அஞ்சலையை நினைத்தவளின் கண் முன்னே அவளே பட்டாள். யாருடனோ பேசிக் கொண்டிருந்தாள்.

அஞ்சலையின் காதலனோ... இருக்கும்... பார்க்க இளைஞனாக இருக்கிறான்... சுமாரான உயரம்தான்... மாநிறத்தை விட கம்மியான நிறம்.

ஊர்மிளாவைப் பார்த்ததும் அஞ்சலை நாணிக் கோணி னாள் காதலன் என்பது உறுதியானது.

''ஊர்மிளாம்மா... இவங்கதான் அவங்க...''

''பெயர் ஏதும் இல்லையா அஞ்சலை'' பரிகாசமாய் கேட்டாள்.

''இந்தா... நீயே உன் பேரைச் சொல்லு...''

''ராமசாமி...'' அவனும் வெட்கம் காட்டினான். காதல் வெட்ட வெளிச்சமான பின்பு எதற்கு இந்த வெட்கம் உள்ளுக்குள் சிரித்துக் கொண்டாள் ஊர்மிளா.

''வரட்டுமா'' என்று விடை பெற்றுக் கொண்டு நடந் தாள். கொஞ்சம் தூரம் தான் வந்திருப்பாள்.

அவள் அருகே ஜீப் வந்து நிற்க... டிரைவர் இருக்கையி லிருந்த ராஜ்குமார் ''எங்கே சுற்றி விட்டு வருகிறாய் ஊர்மிளா... ஏறு ஜீப்பில்'' என்றான்.

அவனைப் பார்த்ததும் மகிழ்ச்சியுடன் குதித்து ஏறினாள் அவள்.

''இன்றைக்கு ஏதாவது புதுக்கதை வைத்திருக்கிறாயா...'' என்றான் ராஜ்.

''ஓ! இருக்கிறதே! ஒரு புது சந்திப்பு இன்றைக்கு... அசுவத்தின் நண்பனாம்...''

புருவங்களை உயர்த்தினான் அவன்... ''யார் அது... பெயர் சொல்...''

''ப்ச்சு... அதைத்தான் கேட்க மறந்துட்டேன் ராஜ்... என்ன தமாஷாகப் பேசுகிறான் தெரியுமா... கடி ஜோக்ஸ்ஸாம்... அறுத்து விட்டான்... ஒண்ணு சொல்றேன்... கேட்கறீர்களா ராஜ்...''

''வேண்டவே வேண்டாம்... என்னை விட்டு விடும்மா...''

மூக்கை சுருக்கினாள் அவள். ''ஆனால் ஒன்று ராஜ்... நீங்களும் வீணாவும் செம ஜோடி... மேட் ஃப்பார் ஈச் அதர்... இரண்டு பேருக்கும் நகைச்சுவை உணர்வு கம்மி...'' என்றாள் கேலியாக.

''ஒரே நாளில் வீணாவைப் பற்றி என்ன தெரிந்து கொண்டாய்... அவளைப் பற்றி விமர்சனம் செய்வதற்கு...

''நிறைய்ய... அதை நேரம் வருகிறபோது சொல்கிறேனே...'' அதைக் கேட்டு அவன் சிரித்தான்...

''இன்றைக்கு மழை வருமோ... என்னவோ...''

''எப்படிச் சொல்கிறாய்...''

''நீங்க சிரித்து விட்டீர்களே...''

அவன் சிரிப்பு இன்னும் பலமாயிற்று...

ஊர்மிளா சொன்னது இயற்கையின் செவியில் விழுந்து விட்டது போலும்...



மத்தியானமே வானம் கறுத்தது... கொஞ்ச நேரத்தில் பெருமழையாய் கொட்டியது.

இடியும் மின்னலும் இல்லாத மழை... நல்லவேளை! இடி என்றால் அவளுக்கு நடுக்கம்...

வானத்திலிருந்து பூமிக்கு அம்பாய் பாயும் மழைச் சரங்களை ரசித்தவாறு நின்றிருந்தாள் ஊர்மிளா.

மண் வாசனை! நாசியை இதமாய் தொட்டது...

மழையில் நனைந்தால் ஜாலிதான்... ஆனால் பாட்டி கோபித்துக் கொள்வார்களே... அந்தப் பயம்தான்.

கொட்டும் மழையை கையில் பிடித்து விளையாடிக் கொண்டிருந்தவளின் செவியில் மெல்லிய ஈனக்குரல் பட்டது.

உற்றுக் கேட்டாள்...

எங்கேயோ... ஏதோ ஒரு ஜீவன் கொட்டும் மழையில் நனைந்து... முனகிக் கொண்டிருப்பது தெரிந்தது... குரலில் நடுக்கம் வேறு.

எத்திசை என்று சரியாகத் தெரியவில்லை... போய் பார்க்கலாமா... ஊகூம்... வேண்டாம்...

பூனைக்குட்டி விஷயத்தில் பட்டது போதும்...

உள்ளே திரும்பிய அவளை மறுபடியும் அந்த தீனக் குரல் இழுத்து நிறுத்தியது...

அய்யோ... பாவம்... அவளது இதயம் கரைந்தது.

ஒரு முடிவுக்கு வந்தவளாய் ராஜ்குமாரின் அறைக்குள் சென்று அவனது ஜெர்க்கினை எடுத்து மாட்டிக் கொண் டாள்...

நல்ல வேளையாய்... யாரும் பார்க்கவில்லை... வெளியே இறங்கி மழையில் நடந்தாள்... அந்தக் குரல் வந்த திசை நோக்கி...

ராஜ்குமார் வீட்டிற்கு வந்ததும் ஊர்மிளாவைப் பற்றி விசாரித்தான்.

''என்னவோ தெரியலையேப்பா.. கொஞ்ச நேரம் மழையைப் பார்த்துக் கொண்டு நின்றிருந்தாள்... சரி... வீட்டில்தான் இருக்கிறாள்.. பயமில்லைன்னு தூங்கப் போனேன்.. எழுந்ததும் தேட்றேன்... மாயம்... இந்த மழையில் எங்கேன்னு அவளைத் தேடுவது...'' கோகிலா கலக்கத்துடன் சொன்னார்.

மழை குறைந்து... தூறிக் கொண்டிருந்தது.

பெருமூச்சு விட்டான் ராஜ்குமார்...

''சரிம்மா... நான் போய் பார்த்துவிட்டு வருகிறேன்...''

அவன் புறப்பட்டபோது... வாசல் பக்கம் நிழலாடியது. இருவரும் திரும்பிப் பார்த்தனர்.

சொட்ட... சொட்ட மழையில் நனைந்து நின்றிருந்தாள் ஊர்மிளா...

அவளது காலடியின் கீழே குட்டையாய் நீர் தேக்கம்! தாயும் மகனும் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டனர்...



# 8

மழையில் முழுவதுமாய் நனைந்ததால்.. கூந்தல் ஈரத்தில் முகத்துடன் ஒட்டிக் கொண்டிருக்க... ஜெர்கினிலிருந்து நீர் வழிய... உடம்பெல்லாம் புழுதியும்... கால் ஷூவில் சேறுமாய் நின்றிருந்தாள் ஊர்மிளா...



ஏதோ பழைய விளம்பரத்தில் வருமே... 'டிங்குவைப் போல பிள்ளையிருந்தால்' என்று... ஒரு குறும்புப் பையனைக் காட்டி... அந்த நினைவுதான் வந்தது ராஜ் குமாருக்கு...

அதனால் கூடவே சிரிப்பும் வந்தது.

அந்த சிரிப்பினைக் கண்டதும் ஊர்மிளாவும் சிரித்தாள்.

''எங்கே போயிருந்தாய்...'' கடவுளே... இதை எத்தனை யாவது முறையாய் கேட்கிறேன்... தெரியவில்லையே...

அப்போதுதான்... அவர்கள் எதிர்பார்க்காததைச் செய்தாள் ஊர்மிளா... ஜெர்க்கினுக்குள்ளிருந்து எதையோ வெளியே எடுத்தாள்.

என்னவோ... ஏதோ என்று பதைத்து அருகில் சென்றனர் தாயும் மகனும்...

நாய்க்குட்டி!

பிறந்து இரண்டே நாட்கள் ஆகியிருந்த நாய்க்குட்டி... கொழுக் மொழுக் என்று சின்னப் பந்து போல இருந்தது. இன்னும் பால் வாசனையுடன்... கண்களைத் திறக்கவும் கஷ்டப்பட்டு... முனகலுடன் ஒண்டியது..

ஜெர்க்கினுள் அடக்கமாய் இருந்து விட்டு... வெளியே வந்ததும்... குளிர் காற்று தாங்காமல் உடம்பெல்லாம் நடுக்கம்.

''எங்கே பிடித்தாய் இதை ஊர்மிளா... அய்யோ... பொறந்த குட்டிடா...'' என்று கேட்டார் கோகிலா.

''இதன் தாய் குட்டியைக் காணாமல் அலையுமே ஊர்மிளா'' ராஜ்குமார் அதை வாங்கிக் கொண்டு கேட்டான்.

''தேடிப் பார்த்தேன் ராஜ்... அதைக் காணோம். விட்டு விட்டு வந்தால் குளிரில் செத்து விடுமேன்னு தான் எடுத்து

வந்து விட்டேன்... பாட்டி.. ரொம்ப பசி... என்ன இருக்கு...'' என்றாள் அவள்.

''போம்மா... கைகால் கழுவிக் கொண்டு வா.. சாப்பிடலாம்...'' என்று சொன்னார் கோகிலா.

''ஐயே... எனக்கு இல்லை பாட்டி... இதுக்கு... பால் கொடுத்தால் சாப்பிடுமா...''

''இதுக்கு தாயிடம் பால் குடித்து வழக்கம்.. தட்டிலிருந்து சாப்பிடத் தெரியாதும்மா...'' என்று சொன்ன கோகிலா அஞ்சலையிடம் ஒரு கிண்ணத்தில் பாலும்... கொஞ்சம் பஞ்சும் கொண்டு வரச் சொன்னார்.

அஞ்சலை அவற்றைக் கொண்டு வந்து கொடுத்து விட்டு ''எங்கே கிடைச்சதும்மா இது...'' என்று கேட்டாள்.

''கொஞ்சம் தூரத்தில்... நல்ல அழகு இல்லையா அஞ்சலை...'' ஆர்வத்துடன் வினவினாள் ஊர்மிளா.

''எல்லாமே குட்டியில் அழகாத்தான் இருக்கும்னு சொல்லுவாங்க எங்க பாட்டி...'' சொல்லிவிட்டு சென்றாள் அஞ்சலை.

பாலில் நனைத்த பஞ்சை... நாய்க்குட்டியின் வாயினுள் பிழிய... அது இழுத்து உறிஞ்சியது...

''ராஜா... இதெல்லாம் சரிப்படாதுப்பா... கட்டை விரல் அளவு சீசாவும்... அந்த காலத்து நிப்பிளும் கிடைத்தால் வாங்கி வா... தாயிடம் பால் குடிப்பது மாதிரி குடிக்கும்..'' மகனிடம் சொன்னார் கோகிலா.

தாயின் உடல் அணைப்பைத் தேடியோ என்னவோ முகத்தை அங்கும் இங்கும் திருப்பி... அலைந்தது குட்டி.

அதனருகே முத்தமிடுவது போல தன் முகத்தைக் கொண்டு சென்றாள் ஊர்மிளா.



அதுவோ மெத்தென்ற கன்னக் கதுப்பை தன் வாயினால் நக்க... ஊர்மிளா அதை ரசித்துச் சிரித்தாள்.

''பாட்டி... நல்ல வாசனை இதுகிட்ட...'' என்றதும்...

''முதல்ல... இந்த ஈர உடையை மாற்று... முடிந்தா வெந்நீரில் குளித்துவிட்டு வா... ம்ம்... எழுந்திரு...'' என்று ராஜ்குமார் சொன்னான்.

''க்யூட் பப்பி...'' என்று இன்னொரு தரம் அதைக் கொஞ்சி விட்டு துள்ளி ஓடினாள் ஊர்மிளா.

அவளையே பார்த்துக் கொண்டிருந்தான் ராஜ்குமார்.

இன்னும் குழந்தையாகவே இருக்கிறாள்.

வளர்ந்த குழந்தை! இவள் செய்வதையெல்லாம் ரசிக்கத்தான் முடிகிறது...

அது அவனுக்கே வியப்பாக இருந்தது...

முன்னைப்போல எரிச்சலோ... கடுப்போ வருவதில்லையே... ஏன்...

கழுத்தறுப்பு... கால்கட்டு... தலையெழுத்து என்றெல்லாம் முணுமுணுத்தது... இப்போது இல்லையே... எப்படி...

ஒருவேளை... பழக்கப்பட்டு விட்டதாலா...

இல்லை... அவளது குழந்தைத் தனமான செயல்களை நானும் ரசிக்க ஆரம்பித்து விட்டேனா...

அது அவனுக்கே தெரியவில்லைதான்.

இப்பவும்... அவள் மழையில் நனைந்து வந்து நின்ற கோலத்தையும்... ஜெர்க்கினுக்குள் நாயை ஒளித்து வந்ததையும் நினைத்ததும்... முகத்தில் புன்னகை பூத்தது நிஜம்...

இரண்டு நாட்களில் அந்த நாய்க்குட்டி அந்த வீட்டின் செல்லப் பிராணியாக வலம் வந்தது.

ஊர்மிளாவின் பெரும் பொழுது அதனுடன் தான்..

அதுவும் ஊர்மிளாவின் பின்னலே இருந்தது.

இந்த மட்டும் அவள் வெளியில் சுற்றாமல் இருக்கிறாளே அது போதும் என்ற நிம்மதி கோகிலாவிற்கு...

அன்று ராஜ்குமார் வீடு திரும்பியதும்... நாய்க்கு பந்தை உருட்டி... அதற்கு விளையாட்டுக் காட்டிக் கொண்டிருந்த ஊர்மிளாவிடம் வந்தான்.

''உன் நாய்க்குட்டிக்கு என்ன பெயர் வைத்திருக்கிறாய்... ஊர்மிளா... உன் செல்லமாச்சே...'' என்று கேட்டான்.

''ஊகூம்... அதுதான் தெரியவில்லை ராஜ்... நீங்களே ஒரு பெயரை 'தேர்வு' பண்ணி சொல்லுங்களேன்...'' என்றாள் அவள்.

''எங்கே அதைக் கொடு...'' என்று வாங்கிக் கொண்டான். ஆசையுடன் அவன் அருகில் வந்து நின்று... அவன் என்ன பெயர் சொல்லப் போகிறான் என்ற ஆர்வத்துடன் அவன் முகத்தைப் பார்த்துக் கொண்டிருந்தாள் ஊர்மிளா.

''ம்... உனக்கு என்ன பெயர் வைக்கலாம். ப்ரௌன் நிறம்... ப்ரௌனி... யெஸ்... ப்ரௌனி உன் பெயர்... பிடித்திருக்கிறதா ஊர்மிளா...''

''ஓ... ஸ்வீட் நேம்... ப்ரௌனி... ஏய்... இனிமே... உன்னை ப்ரௌனின்னு கூப்பிட்டா ஓடி வரணும்... என்ன...'' நாயின் முகத்தருகே தன் முகத்தைக் கொண்டு சென்று கொஞ்சினாள் அவள்.

அதைப் புரிந்து கொண்டது போல நாய் சிணுங்க...

''ஸோ... கியூட்...'' என்று அதை முத்தமிட... ராஜ்குமார் சிரித்தான்... அவளது தலையை செல்லமாய் தட்டி... ''பார்த்துக் கொண்டே இரு... உன்கிட்டேயும் நாய் வாசனை



அடிக்கப் போகிறது...'' என்று பரிகாசம் செய்த வேளையில் தான்... வாசலில் வீணாவும் அவளது தந்தையும் வந்து நின்றது...

உள்ளே நுழைந்த வீணாவின் கண்களில்... ராஜ்குமாரும் ஊர்மிளாவும் அருகருகே நின்றிருந்த கோலம் பட்டுவிட... உள்ளம் தீயாய் கனன்றது...

வீணாவின் விஜயம்... அதுவும் திடீர் விஜயம் ராஜ் குமாருக்கு வியப்பைத் தந்தது... ஏன்... கோகிலாவுக்கும் தான்... இவள் எங்கே... இப்படி 'திடும்' என்று சொல்லாமல் கொள்ளாமல்... புருவங்களில் முடிச்சு தெரிய அவளைப் பார்த்தான்.

வீணாவின் மனதில் எரிமலை வெடித்தது.

ஏற்கனவே ராஜ்குமார் ஊர்மிளாவுடன் திரிவது எரிச்சலாக இருந்தது... போகட்டும். இரண்டு மாதம் தானே என்று பொறுமையாய் இருக்க முயன்றாள்.

ஆனால் இங்கே... ராஜ்குமாரும்... ஊர்மிளாவும் ஈஷிக் கொள்ளாத குறையாய் நின்றிருப்பதைப் பார்த்ததும்... பொறுமையெல்லாம் புஸ்வாணமாகி... ஆத்திரம் தான் தலைக்கேறியது.

இப்படியே விட்டால்... ஏமாந்து நிற்க வேண்டியதுதான். அதே சமயம்... ஆத்திரத்தைக் காட்டி விட்டால்... காரியம் கெட்டுவிடும்...

கஷ்டப்பட்டு தனது தகிப்பை அடக்கிக் கொண்டு வலிய... சிரிப்பை உதடுகளில் பூசிக் கொண்டு இனிமையாகப் பேசினாள்.

''ஊர்மிளா மரத்திலிருந்து விழுந்து அடிபட்ட பிறகு... வந்து பார்க்கவே இல்லை... அதான்... எப்படி இருக்கிறாள் என்று பார்த்துவிட்டுப் போக வந்தோம்...''

ஆனால் அது உண்மையான காரணம் என்று படவில்லை...

ஊர்மிளாவைப் பற்றி கோகிலாவிடம் விசாரிப்பது போல... அவள் இன்னும் எத்தனை நாட்கள் இருப்பாள்... ராஜ்குமாருடன் அடிக்கடி வெளியே செல்கிறாளா... இதுபோல கேள்விகளை எதேச்சையாய் கேட்பது போல அவள் கேட்கவும்... கோகிலாவிற்கு நன்கு புரிந்தது.

ஓ! சந்தேகம் பிராண்டியதில் இங்கு வந்திருக்கிறாள்! கோகிலாவிற்கு வீணாவை அப்படி ஒன்றும் பிடித்து விட்டதாய் சொல்ல முடியாது.

பரவாயில்லை... தெரிந்த குடும்பம்... ராஜ்குமாருக்கும் சம்மதமே என்ற அளவில் அவரும் தலையசைத்து வைத்தார்.

இப்போது... தன் மகனுக்கும் ஊர்மிளாவிற்கும் இடையே இருந்த உறவை அவள் சந்தேகக் கண்ணோடு பார்த்ததுதான் உறுத்தலாக இருந்தது.

ஊர்மிளாவிற்கு வெள்ளை மனம்... வெகுளி!

அவள் குழந்தை... வயது வந்த குழந்தை... அவ்வளவு தான்... ராஜ்குமாரும் அதை உணர்ந்திருக்கிறான். அவளைக் குழந்தை மாதிரி நடத்துகிறான்.

இவளுக்கு ஏன் இந்த சந்தேக புத்தி... இப்போதே ராஜ்குமார் மீது நம்பிக்கை இல்லாதவள்... நாளை அவனுக்கு மனைவி என்றானதும் சந்தேகக் கண்ணோட்டத் துடன் இருக்க மாட்டாள் என்பது என்ன நிச்சயம்...

கோகிலாவின் மனசுக்குள் நெருடிற்று.

நாய்க்குட்டி துறுதுறுவென்று ஹாலில் சுற்றிக் கொண் டிருந்தது.

வீணாவின் அருகே வந்துவிட... அவள் பதறியவளாய் கால்களைத் தூக்கி வைத்துக் கொண்டாள்.

அவளுக்கு நாய்... பூனை இவைகள் எல்லாம் அலர்ஜி...



முகத்தை சுளித்தவள் ''எப்போதிருந்து நாய் வளர்ப்பை ஆரம்பிச்சீங்க ராஜ்...'' என்று கேட்க...

''எங்கேயோ இருந்து ஊர்மிளாதான் கொண்டு வந் திருக்கிறாள்'' என்றாள் அவள்.

''கண்ட நாய்களைக் கொண்டு வந்து வீட்டுக்குள் வைப்பது நல்லதில்லை ராஜ்... முதலில் துரத்துங்கள்.''

அவளது கண்கள் நாயின் அருகே மண்டியிட்டுக் கொஞ்சும் ஊர்மிளாவின் மேல் விஷமாய் படிந்தன. உள்ளுக்குள் பொருமினார் கோகிலா...

அவள் நாயைக் குறிப்பிடுகிறாளா... இல்லை ஊர் மிளாவையா....

ஊர்மிளாவிற்கும் வீணாவின் வார்த்தைகள் காதில் விழாமல் இல்லை...

ராஜ்குமார் அதற்கு என்ன பதில் சொல்லப் போகிறான் என்று அறியும் ஆவலில் ஓரப்பார்வை பார்த்தாள்.

''கண்ட நாய் என்று இங்கு ஏதும் இல்லையே... வீணா... நாங்கள் கண்ட நாய் இப்போது இந்த வீட்டின் செல்லமாகி விட்டது... தெரிந்து கொள்...''

மறைமுக தாக்கிற்கு மறைமுகமாவே பதிலடி! அவளது வார்த்தைகளின் உள்ளர்த்தத்தைப் புரிந்து கொண்டு தான் பதில் தந்திருக்கிறான்...

சபாஷ் மகனே... மனதிற்குள் மெச்சிக் கொண்டார் கோகிலா.

ஊர்மிளாவிற்கும் உள்ளூர சந்தோஷமே...

வீணாவிற்கு நல்ல மூக்கறுப்பு...

இந்த நேரம் பார்த்து தான் நாய்க்குட்டி மறுபடியும் வீணாவிடம் ஓட வேண்டுமா...

எரிமலையாய் குமறிக் கொண்டிருந்தவளுக்கு... தன் கோபத்திற்கு வடிகாலாய் நாய் கிடைத்தது.

கால்களை முகர்ந்து பார்த்த குட்டியை எட்டி உதைக்க... ஓலமிட்டவாறு அது தூரப் போய் விழுந்து... பின்பு எழுந்து ஓடியது.

ஓடிச் சென்று அதனை வாரிக் கையில் எடுத்தாள் ஊர்மிளா... ஊர்மிளாவை சினத்துடன் உற்றுப் பார்த்தாள்... ச்சீ... நீயெல்லாம் ஒரு மனுஷியா... என்ற கேள்வி அவளது கண்களில்...

''ஒண்ணும் ஆகாதுடா... செல்லம்... சரியாயிடும்...'' என்று அந்த நாய்க்குட்டிக்கு தடவிக் கொடுத்தவளின் கண்களின் நீர் தேக்கம்...

அதைப் பார்த்ததும் ராஜ்குமாருக்கு சினம் பொங்கியது.

''என்ன வீணா இது... உன் பலத்தை ஒரு சின்ன ஜீவனிடம் தான் காட்ட வேண்டுமா... உன்னிடம் இதை நான் எதிர்பார்க்கவே இல்லை...'' என்றான் கடுகடுப்பாய்...

அப்போதுதான் அவள் தன் தவற்றை உணர்ந்தது.

சே! நிதானத்தை இழந்தோமே... இதுவரை பொறுமையுடன் கட்டிக் காத்த அடக்க ஒடுக்கத்தையெல்லாம் ஒரு வினாடியில் காற்றில் பறக்க விட்டு விட்டேனே...

''ஸாரி... ராஜ்... காலில் ஏதோ உறுத்தல் என்ற பயத்தில் எட்டி உதைத்தேன்...'' என்று பூசி மெழுக...

''என்னம்மா... ஒரு நாய்க்குட்டிக்கு இந்தப் பயமா... நல்ல பொண்ணுதான் போ...'' என்று கேலி செய்தார் காமேசுவரன்.

கோகிலாவிற்கும் மனம் பொறுக்கவில்லை...

''பொறுமைசாலின்னு உன்னை நினைத்தேன் வீணா... பெண்ணிற்கு பூஷணமான அந்த பொறுமையும் அடக்கமும் உன்னிடம் இல்லாமல் போச்சே...'' என்று சொல்லி விட.



கையைப் பிசைந்து தலை குனிந்திருந்தாள் அவள். அங்கே இருக்கவும் பிடிக்காமல் எழுந்து விட்டாள்.

''என்னவோ மனசு சரியில்லை டாடி... வாங்க போகலாம்'' என்று புறப்பட்டு விட்டாள்.

அவர்கள் சென்றதும்.. ''சே.... என்றைக்கும் இல்லாமல் இன்றைக்கு இப்படியொரு சச்சரவு வந்ததே... இந்த நாய்க் குட்டியால் வந்த பிரச்சனை... இதை எங்கேயாவது... கொண்டு போய்...'' என்று சலித்துக் கொண்டவனை இடைமறித்துப் பேசினாள் ஊர்மிளா...

''வாயில்லா ஜீவனை ஏன் குற்றம் சொல்கிறீர்கள்... உங்க வீணாவின் உண்மை ரூபத்தை வெளிக்காட்ட இது உதவிய தேன்னு இதுக்கு தாங்க்ஸ் சொல்லணும் நீங்க... வாடா... பெட்.. உனக்கு இந்த வீடு வேண்டாம்... போகலாம்...'' என்று கோபத்துடன் புறப்பட்டாள் ஊர்மிளா.

''எங்கே போகிறாய்'' என்று கேட்டான் அவன்.

''உங்கள் வீணாவிற்கு நாய் பிடிக்காது என்றால் உங்களுக்கும் பிடிக்காதே... இது எதற்கு இங்கே... வேண்டாம்...'' 'வெடுக்'கென்று சொல்லி விட்டுச் சென்றாள்.

நாயுடன் கொஞ்ச தூரம் நடந்தவளை ஒரு காட்சி ஈர்த்தது.

செடியின் மறைவில் நாய் ஒன்று தன் குட்டிகளுக்கு பாலூட்டிக் கொண்டிருந்தது... அதன் மடியை குட்டிகள் முட்டி மோதி... பாலருந்த... அது கண் மூடிக் கொண்டு படுத்திருந்தது...

அதன் குட்டியா இது... இதை சேர்த்துக் கொள்ளுமா...

ஒரு வேளை... கடித்துக் குதறிவிட்டால்...

நினைக்கவே மேனி நடுங்கியது... அய்யோ... அழகான இந்தப் பஞ்சு உடல் கண் முன்னே சின்னா பின்னமாகப் போவதை எப்படி சகிக்க முடியும்...

இல்லை... இந்த நாய்க்கும் தாயின் வாத்சல்யம் இருக்கும்... நிச்சயம் இதைப் பாசத்துடன் அரவணைக்கும்...

அந்த எண்ணம் தந்த நம்பிக்கையில்... நாய்க் குட்டியை மெல்ல கீழே விட்டாள்.

''ங்க்ம்ம்... ங்க்ம்ம்'' குட்டியின் சிணுங்கல் ஒலி கேட்டு அந்த தாய் நாய் விழித்து தலையைத் தூக்கிப் பார்த்தது.

சட்டென்று ஊர்மிளாவின் தோளை ஒரு கரம் அணைத்தது.. திரும்பிப் பார்த்தாள்.

ராஜ்குமார் தான்!

அவளை அணைத்தவாறு அங்கிருந்து அழைத்துச் சென்று தூர நிறுத்தினான்.

தாய் நாய் ஓடி வந்து... நாய்க் குட்டியைச் சுற்றிப் பார்த்தது... முகர்ந்து அது தன் குட்டித்தான் என்று உணர்ந்து கொண்டதும் பாசத்துடன் நக்கித் தந்தது. கொஞ்சுவது தன் தாய்தான் என்று உணர்ந்ததும் செல்லமாய் சிணுங்கியது அந்தக் குட்டி...

அதை வாகாய் கவ்விக் கொண்டு தன் இடத்திற்குச் சென்று... கீழே விட்டுவிட்டு... மறுபடியும் படுத்துக் கொள்ள...

மற்றக் குட்டிகளுடன் இதுவும் சேர்ந்து மடியை முட்ட ஆரம்பித்தது... தாய்மை சுகத்தில் தன் கண்களை மூடிக் கொண்டது அந்த தாய் நாய்.

இதுதான் தாய்மையா... இதுதான் தாய்மைக்குரிய பாச மழையா...

மெய்மறந்து இந்த அற்புதக் காட்சியைப் பார்த்துக் கொண்டிருந்த ஊர்மிளாவின் கண்களில் இருந்து தாரை யாய் கண்ணீர் வழிந்தது.



அவளையே கவனித்துக் கொண்டிருந்த ராஜ்குமார் அவளது தோள்களைப் பற்றித் திருப்பி ''என்ன.. ஊர்மிளா அந்தக் குட்டியைப் பிரியணுமே என்றா...'' என்று கேட்க...

''இல்லை ராஜ்... தாயன்பின் அருமையை இப்போ... இங்கேதான் உணர்ந்தேன். இந்தக் குட்டிக்கு கிடைத்த தாயன்பு எனக்குக் கிடைக்காமல் போனதே...'' என்று அவள் சொல்லிவிட்டு விம்மினாள்.

அவளை அப்படியே இறுக அணைத்துக் கொண்டான் அவன்... அவனது சட்டை அழுக்காகி விடுமே என்ற நினைப்பும் இல்லாமல்.. தன் முகத்தைப் பதித்து அழுதாள் ஊர்மிளா.

அழுது முடிக்கும் வரை காத்திருந்தான் அவன். கலங்கிய கண்களால் அவனை ஏறிட்டவள்...

''சாரி... ராஜ். இந்த மாதிரி நான் அழுததே இல்லை.. ஏனோ தெரியவில்லை... இன்றைக்கு என்னால் கட்டுப் படுத்த முடியவில்லை...'' என்றாள் வருந்தும் குரலில்.

''இப்போ... நாய்க்குட்டிக்கு நீதான் தாங்க்ஸ் சொல்ல வேண்டும்...'' அவளது வார்த்தைகளை அவளுக்குத் திருப்பினான் அவன்.

ஏன் என்பதுபோல அவள் பார்த்ததும்...

''ஏன் தெரியுமா... இதுவரை உன் அடிமனதில் அணுகுண்டு பாரமாய் அழுத்திக் கொண்டிருந்த துக்கம்... சுமை... இதோ பார்... உன் கண்ணீரில் கரைந்து போய்க் கொண்டிருக்கிறது...'' என்று சொல்லிவிட்டு தன் கைக் குட்டையால் அவளது கண்ணீரைத் துடைத்தான்.

அதைக் கேட்டதும் சிரித்து விட்டாள் ஊர்மிளா.

உண்மைதான்... இப்போது அவள் மனம் பஞ்சு போல லேசாக இருந்தது...

''சரி... போகலாமா... உன் பாட்டி அங்கே காத்துக் கொண்டிருப்பார்'' என்று சொல்லிவிட்டு அவளது கரத்தைப் பற்றிக் கொண்டு நடந்தான் ராஜ்குமார்.



## 9

கொஞ்ச நாளாய் அஞ்சலையின் முகத்தில் சிரிப்பைக் காணாது... அவளுக்கு என்ன ஆயிற்று என்று யோசித்தாள் ஊர்மிளா...

எப்போதும் எதையாவது வேடிக்கையாய் பேசுபவள்... இப்படி கலகலப்பில்லாமல் இருக்கிறாள் என்றால்... ஏதோ பிரச்சனை வந்திருக்க வேண்டும்...

அதைத் தெரிந்து கொள்ளும் ஆவலில் அஞ்சலையிடம் மெல்ல பேச்சுக் கொடுத்துப் பார்த்தாள்.

முதலில் இறுகிக் கிடந்தவள்... பின்பு மெல்ல தன் கவலையை வெளியிட்டாள்.

அவள் சொன்னது... அவள் வீட்டில் காதலுக்கு எதிர்ப்பு... அஞ்சலையின் தந்தை... பணத்தாசையில் யாரோ ஒரு குடிகாரனுக்கு பேசி முடித்து விட்டாராம். இன்னும் பத்து நாட்களில் திருமணம்! என்ன செய்வேன் என்று கண்களைக் கசக்கி... மூக்கை சிந்தினாள்.

''சரி... இது உன் ஆளுக்குத் தெரியுமா...'' என்று ஊர்மிளா கேட்க...



''ப்ச்சு... சொல்லி என்னம்மா பிரயோசனம்... அவரை நம்பி இருக்கிற அப்பன்... ஆத்தா... தங்கச்சி இவர்களை உதறி விட்டு வர முடியுமா. இல்லே... என் அப்பாவை எதிர்த்துகிட்டு என்னைக் கல்யாணம் பண்ணிக்கிற தைரியம் வருமா... எனக்கு எதுவுமே பிடிக்கலைம்மா...'' புலம்பினாள் அஞ்சலை.

''அப்படி துணிச்சல் இல்லாதவனை ஏன் காதலித்தாயாம்... சரி... விடு... உன் கல்யாணத்தை நான் முடித்து வைக்கிறேன்... கவலைப் படாதே... அஞ்சலை...'' என்று சொன்னாள் ஊர்மிளா...

''என் தலையெழுத்து போல நடக்கட்டும்.. விடுங்கம்மா..'' விரக்தியுடன் பதில் சொன்னாள் அஞ்சலை.

''கல்யாணம் எப்போ...'' என்று ஊர்மிளா கேட்க, சொன்னாள் அவள்.

இன்னும் பத்து நாட்கள் இருக்கே... சாதிக்கலாம்... அப்போதே என்ன செய்ய வேண்டும் என்று கணக்குப் போட ஆரம்பித்தது மனம்.

அன்று இரவு எட்டு மணிக்கு சோமநாதர் போனில் பேசினார்...

அவரிடம் பேசிய ராஜ்குமார் ஊர்மிளாவை அழைத்தான்.

''உன் தாத்தா... உன்னிடம் பேச வேண்டுமாம். வா...''

தாத்தாவிடம் பேசிய ஊர்மிளாவின் கண்கள் கசிந்தன.

நாளை என் பிறந்த நாள்... அதை மறக்காமல்... இப்போதே வாழ்த்து சொல்கிறார்... எனக்காக வாழும் ஒரே உயிர். எனக்கு வாழ்த்துச் சொல்லும் ஒரே உறவு...

நாளை எனக்குப் பிறந்த நாள் என்று யாரிடமும் சொல்லவில்லை... தம்பட்டம் அடிக்க மனம் இல்லை.

மும்பையில் இருந்திருந்தால் பிறந்த நாள் வேறு விதமாய் அமைந்திருக்கும்.

கண் விழிக்கையில்... தாத்தா வாழ்த்து கூறுவதற்குக் காத்திருப்பார். "என் பேபிக்கு பிறந்த நாள் வாழ்த்துக்கள்... ஹாப்பி பர்த்டே டு யூ..." என்பார் உற்சாகமாய். அங்கே அவளுக்காக அழகிய அன்பளிப்பு காத்திருக்கும். கூடவே புது உடையும் தான்.

சமையல்காரர் மாமா அன்று ஸ்பெஷல் பதார்த்தங்களை செய்து ஜமாய்த்திருப்பார். ஸ்வீட்... ஐஸ்க்ரீம்... என்று வகை... வகையாய்...

மனோஜும் அவனது சகோதரியும், இன்னும் சில சிநேகிதர்களும் வந்துவிட... ஒரே கொண்டாட்டம்... கும்மாளம்தான்.

கேக் வெட்டி... வாழ்த்துப்பாடி... பரிசுகள் அளித்து... இரவெல்லாம் வேடிக்கையும் விளையாட்டும்தான். பெரிதாய்... மியூஸிக் போட்டு... ஆட்டம் பாட்டம் என்று வீடு அமளி துமளி படும்...

தாத்தா எதையும் கண்டுக் கொள்ள மாட்டார்.

ம்ம்... இது மும்பையும் இல்லை... இங்கே தாத்தாவும் இல்லை. மனதில் வெடித்த ஏக்கம் பெருமூச்சாய் வெளி வர... கண்களை மூடிக் கொண்டாள்.

இந்த வருடம் நான் மட்டுமே... ஒற்றையாய் என் பிறந்த நாளைக் கொண்டாடப் போகிறேன்... சலிப்புடன் நினைத்துக் கொண்டாள்.

மறுநாள்...

வழக்கம் போல ஐந்து மணிக்கு விழிப்பு வர... உள்ளங் கைகளை சேர்த்து... குவித்து கண்களை மூடி தன்னைப் பெற்றவர்களை நினைத்துக் கொண்டாள். கட்டிலை விட்டு



இறங்கியவளின் கண்கள் பக்கத்தில் இருந்த டீபாயின் மேல் பட... மனதினுள் 'குப்'பென்று ஆனந்தம் குமிழிட்டது.

அழகிய விலையுயர்ந்த ஒரு 'டைட்டன்' வாட்ச்!

அத்துடன் ஒரு நாய் பொம்மை!

கூடவே ஒரு வாழ்த்துக் கார்டும்...

இந்நாள் மீண்டும் மீண்டும் சந்தோஷ நாளாய் வர வேண்டும் என்று வாழ்த்துகிறேன் - ராஜ்குமார்.

நாய்க்குட்டி பொம்மையை ஆசையுடன் எடுத்தாள். உயிருள்ளது போல இருந்தது அது... புசுபுசுவென்று உடம்பு... கோலி கண்கள்... அதிலும் ஒரு கார்டு... "இந்த நாய்க்குட்டி உன்னை விட்டுப் பிரியாமல்... உன்னுடனே எப்போதும் இருக்கும் - ராஜ்..."

ஆனந்தத்தின் மிகுதியில் அந்த நாய் பொம்மையை கையில் வைத்துக் கொண்டு தட்டாமாலைச் சுற்றினாள்.

அவசரமாய் ஒரு குளியல் போட்டு விட்டு... ஷாம்பூ போட்டு அலசிய கூந்தலை உலர்த்தி... அன்றொரு நாள் ராஜ்குமார் வாங்கித் தந்திருந்த சுரிதாரை உடுத்திக் கொண்டு கீழே வந்தாள்.

காலை நேரம் உடற்பயிற்சிக்கு தயாராக இருந்த ராஜ்குமார் ஊர்மிளாவைப் பார்த்துவிட்டு தன் புருவங் களை உயர்த்தினான்.

ஜீன்ஸும் இல்லை... டீ ஷர்ட்டும் இல்லை...

பெண்மை மிளிர சுரிதாரில் வந்தவளைப் பார்த்து "என்னோடு வரவில்லை..." என்று கேட்டான்.

எதுவும் சொல்லாமல் தன் இடக்கரத்தை நீட்டினாள்... அவன் அளித்த பிறந்தநாள் பரிசு... மணிக் கட்டில் பளபளத்தது.

''உங்களுக்கு எப்படித் தெரியும் ராஜ்...'' கண்கள் விரிய வினவினாள்.

''உன் தாத்தா ஃபோன் செய்து சொன்னது வேறு என்னவாம்... ''ராஜ்... குழந்தைக்குப் பிறந்த நாள் வாழ்த்தை முதலில் நான்தான் சொல்வேன். அவள் கண் விழித்துப் பார்க்கிறபோது அருகே அவளுக்காக வாங்கிய பிறந்த நாள் பரிசு தயாராக இருக்கும். நான் அங்கே இல்லாத குறையை நீதான் தீர்க்கணும்'' என்றார்... அதான்... அவர் மாதிரி செய்தேன்...'' என்று அவன் சொன்னதும்... அவளும் குறும் பாய் ''தாங்க்ஸ் சொல்லட்டுமா... கிராண்ட் பா'' என்றாள்.

''சொல்லேன்'' என்றான் அவனும்.

அருகில் வந்து எம்பி நின்று... அவனது கன்னத்தில் முத்தமிட்டுவிட்டு தாங்க்ஸ் என்றாள்.. இன்னொரு முத் தம்... இன்னொரு தாங்க்ஸ்... மறுபடியும் ஒரு முத்தம்... மூன்றாவதாய்... மீண்டும் ஒரு தாங்க்ஸ்...

''எதுக்கு மூன்று தடவை தாங்க்ஸ்...''

''முதல் கிஸ் வாட்சிற்கு... இரண்டாவது அழகிய நாய்க்குட்டிக்கு... மூன்றாவது... வாழ்த்து மடலுக்கு... புரிந்ததா கிரான்ட்பா...'' மூக்கை சுருக்கி... கன்னம் குழிய அவள் சிரித்தாள்.

''இப்போ புறப்படலாம் தானே...''

''ஓ... புறப்படலாமே... ஐ'ம் ரெடி...'' என்று குதித்துக் கொண்டு புறப்பட்டாள் அவள்.

''எனக்கு இன்னும் ஒரே ஒரு ஆசைதான் ராஜ்...''

நேர் பார்வை பார்த்தவாறு குதிரையை செலுத்திக் கொண்டிருந்த ராஜ்குமார் அவள் பக்கம் திரும்பிப் பார்த்தான்.



''உங்க 'டெவில்' மீது சவாரி செய்யணும்...''

''என் குதிரை எனக்கு மட்டுமே கட்டுப்படும் ஊர்மிளா...''

''இந்த பீற்றல்தானே வேண்டாம்ங்கறது.. நானும் சவாரி செய்து காட்டட்டுமா... ராஜ்.''

''அந்த விஷப்பரிட்சை எதுவும் வேண்டாம் ஊர்மிளா...''

''இல்லை... ராஜ்... ஒரு நாள் பாருங்களேன்... உங்களை ஆச்சர்யப்பட வைக்கப் போகிறேன்...'' சவால் விட்டாள் அவள்.

''நான் ஜோசபிடம் சொல்லி வைத்து விடுகிறேன்... பார்'' கலகலவென்று சிரித்தாள் ஊர்மிளா.

இருவரும் வெகுநேரம் கழித்து வீடு திரும்பினார்கள்.

வீட்டினுள் கால் வைத்தவள் பிரமிப்பில் அப்படியே நின்று விட்டாள்.

வீடே மாறிப் போயிருந்தது.

பூச்சரங்களால் வீடு முழுக்க அலங்காரம் செய்யப்பட்டு இருந்தது. ஹாலில் வண்ணக் காகித தோரணங்கள். ஆங்காங்கு பலூன்கள்.... மலர் கொத்துகள்...

நடு கூடத்தில்... சின்ன மேஜை மீது இளம் பச்சை நிற விரிப்பு... அதன் மேல் கேக்! அழகான சாக்லெட் க்ரீமில் 'ஹாப்பி பர்த் டே டு யூ ஊர்மிளா' என்று வரையப்பட்டு... வாயேன் என்று அழைப்பு விடுத்தது.

வாயைப் பிளந்து நின்றாள் அவள்... ஏதோ மாயா ஜாலம் போன்று இருந்தது அவளுக்கு...

மெல்ல திரும்பி ராஜ்குமாரைப் பார்த்தாள்.

''உங்கள் ஏற்பாடாக்கும்...'' என்ற கேள்வி அவளது பார்வையில் தெரிய...

அதைப் புரிந்து கொண்டவனாய் ''ஆம்'' என்பதைப் போல சிறு புன்னகையை அளித்தான்.

அவளது இதழ்கள் அசைந்தன... மெல்லிய ஓசையில் 'தாங்க்ஸ்' என்று... அவள் உணர்ச்சியில் தத்தளிப்பது புரிந்தது.

''என்னம்மா... அங்கேயே நின்று விட்டாய்...'' கோகிலாவின் குரலில் பிரமிப்பு கலைய... அவரிடம் ஓடினாள் ஊர்மிளா.

''பாட்டி... இதெல்லாம் யாருடைய ஐடியா...''

''ராஜாவோடதுதான். எங்களுக்கும் சந்தோஷம்தான்ம்மா... நம் வீட்டில் முதன் முதலாய்.. ஒரு சின்னப் பெண்ணோட பிறந்த நாள் கொண்டாட்டம் என்பதுதான் இன்றைய விசேஷம்...''

பாட்டியை இறுக்கக் கட்டிக் கொண்டு கன்னத்தில் முத்தமிட்டாள் ஊர்மிளா.

உறவுக்கும்.. பாசத்திற்கும் ஏங்கிக் கிடந்த அந்த இளம் உள்ளம்... அன்பு வெள்ளத்தில் சிக்குண்டு தத்தளித்தது.

''இப்படியே பாட்டியைக் கட்டிக் கொண்டு நின்றால் எப்படி... இந்த கேக்கை யார் 'கட்' பண்ணுவது... வா.. வா...'' அவளை இழுத்துக் கொண்டு சென்றான் ராஜ்குமார்.

பணியாட்கள் சுற்றி நின்று வேடிக்கை பார்க்க... பாட்டியும் ராஜ்குமாரும் அருகில் நின்று வாழ்த்த... அந்த கேக்கை சின்னதாய் வெட்டினாள்.

சிறுதுண்டை எடுத்து பாட்டிக்கு ஊட்டினாள்.

இன்னொரு துண்டை ராஜ்குமாரின் வாயில் ஊட்டினாள்.

''எனக்கு நீங்க ஊட்டி விடுங்கள். ராஜ்...'' சிறு பிள்ளையாய் அவள் கெஞ்சவும்...



அவனும் கேக் துண்டை அவளது வாய்க்கு கொண்டு சென்றான். கேக்கை கடிப்பது போல... அவனது விரலையும் சேர்த்து கடித்துவிட.... 'ஆ'வென்று அலறினான் அவன்.

''அச்சச்சோ... ரொம்ப வலிக்குதா ராஜ்...'' போலி அனுதாபத்துடன் அவள் கேட்க...

''என்ன... கேலியா... இதோ பார்...'' என்று அவளது பற்கள் பதிந்த அடையாளத்தை அவளுக்குக் காட்டினான்.

''இந்த பிறந்த நாள் என்றைக்கும் நினைவில் இருக்க வேண்டாமா... அதுக்குத்தான் இந்தக் கடி....'' என்று சொல்லி சிரித்தாள் அவள்.

''அது சரி... பாட்டியின் பரிசை நீ பார்க்க வேண்டாமா ஊர்மிளா... இந்தா...'' என்று அதை அவளது கையில் வைத்தார் கோகிலா...

''இன்னொரு சர்ப்பிரைஸா'' என்றவாறே அதை பிரித்தவள் அசந்து போனாள்.

கண் கவரும் ஸ்வெட்டர்! பாட்டி தன் கையால் பின்னியது.

''யாருக்கு பின்னுகிறீர்கள் பாட்டி...'' என்று தான் கேட்டபோது ''எனக்குத்தான்'' என்று பாட்டி சொன்னதாய் ஞாபகம்...

ஆக... பிறந்த நாள் என்று தெரியாமல் எனக்காக இந்த ஸ்வெட்டரை பின்னியிருக்கிறார் பாட்டி...

ஸோ... ஸ்வீட்!

ஒவ்வொரு இழையிலும் தன் பாசத்தையும் அன்பையும் சேர்த்து பின்னப்பட்ட அந்த ஸ்வெட்டர் ஸ்பெஷலானது தான்...

எல்லாமே சர்ப்பிரைஸ்!

"ஊர்மிளா... இன்று உன் பிறந்த நாளுக்காக ஸ்பெஷல் விருந்து... அதில் உனக்கு பிடித்த ரசமலாய்... ஃப்ரூட் சாலட் ஐஸ்க்ரீம் உண்டு... சீக்கிரம் வா..." கோகிலா சொன்னதும் குஷியில் குதித்தாள் அவள்.

"ஐஸ்க்ரீம்! இதோ நொடியில் வந்து விடுகிறேன் பாட்டி.."

சின்னக் குழந்தையாய் தாவிக் கொண்டு மாடி ஏறும் அவளை இருவரும் சிரித்தவாறு பார்த்துக் கொண்டு இருந்தனர்.

அன்று இரவு உறங்கப் போன போது அவளது உள்ளத்தில் களிப்பின் தாண்டவம்!

இந்தப் பிறந்த நாளை என்றைக்கும் மறக்க முடியாது...

இன்று ஸ்பெஷல் டே! அந்த எண்ணத்திலேயே உறங்கிப் போனாள் அவள்.

ராஜ்குமாரும் அதே நினைப்பில் இருந்தான்.

அன்றைய தினம் உண்மையில் ஸ்பெஷலானது. மறக்கவே முடியாதுதான்.

ஊர்மிளாவின் முகத்தில் தெரிந்த பிரமிப்பு... அவள் அடைந்த மகிழ்ச்சி... அதைக் காட்டிய விதம்... கன்னத்தில் கொடுத்த முத்தம்... 'கிராண்ட் பா' என்ற சீண்டல் வேறு...

அவன் சிரித்துக் கொண்டான்...

அதே நினைப்பில் இருந்தவனுக்கு... அன்றைக்கு வீணாவை சந்திக்கவேண்டும் என்ற ஏற்பாடு மறந்து போய் விட்டது...

ஏன்... வீணாவின் நினைப்பே வரவில்லை.





# 10

அஞ்சலையின் திருமணத்திற்கு இன்னும் மூன்றே நாட்கள் இருந்தன...

ஊர்மிளாவும் அதை மறக்கவில்லை.

அஞ்சலையும் வந்து புலம்பிவிட்டுப் போனாள்.

"என் தலையெழுத்து சரியில்லைம்மா. அந்தக் குடிகாரனுக்கு கழுத்தை நீட்டியாகணும். என் ஆளுக்கும் துணிச்சல் வராது... என் கஷ்டம் யாருக்கும் வரக்கூடாதும்மா..." யார் அந்த ஆள்... எங்கே இருக்கிறான்... என்ற விவரங்களைக் கேட்டுத் தெரிந்து கொண்டாள்.

அவனுடைய பலவீனம் பணம்... பாட்டில்... அஸ்வத்தின் உதவியை நாடினாள்... அவனும் அந்தக் குடிகாரனைப் பற்றி விசாரித்து வந்து சொன்னான். அவன் பேசிய விதத்தில் இருந்து அவன் அஞ்சலைக்கு மட்டும் அல்ல. எந்தப் பெண்ணிற்கும் ஏற்றவன் இல்லை என்று தெரிந்தது.

அரைக் கிழவன்... அவனிடமிருந்து எப்போதும் சாராய நெடி வீச்சம்...

ஊர்மிளா துணிவுடன் போய் அவனைச் சந்தித்தாள்.

உண்மைதான்... வற்றிய உடலும்... 'டொக்கு' விழுந்த கன்னங்களும் அவனது வயதைக் கூட்டிக் காட்டியது...

சிவந்த கண்களும்... குடி போதையில் தடுமாறும் வார்த்தைகளும் அருவருப்பைத் தந்தன.

அவனை நெருங்கிப் பேசவும் பிடிக்கவில்லை... குடலைப் பிடுங்கும் சாராய நாற்றம்...

''நீதானே பரமு...'' ஊர்மிளா கேட்டாள்.

''என்னா வேணும் உனக்கு... ஆமாம்... நீ யாரு... அதைச் சொல்லு... முதல்ல...''

''அஞ்சலையை நீதானே கல்யாணம் பண்ணிக்கப் போவது...''

இடுங்கிய கண்களால் அவளை ஏற இறங்கப் பார்த்தான் அவன்.

''அந்தக் கழுதைக்கு நீ என்னா வேணும்... பார்த்தா பெரிய வூட்டு பொண்ணு மாதிரி தெரியறே...'' என்றான்.

''இந்தக் கல்யாணம் நடக்காது...''

ஊர்மிளா சொன்னதும்... கோபத்தில் அவனது உடல் விறைத்தது. ''ஏய்ய்...'' என்று எழுந்து நிற்க முயன்று... முடியாமல் தள்ளாடி கீழே விழுந்தான்.

''நீ... யாருடி என் கல்யாணத்தைப் பத்தி... பேச... போடீ... போ..''

வேறு சமயமாக இருந்திருந்தால்... ஊர்மிளா வெடித்திருப்பாள். இப்போது... இங்கே நிதானமும் பொறுமையும் அவசியம். பற்களைக் கடித்துக் கொண்டாள்... பொறுமையை இழுத்து நிறுத்தி வைத்தாள்.

''அஞ்சலை இன்னொருத்தனை விரும்புகிறாள்... அது தெரியுமா உனக்கு'' என்றாள் ஆணித்தரமாய்...

''அட... போம்மா... அவ யாரை விரும்பினா எனக்கு என்ன வந்தது... கல்யாணம் பண்ணிக்கப் போவது நான் தான்... விடு...'' அசட்டையாய் வந்தது பதில்...



''ஏன்... உனக்கு வேறு பெண்ணே கிடைக்கவில்லையாக்கும்'' என்று எரிச்சலாய் அவள் கேட்டதும்... 'கெக்கே' என்று ஒரு அசிங்கமான இளிப்பைத் தந்துவிட்டு...

''உனக்கு விசயம் தெரியாது... விடு... பொண்ணு... இது அவ அப்பனுக்கும் எனக்கும் இருக்கற விவகாரம்... அந்த மடையன் இருக்கான் இல்லே... அந்த பன்னாடை எனக்கு பணம் தரணும்... 'பைசல்' பண்ணுடான்னேன். துட்டு இல்லைன்னு மூக்கால் அழுதான் அந்தப் பரதேசி... சரி... உன் பொண்ணைக் கொடு... எனக்கு ஆக்கி வைக்க ஒருத்தி வேணும்னேன்.. சரின்னுட்டான்...''

''சரி... அந்தப் பணத்தை உனக்கு தந்தால்... இந்தக் கல்யாணத்தை நீ நிறுத்தி விடுவே தானே...''

''இந்த கையில் பணம் வச்சா... வாயிலே... பேச்சு... ஆமா...'' தன் கையில் அடித்து சத்தியம் செய்தான்.

''சரி... எவ்வளவு...''

''மூவாயிரத்து எழுநூறு...?''

''ப்பூ... இவ்வளவுதானாக்கும்...''

''என்னம்மணி... இவ்வளவு தானாங்கறே... உனக்கு வேணா இது சுண்டைக்காயா தெரியலாம். எங்களை மாதிரி ஏழை பாழைகளுக்கு ரொம்ப ஜாஸ்தி தெரிஞ்சுக்கோ'' என்றான் அந்த பரமு.

''சரி... நாளைக்கு இங்கேயே இரு.. நான் வந்து மொத்தப் பணத்தையும் தந்து விடுகிறேன். ஆனால் ஒன்று.. நான் பணம் தந்த விஷயத்தை யார்கிட்டேயும் மூச்சு விடக் கூடாது... என்ன... அதே மாதிரி.. திருமணத்திற்கு தலையும் காட்டக் கூடாது. சம்மதம்னா... பணம் தருகிறேன்'' என்றாள் கறாராய்...

''பணம் கிடைச்சதுன்னா... என்ன சொன்னாலும் செய்யறேன்... அந்த அஞ்சலையை யார் கட்டிகிட்டா எனக்கு என்ன... தாலி கட்டிகிட்டாதான் பொண்டாட்டியா... காசு வீசினா... எந்த கழுதையும் தேடி வரும்... நாளை வருவே தானே... பொண்ணு... ஏமாத்திட மாட்டியே...'' என்று அவன் கேட்க...

''கண்டிப்பாய் வருவேன்... ஆனால் கண்டிஷன் ஞாபகம் இருக்கட்டும்'' என்று எச்சரித்து விட்டு வீடு திரும்பினாள்.

அன்று இரவு... அதிசயமாய் தன்னைத் தேடி வந்த ஊர்மிளாவை ஆச்சர்யமாய் பார்த்தான் ராஜ்குமார்.

''ராஜ் உங்களிடம் ஒன்று கேட்பேன்... தருவீர்களா...'' அவளது பீடிகையைப் பார்த்து இன்னும் வியப்பு...

''வந்து... எனக்கு ஒரு ஐயாயிரம் வேண்டுமே... தர முடியுமா... தாத்தா உங்க பெயருக்குப் பணம் அனுப்புவ தாய் சொன்னார்... அப்படியே அனுப்பா விட்டாலும்... ஊருக்குப் போனதும் இந்தப் பணத்தை உங்களுக்கு அனுப்பி விடுகிறேன்'' என்று அவள் சொன்னதும்...

''எதற்கு இந்த ஐயாயிரம் ரூபாய்... ஏதாவது வாங்க வேண்டுமா... ஊர்மிளா...'' என்று கேட்டான் அவன்.

''சொல்லத்தான் வேண்டுமா ராஜ்...''

''திடீர் என்று இத்தனை பணம் எதற்கு என்று தெரிந்து கொள்ளத்தான்...''

''என் மீது நம்பிக்கை இருந்தால் கொடுங்கள்... ராஜ்... தயவு செய்து காரணம் மட்டும் கேட்க வேண்டாம்... ப்ளீஸ்...''

தோள்களைக் குலுக்கினான் அவன்.

''உன் தாத்தாவின் பணம்... உனக்கு சேர வேண்டியது நான் எதற்கு நடுவில்...'' என்று சொல்லி விட்டு... பீரோவைத் திறந்து பணத்தை எடுத்தான்.



அவள் கேட்ட பணத்தை தந்துவிட்டு... எதுவும் பேசாமல் அவன் செல்வது கண்டு அவளுக்குச் சங்கடமாக இருந்தது. தன் வார்த்தைகள் அவன் மனதை புண்படுத்தியிருக்க வேண்டும்... ம்ம்... எதுவும் செய்ய முடியாது. எல்லாம் நல்ல படியாய் நடக்கட்டும்.. பார்க்கலாம்... மறுநாள்... பரமு விடம் பணத்தைக் கொடுத்துவிட்டு கண்டிப்புடன் சொன்னாள் ஊர்மிளா.

''இதோ பார்... இந்தப் பணத்தை ராஜ்குமார் அய்யா கிட்டே இருந்துதான் வாங்கினேன்... நீ அந்த திருமணத்திற்கு வந்தாயோ... அவ்வளவுதான்...''

பரமுவின் கண்களில் பயம் தெரிந்தது.

''அய்யாவுக்குத் தெரிஞ்சு போச்சுங்களா... அம்மணி... இனிமே அவன் வீட்டுப் பக்கம் தலை வச்சும் படுக்க மாட்டேன்.'' என்றான் கலவரத்துடன்.

நிம்மதியடைந்தாள் ஊர்மிளா.

அஞ்சலையின் திருமண நாள்...

ராஜ்குமாருடன் வந்திருந்தாள் ஊர்மிளா.

காலம் காலமாய் விசுவாசத்துடன் உழைத்த குடும்பம் என்பதால் மகனை அனுப்பி வைத்தார் கோகிலா.

முகூர்த்த நேரம் நெருங்கியது... இன்னும் மணமகனைக் காணோம்...

அஞ்சலையின் தகப்பன் பதறி ஓடினான். மாப்பிள்ளை வீட்டுக்கு...

குடித்துவிட்டு விழுந்து கிடந்தவனை உலுக்கினான்.

''அட போடா... நீயாச்சு... உன் பொண்ணாச்சு...'' என்று மறுபடியும் மல்லாந்து விழுந்தவன்... போதைத் தலைக் கேறி... கட்டையாகிப் போனான்...

அஞ்சலையைப் பெற்றவன் படும் அவஸ்தையைக் கண்டு பொங்கி வந்த சிரிப்பை அடக்கிக் கொண்டாள் ஊர்மிளா... உதட்டை அழுத்திக் கொண்டு அவள் அமர்ந்திருப்பதை ராஜ்குமாரும் கவனித்தான்...

''அய்யா... நான் மோசம் போயிட்டேன்... அந்த குடிகாரனை நம்பி... இந்தக் கல்யாண ஏற்பாட்டை செய் துட்டேன்... ஆனா... அங்கே அவன் நல்லா குடிச்சிட்டு விழுந்து கிடக்கிறான்... இப்ப என்ன செய்வேன்... தெரியலையே... பாவிப் பயல்... இப்படி நம்ப வைத்து கழுத்தறுத்து விட்டானே... என் பொண்ணோட கதி அதோ கதியாகி விட்டதேய்யா... ஒரு குடிகாரனை மாப்பிள்ளை யாக்கப் பார்த்த என்னைச் சொல்லணும்... அய்யோ... நேரம் பார்த்து எங்களைக் கவுத்துட்டானே... என்ன செய்ய...'' என்று நெஞ்சில் அடித்துக் கொண்டு அழுதான்.

''குடிகாரன்னு சொல்றீங்க... பின்னே எப்படி உன் பொண்ணைக் கொடுக்கப் பார்த்தீங்க... இப்படி எப் போதும் போதையில் இருப்பவனா உங்கப் பொண்ணை நல்லா வச்சுப்பான்...'' சமயம் பார்த்து 'நறுக்'கென்று குத்திக் காட்டினாள் ஊர்மிளா.

''தப்புதான் அம்மா... என் புத்தியை ஜோட்டால் அடிச் சுக்கணும்... உறவுக்காரங்க மத்தியில் என் மானம் போயி டுச்சே... தாயீ...'' என்று புலம்பினான் அந்தத் தகப்பன்.

''இப்பவும் ஒண்ணும் மோசம் போய் விடவில்லை... அஞ்சலைக்குப் பிடித்தவனை அழைத்து வந்து இந்த திருமணத்தை நடத்தினால்... போன மானம் திரும்பி வந்து விடும்... முதல்ல அதைச் செய்யுங்க...'' என்று ஊர்மிளா கூறவும்...

''அய்யோ... எந்த முகத்தோடு அவனைப் பார்ப்பேன்...'' என்று முகத்தை மூடிக் கொண்டு தேம்பினான்.



''நீங்க தேடிப் போகத் தேவையில்லை... அவனே வந்து விடுவான்... அதோ... வருகிறான்... பாருங்கள்.. போய் மரியாதையுடன் அழைத்து வாங்க...''

ஓடினான் அஞ்சலையின் தந்தை.

இத்தனை அமர்க்களத்தையும் திகைப்புடன் பார்த்துக் கொண்டிருந்தான் ராஜ்குமார்...

அவன் கண்களுக்கு ஊர்மிளா விளையாட்டுப் பெண் ணாகப் படவில்லை.

அவனுக்கு ஒன்று மட்டும் நிச்சயமாய் தெரிந்தது. இதில் ஊர்மிளாவின் திருவிளையாடல் இருக்கிறது...

அதை அப்புறமாய் விசாரிக்க வேண்டும் என்று தீர் மானித்துக் கொண்டான்.

குறித்த வேளையில்... குறித்த முகூர்த்தத்தில் அஞ் சலைக்குத் தாலி கட்டினான் காதலன்....

காதலித்தவனே கணவனாகிவிட்ட சந்தோஷத்தில் ஊர்மிளாவிற்கு நன்றி கூறினாள்.

அழுது அழுது சிவந்திருந்த கண்கள்... இப்போது நாணத்தில் இன்னும் சிவந்து போயின.

கையெடுத்து கும்பிட்டவளாய் ''நீங்க நல்லா இருக் கணும்மா...'' என்று மனதார வாழ்த்தினாள். அவளது கையில் ஆயிரம் ரூபாயை வைத்துவிட்டு,

''இது உனக்கு நான் தரும் கல்யாணப் பரிசு அஞ்சலை'' என்றாள் ஊர்மிளா.

கண் கலங்கப் பார்த்தாள் அஞ்சலை...

''உயிருள்ள வரை நீங்க செய்த உதவியை நான் மறக்க மாட்டேன்... ஊர்மிளாம்மா...'' என்றாள் நா தழுதழுக்க...

வீட்டினுள் நுழைந்ததும் "உன்னிடம் பேச வேண்டும் ஊர்மிளா..." என்று ஆரம்பித்தான் ராஜ்குமார். அவன் சொல்லி முடிப்பதற்குள் தன் கைகளை உயர்த்தி "இருங்கள் நானே சொல்லி விடுகிறேன். அந்தக் குடிகார மாப்பிள்ளைக்கு பணத்தைத் தரத்தான் உங்ககிட்ட நான் பணம் வாங்கியது... வாங்கிய கடனுக்கு பதிலா அஞ்சலையைக் கேட்டிருக்கிறான்... அந்தப் பணத்தை நான் தந்து விடுகிறேன்... திருமணத்திற்கு வரவே கூடாது என்றேன்... பணம் என்றதும் வாயைப் பிளந்தான். அதே மாதிரி... அஞ்சலையின் காதலனுக்கு தைரியம் சொல்லி.. கொஞ்சம் பணம் தந்து கல்யாணத்திற்கு வரும்படி சொன்னேன்... ஐயாயிரம் ரூபாயும் 'ஃபட்...' போதுமா... விளக்கம்..." என்று படபடவென்று பொரிந்தாள் அவள்.

அவளையே சில வினாடிகள் பார்த்தவன்...

"என்னிடம் சொல்லியிருக்கலாமே ஊர்மிளா..." என்றான்.

"கூடாது என்பீர்கள்... அவனை மிரட்டி வைப்பீர்கள்... அஞ்சலையின் அப்பா திருந்தி இருக்க மாட்டாரே. முள்ளை முள்ளால் தான் எடுக்கணும்பாங்களே... அதைத் தான் நான் செய்தேன் ராஜ்..."

அவளது தலையில் செல்லமாய் தட்டிவிட்டு அவன் சொன்னான்.

"இந்தச் சின்னத் தலைக்குள் இத்தனை ஐடியாக்களா..." என்றான் கேலியாய்.

சிரித்துவிட்டு எழுந்து ஓடினாள். அந்தப் பாராட்டு அவளுக்கு 'டானிக்' மாதிரி இருந்தது.

ஆனால்... அடுத்த நாளே அவனது கோபத்திற்கு ஆளாகும்படி நேர்ந்தது.





# 11

ஒரு நாளாவது 'டெவில்' மீது ஏறி வலம் வர வேண்டும் என்ற தன் நீண்ட நாள் ஆசையை நிறைவேற்றிக் கொள்ள காத்திருந்தவளுக்கு நல்ல சந்தர்ப்பம் கிடைத்தது.

ராஜ்குமார் அவசரப் பணியாய் எங்கோ சென்று விட... காலை சவாரிக்கு போக முடியாமல் போனது.

மதியம் இரண்டு மணிக்கு மேல் குதிரை லாயத்திற்கு நடந்தாள் ஊர்மிளா...

இந்த நேரத்தில் ஜோசப் இருக்க மாட்டான் என்பது தெரியும். உணவு உண்ண தன் வீட்டிற்குச் சென்றிருப்பான்...

அவளைப் பார்த்ததுமே ஏஞ்சல் கனைத்தது... "ஊகூம் இன்னிக்கு உனக்கு ரெஸ்ட்..." என்றவள் நேரே டெவிலிடம் சென்றாள்.

அருகில் அவள் நெருங்கியதும் முதலில் முரண்டு பண்ணிய அந்தக் குதிரை... ஊர்மிளா மென்மையான குரலில் பேச ஆரம்பித்ததும் அடங்கிப் போனது.

அடுத்த பதினைந்து நிமிடங்களில் 'ஜம்'மென்று அதன் மீது அமர்ந்தவளாய்... காற்றாய் பறந்தாள்...

அவளுக்கு பெருமையாக இருந்தது.

என்னவோ பெரிதாய் ராஜ்குமார் பீற்றிக் கொண்டாரே... இந்தக் குதிரை அவருக்கு மட்டுமே அடங்கும் என்று...

இதோ... சாதுப் பிராணியாக சொன்ன பேச்சைக் கேட்கிறதே... இருக்கட்டும்... என்னாலும் சாத்தியம் தான் என்பதை அவருக்குக் காட்ட வேண்டும்.

இன்றைக்கு எவ்வளவு தூரம் செல்ல முடியுமோ... அத்தனை தூரம் செல்ல வேண்டும்... இந்த ஊர்மிளா சளைத்தவள் அல்ல என்று ராஜ்குமார் தெரிந்து கொள்ள வேண்டும்...

அந்த எண்ணம் தந்த பெருமிதத்தில் குதிரையை முடுக்க... அது கடுகி விரைந்தது... தூர... தூர... வெகு தூரத்திற்கு..

காற்றைக் கிழித்துச் செல்லும் அனுபவம் மெய் சிலிர்க்கச் செய்தது...

நான்கு மணி நேரம் சவாரியில் குதிரை ஓய்ந்து போனது...

நீர் நிலையைப் பார்த்ததும் குதிரையை நிறுத்தினாள். அவளுக்கும் களைப்பு... முகம் கழுவ வேண்டும் போல வியர்வையின் கசகசப்பு...

குதிரையும் நீர் அருந்தட்டும்... குதிரையை நீர் நிலைக்கு அழைத்துச் சென்றாள்.

'டெவில்' நாய்க்குட்டியாய் அடங்கிப் போனதில் அவளுக்கு பெருமிதம்...

அந்த நீர் நிலைக்கு சற்று தூரத்தில் யாரோ மீன் பிடித்துக் கொண்டிருப்பது தெரிந்தது.

''ஹாய்... ஊர்மிளா'' அவன் அழைத்ததும் அடையாளம் கண்டு கொண்டாள்.

''ஓ! அவன்... அந்தப் பெயர் தெரியாத நண்பன்... அஸ்வத்தின் சிநேகிதன்...

இவளும் கையசைத்தாள். ''ஹாய்... உன் பெயர் என்ன...''



''பாலா...'' அவன் மீன் பிடிப்பதை நிறுத்தி விட்டு எழுந்தான்.

''ஓகே... ஸி யூ பாலா...'' என்று குதிரைப் பக்கம் திரும்பியவளை நிறுத்தினான் அவன்.

''ஊர்மிளா... நில்லேன்...'' ஓடிவந்ததில் மூச்சு இரைத்தது அவனுக்கு.

''என்ன விஷயம் பாலா... சீக்கிரம் சொல்லு... நான் போக வேண்டும்... என்னைத் தேடுவார்கள்..'' என்றாள் அவள்.

''இன்னும் கொஞ்ச நேரம் இருந்து விட்டுப் போயேன்... ஊர்மிளா. எப்பவோ ஒரு தடவை சந்திக்கிறோம்...''

''இல்லை... பாலா... இப்போதே நேரமாகி விட்டது... இன்னும் கொஞ்ச நேரத்தில் இருட்டிடும்... ராஜ்குமார் வந்திருப்பார்... என்னையும் 'டெவிலையும்' காணாமல் தேடுவார்... வருகிறேன்...''

''கொஞ்ச நேரம் இரு ஊர்மிளா... உன் 'டெவில்' தான் காத்தா பறக்குமே... அப்புறம் என்ன... பத்து நிமிஷத்தில் வீட்டில் இருப்பேயாம்...''

ஊர்மிளாவும் குதிரையை கர்வத்துடன் பார்த்தாள். உண்மைதான்... காற்றை விட கடும் வேகம்!

''இன்றைக்கு ஜோக் ஏதும் வேணாமா! உனக்கு!''

''எது... சர்தார்ஜி ஜோக்கா... பாலா...?''

''ஆமாம்... வேறு ஏதோ புத்தகத்தில் படித்தேன். படிக்கிறபோது உன் நினைவுதான். உன்னை சந்திக்கும் போது சொல்லணும்னு நினைச்சேன்... நீயே வந்துட்டே....''

''சரி... சொல்...'' மரத்தின் வேரில் அமர்ந்தாள்.

''ஒரு சர்தார்ஜி பைக்கில் போய்க் கொண்டிருந்தானாம். அமாவாசை.. இரவு... மையிருட்டு... எதிரே பஸ் ஒன்று

வந்ததாம்... சர்தார்ஜிக்கு அது தெரியாமல்... இரண்டு பைக்குகள் வந்து கொண்டிருக்கிறது. நாம் இடையில் போயிடலாம்னு நேரே வண்டியை ஓட்டினான்...''

''அப்புறம்...''

''அப்பறம் என்ன 'டமார்' தான்...''

அதைக் கேட்டு விட்டுச் சிரித்தாள் ஊர்மிளா...

நான்கு ஐந்து ஜோக்குகளுக்குப் பின் மெல்ல கேட்டான்.

''உனக்கு 'ஏ' ஜோக்ஸ் தெரியுமா...''

''ச்சீச்சீ... அதெல்லாம் வேண்டாம்... பாலா...''

''அப்படி ஒன்றும் அசிங்கமில்லை.. சிரிப்பு வரும்..'' என்று ஒரு ஜோக்கை உதிர்த்தான்.

உண்மையில் கூசுவதுபோல அசிங்கமாக இல்லைதான். அந்த நம்பிக்கையில் அடுத்ததை ஆர்வமாய் கேட்டாள். லேசாய் அதில் விரசம் உரசியது. அடுத்தடுத்த ஜோக்குகளில் கொஞ்சம் கொஞ்சமாய் விரசம் ஏறுவதுபோல தோன் றியதும்... அவள் எழுந்து விட்டாள்.

''ச்சீ... நான் போகிறேன் பாலா...''

ஆனால் அவன் அவளைப் போக விடவில்லை. சட்டென்று அவளது கரத்தைப் பிடித்து இழுக்க... அவள் நிலை குலைந்து கீழே விழுந்தாள்.

அவளது இருபுறமும் தன் கைகளை ஊன்றிய பாலா. ஒருவித இளிப்புடன் கேட்டான்.

''என்ன பொண்ணு நீ... இத்தனை 'ஏ' ஜோக்ஸ் சொல்லியிருக்கேன்.. உனக்கு உணர்ச்சி வேகம் வரலையா...''

வேகமாய் அவனைத் தள்ளியவள் குதிரையை நோக்கி ஓடினாள்...



அவளது பதற்றத்தைக் கண்டு குதிரை கனைத்தது. ஆனால்... குதிரையை தொடுமுன் அவன் விரைந்து வந்து அவளை இழுத்துப் பிடித்தான்.

''என்னை விடு... நீ அயோக்கியன் என்று தெரியாமல் பழகி விட்டேன்... விடு...''

பயத்தில் அவளது உடம்பெல்லாம் நடுங்கியது. கைகளும் கால்களும் பலவீனமாகின.

அதைப் பயன்படுத்திக் கொண்டு அவளது இரண்டு கைகளையும் பின்புறம் மடக்கினான்... அவள் திமிறினாள்...

''பாலா... ப்ளீஸ்... என்னை விட்டுவிடு...'' குரலும் எழும்ப மறுத்தது.

''கண்ணு... ஈஸியாய் கிடைத்த கனி நீ... சீக்கிரம் விட்டு விட முடியுமா என்ன...''

அவனது கைகள் பட்ட இடம் நெருப்பு சுட்டது போல எரிந்தது...

உடம்பெல்லாம் பூரான்கள் ஊறுவது போல அருவருப்பு... இப்போது என்ன செய்வேன்... இவனை எப்படி சமாளிப்பது... உள்ளம் துடித்தது.

மனோபலம். இருந்தால் போதும்... எவனையும் எதிர்க்க முடியும்... பெண்ணிற்கு மனதின் சக்தியே பெரும் சக்தி... தாத்தாவின் வார்த்தைகள் 'சட்'டென்று நினைவுக்கு வர...

அடுத்த கணமே சுதாரித்துக் கொண்டாள் அவள்.

பெண் தன்னைக் காத்துக் கொள்ள... தன்னிடமே ஆயுதங்களை வைத்திருக்கிறாளே!

பற்கள்! அவனது கையை 'நறுக்'கென்று அழுத்தமாய் கடித்தாள்.

நகங்கள்! அவனது உடம்பில் தன் கூரிய நகங்களால் ரத்தக் கோடுகளை வரைந்தாள்.

'ஆ' என்று வீறிட்டவன் அவளை விட்டு விட்டு தன் கைகளை தடவிக் கொள்ளும் நேரத்தை வீணாக்காமல் ஓட்டம் எடுத்தாள்.

அவனும் விடவில்லை.

''இனிமேயும் உன்னை விட்டு விட்டால் நான் மீசை வச்ச ஆம்பளை இல்லைடீ...'' என்று கொக்கரித்தவனாய் பின்னாலே ஓடிவந்தான்...

அவன் பிடித்து விடுவானே என்ற பயத்தில் கால்களும் சக்தியிழந்து துணியாய் துவண்டன...

அவன் அருகில் வந்து விட்டதைக் கண்டு... கத்தினாள்.

''டெவில்... ஓடு... உன் எஜமானனிடம் ஓடு... ஓடு டெவில்...''

அந்த ஊமைப் பிராணி அதைப் புரிந்து கொண்டதோ என்னவோ... ஓட்டம் பிடித்தது.

அவனது கை... அவளுடைய டீ ஷர்ட்டைப் பிடித்துக் கொள்ள... அவள் ஓட முயல... அந்த டீ ஷர்ட் பின்புறம் 'டர்' என்று கிழிந்து தொங்கியது.

அவமானத்தில் 'திக்'பிரமையாகி நின்றாள் ஊர்மிளா. அவளது மேனி கூனிக்குறுகியது.

அவன் வெற்றி மதர்ப்புடன் அவளை அணைக்க முயன்றான்... அவளால் நகரவும் முடியாதபடி உடம்பெல்லாம் அதிர்ந்தது.

இதயம் தொண்டைக்குள் வந்துவிடும் போல எகிறிக் குதித்தது.

ஜோசப் உணவு உண்ட பின்பு திரும்பி வந்தான்.



'டெவில்' இல்லாதது கண்டு அதிர்ச்சியடைந்தவன், எல்லா இடங்களிலும் தேடிப் பார்த்தான்.

எங்கு போயிருக்கும்...

ஒரு வேளை அய்யா வந்து 'டெவிலை' அழைத்துப் போயிருப்பாரோ..

இருக்காது... காலையில் மட்டும் பயிற்சி... மற்றபடி ஜீப் தான்..

அய்யோ... இப்ப... அய்யாவுக்கு என்ன பதில் சொல்வது... பரிதவித்தான் ஜோசப்.

மணி ஐந்தும் ஆகிவிட்டது.

வீட்டில் கோகிலாவும் கலங்கிப் போயிருந்தார்.

ஊர்மிளாவை ரொம்ப நேரமாய் காணோமே...

ஐந்தரை மணிக்கு மேல் ராஜ்குமார் வந்தான்...

ஊர்மிளா இன்னும் வீடு வந்து சேரவில்லை என்று அறிந்ததும் தடுமாறிப் போனான்.

நேரே குதிரை லாயத்திற்கு சென்று பார்த்தான்.

ஜோசப் கையைப் பிசைந்து கொண்டு விஷயத்தை சொன்னதும் புரிந்து விட்டது...

ஊர்மிளா 'டெவில்' மீது போயிருக்கிறாள்.

அவளை எங்கேயோ தள்ளி விட்டிருக்கிறது அந்தக் குதிரை.

தெய்வமே... அவளுக்கு எதுவும் ஆகியிருக்கக் கூடாது... சோமநாதருக்கு பதில் சொல்ல வேண்டுமே... சரி... குதிரை அவளைத் தள்ளி விட்டிருந்தாள்...

அது திரும்பியிருக்க வேண்டுமே...

"அய்யா... அங்கே பாருங்க... நம்ம குதிரை!"

குதிரை தனியாக வருவதைப் பார்த்ததும் ராஜ்குமாரின் வயிற்றில் சுழன்று எழுந்த நெருப்புப் பந்து நெஞ்சில் நின்று அடைத்தது.

ஊர்மிளாவுக்கு ஏதோ ஆபத்து...

டெவில் மீது தாவி ஏறியவன்... "எனக்கு வழிகாட்டு டெவில்... ஓடு... இன்னும் வேகம்..." அவனது ஆவேசத்தையும்... அவசரத்தையும் உணர்ந்து கொண்ட டெவில் காற்றாய் பறந்தது.



## 12

இருள் மெல்ல மெல்லக் கவியத் தொடங்கியது. காற்றில் மரங்கள் வளைந்து நெளிந்து நடனம் ஆடின. கூட்டை சேரத் தொடங்கிய பறவைகளின் இரைச்சல் சத்தம் - 'காச் மூச்' என்று ஒலித்தன.

அங்கும் இங்கும் திரியும் சில் வண்டுகளின் சப்தம்...

குளிர் காற்று மேனியை வருட... உடல் நடுங்கியது ஊர்மிளாவிற்கு.

உள்ளத்தில் பயம் ஐஸ் கத்தியாய் ஊடுருவியது...

அவன் தொலைந்தானா... இல்லை... எங்கேயாவது காத்திருக்கிறானா... அந்த இடத்தை விட்டு நகரவும் பயம்... பசையைப் போட்டு ஒட்டியது போல அசையாமல் இருந்தாள்.



மணி என்னவாக இருக்கும்... ஆறு... ஆறரை... வரும் அவசரத்தில் கைக்கடிகாரத்தையும் கட்டவில்லை... சே! கடவுளே... ராஜ்குமார் டெவிலை பார்த்திருக்கணும்... ஆனால் இன்னும் வரவில்லையே.. வருவாரா... வராமல் போனால்... பீதியில் அடிவயிற்றில் கலக்கம். இரவு முழுவதும் இந்த வனாந்தரத்தில் இருக்க வேண்டுமா. மேனியில் நடுக்கம் வந்தது.

எல்லாம் என் மடத்தனத்தினால் வந்தது... யாரோ ஒருவனை நம்பி... அவனை நல்லவன் என்று நினைத்து ஏமாந்தேனே... பாட்டி எத்தனை புத்திமதி சொன்னார்... ஆண் பிள்ளைகளிடத்தில் ஜாக்கிரதையா இருக்கணும்.. தள்ளியிருக்கணும் என்று... அதையெல்லாம் காதில் போட்டுக் கொள்ளாமல்.... விளையாட்டாக இருந்ததற்கு இந்த தண்டனை!

உடலும் உள்ளமும் தளர்ந்து சோர்ந்ததன் பலவீனத்தால் கண்களில் நீர் முட்டியது. அடக்கிக் கொண்டாள்.

நெற்றிப் பொட்டில் விண்ணென்று வலி...

பாலாவுடன் போராடியதாலும்... கண் மண் தெரியாமல் ஓடியதாலும் கிழிந்த நாராய் துவண்டு போயிருந்தாள். காலருகில் ஏதோ சரசரத்தது... பாம்போ... அரண்டு போனாள். அடுத்த கணமே... பாம்பு கொத்தினாலும் சரி... இங்கே இறந்து போவேனே தவிர... அந்தக் கயவன் பாலாவிடம் சிக்கமாட்டேன்... மனதுக்குள் உறுதி வந்தது.

எப்படி தனக்குப் பலம் வந்தது... அவனது இரும்பு பிடியிலிருந்து எப்படித் தப்பித்தோம் என்பது அவளுக்கே புரியவில்லை. அவளையும் அறியாமல்... அரை மயக்க நிலையில் கிடந்தபோதுதான்... யாரோ தன் பெயரை உரக்கச் சொல்லி அழைப்பது கேட்டு விழித்துக் கொண்டாள்.

"ஊர்மிளா... எங்கிருக்கே.. ஊர்மிளா..."

ராஜ்குமாரின் குரல்! அமிர்தமாய் காதில் விழுந்தது... சஞ்சீவினியாய் உடம்புக்கு தெம்பூட்டியது.

ராஜ்குமார் வந்து விட்டார்... இனி பயமில்லை...

அருகில் வரவர... குளம்படி சத்தம்... டெவில் தான்...

அதுதான் அவரை அழைத்து வந்திருக்கிறது.

அந்த வாயில்லாப் பிராணிக்கு மானசீகமாய் நன்றி சொன்னாள்.

"ஊர்மிளா!"

"ராஜ்... இங்கே... இங்கே இருக்கேன்..." கூவிக் கொண்டே மறைவிடம் விட்டு வெளி வந்தாள்.

அந்த இருள் நிறைந்த சுழலில் அவள் குரல் வந்த திசையைக் குறி வைத்து குதிரையை ஓட்டி வந்து நிறுத்தி னான். கையில் இருந்த 'டார்ச்'சின் ஒளியில் அவளைப் பார்த்தான்.

"ஊர்மிளா... உனக்கு ஏதும் ஆகவில்லையே..." அவன் குரலில் இருந்த கனம் அவனது மனநிலையைக் காட்டியது.

அதுவரையில் அடங்கி இருந்த துக்கம் பீறிட்டு வர... 'ராஜ்' என்று ஓடிச் சென்று அவனைக் கட்டிக் கொண்டு அழுதாள்.

"இப்போ எதுவும் சொல்ல வேண்டாம்... என்ன நடந்தது என்பதை அப்புறமாய் சொல்... முதலில் இங்கிருந்து போகலாம்..." அவளது கையைப் பிடித்து அழைத்துச் சென்றான்.

"ராஜ்... அந்த பாலா..."

"எதிரே சிக்கினான் அந்த ராஸ்கல். சந்தேகம் வந்து விசாரித்தேன். தவற்றை ஒப்புக் கொண்டான். அவனுக்குக்



கொடுத்த அடியில் இனி இந்தப் பக்கம் தலைக்காட்ட மாட்டான்." வார்த்தைகளில் சினம் தெறித்தது. அவளை 'டெவில்' மீது உட்கார வைத்தபோது தான் அவன் கவனித்தான்... அவளது 'டீ ஷர்ட்' கிழிந்து தொங்குவதை ஆத்திரத்துடன் ஏதோ முனகியவன்... தனது ஜெர்க்கினைக் கழட்டி அவளுக்குத் தந்தான்.

அதை அவள் அணிந்து கொண்டதும்... அவனும் தாவி அமர்ந்தான்... குதிரை ஓடத் தொடங்கியது.

ஒரு பாதுகாப்பான அரவணைப்பில் சேர்ந்து விட்ட நிம்மதியில் மெல்ல உறக்கமும் வந்து அவளை வருடித்தர... அவன் தோளில் தலைசாய்த்து தூங்கிப் போனாள்.

சிறு குழந்தையாய் உறங்கும் அவளை அணைத்துக் கொண்டவனின் இதயம் வலித்தது...

பாவம்... என்ன அவதிப்பட்டாளோ... எங்கெல்லாம் ஓடித் திரிந்தாளோ... அந்தப் படுபாவியிடம் தப்பிக்க என்ன பாடுபட்டாளோ... ஊர்மிளாவை நினைத்து உள்ளம் ஊமையாய் அழுதது.

டெவில் மீது சென்றாள் என்று அறிந்ததும்... ஊர்மிளா வின் மீது 'சுர்' என்று கோபம் வந்தது உண்மைதான். ஆனால் அந்தக் கோபம்... வந்த வேகத்திலேயே கரைந்து விட்டதும் நிஜம்.

சொல்லாமல் கொள்ளாமல் சென்று... இப்படி இக்கட்டில் மாட்டிக் கொண்டாளே... இப்போது அவள் இருக்கும் நிலையில் அவளைக் கடிந்து கொள்ளவும் மனம் வர வில்லை...

கோபத்தைக் காட்டும் நேரமும் இல்லை இது...

இப்போது அவளுக்குத் தேவை... ஆறுதலும்... அர வணைப்பும் தான்...

அவனது அணைப்பு இறுகியது.

காலையில் ஊர்மிளா கண் விழித்தபோது மணி ஒன்பது! சூரிய வெளிச்சம் அறைக்குள் முழுக்க பரவியிருந்தது.

ஊர்மிளாவுக்கு உடம்பெல்லாம் வலி...

முந்திய நாள் சம்பவம் கனவு போல இருந்தது... ஆனால் முள் கீறி ஏற்பட்ட இரத்தக் கீறல்களும்... கல்லடி பட்டு காலில் உண்டான காயமும்.. அந்தப் பாவி... பாலா பிடித்த இடத்தில் தெரிந்த இரத்த சிவப்பு வரிகளும்... நடந்தது கனவல்ல... நனவே என்று கூறின...

எத்தகைய ஆபத்திலிருந்து தப்பித்தேன்...

ராஜ்குமாருக்கு நிச்சயம் கோபம் வந்திருக்கும்..

'டெவில்' மீது சென்றதற்காக...

வெகு தொலைவுக்கு ஓட்டிச் சென்றதற்காக...

எல்லாவற்றிற்கும் மேலாய்... சரியாகப் பரிச்சயம் இல்லாத ஒருவனை நம்பி பேசியதற்கு... இனி இவை யெல்லாம் சேர்ந்து அவனைக் கோபத்தின் உச்சிக்கே தள்ளியிருக்கும்... அது மட்டும் உறுதி!

அவளது உள்ளம் வாடியது.. நேற்றைய சந்தோஷம் நீட்டிக்காமல் இப்படி அற்பாயுசாய் முடிந்துவிடும் என்று எதிர்பார்க்கவும் இல்லை.

பணிப்பெண் சாந்தி எட்டிப் பார்த்தாள். அஞ்சலைக்கு பதிலாய் வேலைக்கு வந்தவள். ''இன்னும் கொஞ்ச நேரம் தூங்குங்கம்மா.. உங்களை எழுப்ப வேண்டாம்னு சொன் னாங்க பெரியம்மா... துவைக்கறதுக்கு துணி எடுத்துட்டுப் போகலாம்னு வந்தேன்...'' என்றாள் வேலைக்காரி.

ஆனால் அவளுக்கு தூக்கம் வரவில்லை... எழுந்து குளியல் அறைக்குள் சென்றாள்.



அங்கிருந்த கண்ணாடியில் தன்னைப் பார்த்தவளுக்கு அதிர்ச்சி...

கன்னத்தில் இரத்தக் கீறல்... கூந்தல் கலைந்து போய்... அதில் திட்டு திட்டாய் மண் துகள்கள்...

நேற்றைய போராட்டத்தின் சின்னங்களாய்... நினைக் கவே உடம்பெல்லாம் அதிர்ந்தது...

ராஜ்குமார் மட்டும் வராதிருந்தால்... நெஞ்சினுள் நடுக்கம் வந்தது...

அவருடன் குதிரையில் வந்த நினைவு வந்தது. அதற்கு பின் நடந்தது எதுவும் ஞாபகம் இல்லை. யார் இங்கே... என் அறைக்கு எப்படி வந்து சேர்ந்தேன்... ராஜ் என்னைத் தூக்கி வந்தாரா... எனக்கு 'நைட்டீ' அணிவித்தது பாட்டியா... யோசித்தாள். ஊகூம். எதுவுமே நினைவுக்கு வராத அளவிலா களைத்துப் போனேன்...

உண்மையில் அப்படித்தான்...

குதிரை மீது உறங்கிப் போன ஊர்மிளாவை பூமாலை யாய் தாங்கி எடுத்து நின்றிருந்த ஜோசபின் கைகளில் தந்து... குதிரையிலிருந்து இறங்கியதும்... அலுங்காமல் அவளை வாங்கிக் கொண்டு... ஹாலில் இருந்த சோபாவில் படுக்க வைத்தான்...

கோகிலா பதட்டத்துடன் வந்து விசாரிக்க... நடந்ததை சுருக்கமாய்... தணிந்த குரலில் சொன்னான் அவன். அவளது காயங்களைத் துடைத்து.. மருந்து போட்டு... அவளுக்கு நைட்டியை அணிவித்தார் கோகிலா...

ராஜ்குமார் ஆழ்ந்த உறக்கத்தில் இருந்தவளை ஏந்திக் கொண்டு அவளது மெத்தையில் படுக்க வைத்தான். மரக் கட்டையைப் போல படுத்திருக்கும் ஊர்மிளாவை சில வினாடிகள் உற்றுப் பார்த்தான்...

துள்ளித் திரியும் புள்ளிமானாய் இருந்தவளை இப்படி சிறகொடிந்த கிள்ளையாய் துவளச் செய்த அவனை... பற்களைக் கடித்தான் ராஜ்குமார்...

பாலா... நடுங்கிப் போய் தன் குற்றத்தை ஒப்புக் கொண்டவுடன் அவனுக்கு எழுந்த ஆவேசம்... பொங்கிய ஆக்ரோஷம்...

ஊர்மிளாவைக் கெடுக்கப் பார்த்தானே என்ற ருத்ரத்தில்... தன் பலத்தையெல்லாம் சேர்த்து ஒரு குத்து விட்டான்.

மூக்கிலும்... வாயிலும் இரத்தம் வழிய... நிலை தடுமாறி பாலா கீழே விழுந்து விட....

சினம் வடியாமல்... "இனி என் கண்ணில் பட்டால்... உன் உயிர் உனக்கில்லை... நினைவில் இருக்கட்டும்" என்று மிரட்டியனுப்பினான்.

கீழிறங்கி வந்த மகனிடம் கோகிலா புலம்பாத குறையாய் சொன்னார்.

"போதும் ராஜா... இனியும் இவளை இங்கு வைத்துக் கொள்வது சரியில்லைன்னு படுகிறது... உடனே இவளை அனுப்பி வைக்கிறதுதான் நல்லதுன்னு படுகிறது..."

பதிலுக்கு ராஜ்குமார் சிரித்தான்...

"என்னம்மா... ஆசையாய் வந்திருப்பவளை... 'சட்'டென்று அனுப்பி வைத்தால் மாமா என்ன நினைப்பார்... ஏதோ சின்னப் பெண்... தெரியாமல் மாட்டிக் கொண்டாள்... பாவம்... அதற்காக... உடனே மூட்டைக் கட்டி அனுப்பி விடுவதா... இனிமே... ஒழுங்கா இருப்பாள். பாருங்கள்..." என்று சொல்லிவிட்டு சென்றான் மகன்.

பேசுவது தன் மகனா... கோகிலாவிற்கு வியப்போ... வியப்பு...



"தலைவலி... கழுத்துச் சுமை... தொண தொணப்பு" என்றெல்லாம் சொன்னவனா இப்படிப் பேசுவது... ஊர்மிளா இருக்கட்டும் என்கிறானே...

கோகிலாவிற்கும் மனமில்லைதான்...

ஆனால்... அவளோ தவளைத் தன் வாயால் கெடும் என்பது போல... எதையாவது செய்து தொல்லையில் சிக்கிக் கொள்கிறாளே...

என்னதான் இருந்தாலும்... நாம் மூன்றாம் மனிதர்கள் தான்....

எத்தனை தான் பாசமாக இருந்தாலும் சொந்த பந்தமாகி விட முடியுமா... அந்நியர்கள் தானே...

ஏதாவது எடக்கு மடக்காய் நடந்திருந்தால்... கெட்ட பெயர் வந்திருக்குமே...

ஒருவேளை... தன் மகன் சொல்வது போல... இந்த சம்பவம் ஒரு பாடமாக அமைந்து... இவளது விளையாட்டுத் தனத்தைக் குறைக்குமோ... கோகிலா நப்பாசையுடன் நினைத்துக் கொண்டார்...

ஊர்மிளாவும் சிறிது நாட்கள் அமைதியாக இருந்தாள். எந்த வம்புக்கும் போகாமல் வீட்டினுள் வளைய வந்தாள். ஒரு வாரம்... ஒரே வாரம்தான்.

அதன் பிறகு பழைய குருடி கதைதான்!

அதே பழைய ஊர்மிளா... அதே குறும்புகள்.

இதோ பாரும்மா... ஊர்மிளா... ஒரு முறை பட்டது போதும்.. என்னதான் இருந்தாலும் நீ ஒரு பொண்ணு என்பதை மறந்து விடாதே... நீ கற்ற கராத்தே எல்லாம் சமயத்துக்கு வந்து கைக் கொடுத்ததா... இல்லையே...

இனி வாலிபப் பையன்களோட பேச்சு வேண்டாம்... தெரிந்ததா...'' படித்துப் படித்துப் புத்தி சொன்னார் கோகிலா.

''அவ்வளவுதானே.. பாட்டி... 'டன்'' என்று தன் கட்டை விரலை உயர்த்திக் காட்டிவிட்டு... வெளியே கன்றாய் துள்ளிச் சென்றாள் ஊர்மிளா.

அவளைப் பார்த்துவிட்டு கோகிலாவால் பெருமூச்சு விடத் தான் முடிந்தது.

நாய் வாலைக் கூட நிமிர்த்தி விடலாம் போல... இவளைத் திருத்துவது என்பது பிரம்ம பிரயத்தனம்தான்.

இன்னும் என்ன வம்புகளையெல்லாம் விலைக்கு வாங்கப் போகிறாளோ... அங்கலாய்த்தது அவரது மனம்...

இரண்டு நாட்கள் சத்தமில்லாமல் கழிந்தது. பாட்டியிடம் வந்து பணிவுடன் கேட்டாள்.

''பாட்டி... உங்களுக்கு கால்வலி பரவாயில்லையா... கொஞ்சம் பிடித்து விடட்டுமா...'' என்று அவரது கால்களை இதமாய் பிடித்து விட்டாள்.

''உனக்கு ஏதோ காரியம் ஆக இந்த கைகால் பிடிப்பு... அப்படித்தானே'' உஷாரான பாட்டி கேட்டதும்...

''ஸ்விட் பாட்டி... அதே... அதே... என்னோட பாய் ஃபிரெண்ட்ஸ்களை நாளைக்கு அழைத்து வர... ராஜ் கிட்டே 'பெர்மிஷன்' வாங்கித் தாங்களேன்... ப்ளீஸ்... பாட்டி... அவர்களுக்கு 'பிராமிஸ்' பண்ணிட்டேன்'' என்று கெஞ்சினாள் பேத்தி.

''யாருக்கு... என்ன பிராமிஸ்...'' என்று கேட்டுக் கொண்டு வந்தான் ராஜ்.

''என் ஃப்ரெண்ட்ஸ்களுக்கு ராஜ்... நம் வீட்டிற்கு அழைத்து வருவதாய்... அழைத்து வருகிறேனே ராஜ்... பாட்டிகூட ஒத்துக் கொண்டாயிற்று.. இல்லே பாட்டி...''



கோகிலா விழித்தார்... நானா... எப்போ...

திகைப்புடன் பார்க்க... கண்ணடித்தாள் அவள்.

''ஃப்ரெண்ட்ஸ் என்றால்... ஆண்களா... பெண்களா...''

''பாய் ஃப்ரெண்ட்ஸ்தான்... ராஜ்...''

கண்களில் கலக்கம் தெரிய மகனைப் பார்த்தார் கோகிலா.

மறுபடியுமா... அடக் கடவுளே!

புருவங்களை சுருக்கி... சிடுசிடுப்பாய் கேட்டான் ராஜ்.

''யார் அவர்கள்... எனக்கு அறிமுகம் ஆனவர்களா...''

''ஊகூம்... முரளி... சுந்தர்... விஜய் இவர்களைத் தெரியாது உங்களுக்கு ராஜ்... அப்புறம்... ரமணின்னு...''

''ஷட் அப்... ஊர்மிளா... உனக்கு எத்தனை தடவை சொன்னாலும் புரியவில்லையே... அனுபவப்பட்டும் திருந்த மாட்டேன்கிறாயே... 'பாய் ஃபிரெண்ட்ஸாம்...' மண்ணாங்கட்டி யாரையும் அழைத்து வரக்கூடாது... என் உத்திரவு இது...'' வெகு கண்டிப்புடன் அவன் சொல்ல...

அவனை முறைத்துப் பார்த்தாள் ஊர்மிளா.

மூக்கை சுருக்கி... உதட்டை வலித்து... பழிப்பு காட்டி விட்டு வெளியே ஓடிவிட்டாள்.

சொல்லத் தெரியாத எரிச்சலுடன்.. தன் அறைக்குள் சென்று 'பட்'டென்று கதவை அறைந்து சாத்தினான். ஊர்மிளாவை அறைய முடியாத கொதிப்பிலோ என்னவோ... கோகிலா கையைப் பிசைந்தார்... என்ன செய்வது என்று தெரியாத தவிப்பில்...

சுயபுத்தியும் இல்லை... சொல் புத்தியும் கிடையாது. இவளை என்ன செய்வது...

ராஜ்குமார் சொல்வது போல தன் தலை கொஞ்சம் கொஞ்சமாய் வீங்குவது போல பிரமை...

மறுநாள் காலை...

உணவு வேளையில் ஊர்மிளா கண்ணில் படாததை பெரிதாய் நினைக்கவில்லை ராஜ்குமார்.

அவளுக்கு கோபம்... அதுதான் கண் மறைவாய் இருக்கிறாள். இருக்கட்டும்... கொஞ்சம் கண்டிப்பு தேவை தான்... அப்போது தான் புத்தி வரும்... தான் தோன்றித் தனமாய் நடந்து கொள்வதை நிறுத்துவாள்.

கையைக் கழுவிக் கொண்டுத் திரும்பியவனுக்கு வியப்பு. ஊர்மிளா நின்றிருந்தாள்.

வந்து விட்டாளா...

அவனைப் பார்த்து சிரித்தாள் ஊர்மிளா... அவனும் பதிலுக்குப் புன்னகைத்தான்.

''குட்மார்னிங்... ராஜ்... உங்களுடைய உத்திரவை மீறி என் ஃப்ரெண்ட்ஸை அழைத்து வந்து விட்டேனே... நம் வீட்டில் 'டென்னிஸ் கோர்ட்' இருப்பதைச் சொன்னதும் பார்க்க ஆசைப்பட்டார்கள் ராஜ்... அதான்...''

''ஸ்டுபிட்... உன் மனதில் என்ன நினைத்துக் கொண்டிருக்கிறாய்... ம்ம்... ஏற்கனவே பட்டதெல்லாம் போதாதா:.. உன் மும்பை வழக்கம் எல்லாம் இங்கே வேண்டாம்... போய்... அவர்களை... மு..த..லில்..'' அவனது வார்த்தைகள் மெல்ல மெல்ல அடங்கி கண்களில் திகைப்பு ஏற... அப்படியே நாற்காலியில் அமர்ந்தான்.

''அலோ...'' ''ஹாய்'' என்று உள்ளே வந்த ஊர்மிளாவின் நண்பர்களை தலையசைத்து வரவேற்றான் ராஜ்... வேறு வழி?!



அதிர்ச்சியினால் தலை கிறுகிறுப்பது போல தோன்ற... டம்ளர் நீரை எடுத்து 'மளமள'வென்று குடித்தான். ஊர்மிளா வெகு சிரத்தையாய் தனது நண்பர்களை அவனுக்கு அறிமுகப்படுத்தினாள்.

அவனும் காது கொடுத்துக் கேட்டான்...



## 13

'மைடியர் ஃப்ரெண்ட்ஸ்... வரிசையாய் வந்து நின்று ராஜ் அங்க்கிளுக்கு 'ஹலோ' சொல்லுங்கள்.. ராஜ்.. இவன் விஜய்... ஐந்தாம் வகுப்பு... இவன் ரமணி... டேய்... நீ ஐந்தா... ஆறாம் கிளாஸா... ஆங்... ஆறாம் வகுப்பு... இது சுந்தர்... இவனும் ஆறுதான்.. முரளி... வாடா... இவன் ஐந்தாம் வகுப்பு... எங்கே... அங்க்கிளுக்கு வணக்கம் சொல்லுங்க... ப்ரெண்ட்ஸ்...''

கோரஸாக பிள்ளைகள் வணக்கம் சொல்ல...

அவனையும் மீறி சிரிப்பு வெளிப்பட்டது.

அவனது கோபம் எல்லாம் மாயமாகிப் போனது...

''சரி... இப்ப கிரிக்கெட் ஆடலாமா... ஃப்ரெண்ட்ஸ்... அப்ப ஓடுங்க... வெளியே... தலைவி தோரணையில் அவள் உத்தரவுபோட... 'ஓ'வென்று கூவிக்கொண்டு வெளியே ஓடியது அந்த வாண்டுகள் கூட்டம். முகத்தை சீரியஸாக வைத்துக் கொண்டு ராஜ்குமாரிடம் கேட்டாள் அவள்.

''ராஜ்... என் பாய்ஃப்ரெண்ட்ஸுடன் ஆடுவதற்கு அனுமதி உண்டுதானே!''

அவன் உரக்க சிரித்துவிட்டு ''ஊர்மிளா... யூ... ஆர் இன்காரிஜிபில்... மறுபடியும் எங்களைக் கலங்கடித்து விட்டாயே...'' என்றான்..

கோகிலாவும் ஒத்து ஊதினார்..

''நானும் பயந்து விட்டேன் ராஜா... என்னடா... வேதாளம், முருங்கை மரத்தை விட்டு இறங்கவே இல்லை யேன்னு...''

''அய்யே... நீங்களுமா பாட்டி... நான் சொன்னதை நீங்க இரண்டு பேரும் தப்பா புரிந்து கொண்டால் நான் என்ன செய்வதாம்... இவர்கள் என் ப்ரெண்ட்ஸ். எல்லோருமே 'பாய்ஸ்' தானே!''

''உன்னை...'' விளையாட்டாய் அவளை அடிப்பது போல அவன் கையை ஓங்க... ஊர்மிளா கலகலவென்று சிரித்தவாறு ஓட்டம் பிடித்தாள்.

அன்று முழுக்க கொட்டம் தான்...

அவர்களது லூட்டியில் வீடே கலகலத்தது.

மதிய உணவை ஒரு பிடி பிடித்து விட்டு மறுபடியும் விளையாட்டு... இப்போது அந்த குரூப்பில் ராஜ்குமாரும் சேர்ந்து கொண்டான்...

அவர்களுடன் கிரிக்கெட்... ஷெட்டில்... கேரம் என்று ஆடினான்.. பட்டம் செய்து காற்றில் பறக்க விட்டான்.

கேட்க வேண்டுமா... பிள்ளைகளுக்கு ஒரே கொண்டாட் டம்தான்.

மாலையில் எல்லோருக்கும் ஐஸ்க்ரீம்!



புறப்படுமுன் ''நல்ல அங்க்கிள்'' என்ற பட்டத்தை ராஜ்குமாருக்கு வெகு தாராளமாய் வழங்கிவிட்டுச் சென் றனர் அந்த வானரங்கள்.

''அது சரி... ஊர்மிளா... இந்த நண்டு சிண்டுகளை எப்போது பிடித்தாய்.. உன் வயசுக்கும் இவர்களது வய சுக்கும் ஒத்து வரலையே...'' ஆச்சர்யத்துடன் கேட்டான் ராஜ்குமார்.

''விஜய்... ரமணியை கிரிக்கெட் ஆடிக் கொண்டிருந்த போது பழக்கம்... முரளி... பாவம்... காசைத் தொலைத்து விட்டு அழுது கொண்டிருந்தான்.. அவன் அழுகையை நிறுத்தி... கடைக்கு அழைத்துப் போய் அவன் கேட்டதை வாங்கித் தந்தேன்.. அதிலேருந்து சிநேகம்... அப்புறம்.. மரத்தில் இருந்த புளியங்காவைப் பறிக்க கஷ்டப்பட்டுக் கொண்டிருந்த சுந்தருக்கு புளியங்காவைப் பறிச்சுத் தந்தேன்... இரண்டு பேரும் ஃபிரெண்ட்ஸாயிட்டோம். ஆமாம்.. ராஜ்.. அதென்ன... வயசு ஒத்து வரலைன்னு... என்னோட வயசுக்கு சரியா நண்பர்களைப் பார்த்துப் பழகக் கூடாதுன்னு தடா... அப்போ.. இவங்க தானே எனக்கு நண்பர்களாக இருக்க முடியும்... என்ன சொல்றீங்க.. பாட்டி...'' என்றவள்... பாட்டியின் பதிலுக்குக் காத்திருக் காமல் ஓடிப்போனாள்.

''நாய் வாலை நிமிர்த்தவும் முடியாது... இவளோட குறும்புகளை நிறுத்தவும் முடியாது... ராஜா...'' என்றார் கோகிலா.

''நீங்கள் சொல்வது சரிதான்ம்மா... அதே சமயம் இவளது குறும்புகளை ரசிக்காமல் இருக்கவும் முடியவில்லை'' என்றவன்... எதையோ நினைத்து தனக்குள் சிரித்துக் கொண்டு செல்ல... மகனை வியப்புடன் பார்த்தாள் தாய்.

தன் அறைக்குள் நுழைந்த ஊர்மிளா... சூட்கேஸைத் திறந்து எதையோ தேடினாள்... 'பவுச்' பையில் எட்டிப்

பார்த்த வெள்ளை நிற காகிதத்தைப் பார்த்து அவளது புருவங்களின் மத்தியில் முடிச்சு விழுந்தது.

அய்யோ... இதை மறந்து போனேனே...

யோசனையுடன் அதைப் பிரித்தாள்.

மருத்துவ பரிசோதனை சான்றிதழ்!

வாயில் முணுமுணுத்துக் கொண்டிருந்த பாடல் நின்றது...

புன்னகை மறைந்தது...

முகத்தில் இறுக்கம் வந்தது...

இதை வெளியிடும் நாள் வந்துவிட்டதோ...

கண்களை மூடிக் கொண்டாள்...

சொல்லலாமா... வேண்டாமா... மனசுக்குள் போராட்டம் வேண்டாம்... விட்டு விடலாம்... எதற்கு வீணாய்... என்று நினைத்தாள்.

ராஜ்குமார் எப்படி எடுத்துக் கொள்வார்... ஒரு வேளை பாட்டி கலங்கிப் போனால்... ஊகூம்... வேண்டாம்... அந்த மெடிக்கல் ரிப்போர்ட்டில் எழுதியிருந்ததை உரக்கவே வாசித்தாள்.

பெயர் ஊர்மிளா... வயது பதினெட்டு... இரத்த பரிசோதனையின் முடிவு... லுகிமியா... இரத்தப் புற்று நோய்!

காலண்டரில் பார்வை பதிந்தது...

அந்த மாதத்தின் கடைசி நாள்... ஆயிற்று... ஊருக்கு புறப்படும் நாள் நெருங்குகிறது.

சொல்லி விடலாம்... இதுதான் கடைசி... அதற்கப்புறம் மூட்டைக் கட்டிக் கொண்டு புறப்பட்டு விட்டால்... திரும்ப வர முடியாமல் போகலாம்... யார் கண்டது...



ஊர்மிளாவின் நினைவு என்றைக்கும் இருக்க வேண்டாமா... மறக்கவே கூடாது...

அந்த தீர்மானத்துடன் அன்று உறங்கிப் போனாள்.

திடீர் என்று ஊர்மிளாவிற்கு சங்கிலித் தொடராய் இருமல் வந்ததைக் கண்டு பதறிப் போனார் கோகிலா.

நேற்று வரை நன்றாகத்தானே இருந்தாள்... ஒரு வேளை அதிக நேரம் வெளியே விளையாடியதாலா... இல்லை.

ஐஸ்க்ரீம் சாப்பிட்டதாலா... விடாமல் இருமுகிறாளே... பாவம்!

கர்ச்சீப்பால் வாயை அமுத்திக் கொண்டு இருமலை அடக்க முயன்று... அது முடியாமல் துன்பப் படுவதைக் காணவும் சகிக்கவில்லை.

''டாக்டரிடம் அழைத்துப் போ ராஜா... என்னவோ தெரியவில்லை குழந்தை அவஸ்தைப்படுகிறாள்'' என்று மகனிடம் சொன்னார் கோகிலா.

அவனும் ஊர்மிளாவின் அவதியைக் கவனித்துக் கொண்டு தான் இருந்தான். அவனால் தாளமுடியவில்லை.

''கிளம்பு ஊர்மிளா... டாக்டரிடம் போகலாம்...''

''வேண்டாம் ராஜ்... இனி எந்த டாக்டராலும் எதுவும் செய்ய முடியாது...'' குனிந்த தலையுடன்... தொண்டை அடைக்க சொன்னாள் அவள்.

''என்ன உளறல் இது...''

தன் கர்ச்சீப்பை அவன் முன் நீட்டினாள்.

அந்த வெள்ளை நிற கைக்குட்டை இரத்தத்தில் நனைந் திருந்தது.

திடுக்கிட்டான் ராஜ்குமார்.

''இது என்ன ரத்தம்...''

''சாரி... ராஜ்... உங்களுக்கு தெரிய வேண்டாம் என்று இருந்தேன்... எனக்கு... எனக்கு 'ப்ளட் கான்ஸர்''' முகத்தை மூடிக் கொண்டு கேவினாள்.

தாயும் மகனும் சிலையாகிப் போனார்கள்.

ஊர்மிளாவிற்கா... ஊர்மிளாவிற்கா உயிர் கொல்லி நோய்! அய்யோ... தெய்வமே. இருவரும் கலங்கி விட்டார்கள். இரண்டு மாதங்களுக்கு முன்னால்... ஊர்மிளாவிற்கு புற்று நோய் என்று சொல்லியிருந்தால்.. அடடா... பாவமே என்ற மனிதாபிமானத்துடன் பரிதாபப்பட்டு.. அத்துடன் முடிந்திருக்கும்.

ஆனால்... இப்போது... தம் வாழ்க்கையில் நுழைந்து தங்களோடு ஒன்றி... தங்களில் ஒருத்தியாகி விட்டவளை... யமன் பாசக்கயிற்றுடன் சுத்துகிறான் என்பதை அறிந்ததும்... இதயம் வலித்தது அவர்களுக்கு.

கோகிலாவால் சகிக்கவும் முடியவில்லை... பொறுக்க முடியாத வேதனையுடன் ஊர்மிளாவை இழுத்து மடியில் போட்டுக் கொண்டு கண் கலங்கினார்.

''என் கண்ணம்மா... உனக்கா இந்த வியாதி... கடவுளே... இது உனக்கே நல்லா இருக்கிறதா...'' என்று புலம்பினார்.

பாட்டி படும் வேதனையைக் காண சகிக்காமல் தன் கண்களைத் தாழ்த்திக் கொண்டாள் ஊர்மிளா.

மனம் அடித்துக் கொண்டது.

சொல்லாமலே இருந்திருக்கலாமோ... என்ன அசட்டுத் தனம் பண்ணிவிட்டேன்... பாட்டி அழுகிறாரே... பாவம்! சே! இனி வருந்தி என்ன பிரயோசனம்... துணிந்த பின் துயரம் கொள்ளலாமா... இல்லை.. பின் வாங்கவும் முடியுமா...



ராஜ்குமாரை ஏறிட்டுப் பார்த்தாள்...

அவனிடமும் தடுமாற்றம் தெரிந்தது. பேசமுடியாமல் தத்தளித்தான்.

மௌனமாய் ஊர்மிளாவையேப் பார்த்துக் கொண்டிருந்தான்.. அவனால் அதை நம்ப முடியவில்லை.

சுதாரித்தவனாய் சொன்னான்.. ''இதை நான் நம்ப மாட்டேன் ஊர்மிளா... நீ பொய் சொல்கிறாய்... நோ... உனக்கு எதுவும் இல்லை... எங்கே... 'மெடிக்கல் சர்ட்டிபிகேட்' காட்டு.. பார்க்கலாம்...''

''என்ன ராஜா... கண்ணால் பார்த்தும் இப்படி பேசுகிறாயே... இவள் வாயிலிருந்து இரத்தமா வருகிறது.. இது என்ன விளையாடும் விஷயமா... பாவம்... குழந்தை கலங்கிப் போயிருக்கா... அவளிடம் போய் மெடிக்கல் சர்டிபிகேட் கொண்டு வாங்கறேயே...'' கோகிலா ஊர்மிளாவிற்கு பரிந்து பேச...

இப்போது ஊர்மிளாவிற்குள் மீண்டும் போராட்டம்...

சர்டிபிகேட்டை காட்டிவிடலாமா... இல்லை... வேண்டாமா... சரி.. இத்தனை தூரத்திற்கு வந்தாயிற்று... இனியும் எதற்கு குழம்பித் தவிக்கணும். காட்டி விடலாமே...

முடிவுக்கு வந்தவளாய் அதைக் கொண்டு வந்து காட்டினாள்.

ஆம்... உண்மைதான்... இதோ.. இந்த 'சர்டிபிகேட்' சொல்கிறதே...

ராஜ்குமாரின் கண்கள் சிவந்தன.

இதயத்தில் பிசைவது போல வலி...

ஊர்மிளா ரொம்ப நாட்கள் வாழப் போவதில்லை என்ற உண்மையை அவனால் ஜீரணிக்கவும் முடியவில்லை.

கண்களை மூடிக்கொண்டு... கை முஷ்டியை மடக்கி... இறுக்கிக் கொண்டு தன் வேதனையை அடக்கப் பார்த்தான்.

இருவரின் அவதியைப் பார்த்த ஊர்மிளாவிற்கு உள்ளூர உறுத்தல்... இந்த விஷயத்தைச் சொல்லாமல் இருந்திருக் கலாம்...

பேசாமல் வாயை மூடிக் கொண்டிருக்கலாம்... என்மேல் உயிரையே வைத்திருக்கும் இவர்களைத் துடிக்க வைத்து விட்டேனே.. ஏன் சொன்னோம்... மனசுக்குள் புழுங்கினாள் ஊர்மிளா.

குற்ற உணர்வுடன் அவர்களைப் பார்த்தாள் ஊர்மிளா...



# 14

கோகிலாவிற்கு பரிதவிப்பு...

இந்த இளந்தளிருக்கா இப்படி ஒரு கொடிய நோய் வந்திருக்கிறது... இறைவா... உனக்கு இரக்கமே இல்லையா... உன்னை கருணாமயி என்பதெல்லாம் பொய்தானா... உனக்கு கருணை இருந்திருந்தால்... இப்படி ஒரு கொடுமை நடந்திருக்க விட்டிருப்பாயா... கண்ணீர் வழிய ஊர் மிளாவை மடியில் போட்டுக் கொண்டு புலம்பி தீர்த்தார்.

காலை முன் வைத்தாகி விட்டது... இனி பின் வாங்க முடியாதே...

பரிதாபமாய் அவர்களைப் பார்த்து...



"அதனால்தான் பாட்டி... இருக்கிறவரைக்கும் எத்தனை சந்தோஷமா இருக்க முடியுமோ... அத்தனையும் பெறணும்... எவ்வளவு குறும்புத்தனம் செய்யணுமோ அவ்வளவும் பண்ணிடணும்னு நினைத்துச் செய்தேன்... அப்பா... அம்மான்னு எனக்கு ஞாபகம் இல்லை.. இது என் வீடு என்று நினைத்துதான் குதித்து கும்மாளம் போட்டேன்... அது தப்பா பாட்டி..." என்றாள் அவள்.

இந்த வார்த்தைகள் கல் மனதையும் கரைத்து விடுமே கோகிலாவும்... ராஜ்குமாரும் தீயில் பட்ட வெண்ணையாய் கரைந்ததில் வியப்பேதும் இல்லை... ராஜ்குமார் பாறையாய் கனத்த இதயத்துடன் தன் அறைக்குள் நுழைந்து கொண் டான்... கதவையும் சாத்திக் கொண்டான்.

தன் கண் முன் இளமானாய் துள்ளிக் கொண்டிருந்தவள்... இப்போது மரணத்தின் வாசலிலா... இதயத்தைப் பிழியும் வேதனையில் துடித்துப் போனான்.

இவள் ஏன் இங்கு வரவேண்டும்...

வராமலே இருந்திருந்தால்...

ஊர்மிளா என்று ஒருத்தியைப் பற்றி தெரிந்து கொள் ளாமலே இருந்திருக்கலாம்...

இந்த வேதனையும் தவிப்பும் வந்திருக்காது... உள்ளம் புண்ணாகியிருக்காது... இதயத்தில் ரண வேதனை இருக்காது...

இறைவா... ஏன் இவளை சந்திக்க வைத்தாய். எங்களுள் ஒருத்தியாய் பழக வைத்தாய்... எங்களை பாச வலைக்குள் சிக்க வைத்து விட்டு... இப்படி பரிதவிக்க விட்டுப் பார்ப்பது எந்த விதத்தில் நியாயம்... எதற்காக இந்த லீலை...

நெஞ்சில் அடைத்தது... துக்கமோ..? தொண்டை இறுகியது. வேதனையோ...

ஆறில் சாகலாம்... அது அறியாத வயது.

நூறில் சாகலாம்.. அனுபவித்த வயது.

இவள் பதினெட்டு ஆயிற்றே... டீன் ஏஜ் இன்னும் முடியவில்லை... அதற்குள்ளாகவா...

சட்டென்று நினைவுக்கு வந்தது.

அந்த மனோஜுடன் திருமணம் என்றாளே... அவர்களுக்கு இந்த விஷயம் தெரியாதா என்ன... ஒரு வேளை... அந்த மனோஜ்... கொஞ்ச நாள் வாழ்ந்தாலும் பரவாயில்லை என்று மணக்க விரும்பினானா...

இரவு... டின்னர் வேளையில்... அங்கே அமைதி... மயான அமைதி...

ஓரக்கண்ணால் இருவரையும் பார்த்தாள் ஊர்மிளா. ராஜ்குமார் உணவை உண்ணவும் பிடிக்காமல் கையால் அதை அளைந்து கொண்டிருந்தான். கோகிலா தன் தட்டின் முன் அமர்ந்து அதைத் தொடவும் பிடிக்காமல் வெறித்துக் கொண்டிருந்தார்.

''பாட்டி... உருளைக்கிழங்கு வறுவல் ரொம்ப டேஸ்ட்... ராஜ்... சாப்பிட்டு பாருங்களேன்.'' என்று ஊர்மிளா சுவைத்து சாப்பிடுவது கண்டு கண்ணீர் பொங்கியது.

பாவம்.. குழந்தை... அவளது இறுதி காலம் நெருங்கிக் கொண்டிருக்கிறது... தனக்குப் பிடித்தவற்றை சாப்பிடட்டும் என்று... சமயற்காரரிடம் இனி... ஊர்மிளாவிற்கு என்ன பிடிக்கும் என்பதைக் கேட்டு அந்த ஐயிட்டங்களை பண்ணும்படி கட்டளையிட்டிருந்தார் கோகிலா.

ஊர்மிளாவின் முன் தன் துயரத்தைக் காட்டிக் கொள்ளக் கூடாது என்று மனதை திடப்படுத்திக் கொண்டாலும்... கண்கள் என்னவோ அவ்வப்போது நீர் தெளித்து கன்னத்தில் கோலம் போட்டுக் கொண்டு தான் இருந்தது.



ஊர்மிளாவிற்குத் தெரியாமல் கண்களைத் துடைத்துக் கொண்டார் கோகிலா.

அவர்களைப் பார்க்க பாவமாக இருந்தது ஊர்மிளாவிற்கு... என் மீது எத்தனை அன்பு... இப்படித் தவிக்கிறார்களே....

சே... இந்த வாயை வைத்துக் கொண்டு நான் சும்மா இருந்திருக்கக் கூடாதா... இவர்களை இப்படி துன்பத்தில் இறுக வைத்து விட்டது என் தப்பு... என்று நினைத்தவள்... அடுத்த கணமே... இன்னிக்கு மட்டும்தான் இந்த வேதனை. நாளை சரியாகிவிடும் என்று சமாதானம் ஆனாள்.

உணவு பரிமாறிக் கொண்டிருந்த சாந்தா ''உங்க கண்ணு சிவந்திருக்கேம்மா... ரப்பையெல்லாம் வீங்கி கிடக்கும்'' என்று கேட்க...

''பாட்டி யாரையோ பார்த்து கண்ணடித்திருக்கணும்... அதான்... இல்லே பாட்டி'' என்று பரிகாசம் செய்தாள் ஊர்மிளா.

வேதனையிலும் இவளால் எப்படி வேடிக்கைப் பேச்சு பேச முடிகிறது... ஊர்மிளாவை வியப்புடன் பார்த்த கோகிலா... சாந்தாவிடம் சொன்னார்..

''கண்ணை ஏதோ உறுத்தியது... தேய்த்தேன்.. அதானோ என்னவோ...''

''வெளக்கெண்ணெய் பூசுங்கம்மா... சரியாகிவிடும்... இருங்க... பொன்னாங்கண்ணி கீர கிடச்சா வாங்கி வர்றேன்... கண்ணுக்கு நல்லதும்மா... போன கண்ணையும் கொண்டு வருமாம்... பொன்னாங்கண்ணி. நாலு நாள் சமைச்சு சாப்பிட்டா கண் நோய் எல்லாம் குணமாயிடும்...'' என்றாள் பணிப்பெண்.

அஞ்சலை மாதிரியே சாந்தாவும் அந்த வீட்டில் ஒன்றி விட்டாள்... உரிமையாய் பேசுவதும் உண்டு. அதுவும்

துறுதுறுவென்று இருக்கும் ஊர்மிளாவை பார்த்த மாத்திரத்தில் அவளுக்குப் பிடித்துப்போனது.

அஞ்சலையும் ஊர்மிளாவை மெச்சி சாந்தாவிடம் பேசியிருந்ததால் அவள் மீது மரியாதையும் உண்டானது.

''என்னங்கம்மா... அஞ்சலையின் கல்யாணத்தை நீங்க தான் நடத்தினீங்களாமே... அஞ்சலை சொல்லிச்சு...'' என்று சாந்தா கேட்க...

''உங்கிட்ட சொன்னாளா... சரி... உனக்கும் யாராவது இருந்தா சொல்லு... உடனே 'டும்டும்'க்கு ஏற்பாடு பண்ணுகிறேன்'' என்று பதிலுக்கு பரிகாசமாய் சொன்னாள் ஊர்மிளா...

''ச்சீ... போங்கம்மா...'' என்று கோணல் புளியங்காய் போல நெளிந்து வெட்கப்பட்ட சாந்தாவைப் பார்த்து சிரித்தாள் அவள்.

என்னமாய் கலகலவென்று இருக்கும் வீடு... இன்றைக்கு ஒருவர் முகத்திலும் சிரிப்பில்லை... வீட்டிலும் மயான அமைதி வேறு...

இப்போதும் சூழ்நிலையை சுமுகமாக்கத்தான் பேசியது. ஆனால் அதைக்கேட்டு விட்டு கோகிலா அமைதியாக இருந்தார்.

ஆனால் ஊர்மிளா சும்மா இருக்கவில்லை...

''அப்படியா... அப்ப... எனக்கும் சமைத்துப் போடு சாந்தா... கிழவியானாலும் எனக்கு கண் தெரியணும்... 'ஸ்பெக்ஸ்' போட்டுக்கக் கூடாது...'' என்றாள்... வேடிக்கையாக...

சட்டென்று கையை உதறிக் கொண்டு எழுந்தான் ராஜ்... கோகிலாவும் தட்டில் கைக் கழுவிக் கொண்டாள்.



''என்னம்மா... அய்யாவும், நீங்களும் எழுந்துட்டீங்க.. சாப்பாடு சரியில்லையா..'' பதறிப் போய் கேட்டாள் சாந்தா.

அவளிடம் எப்படி சொல்வது... மரணத்தை நெருங்கிக் கொண்டிருக்கும் ஊர்மிளாவின் பேச்சு தொண்டையை இறுக்கியதால் தான் உணவு பிடிக்காமல் போயிற்று என்று... நாளை எண்ணிக் கொண்டிருக்கும் இந்தக் குழந்தை நாளையதைப் பற்றி பேசியதை சகிக்க முடியவில்லை.

கிழவியாமே... அந்தப் பருவம் வரை இருப்பாளா. இவளது பேச்சைக் கேட்டு மனம் பொறுக்காமல் ராஜ்குமாரும் எழுந்து சென்று விட்டான்... பாவம்...

இதயத்தில் ஊசி குத்தல்... மனம் ஊமைக்குயிலாய் கூவியது.

அந்த நேரத்தில்தான் தொலைபேசி கிணுகிணுத்தது.

சென்று எடுத்தான் ராஜ்குமார்.

சோமனாதர்!

''ஹலோ... ராஜ் பையா... என் பேத்தி என்ன செய்கிறாள்'' என்று வினவினார்...

அவ்வளவில் உடைந்து போனான் அவன்... உள்ளே குமுறிய துக்கம் வார்த்தைகளில் சிதறியது.

''மாமா... நீங்களும் விஷயத்தை மறைத்து விட்டீர்களே!''

மறுமுனையில் சோமனாதர் விழிப்பது உணர முடிந்தது.

''என்ன சொல்கிறாய் ராஜ்... எதை மறைத்தேன். விவரமா சொல்லுப்பா...'' என்றார் அவர்.

''ஊர்மிளாவிற்கு 'ப்ளட் கான்சர்' என்கிற விஷயம்.'' வார்த்தைகள் சரியாக வராமல் தொண்டை கமறியது.

''என்னது... ஊர்மிளாவிற்கு ப்ளட் கான்சரா... யார் சொன்னது...'' அவர் குரலில் அதிர்ச்சி!

''உங்களிடம் சொல்லவில்லையா அவள்... எங்களுக்கும் இப்போதுதான் தெரிந்தது. நானும் அம்மாவும் மனம் உடைந்து போயிருக்கிறோம் அங்கிள். உங்களுக்கும் இது தெரிந்திருக்கும் என்று நினைத்து சொல்லிவிட்டேன். சாரி... அங்கிள்... உங்களுக்கும் மனசு கஷ்டமாக இருக்கும்..''

''கொஞ்சம் இரு ராஜ்... என் பேத்திக்கு புற்று நோய் என்று யார் சொன்னது. அவளிடம் எமனும் வர பயப் படுவான்... மை பாய்.''

பாவம்... வயதாகி விட்டதால்... இப்படி பேசி தன்னைத் தேற்றிக் கொள்கிறார் பெரியவர் என்று நினைத்துக் கொண்டான் ராஜ்குமார்.

''இல்லை... இல்லை... ஊர்மிளா எல்லோரையும் வசீகரித்தது போல அந்த எமனையும் வசீகரித்து விட்டாள் என்று நினைக்கிறேன் அங்கிள்...'' சொல்லும்போது அவனது கண்கள் கலங்கின.

சில வினாடிகள் மௌனம்... தளர்ந்து உட்கார்ந்து விட் டாரா... வயதான மனிதருக்கு இது பெரும் அதிர்ச்சி தான். பாவம்... எடுத்து வளர்த்தவராயிற்றே...

பேச்சு மூச்சு இல்லாததால் பயந்து விட்டான் அவன்.

''அங்கிள்... இருக்கிறீர்களா...''

''யெஸ்... மை ஸன்... இருக்கிறேன். அவள் சொன்னது உண்மையா பொய்யான்னு தெரிஞ்சுக்க முயற்சிக்க வில்லையா ராஜ்... அவள் விளையாட்டுப் பெண்... உங் களுக்கு இப்படிச் சொல்லி ஏய்க்கப் பார்ப்பாள்.:. என் பேத்தியைப் பத்தி எனக்கு நல்லாவே தெரியும்...''

''டாக்டர் சர்டிபிகேட்டை காட்டினாளே.. நானும் அதைப் படித்துப் பார்த்தேன் அங்கிள்... அதில் 'ப்ளட்



கான்ஸர்' என்றுதான் போட்டிருந்தது... அவள் சொன்னது பொய்யில்லை. நிஜம்...''

''ஓ'' என்று சொன்னார் பெரியவர்.

அதற்கு பிறகு அவர் பேசியதைக் கேட்டுக் கொண்டிருந்த ராஜ்குமாரின் முகத்தில் மாற்றம் வந்தது...

அவனால் நம்பவே முடியவில்லை... அது...



## 15

ராஜ்குமாருக்கு திகைப்பு...

ஊர்மிளாவிற்கு வியாதி என்றதும் தன் தாயும்... தானும் நொந்து போனதுபோல... சோமனாதர் தளரவில்லையே... ஒருவேளை மூப்பின் காரணமாய் பந்தபாசமும் குறைந்து விடுமோ என்று கூட தோன்றியது.

ஆனால்... அதற்கு பிறகு அவர் சொன்ன விஷயம்...

''என்னது... ரிப்போர்ட்டில் ப்ளட் கான்சரா... நோ சான்ஸ். ஊருக்குப் புறப்படுவதற்கு ஒரு வாரம் முன் தான் 'ப்ளட்' 'டொனேஷன்' செய்துவிட்டு வந்தாள். அவளுக்கு புற்று நோயா... இருக்காதே... வெயிட்... இன்றைக்கு... ஓ! ஏப்ரல் ஃபூல் டே... ஏப்ரல் பர்ஸ்ட்...''

அவர் உரக்கச் சிரிப்பது தெரிந்தது.

''ராஜ்... மை பாய்... உங்களையெல்லாம் நல்லா முட் டாளாக்கி இருக்கிறாள் என் அருமைப் பேத்தி... இதை

யெல்லாம் செய்யக் கூடியவள் தான்... அவளைப் பத்தி எனக்கு நன்றாகத் தெரியும்... குறும்புக்காரி...''

இன்னொரு அதிர்ச்சி... ஆனால் இது இன்ப அதிர்ச்சி!

சோமனாத மாமாவின் வார்த்தைகள் நெஞ்சில் பால் வார்த்தது போல இருந்தது.

ஏப்ரல் ஃபூல்... முட்டாளாகிப் போனோம்...

எப்படியெல்லாம் ஆட்டுவித்து விட்டாள்... அதிர வைத்து விட்டாளே... உடம்பின் ஒவ்வொரு அணுவையும் துடிக்க வைத்த அவளை என்ன செய்யலாம்..

அவனுக்கு கோபம் வரவில்லை... மாறாய் சிரிப்பு தான் வந்தது.

ஊர்மிளாவின் நடிப்பு முன் தோற்றுப் போனோமே... என்னமாய் நடித்தாள்...

அந்த பரிதாப பார்வை... முதலைக் கண்ணீர்... விம்மல் பேச்சு... முட்டாளாக்கி விட்டதே...

சாகசக்காரி... அவளை...

போனில் பேசிவிட்டு வந்த மகனிடம் ''யாரப்பா போன் செய்தது...'' என்று கேட்டார் கோகிலா. அவனது பார்வை ஊர்மிளாவின் மீது இருந்தது.

அவள் வெகு மும்முரமாய் மாம்பழப் பச்சடியை ரசித்து சாப்பிட்டுக் கொண்டிருந்தாள்.

''சோமனாத அங்கிள் தான்ம்மா...''

ஊர்மிளா நிமிர்ந்து அவனைப் பார்த்தாள்.

''என்னவாம் ராஜ்... ஏதாவது முக்கியமான சமாச்சாரமா...'' கோகிலா கேட்டார்.

''இன்று ஏப்ரல் முதல் தேதி... ஜாக்கிரதை என்று எச்சரித்தார்...''



இப்பவும் அவனது கண்கள் ஊர்மிளா மீதே தீர்க்கமாய் பதிந்திருந்தன.

பிறந்த குழந்தை போல... அப்பாவியாய் முகத்தை வைத்துக் கொண்டு சாப்பிடுவதில் முனைந்தாள் அவள்.

''என்ன இது... அற்ப விஷயத்துக்கெல்லாம் ஃபோன் பண்ணுகிறார்...'' என்று கோகிலா சொன்னதும்...

''அம்மா... இது அற்ப விஷயமா... இல்லை... பெரிய விஷயமான்னு ஊர்மிளாவைக் கேட்டால் தெரியும்...'' என்றான் மகன்.

''நானா... இப்ப நான் என்ன செய்தேன்.. பாட்டி... என்னை வம்புக்கு இழுக்கிறார் உங்க பிள்ளை... பாருங்கள்...'' அவனைப் பார்த்து உதட்டைச் சுழித்தாள்.

''அப்போ... உனக்கு ஏதும் தெரியாது... அப்படித்தானே... எங்கே... இப்போ என் முகம் பார்த்துச் சொல்...''

''என்ன சொல்லணும்...''

''எனக்கு ப்ளட் கான்சர் என்றுதான்...'' என்று அவன் சொல்லவும்... கண்களை விரித்தாள் அவள்...

''அய்யோ... ராஜ்... அது வரக்கூடாத வியாதி ஆயிற்றே! உங்களுக்கு ஏன் வந்தது.. பாவம்.. பாட்டி உங்க பிள்ளை...'' என்றதும்...

பொறுமையை முழுவதுமாய் இழந்தான் ராஜ்.

''உன்னை...'' என்று அவளைத் தாக்க அவன் பாய்ந்ததும்... அவள் எழுந்து சாப்பாட்டு மேஜையை சுற்ற... அவனும் அவளைப் பிடிக்க ஓடினான். மூன்று சுற்று ஆன பின்பு அவன் நின்று விட.. அவளும் நின்றாள்.

ராஜ்குமாரால் அடக்க முடியவில்லை... தன் இரு கரங்களையும் இடுப்பில் ஊன்றியவாறு பலமாய் சிரித்தான்..

அவளுக்கும் சிரிப்பு வந்தது.

ஏன்... எதற்கு என்று எதுவும் புரியாமல் விழித்த கோகிலாவின் அருகில் அமர்ந்து ''அம்மா... இந்த கழுதைக்கு எந்த நோயும் இல்லை... சும்மா கப்ஸா விட்டிருக்கிறாள்... அந்த நாடகத்தை நாமும் நம்பி விட்டோம். இன்றைக்கு முட்டாள்கள் தினம் என்று தெரியாமல் நாமும் ஏமாந்து விட்டோம்... பாருங்கள்'' என்றான் விவரமாக.

''நிஜமா ஊர்மிளா...'' இன்னும் நம்பிக்கை வராமல் வினவினார் கோகிலா.

பாட்டியின் பின்னால் நின்றவள்... அவரது கழுத்தைக் கட்டிக் கொண்டு சொன்னாள்.

''பாட்டி... எனக்கு ஏப்ரல் ஃபூல் பண்ணனும்னா குஷியோ குஷி... முட்டாள்கள் தினத்தன்று யாரையாவது முட்டாளாக்கிப் பார்ப்பது வழக்கம்... தாத்தா உஷாரா இருப்பார். நான் என்ன சொன்னாலும் நம்ப மாட்டார். இந்த முறை உங்களை ஏமாற்றி முட்டாளாக்க வேண்டும் என்று மும்பையில் இருந்தபோதே 'ப்ளான்' போட்டு வந்தேன்.

"இருமினதும் ரத்தம் வந்ததே... அது எப்படி... மெடிக்கல் ரிப்போர்ட் வேறே காட்டினேயே...'' சந்தேகத்துடன் கேட்டார் பாட்டி.

''அதுவா... பாட்டி.. என் தோழியோட அக்கா பெரிய டாக்டர். அவர் கிட்ட கெஞ்சிக் கூத்தாடி... பொய் ரிப்போர்ட் வாங்கினேன். திட்டிக் கொண்டே தான் கொடுத்தார்... ரத்தமா... ஈஸி... அதே நிறத்தில் திரவமா இல்லை... மும்பையில் கிடைக்காததே இல்லை பாட்டி...'' பெருமையுடன் சொன்னாள் அவள்..

''என்னவோ... போம்மா... ஒரு நாளில் எங்களை கதி கலங்க வைத்து விட்டாய்...'' என்று கோகிலா சொல்ல...



எனக்கும் உங்களை ஏமாற்ற வேண்டுமான்னுதான் இருந்தது பாட்டி... ஆனால் இது ஒரு தமாஷ்தானே என்று தான் அப்படிச் செய்தேன்... சாரி... பாட்டி...'' என்று கொஞ்சினாள் பேத்தி...

''பாட்டியிடம் மட்டும் சாரியா... எனக்கு இல்லையா ஊர்மிளா...'' என்றான் ராஜ்குமார்.

''ஊகூம்... பாட்டிதான் ரொம்பவும் துடிச்சது... நீங்க இல்லை... அதனால உங்களுக்கு சாரி கிடையாது... ராஜ்...'' என்றாள் பதிலுக்கு.

நான் துடிக்கவில்லையா... அவள் மரணத்தை முத்தமிட காத்திருக்கிறாள் என்ற எண்ணம் தந்த உளைச்சலில் அவன் துடித்துப் போகவில்லையா... என் வேதனை இவளுக்கு எப்படித் தெரியும்...

இத்தனை தவிப்பும்... வேதனையும் தனக்கு வரும் அளவிலா இவள் மீது அன்பு எனக்கு... அது எப்படி!

''என்ன ராஜ்... நான் சொல்லிக் கொண்டே இருக்கிறேன்... நீங்க என்னவோ யோசித்துக் கொண்டு இருக்கிறீர்கள்...'' அவனை உலுக்கினாள் ஊர்மிளா...

''ம்ம்... என்ன... என்ன கேட்டாய்... ஊர்மிளா...''

''போச்சுடா... எங்கேயாவது 'பிக்னிக்' போகலாமேன்னு கேட்டேன்... நான் போக வேண்டிய நாள் நெருங்குகிறது ராஜ்...''

''வாயில் போடுவேன்... மறுபடியும் அதே...''

''அய்யே... ஊருக்குப் போக வேண்டிய நாள்னு சொன்னேன். நீங்களா எதையோ அர்த்தம் செய்து கொண்டு...''

''பரவாயில்லை... நன்றாக சமாளிக்கிறாய்.''

''சரி... பிக்னிக்...''

''போகலாமே... நீயும்... நானும்... அப்புறம் யார்.. யார்...''

''என் பாய் ஃபிரெண்ட்ஸ்... அவர்களுக்கு பிராமிஸ் பண்ணியிருக்கேன்... அவங்க குதிச்சிட்டு இருக்காங்க. பாட்டி... நீங்களும் வர்றீங்க... இல்லையா...'' என்றாள் அவள்.

''அம்மாடி... எனக்கு இந்த 'பிக்னிக்' எல்லாம் ஒத்து வராது... கொஞ்ச தூரம் போய் வந்தாலே முதுகில் 'விண்' ணென்று வலிக்கும்... வாண்டுகளின் கலாட்டா வேறு. தலைவலியும் சேர்ந்துடும்... ஹாயா வீட்டில் இருக்கிறேன்'' என்றார் கோகிலா...

''சரி... வீணாவையும் அழைக்கலாம்..'' ராஜ்குமார் சொல்ல...

மூக்கை சுருக்கினாள் ஊர்மிளா.

''நாங்கள் 'ஸ்போர்ட்ஸ்' ஆடுவோமே... வீணாவிற்கு அது பிடிக்குமா என்ன...'' என்றாள்.

''அதெல்லாம் ஒன்றும் சொல்ல மாட்டாள்...'' என்றவன் அவளுக்கு ஃபோன் செய்ய 'செல்'லை எடுத்தான்.

''ஒரு நிமிஷம் ராஜ்... நாங்கள் வருவதை சொல்ல வேண்டாம்.. நீங்களும்... வீணாவும் மட்டுமே போவதாய் இருக்கட்டும்..''

அவன் புருவங்களை உயர்த்தினான்... ''ஏன்?''

''காரணத்தை அப்புறம் சொல்கிறேனே... ப்ளீஸ்...''

தலையசைத்து விட்டு வீணாவிடம் பேசினான் அவன்.

மறுநாளே பிக்னிக் என்று முடிவானது.

சுமார் நாற்பது கி.மீ. தூரத்தில் இருந்த அழகான... இயற்கை கொஞ்சும் பசுமையான சூழல்... பிக்னிக் ஸ்பாட்!



விளையாடுவதற்கு அருமையான இடம்...

அனைவருக்கும் போதுமான உணவு பதார்த்தங்கள்... பிஸ்கட்... சிப்ஸ்... மிக்ஸர் என்று கொறிக்க... பழ வகைகள்... வெள்ளரி பிஞ்சு என்று சுவைப்பதற்கு... பிளாஸ்கில் காப்பியும்... 'கேனில்' மினரல் வாட்டரும்... வண்டிக்குள் குடியேறின.

ஆடுவதற்காக... கிரிக்கெட் கிட்... செஸ்... தம்போலா... ஃபிரிஸ்பி... ஷெட்டில் காக்... பேட்... பிளேயிங் கார்ட்ஸ் என்று எல்லாமே... கூடவே.. முதல் உதவி பெட்டியும்!

வீணா ஏழு மணிக்கு வந்தாள்.

தானும்... ராஜ்குமார் மட்டும் தான் என்ற மகிழ்ச்சியில் பூரித்து வந்தவள்... ஊர்மிளாவும்... அவளது தோழர் படையும் கிளம்பத் தயாராக இருப்பது கண்டு அதிர்ச்சியில் சிலையாக நின்று விட்டாள்.

''என்ன ராஜ்... இவர்களுமா...''

''ஆமாம்... ஏன்...''

''ஃபோனில் சொல்லி இருக்கலாமே ராஜ்...''

''சொல்லியிருந்தால்... நீ வந்திருக்க மாட்டாயா...''

''ப்ச்சு... எனக்கு கலாட்டாவெல்லாம் பிடிக்காது... தலைவலி வந்துடும் ராஜ்... இந்த குரங்குப் பட்டாளம் சும்மா இருக்காதே...''

''என்ன வீணா... நான்கு பேர் இருந்தால் தான் 'பிக்னிக்' களைக்கட்டும்... தவிர... இந்த சிறுசுகளுக்காகத்தான் 'பிக்னிக்'கே...''

''இது யாருடைய 'ஐடியா'ன்னு தெரிஞ்சுக்கலாமா... ராஜ்...''

''ஏன்... ஊர்மிளாவுடையதுதான்...''

''பின்... ஏன் என்னை அழைத்தீர்கள்'' என்று சொல்லி விட்டு ஊர்மிளாவை முறைத்துப் பார்த்தாள். பின்பு எதுவும் பேசாமல் விறைப்பாய் நடந்து சென்று ஜீப்பில் அமர்ந்தாள்.

ஊர்மிளா அர்த்தம் பொதிந்த பார்வையுடன் ராஜ் குமாரை நோக்கினாள்...

''இப்போது புரிகிறதா... நான் சொன்னதன் காரணம்...'' அதைப் புரிந்து கொண்ட ராஜ்குமார் ஜீப்பில் ஏறினான். அருகே... உப்பிய முகத்துடன் வீணா அமர்ந்திருப்பது கண்டு அவனுள் வியப்பு...

அட! வீணாவுக்கு கோபம் வருமா... என்ன!

அதே சமயம் கொஞ்ச நேரத்தில் சரியாகிவிடும் என்று மனதுக்குள் சமாதானம் பண்ணிக் கொண்டு ஜீப்பை உசுப்பினான்.

ஜீப் துள்ளும் பிள்ளையாய் ஓடியது.



## 16

''பிக்னிக்'' களைக்கட்டியது.

வாண்டுகள் குதித்து கும்மாளமிட்டனர். ஓடியாடினார்கள்... மரத்தில் ஏறி குதித்தார்கள்... விருப்பம்போல விளையாடி னார்கள்... அவர்களுடன் சேர்ந்து ஊர்மிளாவும் தான்...

''என்ன பெண் இவள்... ஆண்பிள்ளை மாதிரி கொட்டம் மடித்து... கும்மாளம் போடுகிறாள்... பெண்ணாய் லட்சண



மாய்... அடக்கத்தோடு இருக்க வேண்டாமா... எப்படி ராஜ்... அதை அனுமதிக்கிறீர்கள்...''

வீணா எரிச்சலுடன் கேட்டாள்.

ராஜ்குமார் சிரித்தான். ''இதில் என்ன தப்பு வீணா... மனதளவில் அவளும் ஒரு குழந்தைதான்... அதுதான் குழந்தைகளுடன் குழந்தையாய் ஆடுகிறாள்... எனக்கு இது தவறாகப் படவில்லை வீணா...'' என்றான்.

''எங்கப்பா பார்க்கணும் இதை... அய்யோ.. அவ்வளவு தான்... என் அம்மாவும் ரொம்ப கண்டிப்பு... இப்படி ஆண் களுக்கு சமமாய் குதிப்பது சுத்தமா பிடிக்காது...'' வீணாவின் பேச்சு அவனுக்குப் பிடிக்கவில்லை...

''ஒவ்வொருத்தர் வீடும் ஒவ்வொரு விதம் வீணா... ஆமாம்... உன் அப்பா ஏதோ 'பிஸினஸ்' விஷயமா பூனா போகவேண்டும் என்று சொன்னாரே... என்றைக்கு புறப்படு கிறார் வீணா.. அதற்கு முன் அவர்கிட்ட பேசவேண்டும்...'' என்று பேச்சை திசை திருப்ப... அவளது முகத்தில் பிரகாசம்.. உடனே தன் தந்தையைப் பற்றி பேச ஆரம்பித்தாள்... வெகு ஜம்பமாய்!

உணவை ஒரு பிடிபிடித்த பின்பு... மறுபடியும் பிள்ளை கள் ஆட ஆரம்பித்தனர்... ஊர்மிளாதான் தலைவி... ராஜ் குமாரும் கொஞ்சநேரம் கிரிக்கெட்டில் கலந்து கொண்டு விளையாடினான்....

ஆனால்.. வீணா தனியாக உட்கார்ந்து.. முகம் சுளித்துக் கொண்டிருப்பதைப் பார்த்துவிட்டு நடுவில் திரும்பி வந்து விட்டான்.

மரத்தின் கீழ்... கரங்களை பின்புறம் கோர்த்தவாறு.. தலையை மரத்தின் மேல் சாய்த்து அமர்ந்துகொண்டான் வீணா அவன் அருகில்... தனிமையில் பேசுவதற்கு

எவ்வளவோ இருக்கும்... அதுவும் எதிர்காலத்தில் தம்பதி யாகப் போகிறவர்கள் வேறு...

ஆனால் வீணா பேசியது எல்லாம் இதமான பேச்சு இல்லை... கேட்டு கேட்டு.. புளித்துப்போன தன் தந்தையின் பெருமைதான்..தன் வீட்டுப் பிரதாபம் மட்டும்தான்...

எனவே... அவளது வார்த்தைகளில் லயிப்பு இன்றி.. காது களை அவளிடத்தில் கொடுத்துவிட்டு.. கண்களை சிறுவர் களின் விளையாட்டில் பதித்தான்...

ஊர்மிளாதான் 'பேட்டிங்'... சுந்தர் 'பௌலிங்'கில் பவுண்டரியாம்... இல்லவே இல்லை என்று விஜய் மறுக்க... இல்லை... பவுண்டரியே தான் என்று சாதித்தாள் ஊர்மிளா...

அது எல்லைக்கோட்டிற்கே போகவில்லை என்று ராஜ்குமாருக்கு தெரிந்தது.

இருந்தும்... என்னமாய் சாதிக்கிறாள் இவள்... அவளது வாதத்தைக் கேட்டு அவன் உதடுகளில் புன்னகை பூத்தது.

அது 'பவுண்டரி'தான் என்று ஒப்பு கொண்ட ரமணிக்கு யாருக்கும் தெரியாமல் தன் பாக்கெட்டிலிருந்து ஃபைவ் ஸ்டார் 'சாக்லெட்டை எடுத்து தந்ததையும் கவனித்தான்.

புன்னகை குறுநகையாகியது.

தான் சொல்லிய வார்த்தைகள் அவன் காதில் ஏறியதோ... இல்லையோ... தெரியவில்லை... அவன் ஊர்மிளாவையேப் பார்த்துக் கொண்டிருப்பதை வீணா கவனித்தாள்.

அவளுள் பொறாமை தீப்பந்தாய் சுழன்று எழுந்தது. ஊர்மிளாவின் வருகைக்குப் பின் ராஜ்குமாரிடம் பெரிய மாற்றம் வந்ததை அவளும் உணர்ந்தாள். மனசுக்குள் குமுறினாள்... இந்த குடிகேடி எப்போது போவாளோ... இவள் போனால்தான் நிம்மதி... எரிச்சலில் அந்த 'பிக்னிக்'



கும் கசந்துவிட்டது. புறப்பட்டால் போதும்... யாருக்கு வேண்டும் இந்தக் கூத்தும்... கும்மாளமும்... சே! சலித்துக் கொண்டவளாய் எழுந்தாள்.

''ஓ'' வென்ற இரைச்சலுடன் ஆட்டமும் முடிந்தது.

''பொய் ஆட்டம்...'' நான் ஒத்துக்க மாட்டேன்...

''விக்கெட்டில் பந்து படவே இல்லை....'' அழுகைக் குரலில் விஜய் கூற...

''எது பொய் ஆட்டம்... ஏய் சுந்து... அவன் அவுட் தானே.. பார்த்தியா... அவனும் சொல்கிறான்'' என்று ஆணித்தரமாய் சொன்னாள் ஊர்மிளா.

''இது அழுகுணி ஆட்டம்...'' என்று முணுமுணுத்துக் கொண்டு கண்களைத் துடைத்துக் கொண்டான் விஜய். அவனை பொருட்படுத்தாமல் ராஜ்குமாரிடம் ஓடிவந்தாள் ஊர்மிளா.

''ராஜ்... ஸ்விம்மிங் செய்ய இங்கே 'பூல்'... 'ரிவர்' ஏதும் இருக்கா.... 'ஸ்விம்மிங்' பண்ண ஆசையா இருக்கு...'' என்று கெஞ்சும் குரலில் வினவினாள்.

''அருகே எதுவும் இல்லை... கொஞ்சம் தூரம் போக வேண்டும்... இன்னிக்கு வேண்டாம் ஊர்மிளா... இன் னொரு நாள் பார்க்கலாம்'' எழுந்து உடலில் ஒட்டியிருந்த மணலைத் தட்டியவாறு சொன்னான்.

''ப்ளீஸ் ராஜ்... 'பிக்னிக்' என்றால் எல்லாமே இருக் கணும்... அப்ப தான் ஜாலி... ஸ்விம்மிங் டிரஸ் கூட போட்டு வந்திருக்கிறேன் ராஜ்... டியர் ஃப்ரண்ட்ஸ் உங்களுக்கு ஸ்விம்மிங் வேண்டுமா... வேண்டாமா...'' சிறுவர்களைப் பார்த்து கண்ணடிக்க...

''வேணும்.. வேணும்...'' என்று அவர்கள் குதித்தார்கள்.

''பார்த்தீர்களா.. ராஜ்... இவர்களுக்கும் வேணுமாம்...'' என்றாள் அவள்.

வீணாவிற்கு பொறுக்க முடியவில்லை. அதட்டலுடன் சொன்னாள்... ''பெரியவங்க பேச்சைக் கேட்கறது தான் நல்ல பிள்ளைகளோட அடையாளம்... இப்படி அழிச்சாட்டியம் செய்யறது தப்பு....''

''வீணா ஆன்ட்டி... உங்களுக்கு தெரியாது.: நாலும் இருந்தால்தான் 'பிக்னிக்' அமையும்...'' ஆன்ட்டி என்ற வார்த்தையை அழுத்திக் கூறினாள் ஊர்மிளா.

மனசுக்குள் பொருமினாள் வீணா.

'செல்'லை உசுப்பி யாரிடமோ பேசினான் ராஜ். யாரோ பெரிய பணக்காரர் ஒருவர் கட்டி வைத்த நீச்சல்குளம்... ராஜ்குமாருக்கு வேண்டியவர்... உல்லாசத்துக்கு வந்து தங்கும் வழக்கம்.

அழகான மாளிகையின் பின்புறத்தில்.. பெரிதாய் நவீன முறையில்... பளிங்கு கற்கள் பதிக்கப்பட்டு... சுத்தமாய் இருந்தது ஸ்விம்மிங் பூல்.

அதில் இருந்த தூய்மையான... நீலநிற தண்ணீர் 'வாயேன்' என்று அழைத்தது.

குழந்தைகள் முதலில் நீரில் இறங்க பயப்பட்டனர். ராஜ்குமார் நீரினுள் இறங்கி... ஆழமில்லாத இடத்தில் ஒவ்வொருத்தரையும் இறக்கி விட்டான்.

கொஞ்ச நேரத்திலேயே சிறுவர்களுக்கு குளிர்விட்டுப் போனது.

ஊர்மிளாவைத் தேடினான். அவள் எங்கே... கண்ணியமான நீச்சல் உடையில் 'டைவ்' அடிக்கத் தயாராக நின்றிருந்தாள் அவள்.



''அட! நீச்சல் தெரியுமா இவளுக்கு!'' வியப்புடன் புருவங்களை அவன் உயர்த்த...

தெரியுமே என்பதுபோல... 'டால்பின்' மீனாய் துள்ளி 'டைவ்' அடித்து.. அம்பாய் நீரினுள் பாய்ந்தாள். அந்த அழகு அவனை பிரமிக்கச் செய்தது... அருமையான டைவ்!

நீரின் அடித்தளம் வரை சென்று... மெல்ல எம்பி மேலே வந்தவள்.. முகத்தின் நீரை வழித்து விட்டு ''எப்படி.... என் டைவ்'' என்பது போல அவனைப் பார்த்து சிரித்தாள் அவள்.

''ஒன்ஸ் மோர்!... ஊர்மிளாக்கா...'' என்று சிண்டுகள் கத்த...

மீண்டும் ஒரு 'டைவ்' அடித்து... அடித்தொட்டு எழும்பினாள்... சிறுவர்கள் கைத்தட்டி ஆரவாரித்தார்கள்...

''அங்கிள் உங்களுக்கு 'டைவ்' பண்ண வருமா...'' என்று வாண்டுகளில் ஒருவன் கேட்க...

''இப்போ காட்டுகிறேன்'' என்று கூறிவிட்டு மேல் உடைகளை கழற்றி விட்டு... வெறும் 'ஷார்ட்'ஸுடன் சென்றான் ராஜ்குமார்.

மேலே நின்று ஒரு சுழற்சியில் கீழே பாய்ந்தான்.

''ஹே...'' சிறுவர்களின் கூச்சலில் அந்த இடமே அதிர்ந்தது.

''என்ன ஆன்ட்டி... உங்களுக்கு நீச்சல் வராதா...'' என்று ஊர்மிளா வினவினாள்.

''ஆண்பிள்ளைகள் முன்னால் அரைகுறை உடையோடு நீச்சல் அடிக்க... எங்க வீட்டில் ஒப்பமாட்டார்கள்...!'' குத்தலாய் பதில் சொன்னாள் வீணா...

''பழம் பஞ்சாங்கம் போலிருக்கு...'' பதிலுக்கு ஊர்மிளா குத்தினாள்.

''யார் அடிவரை போய் முதல்ல வருவீங்க...'' என்று ரமணி கேட்க...

ராஜ்குமாருக்கும் ஊர்மிளாவிற்கும் போட்டி... ராஜ் குமார் தான் முதலில் வந்தது....

அங்கிள் தான் ஜெயிச்சது என்று வாண்டுகள் கோஷமிட்டனர்:

வீணாவுக்கு சகிக்கவில்லை... நீச்சல் குளத்தில் ஊர்மிளாவுடன் தன் வருங்கால கணவன் அரை நிர்வாணமாய் கூத்தடிப்பதை பார்க்கவே பிடிக்கவில்லை.

''போதும் இந்த விளையாட்டு.. புறப்படலாம்.. வீட்டில் அப்பா காத்திருப்பாங்க...'' என்று எழுந்து விட்டாள்.

அவளது நச்சரிப்பில் அனைவரும் கிளம்ப வேண்டியிருந்தது... பிள்ளைகளுக்கும் அதில் ஏமாற்றமே...

''ஸ்பாயில் ஸ்போர்ட்'' ஊர்மிளா முணுமுணுத்தது ராஜ்குமாரின் காதில் விழுந்தது.

அனைவரையும் அவரவர் வீட்டில் விட்டுவிட்டு வீணாவையும் பத்திரமாய் அவளது பெற்றவர்களின் கையில் ஒப்படைத்துவிட்டு.. திரும்பும்போது வெகு நேரமாகிவிட்டது...

ஊர்மிளாவிற்கு அலுப்பில் அயர்ந்து போயிருந்தாள். கண்களை சுழற்றி வந்தது உறக்கம்...

வீணாவின் தந்தை சொன்னது நினைவுக்கு வந்தது. யாரோ ஒருவன்.. இன்னொருவனுடைய மனைவியோடு ஓடிவிட்டானாம். போலீஸில் கம்ப்ளெயிண்ட் கொடுத்திருக்கிறார்களாம்...

அரைத்தூக்கத்தில் கேட்ட கதை...

''ஏன் அப்படி... இன்னொருத்தனின் மனைவியாமே. அது மோசம் இல்லையா... ராஜ்''

அதைக் கேட்டு அவன் சிரித்தான். ''ஒவ்வொரு மனிதனின் அடிமனதில் குரங்கு மனம் என்று இருக்கிறது. அது விழித்துக் கொண்டால் இப்படியெல்லாம் செய்வார்கள்...''



''ம்ம்...'' கேட்டவாறு தூங்கிவிட்டாள் அவள். வீட்டை அடையும் வேளையில்... அவளது தலை அவன் தோளில்...

அவளது தூக்கம் கலைந்து விடாமல்... அவளை வாரி... கைகளில் ஏந்திக்கொண்டு வீட்டுக்குள் சென்றான்.

''மறுபடியும் என்னப்பா...'' என்று ஆரம்பித்த தாயிடம் சைகைக்காட்டி 'தூக்கம்தான்' என்று சொல்லிவிட்டு மாடி ஏறினான்.

அவளை மெல்ல படுக்கையில் படுக்க வைத்தவனின் கழுத்தில் அவளது மென் கரங்கள் பூமாலையாய் சுற்றிக் கொண்டன.

தூக்கத்தில் அவளது இதழ்கள் முணுமுணுத்தன...

''உங்கள்.. அடிமனதிலும்... குரங்கா ராஜ்... என்னுடையதுமா...''

அவளது கரங்களின் இழுப்பில்... அவன் நிலைகுலைந்தான்... அவனது முகம் அவளின் வதனத்தின் மிக அருகில்... இருவரது மூச்சுக்காற்றும் உஷ்ணத்துடன் கலந்தன. அவனையும் அறியாமல் ஏதோ ஒரு வேகம் அவனை உந்த... மெல்ல குனிந்து அவளது பட்டு இதழ்களை முத்தமிட்டான்.

ஊர்மிளாவின் உறக்கம் கலையவில்லை......

அவளது கைகள் கீழே விழ... 'குரங்கு மனமா' என்ற புலம்பலுடன் உறங்கிப் போனாள்.

நிமிர்ந்தவன்... நின்று அவளையேப் பார்த்தான். அந்த கணத்தில் தான் ஒரு உண்மை மின்னலாய் பளிச்சிட்டது.

அது.. ஊர்மிளாவின் மீது அவன் கொண்டது வெறும் அன்பல்ல..

காதல்!

ஆம்.. அவன் ஊர்மிளாவைக் காதலிக்கிறான்!



# 17

சன்னல் வழியே வந்த சூரியக் கதிர் ஊர்மிளாவை ஆசையாய் வருடியது...

தூக்கம் கலைந்து... விழித்தாள் அவள்... எழுந்து அமர்ந்து... ஒரு செல்லச் சோம்பலை முறித்து.. சுற்றிலும் ஒரு பார்வை பார்த்தாள்.

இரவு எப்போது வந்தோம்... மாடிக்கு எப்படி வந்தோம் என்ற நினைவு இல்லை.

ஏதோ இனம் புரியாத உணர்வு அவளுள் இழையாய்.. மின்னதிர்வாய் ஊடுருவியது...

மேனியெல்லாம் பரபரப்பு..

தான் கண்ட கனவினால் இருக்குமோ...

ராஜ்குமார் அவளை மெல்ல கட்டிலில் படுக்க வைக்கிறான்... முகத்துடன் முகம் நெருங்கியது... அப்புறம் அவனுடைய உதடுகள்.. அவளது இதழ்களை ஸ்பரிஸிக்கின்றன... அப்புறம்...

சே... அப்புறம் என்ன என்பது மறந்து விட்டதே... கனவு தந்த கிளுகிளுப்பில் படுக்கையிலிருந்து துள்ளி எழுந்தாள்.

உடனே ராஜ்குமாரைப் பார்க்கவேண்டும் என்ற துடிப்பு...

குளியல் அறைக்கு ஓடினாள்...



சில்லென்ற நீர் மேனியில் பட்டபோது நீச்சல் குளத்தில் நீந்தியது நினைவுக்கு வந்தது.

ராஜ் உடன் நீச்சல் பந்தயம்!

இப்போது நினைக்கும் போது முகம் சிவந்துபோனது அவளுக்கு.

வீணா ஆத்திரப்பட்டதிலும் நியாயம் இருக்கிறது.

வருங்கால மனைவியை ஆசையுடன் அழைத்துவந்து விட்டு... அவளை கவனிக்காமல் ஊர்மிளாவுடன் பொழுது போக்கினால்...

எந்தப் பெண்பொறுப்பாள்.. வீணாவிற்கு கோபம் வந்ததில் ஆச்சர்யமில்லை...

ம்ம்.... அடுத்த தடவை இங்கு வரும்போது வீணா.. ராஜ்குமாரின் மனைவியாய் இங்கே உரிமையுடன் இருப்பாள்... 'ராஜ்.. ராஜ்' என்று வெகு சுதந்திரமாய் இப்போது பழகுவது போல அப்போது முடியாது...

அந்த நினைப்பில் மனம் வலித்தது.

வீணா ராஜ்குமாருக்கு மனைவி என்று நினைக்கவே அவளுக்கு பிடிக்கவில்லை.

ராஜ்குமாருக்கு ஏற்றவள் இல்லையே.. அவளா இந்த வீட்டுக்கு பட்டத்து ராணி... ஊகூம்... பொருந்தவில்லையே... பொருத்தமும் இல்லைதான்...

ராஜ்குமாருக்கு வரப்போகும் மனைவியானவள் வீணாவைப்போல தொட்டாற் சுணங்கியாய் இருக்கக் கூடாது. பெட்டிப் பாம்பாய் உள்ளடங்கி... திடீரென்று படம் எடுத்து சீறும் நாகமாய் இருக்கக் கூடாது.

தொட்டதற்கெல்லாம் குற்றம் பார்க்கும் வீணா ராஜுக்கு தகுந்தவள் இல்லவே இல்லை...

அவனுக்கு துணைவியாக வருபவள் அவனது முகத்தில் சிரிப்பையும்.. உள்ளத்தில் சந்தோஷத்தையும் நிறுத்தி வைக்க வேண்டும். இறுகிக் கிடக்கும் மனதை இளகச் செய்யும் திறன் வேண்டும். பரந்த உள்ளமும்... நல்ல சிந்தனையும் உடைய வளாய்... அவனைச் சேர்ந்தவர்களிடத்தும் கருணைக் காட்ட வேண்டும்... முக்கியமாய் பணியாட்களிடம்...

ராஜ்குமார் தனக்கு வாழ்க்கைத் துணையைத் தேர்ந் தெடுப்பதில் தவறிவிட்டான் என்று தோன்றியது.

இப்போதும் மோசமில்லை... ராஜ்குமாருக்கு இதை உணர்த்திவிட்டால் போதும்...

வீணாவின் முகத்திரையைக் கிழித்து.. அவளது வக்கிர குணங்களை வெளிப்படுத்தினால் போதுமே. அதுதான் சரியான வழி...

''பாட்டி ராஜ் எங்கே... காணோம்... பார்த்தீங்களா'' என்று கேட்டாள் ஊர்மிளா.

''காலையில் சீக்கிரமா புறப்பட்டு போயிட்டான்ம்மா... வேலை விஷயமா தான் இருக்கும்... எதுக்கு கேட்கறே...'' என்றார் கோகிலா.

''சும்மாதான்... ஏன் பாட்டி... இந்த வீட்டில் பழைய போட்டோ எதுவும் இல்லையா... அப்ப எடுத்தது... எங்கம்மா... அப்பா போட்டோ இருக்கணுமே...'' என்று அவள் கேட்டதும்...

''பழைய ஆல்பத்தில் இருக்கும்மா... ஆனா... அது எங்கிருக்கோ... தேடணும்...'' என்றார்.

''பாட்டி... பாட்டி... எங்கேன்னு சொல்லுங்களேன் நான் தேடிக் கொள்கிறேன்'' பாட்டியின் தாவாயைப் பிடித்துக் கொண்டு கெஞ்சினாள் பேத்தி.



''எனக்கு ஞாபகம் வரமாட்டேன்கிறதுடா.. கொஞ்சம் பொறு... ஞாபகப் படுத்தி சொல்கிறேன்...'' என்றார் கோகிலா....

''சரி.. பாட்டி... ஞாபகப் படுத்தி வையுங்க.. நான் வெளியே போய் விட்டு வருகிறேன்...''

''எங்கேம்மா...'' கலவரத்துடன் பார்த்த பாட்டியைப் பார்த்து சிரித்தவள்...

''பயப்படாதீங்க பாட்டி... நான் எங்கேயும் போக மாட்டேன்... வீட்டைச் சுற்றிக் கொண்டிருப்பேன். சீக்கிரமா வந்துடுவேன்... டாடா...'' என்று ஓடினாள் ஊர்மிளா.

பாட்டியிடம் சொன்னபடி வீட்டைச் சுற்றவில்லை அவள்...

பாட்டிக்குத் தெரியாமல் வெளியேறினாள்...

முந்தைய நாள் உல்லாசமாய் பொழுதைப் போக்கி விட்டு... இன்றைக்கு வீட்டில் தங்க பிடிக்கவில்லை. சுத்த போர்..!

ராஜ் இருந்தாலாவது வம்பளக்கலாம்... அவரும் எங்கோ போய்விட்டார்.

சரி.. குதிரை சவாரி செய்யலாம் என்றால்.. அதுக்கும் தடை உத்தரவு...

ஒரு அனுபவமே போதும்.. இனிமேல் குதிரைப் பக்கம் போகக் கூடாது என்று பாட்டியின் கட்டளை.

சரி... நண்பர்களையாவது பார்க்கலாம் என்று புறப்பட்டு விட்டாள்...

ஆனால் வழியில் அழகான ஒரு கோவிலைப் பார்த்ததும் மனம் மாறிவிட்டது.

சுற்றிலும் தோப்பு மாதிரி அடர்ந்த மரங்களின் மத்தியில் தெரிந்த அழகான கோபுரம் அவளை ஈர்த்தது.

இது என்ன கோவில்... இத்தனை நாள் எப்படி கவனிக் காமல் போனேன்... ஒரு வேளை... மரங்கள் தானே என்று அசட்டையாக இருந்துவிட்டேனோ... அதனால் கோபுரம் கண்ணில் படாமல் போனதோ.. இருக்க வேண்டும்...

இன்றைக்கு இந்த இடத்தை சுற்றிவந்தால் பொழுது போய்விடுமே...அந்த தோப்பினுள் நுழைந்தாள்.

போர்கள சிப்பாய்களாய் நின்றிருந்த தருக்களின் மத்தியில் அழகான சின்னக் கோவில்...

செண்பக மரம்.. பவளமல்லி.. வில்வம்.. வேம்பு... அரசு என்று வகைக்கு ஒன்றாய்...

செம்பருத்தி செடி... குண்டு மல்லிகை... கொழுக்கட்டை மந்தாரை.. செவ்வரளி என்று பூச்செடிகள் பூத்துச் சிரித்தன...

ஒருபுறம் துளசியும்... தவனமும்.. கம்மென்று மணம் வீசின...

ஒவ்வொன்றையும் பார்த்து ரசித்தவள் கோவிலுக்குள் வந்தாள்...

வழவழவென்று சுத்தமாய் துடைக்கப்பட்டிருந்த தரையில் பெரியதாய் மாக்கோலம்... அப்படிப்பட்ட கோலத்தை அவள் பார்த்ததில்லை ஆகையால் கண்களை விரித்தாள்... என்ன அழகான ரங்கோலி!

கருவறையில் புன்னகைத்தவழும் முகத்துடன் அம்மன்! இருபுறமும் பிள்ளையார்... முருகன்...

''யாரம்மா... நீ... எந்தவீட்டுப் பொண்ணு... ஊருக்கு புதுசா...''



குரலைக் கேட்டு திரும்பினாள் அவள்.

அம்பத்தெட்டு வயதிருக்கும்... அர்ச்சகர் போல.. கையில் கதம்ப மாலையுடன் நின்றிருந்தார்.

''நான்.. ராஜ்குமார் வீட்டுக்கு வந்திருக்கேன்... தாத்தா. மும்பாயில் எங்க தாத்தாவோட நண்பர்தான் சந்திரசேகர் தாத்தா...''

''ஆங்.. சோமனாதருடைய பேத்தியா நீ.. பேஷ்... பேஷ்... உங்க தாத்தா தங்கமான மனுஷர்... இந்தக் கோவிலுக்கு பணத்தை வாரிக் கொடுத்திருக்கிறார்... இந்த மேல் கோபுரத்தைக் கட்டியதும் அவர்தான். அவருடைய நண்பரும் பணத்தை தந்திருக்கிறார்ம்மா.. உன் பெயர் என்னம்மா''

''ஊர்மிளா தாத்தா...''

''அழகான பெயர்.. உன் அம்மா மேனகா கூட சமர்த்து... அடக்கமான பொண்ணு.. ஆனா தீர்க்காயுசா இருக்க கொடுப்பினை இல்லை.. இங்கேதான் உங்க அம்மாவும் அப்பாவும் அடிக்கடி வருவா.. இந்த இடம் அவாளுக்கு தேவலோகம் மாதிரி, இரண்டுபேரும் கைக்கோர்த்துண்டு இந்தக் கோயிலை சுத்தறதைப் பார்க்கச்சே திவ்யமா இருக்கும்... இந்த இடத்தின் ஒவ்வொரு அடியும் உங்க அம்மாவும் அப்பாவும் கால் பதிச்ச இடம் தான்... மறுபடியும் அவங்க வாரிசு இங்கே வந்திருப்பதில் ரொம்ப சந்தோஷம் தான்... இரும்மா... அம்மனுக்கு அர்ச்சனைப் பண்ணிக் குங்குமம் தர்ரேன்...''

அர்ச்சகர் சொல்லச் சொல்ல... ஊர்மிளாவின் உள்ளம் விம்மியது.

பெற்ற தெய்வங்களை பார்த்ததில்லை... அவர்கள் பாதங்கள் பதிந்த இடத்தைப் பார்க்கும் பாக்கியம் வந்ததே... அதுபோதும்...

அம்மனது குங்குமப் பிரசாதத்தைப் பெற்றுக் கொண்டு கோவிலை வலம் வந்தாள் ஊர்மிளா.

இங்கே தான் அம்மாவும் அப்பாவும் கைக்கோர்த்து நின்றிருப்பார்கள்.. இதோ.. இந்த வழிப்பாதையில் தான் சுற்றுப் புற சூழலை ரசித்தவாறு நடந்திருப்பார்கள்...

கருப்பக் கிரகத்தின் நேர் பின்புறம் சூலம் வரையப்பட்டிருந்தது...

அம்மாவும் அப்பாவும் இதைத்தொட்டு வணங்கி இருப்பார்களோ...

அவளும் தொட்டு வணங்கினாள்... உடம்பெல்லாம் புளகாங்கிதம்...

தாயின் மடியில் படுத்த சுகம்... தந்தையின் தோளில் சாய்ந்த இன்பம் இரண்டையும் சேர்த்து அவளால் உணர முடிந்தது.

புறப்படும் போது அர்ச்சகர் சொன்னார்...

''ஊருக்குப் போனதும் தாத்தா கிட்டே நான் கேட்டேன்னு சொல்லும்மா... என்ன...''

தலையசைத்துவிட்டு வந்தாள்... மனம் முழுவதும் நிறைந்திருப்பது போல பிரமை...

பாட்டியிடம் இதைச் சொல்ல வேண்டும்... மனசுக்குள் குறித்துக் கொண்டாள் அவள்.

கொஞ்ச தூரம் நடந்திருப்பாள்.

''ஊர்மிளா...'' என்ற அழைப்பைக் கேட்டு நின்று திரும்பினாள்.

அஸ்வத்!

வியப்புடன் அவனைப்பார்த்தவள் ''ஹலோ.. அஸ்வத் ரொம்ப நாளா... காணோமே... எங்கே போனே...'' என்று கேட்க...

''ஏதோ 'எக்ஸாம்' எழுத வேண்டி சென்னைக்குப் போயிருந்தேன்... ஊர்மிளா... ஆமாம் நீ இன்னும் எத்தனை நாள் இருப்பே...'' என்று விசாரித்தான் அவன்.



''தெரியல்லே... அஸ்வத்... இதுவரைக்கும் புறப்படணும்னு தோணல்லே... தோணினா புறப்பட்டு விடுவேன். ஆமாம் ஏன் கேட்டே...''

''இல்லே.. நீ இங்கிருக்கிறது சில பேருக்குப் பிடிக்கல்லே.... நீ போனா போதும்னு இருக்காங்க.... அதான்...''

கண்களை சுருக்கியவாறு கேட்டாள் அவள்...

''சில பேர் என்றால்.. ஆணா... பெண்ணா...''

''பெண்தான்.''

''வீணாவா... வீணாதானே...''

வியப்புடன் பார்த்தான் அவன் ''சட்டுன்னு புரிஞ்சுகிட்டாயே எப்படி...''

''என்னை வெறுக்கிற ஒரே உயிர் வீணா தான்... ஆமாம்.. அதெப்படி உனக்குத் தெரியும்...''

''நான் வேலைக்காக காத்துக்கொண்டிருப்பது அந்த வீணாவிற்கு தெரியும்.. என் அப்பா தான் உங்க ராஜ்குமார் சாருக்கு மேனேஜர் ஆச்சே.. எங்க விஷயம் எல்லாம் அந்தம்மாவுக்கும் தெரிந்திருக்கலாம். என்னைக் கூப்பிட்டு அனுப்பி பேசினாங்க... அவங்க அலுவலகத்திலேயே நல்ல வேலை போட்டுக் கொடுப்பதாய் சொன்னாங்க.. ஆகா... சோழியன் குடுமி சும்மா ஆடாதேன்னு யோசிச்சேன். அது சரியாப் போச்சு...''

''அய்யோ... சஸ்பென்ஸ் வேண்டாம் அஸ்வத்... சீக்கிரமா என்ன விஷயம்னு சொல்லேன்'' என்று அவசரப்பட்டாள் ஊர்மிளா.

''சொல்றேன்... இரு.. பதிலுக்கு நான் அவங்களுக்கு உதவி பண்ணணுமாம்... இன்னும் ஒரு வாரத்தில் அவர்களோட 'பர்த்டே' வருகிறதாம்... அடுத்த வருடம் திருமண

மாகி புகுந்த வீடு போய் விடுவாங்களாம்... பிறந்த வீட்டில் கொண்டாடப் போகும். கடைசி பிறந்த நாள் என்பதால் அமர்க்களமாய்... அனைவரையும் அழைத்து.. விமரிசை யாய் நடத்தப்போகிறார்களாம்..."

"சரி... இதுக்கும் எனக்கும் என்ன சம்பந்தம் அஸ்வத்..."

"பொறுமை... ஊர்மிளா...விஷயத்திற்கு வருகிறேன். எனக்கு வேலை கிடைக்கணும்னா.. ஒரு உதவி அவங் களுக்கு செய்யணும்... அது யாருக்கும் தெரியவும் கூடாது... முக்கியமாய் ராஜ்குமார் சாருக்குன்னு சொன்னதும் 'பகீர்' என்றது எனக்கு.. தயக்கத்துடன் என்ன உதவின்னு கேட்டேன். ராஜ்குமாருடன் ஊர்மிளான்னு ஒரு பொண்ணு வருவா.. எல்லோருக்கும் குளிர் பானம் கொடுக்கிற போது அவளுக்கு மட்டும் ஸ்பெஷலா ஒரு கிளாஸ் கொண்டு போய் தரணும் னாங்க. நான் தயங்கி.. அதில் ஏதாவது விஷம் இருக்குமா என்று கேட்டேன். சேச்சே... அந்த 'ரிஸ்க்' கெல்லாம் எடுக்கக் கூடாது. அவளை இங்கிருந்து ஓட ஓட விரட்டணும்.. அதுக்குத் தான் இந்த ஏற்பாடு.. போதையில் அவள் தாறுமாறாய் பேசி.. அசிங்கமா நடந்துக்கணும்.. ராஜ்குமாருக்கு கோபம் வந்து அவளை மூட்டைக் கட்டி அனுப்பிவிடணும்... அவ் வளவுதான். என் வீட்டு வேலைக்காரர்களை வைத்து இந்த நாடகத்தை நடத்திடுவேன்... அப்புறம் பீதியில் உளறிக் கொட்டி விடுவாங்களோ என்றுதான் பயம்... இதோ பார் அஸ்வத்... இந்த வேலை கச்சிதமாய் நடந்தால் உன் வேலை கியாரண்டி... சம்பளமும் கூடுதலாக் கிடைக்கும்... ராஜ் குமாருக்கு மனைவியானதும் உன்னை மேல் தூக்கி விடுவது என் பொறுப்பு... என்ன சொல்றேன்னு கேட்டாங்க."

"அதுக்கு நீ என்ன சொன்னே... அஸ்வத்"

"சரின்னு சொல்லிட்டேன்... ஏன்னா... நான் இல்லா விட்டால் இன்னொருத்தரை சரிக்கட்டி ஏதாவது செய்து விடுவாங்க அந்த வீணா... அங்கே நான் இருந்து அது நடக்



காமல் செய்யணும் ஊர்மிளா... ஏன் உன் மேல் அத்தனை காழ்ப்புன்னு தெரியல்லே" சிரித்தாள் அவள்... "அவளுடைய சொத்தைப் பறித்துக் கொள்ளப் போகிறேன் என்ற பயமோ என்னவோ... சரி.. விடு.. அஸ்வத்..நீ நல்லவேலை செய்தாய். நீ என்னுடைய ஃபிரெண்ட் என்று தெரியாமல் உன்னிடம் இந்தப் பணியை ஒப்படைத்திருக்கிறாள். நீ அதைச் செய்.. அஸ்வத்... நான் மத்ததை கவனித்துக் கொள்கிறேன்... உனக்கு நல்ல வேலைக் கிடைக்கறதைக் கெடுத்துக் கொள்ளாதே..."

"அப்படி ஒரு வேலை எனக்கு தேவையில்லை... ஊர்மிளா..."

"ஊகூம்... அப்படி சொல்லதே... அஸ்வத்... சமயோசிதமா நடந்து கொண்டு.. புத்திசாலித்தனமா பிழைக்கணும்.. அதுதான் என்னோட கொள்கையும்... கவலைப்படாமல்... அந்த வீணா சொன்னதற்கு ஒப்புக் கொள்... ஆல் தி பெஸ்ட்..." வாழ்த்திவிட்டு நடந்தாள் ஊர்மிளா.

வீணாவின் பேய் குணத்தை தான் அறிந்து கொண்டா யிற்று.. மற்றவர்கள்...? முக்கியமாய் ராஜ்குமார்.. தெரிந்து கொள்ள வேண்டுமே... என்ன செய்யலாம்.. யோசித்துக் கொண்டே வீடு நோக்கி சென்றாள்.



## 18

இரண்டு நாட்களாய் ஊர்மிளா தன் கண்ணில் பட வில்லையே... ஏன்.. மனசுக்குள் தவித்தான் ராஜ்குமார்.

அன்று.. ஊர்மிளாவிற்கு முத்தம் கொடுத்துவிட்டு கீழே வந்தவனுக்கு உறக்கம் வர மறுத்தது...

ஊர்மிளா மீது தனக்கு காதல் என்பதை உணர்ந்ததும் உடம்பெல்லாம் சிலிர்ப்பு உண்டானது என்னவோ நிஜம்...

அது சில நிமிடங்கள்தான்.

தீப ஜோதியுள் மத்தியில்.. சின்னக் கருப்பாய் இருப்பது போல அந்த ஆனந்தத்தின் நடுவே சின்ன உறுத்தல்...

ஊர்மிளா தனக்குப் பொறுத்தமானவளா...

வயது பொருத்தம்?

முப்பதைத் தொட்ட தனக்கும்...பத்தொன்பதைப் பார்த்த அவளுக்கும் பொருந்துமா...

குழந்தை மனம் கொண்ட அவள்.. விளையாட்டுப் பிள்ளையாய் நடந்து கொள்ளும் அவளுக்கு நான் ஏற்றவன் தானா... அது முறையாய் தெரியவில்லையே...

சோமநாதர் என்ன நினைப்பார்...

'உன்னை நம்பி அனுப்பிவைத்தேனே... இப்படி எனக்கு நம்பிக்கைத் துரோகம் செய்வது நியாயமா என்று கேட்க மாட்டாரா...'

என் மேல் இருந்த நம்பிக்கையால் தானே இங்கு அனுப்பி வைத்தார் அந்தப் பெரியவர்... இந்த எண்ணம் கூடாது.. இதை முளையிலேயே கிள்ளி எறியவேண்டும். முடியும் செயலா... அது சாத்தியமா... பெருமூச்சு விட்டான் அவன்.

காதலி என்ற கண்ணோட்டத்தில் இனி அவளைப் பார்க்கக் கூடாது என்று நினைத்தாலும் இதயம் கேட்கமாட்டேன் கிறதே!

அவளைப் பார்த்ததும் வேகம் பிடிக்கிறதே...

இல்லை.. என் மனதைக் கல்லாக்கிக் கொள்ளத்தான் வேண்டும்.. அதற்கு ஒரே வழி வீணாவை மணப்பதுதான்...



ஆனால்...

வீணாவுடன் தன் வாழ்க்கை என்பதை எண்ணிப்பார்க் கவும் முடியவில்லை... எதிர்காலம் இருட்டாக அல்லவா தெரிகிறது. அந்த எண்ணமே எட்டிக்காயாக கசந்து வழிந்தது.

வீணாதான் மனைவி... தனக்கு ஏற்றவள் அவளே என்று நினைத்த காலம் ஒன்று.. இப்போது.. வீணாவா வேண்டவே வேண்டாம் என்றல்லவா ஆகிவிட்டது....ஊர்மிளாவின் வரவால் தன் வாழ்க்கையே ஆட்டம் கண்டு விட்டது... அவளது வருகைக்கு முன் இருந்த நிம்மதியும்.. மன அமைதி யும் எங்கோ போய்விட்டது... பளிங்காய் தெளிந்திருந்த மனதில் இப்போது குழப்பமும்.. கலக்கமும் தான் மிஞ்சி யிருக்கிறது உள்ளம் மாறாமல் இருந்திருக்கக் கூடாதா... எல்லாமே ஏன் தலைகீழாகிப் போனது... நெஞ்சில் கனமாய் அழுத்தியது. இப்படியெல்லாம் நடக்கும் என்று எதிர்பார்க்க வில்லை அவன். வேண்டாத சுமை என்று நினைத்தது போய்.. அவளது அன்பை வேண்டி ஏங்கும் நிலை வந்தது ஏன்...

தலைவலி என்று எண்ணியது மாறாய்... அது இதயவலி யாக அல்லவா திரும்பிவிட்டது... அது ஏன்...

இதற்கு தீர்வு தான் என்ன... ஒன்றும் புரியாமல் விழித் தான் ராஜ்குமார்.

''ராஜ்...'' வீணையின் நாதமாய் ஊர்மிளாவின் குரல் கேட்டதும்...அவனது இதயத்தில் எக்ஸ்பிரஸின் வேகம்!

முயல் குட்டியாய் தாவிக்குதித்து வந்தவளை கண்களால் அள்ளிப்பருகினான்...

அவளை அணைக்க வேண்டும் என்று எழுந்த வேகத்தை மிகவும் சிரமப்பட்டு அடக்க முயன்றான்.

அவனது துடிப்பையும்... தாபத்தையும் அறியாதவளாய் அருகில் வந்து... அவனது கரத்தைப் பிடித்துக் கொண்டு கெஞ்சலாய் கேட்டாள்.

''ராஜ்... எனக்கு 'ஷாப்பிங்' போகணுமே...'' கரும்பு தின்ன கூலியா... அவளுடன் செல்ல அவனுக்கும் ஆசைதான்...

இருந்தும்... சொன்ன உடனே புறப்படமுடியாதே... அவனுக்கும் வேலை இருந்தது.

''என்ன வாங்க வேண்டி... இந்த திடீர் 'ஷாப்பிங்' ஊர்மிளா...'' என்று கேட்டான்.

''பாட்டிக்கு... என் நண்பர்களுக்கு.. ஏன்.. உங்களுக்கும் தான் 'கிப்ட்' வாங்கணும் ராஜ்... தாத்தாவுக்கும் ஏதாவது வாங்கிக் கொள்ளணும்... ஊருக்கு போனதும் என்னை மறந்து விடக்கூடாது பாருங்கள்.. அதான்'' என்றாள் அவள்.

மறப்பதா... அது சாத்தியமா.. என்னுள் நிறைந்தவளை... என் நினைவையெல்லாம் ஆக்ரமித்தவளை... என் இதயத்தில் குடியேறிவளை மறக்க முடியுமா... கடவுளே.

''என்ன ராஜ்... நான் பேசிக் கொண்டே இருக்கிறேன். எதுவும் சொல்லாமல் இருக்கிறீர்கள்... ஓகோ... வீணா ஆன்ட்டியின் நினைப்பாக்கும்...'' என்று ஊர்மிளா கேட்டதும்.

எரிச்சலாய் இருந்தது அவனுக்கு....

வீணாவின் நினைவா... அது வருவதே இல்லையே... தேனைப் பருகும் வேளையில் வாயில் கசடு தட்டியது போல் உணர்ந்தான்.. ஆனால்... அவள் அப்படி நினைப்பதும் நல்லதுதான்.. சுதாரித்துக் கொண்டு சொன்னான்...

''ஆங்... வீணாவைப் பற்றிதான் நினைத்தேன். அவளுக்கு பர்த்டே வருகிறது... பெரிய விருந்துக்கு ஏற்பாடு பண்ணப் போகிறார்கள். என்ன அன்பளிப்பு தருவது என்று யோசிக்கிறேன். அவளிடம் பெட்டி பெட்டியாய் நகைகள் இருக்கிறது... வேறு எதை கொடுப்பது என்று தான்...'' சாமர்த்தியமாய் பேச்சை வீணா பக்கம் திருப்பினான் அவன்.



''வீணா ஆன்ட்டிக்கு 'சென்ட்' என்றால் கொள்ளைப் பிரியம் போல ராஜ்... விதவிதமாய் வாங்க பிடிக்கும்னு சொன்னாங்க... காஸ்ட்லியா வாங்கிக் கொடுக்கலாமே... 'இம்போர்ட்டட்' ஸ்ப்ரே அருமையா இருக்கும்...''

''குட்... அவளுக்குப் பிடித்ததை வாங்கித் தந்து விடலாம்...'' என்றான் அவன்.

அதைத்தானே அவளும் விரும்பியது...

''எப்போது போகலாம்... ஷாப்பிங்க்கு'' விடாப்பிடியாய் கேட்டாள் ஊர்மிளா.

''இன்றைக்கு வேண்டாம்... எனக்கு அவசர வேலை இருக்கிறது.. இரண்டு நாட்கள் போகட்டும்... நாம் போய் வரலாம்... ஓகே...''

''சரி.. நான் பாட்டிக்கு சொல்லிவிட்டு வருகிறேன்... பாட்டி.... பா...ட்...டி...'' என்று அழைத்துக் கொண்டே ஓடிய அவளை கண் இமைக்காமல் பார்த்தான்.

இவளிடம் சிக்கிக் கொண்ட இதயத்தை எப்படி மீட்கப் போகிறேன்... அவனுக்குள் தவிப்பு...

இரண்டு நாட்கள் கழிந்தன...

கோகிலா மகனிடம் பதற்றத்துடன் சொன்னாள்...

''காலையிலிருந்து ஊர்மிளா எதுவும் சாப்பிடவில்லை ராஜா... எங்கே போனாள் என்றும் தெரியவில்லை வேலைக்காரர்களை அனுப்பி தேடச் செய்தேன்... கண்ணில் படாமல் எங்கே போய் விட்டாளோ... தெரியவில்லை.. எனக்கு படபடன்னு வருகிறது ராஜா...'' மறுபடியுமா... 'பகீர்' என்றது அவனுக்கு.....

''டெனில்... ஏஞ்சல் இரண்டும் இருக்கின்றதா...'' என்று விசாரித்தான் அவன்...

''அங்கேயே தான் இரண்டும் இருக்கு.. இத்தனை நேரம் வெளியே தங்க மாட்டாளேப்பா... அதுதான் பதற்றமா இருக்கு. இப்ப மணி ஆறு... உபவாசமா இருந்து என்ன செய்கிறாள்னு புரியல்லே...''

''வாண்டுகள் பட்டாளத்தை விசாரித்தீர்களா...''

''அவர்களையும் கேட்டாச்சு... நாங்க யாருமே பார்க்க வில்லைன்னுட்டாங்களாம்'' கவலையுடன் சொன்னார் கோகிலா.

ராஜ்குமாருக்கும் 'டென்ஷன்' கூடியது. எங்கே போனாள் என் கண்மணி.. அதுவும் சொல்லிக் கொள்ளாமல்...

''கடைசியா உங்ககிட்டே பேசியது எப்போம்மா...''

''நேத்து ராத்திரி.. பழைய ஆல்பத்திலிருந்து அவளோட அப்பா அம்மா போட்டோவை எடுத்துதான்னு நச்சரிச் சாப்பா.. சரி... எல்லா வேலைகளையும் ஒதுக்கி வச்சுட்டு நானும் சாந்தியுமா தேடினோம்... மேனகா... ராம்சுந்த ரோட திருமண போட்டோ ஒண்ணு இருந்தது. அதைக் கொடுத்ததும் குதிக்காதக் குறையாய் வாங்கிக் கொண்டு ஓடினாள்... இன்றைக்கு பூஜை முடிந்து அவளைத் தேடினால்.. காணோம்... அவள் பசி தாங்க மாட்டாள்.. ராஜா... அதையும் மீறி இருக்காள்னா... நெஞ்சில் பிசைகிறதுப்பா... உடனே போய் தேடு.. ராஜா...''

ராஜா புறப்பட்ட போது வாசலில் நிழலாடியது.

கோவில் அர்ச்சகர்...

''கோவிலுக்கு போறதுக்கு முன்னாடி உங்களைப் பார்த்துட்டுப் போகலாம்னு வந்தேன். வருஷப்பிறப்பு வர்ரது... கோவில்ல விசேஷ பூஜைக்கு ஏற்பாடு பண்ணலாமான்னு கேட்கறதுக்கு வந்தேன். என்ன சொல்றேள்..'' என்று கேட்டார்.

''எப்பவும் போல செய்துடுங்க.. சுவாமி.. எங்களைக் கேட்கவே வேண்டாம்... எங்க கணக்குப் பிள்ளை வந்து பணம் தந்துடுவார்...'' என்றார் கோகிலா...



''ரொம்ப சந்தோஷம்.. வரட்டுமா...'' என்று புறப்பட்டார் அவர்.

''மோர் கொடுக்கட்டுமா... சாந்தா...'' என்ற கோகிலா அழைக்க...

''இப்பத்தான் குடிச்சிட்டு வந்தேன்... எதுவும் வேண்டாம்மா.. கொஞ்சம் சாமான்கள் வாங்கணும்... புறப்படறேன்.''

அவர் சென்றதும்...

''நல்லமனிதர்... கோவில் விஷயத்தில் எந்தக் குறையும் வராமல் நடந்துக்கொள்கிறார்... உங்கப்பா காலத்திலே யிருந்து கோவிலுக்காகவே உழைக்கிறார். சோமநாதரோட பேத்திதான் ஊர்மிளான்னதும் அவருக்கு ஆச்சர்யம்.. ஊர்மிளாவும் நல்ல தாத்தான்னு சர்டிபிகேட் கொடுத்து விட்டாள் என்றால் பாரேன்...'' என்றாள் கோகிலா.

ஆச்சர்யத்துடன் பார்த்தான் மகன்.

''எப்போது அவள் அந்தக் கோவிலுக்கு போனாள்...'' என்று கேட்டான்....

''நாலைந்து நாட்களுக்கு முன்னால்தான்... தன் அப்பா அம்மா இந்த கோவிலுக்குப் போவது வழக்கம்னு இந்தப் பெரியவர் சொன்னாராம்... ஏன் பாட்டி.. நான் நடந்த பாதையில் தானே அவர்களும் நடந்திருப்பார்கள்... என்று சொல்லிப் புலம்பினாள் குழந்தை. நல்ல குழந்தைதான்.. திடீர் என்று இப்படி சொல்லாமல் கொள்ளாமல் எதையாவது செய்து விடுகிறது... இப்போ எங்கேன்னு தேடுவது அவளை...''

அதே நேரம் ராஜ்குமாரின் 'செல்' அழும் குழந்தையாய் சிணுங்க...

எடுத்துப் பேசினான்.

''ஹலோ.. மை சன்...''

சோமனாத மாமா!

"என் பேபி என்ன செய்கிறாள்... வால்தனம் குறைந்திருக் கிறதா.." என்று விசாரித்தார்.

அவள் வீட்டில் இல்லை... யாரோ ப்ரெண்டை சந்திக்கப் போயிருக்கிறாள் என்று மட்டுமே சொன்னான் ராஜ்குமார்.

மனிதர் பதறிவிடுவாரே...

"அவளது காலில் சக்கரம் கட்டியிருக்கும் ராஜ்... அதான் ஒரே இடத்தில் இருக்கமாட்டாள்.. பட்டாம்பூச்சி மாதிரி திரிந்து கொண்டிருப்பாள். சரி.. அவள் வந்ததும் சொல்லி விடுப்பா... இன்றைக்கு அவளது விருப்பம் போல அனாதை ஆசிரமத்தில் சாப்பாட்டுக்கு ஏற்பாடு பண்ணிவிட்டேன் என்று.. அவளுக்கு அது திருப்தியாகிடும்..." என்றார் பெரியவர்.

ராஜ் வியப்புடன் அவரைக் கேட்டான்...

"இன்றைக்கு ஏதாவது விசேஷமா மாமா... உங்க பிறந்த நாளா..."

"அடடா... உனக்கு தெரியாதா.. ஊர்மிளாவோட பெத்தவங்க... என்னோட பிள்ளையும்... மருமகளும் இவ்வுலகத்தைவிட்டு போன தினம்..." கிழவரின் குரலில் தழுதழுப்பு.. பிரிவின் வேதனை...

"என்னப்பா சொன்னார்..."

விஷயத்தைச் சொன்னான் அவன்...

ஓ... அதுதான் அவள் ஒன்றுமே சாப்பிடாமல் பட்டினி கிடக்கிறாள்... மனசுக்குள்ளே வேதனைப் பட்டுப் புழுங்கு கிறாள்...

தாயும் மகனும் அர்த்ததுடன் பார்த்துக்கொண்டனர்.

ஆனால் எங்கே போனாள்....

அவளுக்குத் தெரிந்த இடம் ஒன்றிரண்டு தான்...



வீணா வீடு.. போகவே மாட்டாள்...

பிக்னிக் ஸ்பாட்... ரொம்பவே தூரம்...

மற்றபடி... அவள்...

அடடா.. கோவிலை எப்படி மறந்தேன்... பெற்றவர்கள் தரிசித்த கோவில் ஆயிற்றே... நிச்சயம் அங்கு தான் இருக்க வேண்டும்...

"இதோ வருகிறேன்" என்று தாயிடம் சொல்லிவிட்டு புறப்பட்டு சென்றான் ராஜ்குமார்.

கையில் இருந்த ஃபோட்டோவை பார்த்துக் கொண் டிருந்த ஊர்மிளாவிற்கு பெருமிதமாக இருந்தது.

இவர்கள் என் பெற்றவர்கள்... அழகான அம்மா... கம்பீரத் தோற்றத்துடன் வசீகர அப்பா!

அனைவரும் சொல்வது போல அம்மா தேவதையேதான். அன்பான தேவதை... கணகளில் தான் எத்தனை கனிவு!

அப்பா முகத்தில் கர்வம்.. இந்த அழகு தேவதை எனக் குரியவள் என்ற கர்வமோ... இருக்கும்...

இவர்களுக்கு மகளாக பிறந்த.. தன் அதிர்ஷ்டத்தை நினைத்து உள்ளம் விம்மியது.

அதே நேரம்... இந்த அன்பு தெய்வங்களின் வாயால் 'மகளே' என்று அழைக்கப்படும் பாக்கியம் தனக்கு இல் லாமல் போனதே என்ற துக்கமும் வந்தது.

"கீச்... கீச்..." சத்தம் கேட்டு நிமிர்ந்து பார்த்தாள்.

எதிரே... சற்று தள்ளியிருந்த மரத்தில்... கூட்டில்... ஒரு அழகான.. மனதை நெகிழவைக்கும் காட்சி... தாய் பறவை ஒன்று தான் கொண்டு வந்த இரையை தன் குஞ்சுகளுக்கு ஊட்டிக் கொண்டிருந்தது.

அதைப்பார்த்து மெய்சிலிர்த்தாள் அவள்.

அம்மா.. நீ உயிரோடு இருந்திருந்தால்.. இதே போல எனக்கு ஊட்டியிருப்பாய்.. இல்லேம்மா...

உன் மடியில் படுத்து.. தாய் மடியின் சுகத்தை கண்மூடி ரசித்திருப்பேன்...

உன் மென்மையான விரல்களின் ஸ்பரிஸத்தில் மெய் மறந்து போயிருப்பேன்...

உன் இனிய குரலில் தாலாட்டில்.. என்னை மறந்து உறங்கியிருப்பேன்... இதையெல்லாம் என் வாழ்வில் இழந்து விட்டேனே... தாய் பாசம் என்ன என்பதை அறியாமல் போய் விட்டதே.

ஏம்மா என்னை விட்டுப் போனே.. ஏதோ நெஞ்சை அடைத்தது... அழுகையா...

ஊகூம்.. அது பெண்ணின் பலவீனத்தைக் காட்டும். ஆனால் அழ வேண்டும் போல இருந்தது...

முழங்காலில் முகம் பதித்துக் கொண்டாள் ஊர்மிளா.

அவளையேப் பார்த்துக் கொண்டு நின்றிருந்த ராஜ் குமாருக்கு. அவளின் அவஸ்தையைப் பார்க்க வேதனை யாக இருந்தது.

அருகில் சென்று தலையை வருடி 'ஊர்மிளா...' என்று மென்மையாய் அழைக்க...

ஏறிட்டுப் பார்த்தாள் அவள்.. கண்களில் நீர்திரை!

''வா.. வீட்டுக்கு போகலாம்...'' என்று அழைத்தான்.

''ராஜ்.. இன்னிக்கு... என் அம்மா... அப்பாவோட...'' மூக்கை உறிஞ்சினாள் ஊர்மிளா.

''தெரியும்... ஊர்மிளா... உன் மனதில் எத்தனை வேதனை என்றும் எனக்கு புரிகிறது... ஆனால் ஒன்று தெரிந்து கொள்ள வேண்டும்.. பல வருடங்கள் எலியும் பூனையுமா சண்டை போட்டுக் கொண்டு மனதளவில் ஒட்டாமல்..



வெறும் கணவன் மனைவியாக வாழ்வதை விட.... அவர்கள் சேர்ந்து வாழ்ந்த கொஞ்ச காலத்தில் வெகு சந்தோஷமாய் இருந்திருக்கிறார்கள் பார்... அதுதான் கிரேட்! இருவரும் அன்றில் பறவைகளாய் வாழ்ந்து... இணைபிரியாமல் அந் நியோன்னியமாய் இருந்து.. சேர்ந்தே இறந்திருக்கிறார்கள்... இறந்த பின்பும் அவர்களின் ஆத்மாக்கள் சந்தோஷமாகத் தான் இருந்திருக்கும்... அதை நினைத்து நாமும் சந் தோஷப்படவேண்டும்டா... இப்போ.. அவர்கள் தெய்வ நிலையில் இருந்து உன்னை வாழ்த்துவார்கள்... அதை நம்பு.. இப்படி நீ வேதனைப்படுவதையும்.. கண்ணீர் விடுவதையும் நிச்சயம் விரும்பமாட்டார்கள். எங்கே... கண்களைத் துடைத்துக் கொள் கண்ணம்மா.''

கண்களைத் துடைத்துக் கொண்டு.. அவனைப் பார்த்து சிரித்தாள்.

''குட்.. போகலாமா... அங்கே... உன்பாட்டி எதுவும் சாப்பிடாமல் பட்டினியாக இருக்கிறார்கள்... உன்னைக் காணாமல் கலங்கிப் போயிருக்கிறார்கள்...''

''சாரி.. ராஜ்.. என்னவோ தனிமையில் இருக்க வேண்டும் போல இருந்தது... அதான் இங்கு வந்தேன்.. அம்மாவும்.. அப்பாவும் சுற்றி வந்த இடம் ஆச்சே.. இங்கேதான் அமர்ந்து பேசியிருப்பார்கள்.. இல்லே... ராஜ்...''

''இருக்கலாம்.. இப்போ.. நேரம் தாழ்த்தாமல்.. வீட்டுக்கு போகவேண்டும். காலையிலிருந்து நீ எதுவும் சாப்பிடவில்லை... முதல்ல வயிறுக்கு ஏதாவது கொடு.. எல்லாம் சரியாகிவிடும்.. ஓகே...''

அவன் தன் கரத்தை நீட்ட... அதைப்பற்றிக் கொண்டு எழுந்தாள் அவள்..

பிடித்த கரத்தை விடாமல் நடந்தாள்.

தன் பெற்றவர்களைப் பற்றி சொல்லும்படி அவள் வேண்ட.... அவனும் விளக்கமாக சொன்னான்.

சிறு பிராயத்தில்.. மேனகா மீது கொண்ட பிரமிப்பு.. ராம்சுந்தர் மீது இருந்த மரியாதைக் கலந்த அன்பு.. அவர்கள் வீட்டில் தான் செல்லப்பிள்ளையாய் சுற்றி வந்தது... சோமனாதர் தனக்கு குதிரையைப் பரிசாகத் தந்தது.. இதுபோல பல சுவையான நிகழ்வுகளை வருணித்தவாறு நடக்க.. அதை ஆர்வமாய் கேட்டவாறு சென்றாள் ஊர்மிளா....

வீடு வந்து சேரும் வரை பேச்சு ஓயவில்லை.. அதுவும் தாயின் கோபத்திற்கு பயந்து சோமனாதர் மாமா வீட்டில் தான் ஒளிந்து கொண்டதையும்.. மேனகா ஆன்ட்டி தன்னைக் காட்டிக் கொடுக்காமல் பேசும்போது.. தேள் ஒன்று கொடுக்கைத் தூக்கிக் கொண்டு வருவதைப் பார்த்துவிட்டு 'அம்மா' 'அம்மா' என்று அலறியதையும்.. மேனு ஆன்ட்டி முகத்தில் அசடு வழிந்ததையும் அவன் வருணித்தபோது.. ஊர்மிளாவிற்கு சிரிப்போ சிரிப்பு...

கற்பனையில் அதைப் பார்த்து ரசித்து.. சிரிக்கையில் கண்களில் கண்ணீரே வந்துவிட்டது...

ஊர்மிளாவின் வாட்டம் மறைந்து... மனம்விட்டு சிரிப்பதைப் பார்த்து ராஜ்குமாரும் மகிழ்ந்தான்.

இந்த மும்முரத்தில் இருவரும் ஒன்றை கவனிக்க மறந்தனர்...

வீட்டின் வெளிப்படியில் வீணா அவர்களை எதிர்நோக்கி காத்திருப்பதை...

இருவரும் சிரித்தவாறு... உலகை மறந்தவர்களாய்.. கைக் கோர்த்துக் கொண்டு வருவதை வீணாவும் கவனிக்கத் தவறவில்லை...

அவளது முகம் கோபத்தில் சிவந்துபோனது...





# 19

நெற்றியில் மட்டும் மூன்றாவது கண் இருந்திருந்தால்.. சிவனைப் போல நெற்றிக்கண்ணைத் திறந்து ஊர்மிளாவை சுட்டெரித்திருப்பாள்.. அந்த அளவில் வீணாவிற்கு கொதிப்பு.

எரிமலையாய்.. அதன் பிழம்பாய்.. உள்ளூர தகித்தது அவளுக்கு...

என்ன திமிர் இவளுக்கு... ராஜகுமாருடன் கைக் கோர்த்துக் கொண்டு வருகிறாளே... இவளுக்கு என்ன துணிச்சல்.. பற்களை நறநறவென்று கடித்தாள்.

ராஜ்குமாருக்கு வியப்பு.. இதென்ன.. முன்னறிவிப்பு இன்றி வீணா வந்திருக்கிறாளே...

அதைக் கேட்டும் விட்டான்...

''ஏன் வரக்கூடாதா ராஜ்.. திடீர் என்று வந்து உங்களை அசத்தலாம்னுதான்.. அப்படி வந்தால்தானே என்ன நடக்கிறது என்று தெரிந்து கொள்ள முடியும்.'' அவள் எதைக் குறிப்பிடுகிறாள் என்பதை உணர்ந்த ஊர்மிளா ராஜ்குமாரின் கரத்திலிருந்து தன் கையை விடுவித்துக் கொள்ள முயன்றாள்...

ஆனால் ராஜ்குமார் விடவில்லை... இன்னும் பிடியை இறுக்கினான்.

''அடடே.... எப்போதிலிருந்து உளவுப் பணி ஆரம்பம்... ஆனால் இந்தப் பணியில் அவசர புத்தியெல்லாம் கூடாது.. யோசித்து பேச வேண்டும்... தெரிந்ததா வீணா...''

வீணாவின் 'வெடுக்' பேச்சுக்கு 'சுருக்' என்று பதில் தந்தான் ராஜ்குமார்...

பின்பு ஊர்மிளாவைப் பார்த்து 'போய் பாட்டியை பார் ஊர்மிளா.. முதலில் சாப்பிடு.. பிறகு பேசலாம்...'' என்று சொல்லி அவளை அனுப்பிவைத்துவிட்டு.. நிதானமாய் வீணா பக்கம் திரும்பினான்.

''இன்று ஊர்மிளாவோட பெற்றவர்கள் இறந்த நாள். அந்த வருத்தத்தில் காலையில் இருந்து எதுவும் சாப்பிட வில்லை அவள்... கோவிலில் அமர்ந்திருந்தவளை அழைத்து வந்தேன்... நீ வருவது தெரிந்திருந்தால் இன்னும் சீக்கிரம் வந்திருப்போம். அதுசரி.. என்ன விஷயம் வீணா... இப்படி.... சொல்லாமல் கொள்ளாமல் வந்திருக்கிறாய்...'' என்று கேட்டான்.

''என் பிறந்த நாளுக்கு அத்தையை அழைத்துவிட்டு போகலாம் என்று வந்தேன்... பெரியவர்களை நேரில் வந்து அழைப்பது தான் முறை.. இல்லையா.. அதான்...'' என்று சொன்னாள் வீணா.

உண்மையில் அதில்லை.. திடீர் என்று வந்தால் தெரியும் என்ன நடக்கிறது என்று....

நினைத்தது போலவே நடந்திருக்கிறது.

ராஜ்குமாரும் இல்லை.. ஊர்மிளாவும் இல்லை... கோகிலாவைக் குடைந்ததில் ஊர்மிளாவை அழைத்து வர தன் பிள்ளை சென்றுள்ளான் என்று அறிய முடிந்தது.

அரைமணி நேரமாய் காத்திருந்தும் இருவரும் வருவதாய் படவில்லை...

உள்ளுக்குள் பொருமிக் கொண்டிருந்தவளுக்கு... இருவரும் ஒட்டிக் கொண்டு.. கைக்கோர்த்த வண்ணம் நடந்து வந்த காட்சியைப் பார்த்ததும் வயிறு வெந்து 'அல்சரே' வந்துவிட்டது.....



ஊர்மிளா எப்போது தொலைவாள் என்றாகிவிட்டது அவளுக்கு...

வரவர ராஜ்குமாரின் வருகை கூட குறைந்துவிட்டது.

அதற்கு காரணம்.. இந்த சாகசக்காரி தான்...

அவளை ஓட ஓட விரட்ட வேண்டும்.... பிறந்தநாள் விழாவுக்கு வரட்டும்...

எல்லோர் முன்னால் அசிங்கப்பட்டு.. அவமானப்பட்டு கூனிக் குறுக வேண்டும்...

அப்புறம் துண்டைக் காணோம்... துணியைக் காணோம் என்று ஊருக்கு ஓட்டம் பிடித்து விடுவாள்..

அந்த எண்ணத்தில் மனம் எக்காளமிட்டது. புறப்படும் முன் ஊர்மிளாவிடம் தேனொழுக பேசி.. கண்டிப்பாய் விருந்துக்கு வரவேண்டும் என்று அழைப்பு விடுத்துவிட்டு சென்றாள் வீணா.

விலையுயர்ந்த மேனாட்டு வாசனை திரவியத்தை தேர்ந்தெடுத்தான் ராஜ்குமார்...

மென்மையான.. இதமாய் நாசியை வருடித்தரும் நறுமணம் உடைய அந்த 'ஸ்ப்ரே' நிச்சயம் அவளுக்குப் பிடிக்கும்...

ஊர்மிளாவும் ஏதேதோ வாங்கினாள்.. கூடவே... ராஜ்குமார் வாங்கின அதே 'ஸ்ப்ரே' யையும்... புருவங்கள் உயர அவளைப் பார்த்து கேட்டான்...

''என்ன ஊர்மிளா.. யாருக்கு இது...''

''எனக்குத்தான் ராஜ்.. வாசனை நல்லா இருக்கு.. அதான்...''

''இதுக்கும் நானே கொடுக்கறேன்.. என்னோட அன்பளிப்பு...''

ஊர்மிளாவும் மறுக்கவில்லை...

இருவரும் ஒரு பெரிய ஓட்டலில் உணவு உண்டு விட்டு.. மீண்டும் கடைத்தெருவை ஒரு வலம் வந்தபின்பு வீடு திரும் பினார்கள்.

அன்று மாலை வீணாவின் பிறந்தநாள் விழா.. நண்பர்கள் கூட்டம் அதிகமாகவே இருந்தது...

ஊர்மிளாவிற்கு சந்தேகம்... இந்த பிறந்த நாள் விழாவே தன்னை அவமானப்படுத்தும் நோக்கத்தால் தானோ...

எதற்காக இத்தனை ஆர்பாட்டம்... ஆடம்பரம்.. ஒரு வேளை.. அனைவருக்கும் ராஜ்குமார் தான் என் வருங்கால கணவன் என்பதை உணர்த்தவும் இருக்கலாம்.. இதோ.. ராஜ்குமாரை உரிமையுடன் கைப்பற்றிக் கொண்டு அனைவருக்கும் அறிமுகப்படுத்துவதைப் பார்த்தால் அப்படித்தான் தெரிகிறது.

ராஜ்குமாரை மட்டுமா அவள் அறிமுகப்படுத்தினாள்.. ஊர்மிளாவையும் தான்...

அதுதான் ஊர்மிளாவிற்கு ஆச்சர்யம்.... ஏன் திகைப்பும் கூட...

ஊர்மிளாவை ஒரு பொருட்டாய் மதிக்காதவள்... இப்படி வலிய அழைத்துச் சென்று ''இவள்தான் ராஜ்குமார் வீட்டிற்கு வந்திருக்கும் புது சொந்தம்... நண்பரின் பேத்தி...'' சொல் கிறாள் என்றால்... அது யோசிக்க வேண்டிய விஷயம்தான்...

மூளையைக் கசக்கிக் கொண்டாள் அவள்.

என்னவாக இருக்கும்...

எல்லோரும் இவள் ராஜ்குமார் வீட்டினள் என்று தெரிந்து கொள்ளவேண்டும்... அப்போதுதான்... ஏதாவது நடந்தால்... நடக்கும் என்ற நிச்சயம்... அது ராஜ்குமாருக்கு தலைகுனிவாக இருக்கும்...

அதாவது அனைவரும் நினைத்துக் கொள்ள வேண்டும்... ராஜ்குமாருக்கு இப்படி ஒரு உறவா.. என்று.. அதனால் அவமானம் இரட்டிப்பாகும்...



அடுத்து... ராஜ்குமாரின் நண்பரின் பேத்தி என்ற வார்த்தையின் சூசகம் எந்த புத்திசாலிக்கும் புரிந்து விடுமே...

ராஜ்குமாருக்கு இணையில்லை... வயது பொருத்தம் இல்லாதவள்... சின்னப் பெண்தான்...

இது ராஜ்குமாருக்கே மறைமுக எச்சரிக்கையாய் இருக் கலாம்...

அடடா... சாணக்கிய புத்திதான்...

அவள் எய்யப் போகும் அம்பை.. திருகு பாணமாய்.. அவள் பக்கமே திருப்புகிறேன்...

தன் வினை தன்னைச் சுடும்...

ஊர்மிளாவின் கண்கள் அஸ்வத்தை தேடின... எங்கே அவன்... ஒருவேளை வரவில்லையோ...

வீணாவின் தந்தை சொன்னார்.....

''கேக் 'கட்' பண்ணும்மா வீணா... அதான் ராஜ்குமார் வந்துவிட்டாரே...''

''அப்பா.. எல்லோருக்கும் முதல்ல குளிர்பானம் கொடுக்கச் சொல்லுங்க... டின்னர் 'பேட்' டாகத்தானே பரிமாற இருக் கிறது... அஸ்வத் எங்கே... அவனிடம் அந்தப் பொறுப்பை ஒப்படைத்திருந்தேன்... அவனை வரச்சொல்லுங்களேன்...'' என்றாள் வீணா...

ஆக... 'ப்ளான்' அப்படியே இருக்கிறது.. அதில் மாற்றம் இல்லை...

அஸ்வத் வந்ததும் வீணா கண்களால் ஏதோ சைகை செய்வதைப் பார்த்தாள் ஊர்மிளா...

அவன் கண்ணாடி டம்ளர்களில் பானத்தை ஊற்றி அனைவருக்கும் விநியோகம் செய்தான்.

ராஜ்குமாருக்கும் ஊர்மிளாவிற்கும் கொடுக்க வந்த போது.. நான் கொடுக்கிறேன் என்று வாங்கிக் கொண்டாள் வீணா...

''டம்ளர் நிறைய கொண்டு வரக் கூடாதா அஸ்வத். இரு.. இன்னும் ஊற்றிக் கொண்டு வருகிறேன்...'' என்று சென்றதும்...

அஸ்வத் ஊர்மிளாவை சைகையால் எச்சரித்தான்.

அவளும் டோன்ட் வொர்ரி... நான் பார்த்துக் கொள்கிறேன் என்று சைகை செய்தாள்...

திரும்ப வந்த வீணா அழகான சிரிப்புடன் கொக்க கோலா பானத்தை ஊர்மிளாவிற்கு தந்துவிட்டு... ராஜ்குமாருக்கும் தந்தாள்.

ஊர்மிளாவும் அழகாய் ஒரு சிரிப்பை உதிர்த்து விட்டு ''தாங்க்ஸ் வீணா ஆன்ட்டி'' என்றாள்...

''இந்த ஆன்ட்டியெல்லாம் எதுக்கு... எனக்கு அப்படியொண்ணும் வயசாகவில்லை'' என்றாள் வீணா...

''சரி.. தாங்க்ஸ் வீணா அக்கா...'' விஷமப்புன்னகையுடன் ஊர்மிளா சொல்லவும்...

எரிச்சலுடன் ஒரு பார்வைப் பார்த்தாள் வீணா..

அவள் முன்னே... பானத்தை உறிஞ்சுவது போல பாவனை செய்தாள் ஊர்மிளா...

கேக் 'கட்' பண்ண தயாரான வீணாவின் அருகில் போய் நின்று கொண்டான் ராஜ்குமார்... அவன் அருகே ஊர்மிளாவும்...

''ஹேப்பி பர்த்டே டு யூ'' வாழ்த்து பாடலுடன் அந்தப் பெரிய சாக்லேட் கேக்கை வெட்டினாள் வீணா. முதல் விள்ளலை எடுத்து தந்தைக்கு ஊட்டினாள். அடுத்த விள்ளலை ராஜ்குமாருக்கு ஊட்ட முயலும்போது அவன் அதை மறுத்து கையில் வாங்கிக் கொண்டான்.

''எனக்கு சாக்லெட் கேக் பிடிக்காது வீணா...'' என்று அவன் சொல்லவும்.. முகத்தை சுளித்தாள் அவள்.

அவளது தந்தை கேக் துண்டை எடுத்து ''பேபி... எங்கே... வாயைக் காட்டு'' என்று வாயில் திணிக்க அதை ஒட்டு



மொத்தமாய் விழுங்க முடியாது தவிக்கையில் அவளுக்கு புரையேறியது.

''தண்ணீர்... தண்ணீர்'' என்று காமேசுவரன் கூவ... அவசரத்துக்கு ஊர்மிளாவின் கையில் இருந்த பானத்தை வாங்கி வீணாவிடம் கொடுத்தான் ராஜ்குமார். புரையேறிய தவிப்பில் கண்ணீர் திரைக்கட்ட... வீணா அதை கவனிக்கவும் இல்லை... மடமடவென்று அதைக் குடித்துவிட்டாள்...

இது ஊர்மிளாவும் எதிர்பார்க்காதது தான்.. அவள் நினைத்ததே வேறு... ஆனால் நடந்தது வேறு...

சிறிது நேரத்தில் வீணாவிடம் மாற்றம்...

போதை ஏறியவள் போல தள்ளாட ஆரம்பித்தாள்... வாய் குளறி பேச்சும் தடுமாற ஆரம்பித்தது... ராஜ்குமார் மீது சவியவாறு கொஞ்சினாள்...

''ராஜ்.. நீங்க... கொண்டு வந்த ஃகிப்ட்... எங்கே... எனக்கு இன்னும் தரவில்லையே'' என்று உளற...

ராஜ்குமார் பற்களைக் கடித்து அடிக்குரலில் சீறினான்.

''வீணா...பிஹேவ் யுவர் செல்ஃப்.''

''ஊகூம்... எனக்கு உங்க... அன்பளிப்பு தான்... முக்கியம். கொடுங்க... ராஜ்...''

அவனது கழுத்தை கரங்களால் சுற்றி அணைக்க... அங்கிருந்தவர் அருவருப்பில் முகம் சுளித்தனர்...

வேறு வழியின்றி தான் கொண்டு வந்த அன்பளிப்பை அவளிடம் கொடுத்தான் ராஜ்...

''தாங்க் யூ...டியர்...'' என்றவாறு.. தள்ளாடிக் கொண்டு அதை அவசர அவசரமாக பிரித்தாள் வீணா...

குரங்கிடம் சிக்கிய பூமாலை போல.. கண்ணைப் பறித்த பளபளப்பான மேல் உறை ஐந்து நிமிடங்களில் கிழித்து எறியப்பட்டது.

"பேபி... எதுக்கு அர்ஜென்ட் பட்றே... அப்புறம் பிரித்துப் பாரேன்... உனக்கு என்ன ஆச்சும்மா.. உடம்பு முடியலையா என்ன.. வா.. கொஞ்சம் உட்கார்ந்து 'ரிலாக்ஸ்' பண்ணிக் கோம்மா..."

மகளின் திடீர் மாற்றத்துக்கு காரணம் தெரியாமல் விழித்த தந்தை பதறிப்போய் சொன்னார்.

"நோ.. பிராப்ளம் டாட்... ஐம் ஆல் ரைட்... வாவ்.. ப்யூட்டி ஃபுல் கிப்ட்... ராஜ்.. ஐ.. லைக் இட்... டார்லிங்... தாங்க்ஸ்... ஹிக்.. சாரி.. விக்கல்... ரொம்ப ரொம்ப தாங்க்ஸ்... ஸோ.. ஸ்வீட்... ராஜ்..." அந்த ஸ்ப்ரேயை உடம்பில்... கழுத்தில் தெளித்துக் கொண்டாள் வீணா...

"ஆ.. நல்ல வாசனை... ராஜ்.. இது விலை.. இரண்டா யிரம் இருக்கும்.. இல்லையா... எனக்கு.. காஸ்ட்லி ஐட்டம்... தான்... பிடிக்கும்... மலிவானதை.. தூக்கி போட்டுடுவேன்.. இல்லே.. டாட்..."

பெற்றவள் கையை பிசைய.. காமேசுரவனுக்கு அவ மானத்தில் முகம் சிவந்தது.

கடவுளே... வந்திருப்பவர்கள் முன்னே இப்படி மானத்தை வாங்குகிறாளே... காட்சிப் பொருளாகிப் போனாளே...

இவளை எப்படியாவது உள்ளே அழைத்துச் செல்ல வேண்டுமே...

யோசித்து நின்ற அதே நேரத்தில் வீணா நெளிந்து நடனமாடினாள்...

அங்கங்கே அரிப்பு... உடம்பை வளைத்து சொறிந்து கொண்டு "ஹி... ஹி... ராஜ் உடம்பில் கிச்சு.. கிச்சு.. மூட்டுவது போல இருக்கு... ஹி.. ஹி.. எனக்கு.. சிரிப்பா.. வர்ரது ராஜ்..."

"போதும் வீணா.. உனக்கு ஏதோ ஆகியிருக்கு... வா.. உன் அறைக்கு போகலாம்..." என்று அழைத்தார் காமேசுவரன்.



"ஊகூம்... வரமாட்டேன்... இன்னிக்கு.. என் பர்த் டேப்பா.. ஜாலியா இருப்பேன்..." என்று மறுத்த மகளை வலுக்கட்டாயமாக இழுத்துச் சென்றார் தந்தை...

"ராஜ்... அப்பா.. விடுங்கப்பா... ராஜ்.. போகாதீங்க..." அலறியவாறு சென்றாள் வீணா...

இத்தனையையும் பார்த்துக் கொண்டு நின்றிருந்த ஊர்மிளா.. விக்கித்து நின்றிருந்த அஸ்வத்தைப் பார்த்து கண்ணடித்தாள்.

பொங்கி வந்த சிரிப்பை அடக்க அவளுக்கு மிகவும் சிரமமாக இருந்தது.

வீட்டினுள் நுழைந்ததும் இனியும் அடக்க முடியாமல் பகபகவென்று சிரித்த ஊர்மிளாவை வியப்புடன் பார்த் தான் ராஜ்குமார்.

வீணா பேசியதுபோல.. தள்ளாடி நடந்து வந்ததுபோல செய்து காட்டிவிட்டு... இன்னும் பலமாய் சிரித்தாள்.

"இது உன்னோட வேலை.. அப்படித்தானே..." சந்தேகத் துடன் கேட்டான் அவன்.

"பிராமிஸ் ராஜ்... எனக்கு எதுவுமே தெரியாது..." அப்பாவியாய் முகத்தை வைத்துக்கொண்டு சொன்ன ஊர்மிளாவை அவன் நம்பவில்லை.

"பொய்.. ஏதோ செய்திருக்கிறாய்.. ஒத்துக்கொள் ஊர்மிளா..."

"சரி.. நான்தான் செய்தேன். போதுமா..."

"திஸ் இஸ் டூ மச்... ஊர்மிளா..."

"இல்லே ராஜ்... த்ரீ மச்" விஷமத்துடன் சிரித்த அவளைப் பார்த்து 'ஷட் அப்' என்று கத்தினான் அவன்.

"ஏன் இப்படி கத்தறீங்க ராஜ்.. உங்களுக்கு வயசாச்சுன்னு நல்லா புரிகிறது...உண்மை என்னன்னு சொல்கிறேன்..

கேட்டுவிட்டு அப்புறம் என்னைத் திட்டுங்கள்...'' என்றவள்...

வீணாவின் திட்டத்தையும்.. அஸ்வத் அதைத் தன்னிடம் சொன்னதையும் சொன்னாள்.

''இப்போ சொல்லுங்கள் ராஜ்... அந்த மாதிரி ஏதாவது நடந்திருந்தால் என்ன ஆகியிருக்கும்... உங்களுக்கும் பாட்டிக்கும் பெரிய தலைகுனிவாக இருந்திருக்கும்.. அந்த அஸ்வத் என் ஃப்ரெண்ட் ஆனதால் வீணாவோட முயற்சியை தடுக்க முடிந்தது. இதுவே எனக்குத் தெரியாமல் போயிருந் தால்... நானும் அசிங்கமாய் எல்லோர் முன்னே ஆடியிருப் பேன்... இந்த மாதிரி ஒரு விபரீத செயலை செய்ய நினைத்த உங்க அன்பு வீணாவுக்கு ஒரு பாடம் கற்பிக்க வேண் டாமா... அதான் அவள் செய்ய நினைத்ததை அவளுக்கே திருப்பிவிட்டேன். ஆனால்... அந்த பானத்தை கொடுக்க வேண்டும் என்று நான் நினைக்கவில்லை.. அது தற்செயல் தான் ராஜ்... அதுவும் அவளுக்கு வேண்டியது தான்.''

''ஆக.. நான் வாங்கிய அந்த ஸ்ப்ரேயில்தான் என்னவோ இருக்கு...'' என்று அவன் கேட்க...

நமுட்டு சிரிப்புடன் சொன்னாள் அவள்...

''சிலருக்கு சில 'செண்ட்' ரகம் ஒத்துக்கொள்ளாது ராஜ்... ஒருவேளை... வீணாவுக்கும் அப்படித்தானோ என்னவோ... யாருக்குத் தெரியும்...''

அவளையே உற்றுப்பார்த்தான் ராஜ்குமார்...

அவள் அவனது கண்களைத் தவிர்த்து.. தன் விழிகளை அங்கும் இங்கும் அலையவிட....

அவனுக்கு புரிந்துவிட்டது... இவளது திரிசமன் தான் என்று.. ஏனோ அவளைக் கண்டிக்க மனம் வரவில்லை... மௌனமாக இருந்துவிட்டான்.





# 20

ராஜ்குமாரின் உள்ளத்தில் பெரிய போராட்டமே நடந்து கொண்டிருந்தது.

நாளுக்கு நாள் வளர்ந்து கொண்டிருக்கும் காதலை அழிக்கவும் முடியாமல்...

சோமனாதரின் நம்பிக்கைக்கு துரோகம் செய்யவும் மனம் வராமல்...

இருதலை கொள்ளி எறும்பாய் தத்தளித்தான்.

காதலுக்கும்.. மனசாட்சிக்கும் நடந்த போராட்டத்தில் மனசாட்சி தான் வென்றது...

ஊர்மிளாவை மறக்க ஒரே வழி.. ஊர்மிளாவை அனுப்பி விடுவதுதான்..

கண்பார்வையிலிருந்து அவள் தூர போய் விட்டால்... மெல்ல மெல்ல அவளை மறந்து விடலாம் தான்...

உன்னால் அது முடியுமா என்று இதயம் கேள்வி எழுப்ப.. உள்ளுக்குள் முனகினான் அவன்...

ஊர்மிளா வரும் வரை வீணாவைத்தானே துணையாய் நினைத்தது... அவளை மணந்தால்...

ஊர்மிளா நினைவிலிருந்து மறைந்து விடுவாள்.. பலஹீன மாய் எண்ணியது நெஞ்சம்...

அந்த எண்ணத்தில் துளியளவும் உறுதி இல்லைதான்.

ஊர்மிளாவின் பிரிவுக்குப் பின் உள்ளம் மரத்துவிடும்... அப்புறம் யாரை மணந்தால் என்ன...

வீணா ஒன்றும் தகுதியில்லாதவள் இல்லை...

பணிவும் அடக்கமும் கொண்டவள்தான்.... பெண்களுக்கு வேண்டிய இரக்கமும் அவளிடம் இருக்கிறது...

போதும்.. ஏதோ ஊர்மிளாவின் மீதிருந்த வெறுப்பால் தப்பு செய்தாள் என்பதால் அவளை முழுவதும் குற்றம் சொல்ல முடியாது...

குடும்பப் பெண்ணிற்கு தேவையானது மென்மையும்... பதவிசும்... அம்மாவும் அதைத்தான் விரும்புவார்கள்... அது வீணாவிடம் இருக்கிறது... அம்மாவுக்கு ஏற்ற மருமகளாய் இந்த வீட்டில் இருப்பாள்... அது போதும்... மெல்ல மெல்ல எல்லாமே மாறி... பழைய வாழ்க்கைக்கு திரும்பிவிடும்...

பழைய வாழ்க்கை! ஊர்மிளா வருவதற்கு முன் இருந்த வாழ்க்கை...

நினைக்கவே சூனியமாகத் தெரிந்தது... ஆனால்.. வேறு வழி இல்லையே...

எங்கேயோ வெறித்தவாறு அமர்ந்திருந்தவனின் முன் சொடக்கு போட்டு கவனத்தை ஈர்த்தாள் ஊர்மிளா.

''எந்த கோட்டையைப் பிடிக்க இந்த பலமான யோசனை...'' என்று வினவினாள் அவள்...

அவன் வாங்கித் தந்த சுடிதாரில் அன்றலர்ந்த பூவாய் நின்றிருந்த அவளை... இழுத்து நெஞ்சில் சாய்த்துக் கொள்ள துடித்தது நெஞ்சம்...

கொஞ்ச நேரத்திற்கு முன்னால் செய்து கொண்ட உறுதி நீர்த்துப் போனது..



இப்படியே போனால் தாங்க முடியாது.. பெருமூச்சு விட்டான்.

''ஓ.. காதல் கோட்டையாக்கும்... அந்த கோட்டையில் காத்திருக்கும் ராணி வீணாவா...'' கிண்டலாய் கேட்டாள் அவள்...

''ஆமாம்... அவள்தான்... அவளைத்தானே நான் மணக்க இருப்பது.. அவள் நினைவுதான் இப்போது..''

பச்சைப் பொய்தான்... ஆனால் சொல்லித்தான் ஆக வேண்டும்.. அவளுக்காக மட்டும் அல்ல... தன் மனதையும் சமனப்படுத்தத்தான்.

''விதியாரை விட்டது... ஓகே... இன்றைக்கு நாம் வீணாவின் வீட்டுக்கு போகலாமா...''

''என்ன திடீர் என்று....'' ஐயத்துடன் கேட்டான் அவன்.

''பாவம்.. நீங்களும் அவளது நினைவில் உருகுகிறீர்கள்.. தவிர.. நானும் அவர்களிடம் சொல்லிக் கொள்ள வேண்டும்.. திடீர் என்று தாத்தாவிடம் இருந்து அழைப்பு வரலாம் இல்லையா... அதான்.''

ஊர்மிளா புறப்படத் தயாராகி விட்டாள்!

அவள் போனதும்... வீடே இருண்டு விடும்... வீடு மட்டுமா.. வாழ்க்கையும் தான்...

எந்த ஊர்மிளாவின் வரவை வெறுத்தானோ... அதே ஊர்மிளா புறப்படுவதை இப்போது விரும்பவில்லை.. என்றால்...

மனம் தான் எத்தனை சீக்கிரத்தில் மறந்துவிடுகிறது... மாறியும் விடுகிறது...

''என்ன ராஜ்... போகலாமா...'' என்றாள் ஊர்மிளா...

''ம்ம்... போகலாம்... வா...''

''குதிரை மீதா...'' ஆவலுடன் கேட்டாள் அவள்.

''நோ.. ஜீப்... புறப்படு...''

குதித்துக் கொண்டு கிளம்பினாள் அவள்.

ராஜ்குமாரின் திடீர் வருகையைக் கண்டு வீணாவிற்கு ஆச்சர்யம்...

ஆனால் ஒட்டுண்ணியாய் ஊர்மிளாவும் வந்திருப்பது கண்டு கடுப்பு ஏற்பட்டது.

இவள் எதற்கு ஒட்டிக் கொண்டு வருகிறாள்...

அன்றைக்கு மட்டும் சரியாக நடந்திருந்தால் இத்தனை நேரம் மும்பாயில் இருந்திருப்பாள்.

எல்லாமே எசகு பிசகாகி விட்டது...

''வாங்க ராஜ்... எங்கே வராமல் இருந்து விடுவீர்களோ என்று நினைத்தேன்...'' என்று சொன்னாள் அவள்...

''ஏன்...''

''என் பர்த்டே பார்ட்டியில் எனக்கு என்ன ஆச்சுன்னு தெரியல்லே ராஜ்.. இப்படி நடக்கும் என்று நான் நினைத்தும் பார்க்கவில்லை...''

''ஆமாம் வீணா ஆன்ட்டி... நாம் நினைக்கிறது ஒன்று... ஆனால் நடக்கிறது வேறொன்று... என்ன செய்வது...'' என்று சொன்ன ஊர்மிளாவை உறுத்து நோக்கினாள்.

அவளோ உதட்டைக் கடித்தவாறு சுவற்றில் தொங்கிய தஞ்சாவூர் சித்திரத்தை மும்முரமாய் ரசித்துக் கொண்டிருந் தாள்...

வீணாவின் கவனத்தை தன்பக்கம் திருப்பினான் ராஜ் குமார்...



''வீணா... ஊர்மிளா இங்கு வரவேண்டும் என்றாள் அதுதான் வந்தோம்...''

''அட.. அதென்ன ஊர்மிளா... திடீர் கரிசனம்...'' பாதி குத்தலாய் அவள் கேட்க...

''ஊருக்கு புறப்பட வேண்டிவரும்.. தாத்தா எந்த நேரத்திலும் அழைக்கலாம்.. அதுதான் சொல்லிக் கொள்ளலாம் என்று வந்தேன்...'' என்றாள் அவள்.

வீணாவிற்கு நிம்மதியில் பெருமூச்சு விட்டாள்... நல்ல வேளை... புறப்படப் போகிறாள்... இனி ராஜ் முழுக்க என் னுடன் தான்...

ஆகா.. இது தெரிந்திருந்தால்... பேசாதிருந்திருப்பேனே. எதையோ செய்யப் போய் எதுவோ ஆகிவிட்டதே.. நான் விட்ட அம்பு.... என்னையே தாக்கி விட்டது தான் கொடுமை...

அப்பாவும் அம்மாவும் பாவம்... கூனிக் குறுகிப் போய் விட் டார்கள்... சும்மா இருந்த சங்கை ஊதிக் கெடுத்த கதைதான்...

இனிமேல் எந்தக் கவலையும் இல்லை... அந்த சந்தோஷத் தில் துள்ளாத குறைதான்...

''குடிக்க ஏதாவது கொண்டு வருகிறேன்'' என்று சென் றாள் வீணா.

சில நிமிடங்களுக்குப் பின் ''ராஜ்... நானும் போய் வீணா வுக்கு உதவுகிறேன்...'' என்று.. அவனது பதிலுக்கும் காத் திராமல் விரைந்தாள்.

வியப்பில் புருவங்கள் ஏற... அவள் செல்வதைப் பார்த் தான் ராஜ்.

இவள் போய் என்ன உதவப் போகிறாள்...

பத்து நிமிடங்களில் அவள் திரும்பி வந்ததும்.. நல்ல பிள்ளையாய் அமர்ந்து கொண்டதையும் பார்த்து இன்னும் வியப்பு...

வீணா இடையசைந்து நடந்து வந்து.. புன் சிரிப்புடன் இருவருக்கும் சர்பத்தை தந்தாள்...

அதை பருகியவாறு வீணாவிடம் அவன் பேசினாலும்... அவனது கவனம் முழுவதும் ஊர்மிளா பக்கம் தான். அவள் இயல்பாக இல்லை போல தெரிந்தது... ஏதோ ஒரு தவிப்பில் இருப்பது போல தோன்றியது.. ஒரு வேளை.. பிரமையோ...

அவளது மனதில் ஏதாவது திட்டம் இருக்குமோ... கண்கள் ஓரிடத்தில் நிலைக்காமல் அலை பாய... நகத்தைக் கடித்து துப்புகிறாள் என்றால்.. ஏதோ இருக்கிறது என்றுதான் அர்த்தம்...

''போகலாமா... ராஜ்'' என்று அவள் கேட்டதும்... தன் உள்ளுணர்வு கூறியது சரிதான் என்றேப் பட்டது. ஏதோ... வரவேண்டும் என்று வந்தாள்.. எதுவும் சரியாகப்பேச வில்லை.. புறப்பட்டு விட்டாள்... அவள் மனதில் என்ன தான் இருக்கிறது என்று தெரியவில்லையே...

ஜீப்பில் ஏறி அமர்ந்து வீணாவிற்கு கையசைத்து 'டாடா' சொல்லிவிட்டு... கொஞ்ச தூரம் சென்றதும் ''ராஜ்... நிறுத்துங் களேன்'' என்று கூறினாள். வண்டியை நிறுத்திவிட்டு.. கேள்விக் குறியுடன் அவளை பார்த்தான்...

''என் ஹாண்ட் பேக்கை அங்கேயே வைத்துவிட்டு வந்துவிட்டேன்...'' என்றாள் அவள்.

ஜீப்பை திருப்ப முயன்றான் அவன்..

''கொஞ்ச தூரம்தானே ராஜ்... வாங்கள்.. நடந்தே போகலாம்... 'எக்ஸர்ஸைஸ்' உடம்புக்கும் நல்லது.''

அவள் கொஞ்சலாய் சொல்ல...

''என்ன ஊர்மிளா.. இன்றைக்கு உன் பேச்சும் செய்கையும் வினோதமாய் இருக்கிறதே.....'' என்றான் ராஜ்குமார்.



''இல்லையே... எப்போதும் போலத்தான் இருக்கிறேன்... வாங்க ராஜ்... இரண்டு பேரும் ஜாலியாய் நடந்து போகலாம்.''

கரும்பு தின்ன கசக்குமா... ஊர்மிளாவுடன் கைக்கோர்த்துக் கொண்டு நடக்கும் சந்தர்ப்பத்தை இழக்க மனம் வரவில்லை.

அவளது பூங்கரத்தை தன் கரத்தினுள் அடக்கிக் கொண்டு நடந்தான்... இளங்காற்றின் ஊடே மனதைக் கவர்ந்தவ ளோடு ஜோடியாய் நடப்பதும் இன்பம்தான்...

ஒருவேளை.. வீணாவிற்கு பொறாமை ஊட்ட இப்படி செய்கிறாளோ...

எதுவானால் என்ன.. இப்படி இணைந்த கரங்களுடன் இணைப்பறவைகளாய் செல்வதும் சுகமான அனுபவம்தான்.

அவளது மென்மையான.. பட்டு போன்ற உள்ளங்கையின் ஸ்பரிஸம் அவனுள் இன்ப அதிர்வுகளை உதிர்த்தது.. ஒவ் வொரு அணுவிலும் மின்னோட்டம்... வீணாவின் வீட்டை நெருங்கும்போது உள்ளே கூச்சலும் குழப்பமும்...

உள்ளே போகலாமா.. வேண்டாமா என்று தயங்கி யோசித்துக் கொண்டிருந்தபோது.. 'வீல்' என்ற அலறல் சத்தம் கேட்டது.

தொடர்ந்து வீணாவின் குரல்.. காட்டுக்கத்தலாய்... வீடே அதிரும்படி ஒலித்தது.

''திருட்டு நாயே.. எங்கே வைத்திருக்கிறாய்.. சொல்றேயா.. இல்லே.. போலீஸைக் கூப்பிடட்டுமா...''

ஊர்மிளா அவனது கரத்தை அழுத்தினாள்... 'இருங்கள் பார்க்கலாம்' என்ற அர்த்தத்தில்...

''அய்யோ.. வேணாம்க்கா. நான் சத்தியமா எடுக்கலே...'' வேலைக்கார சிறுமியின் குரல்.. கெஞ்சியது.

''பளீர்'' என்று அறையும் சத்தம்... அதைத் தொடர்ந்து 'தடால்' ஓசை... அந்த சிறுமி தான் விழுந்திருக்க வேண்டும்.

ஊர்மிளா ராஜ்குமாரைப் பார்த்தாள். அவள் எதிர்பார்த்தாற்போல அவன் முகத்தில் திகைப்பும்... அதிர்ச்சியும்...

வீணாவா... பெண்ணிற்கு உதாரணம் என்று நினைத்த வீணாவா இப்படி.... இரக்கமும்.. அன்பும் கொண்டவள் என்று நினைத்தவளா...

அவனால் நம்ப முடியவில்லை...

அன்று ஊர்மிளாவை விரட்டியடிக்க சதி செய்தாள் என்பதை ஏற்க மறுத்ததே மனம்... ஊர்மிளாவின் கற்பனையாகக் கூட இருக்கலாம் என்று எண்ணினேனே...

எல்லாமே பொய்யானதே...

இந்த அளவு கொடுசூரியா வீணா...

அவனது அதிர்ச்சியைப் பார்த்துவிட்டு நமுட்டுச் சிரிப்பை உதிர்த்தாள் ஊர்மிளா...

ஆக.. வந்த காரியம் வெற்றி... சபாஷ் ஊர்மிளா.. நினைத்ததை சாதித்து விட்டாய்.. இல்லாத காலரைத் தூக்கி விட்டுக் கொண்டாள்.

முகத்தை அப்பாவியாய் வைத்துக் கொண்டு... 'அய்யோ... பாவம்...' என்றாள்.

யாரைச் சொல்கிறாள் இவள்...

விழித்தான் ராஜ்குமார்.

மறுபடியும் வீணாவின் குரல்.. அமைதியைக் கிழித்துக் கொண்டு கிறீச்சிட்டது.

''இப்படியெல்லாம் கேட்டால் நீ சொல்லமாட்டாய்... அனாதைக் கழுதையே.. இரு.. வர்ரேன்...''

அந்த சிறுமி விசும்பும் சத்தம்.. இரண்டு நிமிடங்கள் கழித்து.. வீணாவின் குரல்.. கர்ண கொடூரமாய்...



''இதோ பார்.. ஒரே இழுப்பு தான்.. சூடு போட்டு விடுவேன்... எங்கே என் மோதிரம்.. சொல்லடி...''

''அய்யோ... என்னை விட்டுடுங்க... நான் சத்தியமா அதை எடுக்கல்லே...''

அந்த நேரத்தில் தான் உள்ளே ஓடினாள் ஊர்மிளா. அவளைத் தொடர்ந்து சென்ற ராஜ்குமார் வீணாவின் தோற்றத்தைப் பார்த்து அதிர்ச்சியடைந்தான்.

கோபத்தில் கண்கள் சிவந்திருந்தன... முகத்தில் சீற்றம் கொப்பளித்தது... முகம் விகாரமாய் மாறி.. உதடுகள் கோணிக் கொண்டு.. நாசி விடைத்து... பத்ரகாளி தோற்றத்தில் நின்றிருக்கும் இவள்.. வீணாவா...

பெண்ணின் இலக்கணம்... மங்கையர் திலகம் என்றெல்லாம் நினைத்திருந்த வீணாவா...

அதிராத நடை.... இதழ்கள் பிரியாத சிரிப்பு.. மென்மையான குரல்.. இனிமையான வார்த்தைகள்.. இவையெல்லாம் பார்த்து ஆகா.. இவளல்லவோ பெண் என்று எண்ணி ஏமாந்து போனேனே...

ஊர்மிளா சொன்னபோது கூட நம்ப மறுத்தேனே... மறுகினான் அவன்.

அவளது வேடம் கலைந்து போய்... சாயம் வெளுத்து... அவள் போட்டிருந்த முகத்திரை முழுவதுமாய் கிழிந்து.. இப்போது.. இதோ... வக்கிர முகத்துடன் நிற்கிறாள்.

பொறுமையின் பூஷணம்... அடக்கத்தின் இருப்பிடம்... என்று எண்ணியதுக்கு நேர் மாறாய்... அரக்கியின் வடிவாய்.. ஆணவப் பிசாசாய் அல்லவா இருக்கிறாள்.

இவளையா 'மனைவி'யாகத் தகுதியானவள் என்று நினைத்தேன்.. கடவுளே...

அந்த அதிர்ச்சியிலிருந்து அவனால் இன்னும் மீளவில்லை.

தூணுடன் சேர்த்துக் கட்டப்பட்டிருந்த அந்தச் சிறுமி பயத்தினாலும் அழுகையினாலும் துவண்டு போயிருந்தாள்.

ஊர்மிளாவையும்.. அவள் பின்னால் நின்ற ராஜ் குமாரையும் பார்த்து அப்படியே உறைந்து நின்றாள் வீணா.

அவள் முகம் வெளுத்துப் போனது... கோலுடன் கை நின்று விட்டது.

ஊர்மிளாதான் மௌனத்தைக் கலைத்தாள்.

''சாரி.. வீணா ஆன்ட்டி.... உங்க மோதிரம் தானே... இதோ என்னிடம் இருக்கிறது.. எடுத்துப் பார்த்து அழகா இருக்கேன்னு விரலில் போட்டுப் பார்த்தேன்... திருப்பி வைக்க மறந்து.. அப்படியே புறப்பட்டு விட்டேன்.. கொஞ்ச தூரம் போனதும் தான் நினைவுக்கு வந்தது... திருப்பிக் கொடுக்க வந்தேன்... இந்தாங்க...''

மோதிரத்தை நீட்டினாள் ஊர்மிளா.

அதை வாங்கும் நிலையில் அவள் இல்லையே...

திக்பிரமை பிடித்தவள் போல ராஜ்குமாரை வெறித்து பார்த்துக் கொண்டு நின்றாள்.

ஏன் எல்லாமே தனக்கு எதிராய் நடக்கிறது... இத்தனை நாள் கஷ்டப்பட்டு போட்டிருந்த வேடம்... ஒரு நிமிடத்தில் கலைந்து போனதே...

அதுவும் ராஜ்குமார் முன்னால்... சே.. வெட்கக்கேடு! தன்னையே நொந்து கொண்டாள்.

அடுத்த கணமே சமாளித்தவளாய்... தன் முகத்தில் சாந்தத்தை வரவழைத்துக் கொண்டு.. உதடுகளில் புன்னகையைத் தவழவிட்டு... குரலை தேனில் குழைத்தது போல இனிமையாக்கி பேசினாள்.



''பார்த்தீர்களா.. ராஜ் டியர்.. சிறுபிள்ளைகளின் துடுக்குத்தனத்திற்கு வரம்பே இல்லாமல் போய் விட்டது. பாருங்க.. யாரோ செய்த தவறுக்கு யாரையோ சந்தேகிக்க வேண்டி வந்தது...''

பின்பு... பணிப் பெண்ணின் கட்டுகளை அவிழ்த்து விட்டு ''போம்மா.. போய் வேலையை கவனி...'' என்று குழைவாய் சொன்னாள்.

அந்த சிறுமி அங்கே ஏன் இருக்கப்போகிறாள்... ஓட்டம் பிடித்தாள்.

ராஜ்குமார் இனியும் ஏமாறத் தயாராக இல்லை...

அவளது உண்மை சொரூபம் தெரிந்துவிட்டது... அவளது வேடமும் கலைந்து போனது...

நற்பண்புகள் தான் ஒரு பெண்ணின் அணிகலன்கள். அதுவே இல்லையென்றால்... சே! இவளையா மதித்தேன்.. என் தாய்க்கு மருமகளாக்க முடிவு செய்தேன்.

வீணாவின் மீது சொல்லவொண்ணா வெறுப்பு வந்தது.

எதுவும் பேசாமல்.. ''ஊர்மிளா.. வா.. போகலாம்'' என்று அவளது கையைப் பிடித்து நடந்தான் ராஜ்குமார்.

தன் விதியை நொந்தவளாய்.. தளர்ந்து போய் சோபாவில் விழுந்தாள் வீணா.

வீடு வந்து சேரும் வரை அவன் எதுவும் பேசவில்லை.

வீட்டிற்குள் நுழைந்ததும்.. ''என்னோடு வா.. உன்னிடம் பேச வேண்டி இருக்கிறது...'' என்றான்.

அவளிடம் கோபத்துடன் கேட்டான்.

''ஏன் அப்படி செய்தாய்.''

''எப்படி...'' ஒன்றும் தெரியாதவளைப் போலக் கேட்டாள் ஊர்மிளா...

''ப்ளான்'' பண்ணித்தான்... என்னை அங்கே அழைத்துப் போயிருக்கிறாய்.. இல்லே....''

''பரவாயில்லை... உங்களுக்கும் அது புரிந்துவிட்டதே'' என்றாள் கள்ளச் சிரிப்புடன்.

''சரி.. ஏன் செய்தாய்.. சொல்லு..''

''அதுவா.. வீணாவை பெண்குலத் திலகம்னு பெருமையா நினைச்சீங்க இல்லையா... உங்க கண் திரையைக் கொஞ்சம் விலக்கி நிஜத்தைப் பாருங்கன்னு உங்களுக்கு காட்டத்தான். நீங்க மணக்க விரும்பும் பெண் சீதையில்லை... ராட்சசி சூர்ப்பணகைன்னு உங்களுக்கு உணர்த்தத்தான். அன்றைக்கே செய்திருப்பேன்... வீணாவின் முகத்திரையைக் கிழித்து.. பாருங்க ராஜ்... இவள்தான் உண்மையான வீணான்னு காட்டியிருப்பேன். ஆனால் உங்களுக்கு நம்பிக்கை வந்திருக்காது.. அதான்.. இன்றைக்கு அவளை.. கையும் களவுமாய் பிடித்து.. இதுதான் அவளது லட்சணம்... இவளையா மணக்க விரும்புகிறீர்கள் என்று வெளிச்சம் போட்டு காட்டிட்டேன்...''

''என்ன இருந்தாலும்.. ஊர்மிளா... அந்த மோதிரத்தை நீ எடுத்திருக்கக் கூடாது தான்.. நீ செய்தது எனக்கு சுத்தமா பிடிக்கவில்லை...'' கண்டிக்கும் குரலில் சொன்னான் அவன்...

''சரி..தப்பு தான்... விடுங்கள் ராஜ்.. இப்ப.. உங்க வீணாவைப் பற்றி சொன்னதையெல்லாம் 'வாபஸ்' வாங்கிக் கொள்கிறீர்கள் தானே...'' சுட்டு விரலை ஆட்டியவாறு கேட்டாள் ஊர்மிளா.



வாய்க்கு வாய் 'உங்க வீணா' என்று அவள் சொல்வதை அவனால் ரசிக்க முடியவில்லை...

அதுவும் ஊர்மிளாவின் வாயால்...

''ஓகே.. அப்படியே செய்கிறேன்... போதுமா.''

''அதுமட்டும் இல்லை ராஜ்.. வீணாவுடன் உங்கள் திருமணம் வேண்டாமே... அவள் உங்களுக்கு ஏற்றவளும் இல்லை...''

தன்மீது பனிமழைக் கொட்டுவது போல உணர்ந்தான் அவன்...

ஊர்மிளாவிற்கு பொறாமையாக இருக்குமோ...

அடுத்த கணமே.. தான் எடுத்துக்கொண்ட உறுதி மொழி நினைவுக்கு வந்தது... வேண்டாம்.. இது கூடவே கூடாது.

அறிவு இடித்தாலும் மனதில் உறுதி இல்லையே...

அவனையும் மீறி வார்த்தைகள் துள்ளி வெளிவந்தன.

''சரி.. வேண்டாம்.. வீணா இல்லை என்றால் வேறு யார்.. நீயா...''

திடுக்கிட்டான்... என் மனதைக் காட்டிக் கொண்டுவிட்டேனே. என் உள்ளத்தில் அடைக்காத்ததை வெளியிட்டு விட்டேனே...

கொட்டிய வார்த்தைகளை அள்ளியெடுத்து வாய்க்குள் போட்டுக் கொள்ளவும் இயலாதுதான்... அவசரப்பட்டு விட்டேன். மனம் துடித்தது.

ஊர்மிளா விழித்தாள்... ராஜ்குமாருக்கு மனைவியா... தானா.. திகைப்புடன்.. அவன் சொன்னதை மெல்ல உள் வாங்கினாள்.. அதானே!

ஏன் கூடாது... வீணாவை வேண்டாம் என்று சொல்ல நான் யார்.. இருந்தும் சொன்னேன் என்றால் அது.. ராஜ் மீது இருக்கும் அன்பினாலா...

வெறும் அன்பு மட்டுமா...

இல்லை.. வீணாவைப் பார்த்தவுடன் வெறுத்ததற்கு காரணம் இருக்கிறதா.. இருக்கவேண்டும்...

ராஜ்குமாரின் அன்பு முழுக்க தனக்குதான்... தனக்கு மட்டுமே என்ற சுயநலம் தான் காரணம்... அப்படியென்றால்.. திருமணம் செய்து கொள்ளலாமே...

கலகலவென்று சிரித்தவள்.. அவனிடம் சொன்னாள்.

''நல்ல ஐடியா.. ராஜ்.. நான் உங்களை மணப்பதற்கு ரெடி.. நீங்க ரெடியா'' என்று கண்களில் மின்னல் அடிக்க அவள் சொல்லவும்...

அவனது முகத்தில் மாற்றம் வந்தது.

''நீ ரெடி என்றாலும்... நான் அதற்கு தயாராக இல்லை. என் முன் நீ குழந்தைதான்... உனக்கும் எனக்கும் வயதில் இடைவெளி அதிகம்... பேசாமல் ஊருக்குப் போய்... உன் தாத்தா பார்த்து வைத்திருக்கும் அந்த மனோஜை மணந்து கொள் ஊர்மிளா...'' இதயம் கனக்க வார்த்தைகள் வந்தன.

''நீங்க.. வீணாவையாக்கும்...''

மனதை கான்க்ரீட் ஆக்கிக்கொண்டு சொன்னான் ராஜ்குமார்... ''இதில் என்ன தப்பு... எனக்கு என்று நிச்சயிக்கப்பட்டவள் வீணா... அவளையே பண்ணிக் கொள்கிறேன்.. அதை மாற்ற முடியாது...''

அவனை ஒரு கணம் முறைத்துப் பார்த்துவிட்டு எதுவும் பேசாமல் திரும்பி நடந்தாள் ஊர்மிளா.





# 21

அன்றைக்கெல்லாம் ராஜ்குமாரின் உள்ளத்தில் குடைச்சல்...

ஊர்மிளாவின் முகம் அறைந்தாற்போல பேசிவிட்டேனோ. உள்ளூர நமைச்சல்...

இருக்கட்டும்... கசப்பு மருந்து தான் சீக்கிரம் வேலை செய்யும்.

அவள் சலனப்படாமல் ஊர் போய் சேரட்டும்... அவள் இன்னும் சிறுபிள்ளை... நல்லது.. கெட்டது தெரியாமல் வளர்ந்தவள்... இன்னும் மனமுதிர்ச்சி காணாதவள்...

அவள் புறப்பட்டு சென்று விட்டால்... எல்லாம் 'நார்மலா'கி விடும்... அவளும் மனோஜைப் பார்த்ததும் இங்கு நடந்ததையெல்லாம் மறந்துவிடுவாள்....

எல்லாம் பழைய நிலைக்கு வந்துவிடும்... எல்லாமே... ஆனால்.. நான்... மறுபடியும் பழைய நிலைக்கு திரும்ப இயலுமா... ஊர்மிளாவை மறந்து வாழமுடியுமா... இனியும் வீணாவுடன் வாழ்க்கை என்பது பகற்கனவு...

ஊர்மிளாவிடம் வீறாப்பாய் வீணாதான் மனைவி என்று பேசினாலும்... உண்மையில் அப்படி நினைக்கவும் மனம் கூசியது...

முதலில் வீணாவிடம் இந்தத் திருமணம் நடக்காது... இதில் தனக்கு விருப்பம் இல்லை என்பதை சொல்லிவிட வேண்டும்... இது ஊர்மிளாவிற்கு தெரியவும் கூடாது.

ஊர்மிளாவைப் பொறுத்தவரை வீணா என் வருங்கால மனைவி என்றே இருக்கட்டும்.

ப்ச்சு... ஊர்மிளா இல்லாத வாழ்க்கை வெறும் சூன்ய மாய் இருக்கும்.. நரகமாகத் தோன்றும்.. பாலைவனமாய் படும்... இருந்துவிட்டுப் போகட்டும்...

சோமனாதரிடம் இருந்து அவசரக் கடிதம் வந்தது...

ஊர்மிளாவை அனுப்பி வைக்கும்படி எழுதியிருந்தார். கூடவே அவளது வழிப்பயணத்திற்கு பணம்.. டிமாண்ட் டிராப்டாக வைத்திருந்தார்.

மனோஜ் வீட்டில் திருமணத்திற்கு அவசரப்படுத்துவதால் சீக்கிரமே நிச்சயதார்த்தத்தை முடித்துவிட்டு அடுத்த மாதமே திருமணத்தையும் நடத்தி விடலாம் என்ற எண்ணம் என்பதையும் குறிப்பிட்டு இருந்தார். இது எதிர்பார்த்தது தான்... இருந்தும் ஏனோ இதயத்தில் 'சுருக்' வலி. உள்ளுக் குள் சொல்லத் தெரியாத அவஸ்தை... தான் பொத்தி வைத்த பொக்கிஷத்தை இழக்கப் போகும் தவிப்பு... பட்டாம் பூச்சியாய் சுற்றிச் சுற்றி வந்தவள்... தன் குறும்புகளால் உள்ளத்தைக் கவர்ந்தவள்... தன் இனிய பண்புகளால் மனதை வசப்படுத்தியவள்... தன் கூட்டுக்கு பறந்து விடப் போகிறாள். இனி வரப்போவதில்லை... அவள் எங்கேயோ... தொலைவில்.. வெகு தொலைவில்.. எட்டாத நட்சத்திரம் போல... தொலை தூரத்துக்கு சென்று விடுவாள்... துக்கம் நெஞ்சை அழுத்தியது அவனுக்கு.

''ராஜ்...'' ஊர்மிளாவின் குரல் கேட்டுத் திரும்பினான்....

அவனது கண்களில் திகைப்பு.. ஊர்மிளாவா!

காஞ்சிப்பட்டுடுத்தி.. கஸ்தூரி பொட்டு வைத்து.. தேவதையென வந்து நின்றவள் ஊர்மிளாவேதான்!



கூந்தலைப் பின்னலாய் முடித்து.. தலை நிறைய பூச்சூடி... மங்களகரமாய் இருந்தவளை இழுத்து அணைத்து நெற்றியில் முத்தமிடத் துடித்தது நெஞ்சம்.

நெற்றியில் பொட்டும்... நீள் விழிகளில் தீட்டியிருந்த மையும் அவளது முகவசீகரத்தை இன்னும் அதிகப்படுத்திக் காட்டியது.

புடவையில் இன்னும் உயரமாகத் தெரிந்தாள்... கைகளில் புடவை நிறத்திற்கு பொருத்தமாய் கண்ணாடி வளையல்கள்... காதில் சின்ன ஜிமிக்கி!

ஆண்பிள்ளை போல உடையணிந்து சுற்றிய ஊர்மிளா வுக்கும்.. இவளுக்கும் எத்தனை வித்தியாசம்...

அழகு தேவதையாய் நிற்பவளைப் பார்த்து விட்டுச் சொக்கி நின்றான் ராஜ்குமார்...

''அழகாய் இருக்கிறேனா... ராஜ்'' கிள்ளை மொழியில் அவள் கேட்கவும்...

''ரொம்ப... ரொம்ப அழகாய்'' என்றான் அவன்....

அவளது வதனத்தை விட்டு கண்களை விலக்கவும் முடியாமல் தடுமாறினான்.

''இப்போ... எப்படித் தெரிகிறேன் ராஜ்'' விழிகள் விரிய வினவினாள் அவள்.

''வளர்ந்த பெண்ணாய்... ''கல்யாணத்துக்கு நான் தயார்'' என்பது போல தெரிகிறாய்...''

''அப்போ.. உங்களுக்கு ஏற்ற ஜோடி என்கிறீர்கள் இல்லையா...'' தலையை சாய்த்துக் கேட்டாள் ஊர்மிளா.

வரட்சியாய் சிரித்தான் ராஜ்குமார்.

"கல்யாணமா என்றதும்... ஆமாம்...நீதான் மாப்பிள்ளை என்பது போல இருக்கிறது உன்பேச்சு... நான் சொன்ன அர்த்தம் வேறே.. நீ கல்யாணத்திற்கு தயாராகிவிட்டாய் என்று குறிப்பிட்டது இதோ இந்த கடிதத்தில் இருக்கும் விஷயத்திற்காகத்தான்... படித்துபார்... புரியும்..."

சோமனாதரின் கடிதத்தைக் கொடுத்தான் அவன்.

அந்தக் கடிதத்தைப் படித்ததும் அவளது முகம் மாறியது.

"நோ.. இது நடக்கவே நடக்காது.. தாத்தாவிற்கு நானே சொல்லிவிடுகிறேன்... ப்ளீஸ் ராஜ்.. நான் உங்களோடு தான் இருப்பேன்... உங்களை விட்டுப் போகவே மாட்டேன்... இங்கேயே இருந்து விடுகிறேனே..." கண்ணீர் மல்க அவள் மன்றாடிய போது அவனாள் தாளமுடியவில்லை...

அவளை இழுத்து அணைத்துக் கொண்டு... அவளது கண்ணீரைத் துடைத்துவிட்டு... 'அழாதே.. கண்ணம்மா.. நான் இருக்கிறேன்' என்று சொல்ல வேண்டும் என்று ஒவ் வொரு அணுவும் துடித்தது...

ஆனால் அது முடியாதே... இதோ... பெரியவர் கடிதமே போட்டுவிட்டார்.. அவரது நம்பிக்கைக்கு பங்கம்வராமல் ஊர்மிளாவை பத்திரமாய் அனுப்பி வைக்க வேண்டும்...

அந்தத் தீர்மானத்தில்.. மனதை இரும்பாக்கிக் கொண்டு பேசினான்.

"எத்தனை நாட்கள் இங்கு இருக்க முடியும்... என்றைக் காவது ஒருநாள்... நீ திருமணமாகி உன் கணவன் வீட்டுக்குப் போகத்தானே வேண்டும்..." தொண்டை ஏன் அடைக் கிறது.. வார்த்தைகளில் ஏன் குளறல்... என் ஊர்மிளா இன்னொருவனுக்கு மனைவி என்பதை சகிக்க முடி யாமலா..

Uploaded by Naghu



"இல்லை ராஜ்.. வருடம் முழுவதும்.. வாழ்க்கை முழுக்க உங்களுடனே இருந்து விடுகிறேன். உங்க மனைவியாய்.. என்னைப் புரிந்து கொள்ளுங்களேன்... ராஜ்.. ஐ லவ் யூ... ஐ லவ் யூ வெரி மச் ராஜ்..." கெஞ்சினாள் ஊர்மிளா...

தேன் மழையில் இதயம் நனைந்தாலும்...

காரமாய் வார்த்தைகளைக் கொட்டினான் அவன்.

"புடவைக் கட்டியவுடன் பெரிய மனுஷி என்ற நினைப்போ உனக்கு.. என்மீது உனக்கு காதலும் இல்லை.. மண்ணும் இல்லை.. வெறும் அன்புதான்.. போக போக சரியாகிவிடும்..."

அவளது காதலை ஏற்க முடியாத நிலையில் இருக்கிறோமே என்று குமைந்தவனாய் அவன் சொன்னான்.

என்ன செய்வது... சோமனாதரின் கணிப்பில்... உயர்ந்த பீடத்தில் இருக்கும் தான்... அந்த நிலையிலிருந்து கீழிறங்கி விடக் கூடாது.

"ச்சீ.. நீ இவ்வளவுதானா..."என்று அவர் இழிவாக எண்ணி விடக்கூடாது.

சோமனாதர் தன் பேத்திக்காக பார்த்து வைத்திருக்கும் மாப்பிள்ளை மனோஜ்... அவரின் ஆசைப்படி நடப்பது தான் உத்தமம்.

ஊர்மிளா கலங்கினாலும் சரி.. கெட்டி மனதுடன் அவளை ஊருக்கு அனுப்பியாக வேண்டும்.

ஊர்மிளாவின் குரல் அவனது நினைவோட்டத்தை இழுத்து நிறுத்தியது.

"இப்போது புரிகிறது ராஜ்.. வீணாவைப் பற்றி எல்லாம் தெரிந்திருந்தும் இன்னும் அவளைக் காதலிக்கிறீர்கள்...

இல்லையா.. ஆக... கண்ணிருந்தும் குருடனாய் இருக்கத் தான் உங்களுக்கு ஆசை... அப்படித்தானே!''

அவள் அப்படியே நினைப்பதுதான் மேல் என்று எண்ணியவன்.. அந்தக் கூற்றை மறுக்காமல் சொன்னான்.

''ஆமாம்... என்னால் வீணாவை மறக்க முடியவில்லை. நீ இப்போது வந்தவள்.. உனக்காக அவளைத் தியாகம் பண்ண முடியாது.. உனக்குத்தான் உன் தாத்தா பார்த்து வைத்திருக்கும் மனோஜ் இருக்கிறானே... போ.. போய் அவனை மணந்து கொண்டு சந்தோஷமாக இரு.. உனக்கு என் வாழ்த்துக்களை இப்போதே தெரிவித்துக் கொள் கிறேன்...''

இதயத்தைப் பாறையாக்கிக் கொண்டு வார்த்தைகளை விஷ ஊசிகளாக்கி அவள் மீது எய்தினான்.

அவளால் பேசமுடியவில்லை.... அவனையே வெறித்து நின்றாள்.

அவளது மார்பு மேலும் கீழுமாய் விம்முவதிலிருந்து.. தன் சினத்தை அடக்கப் போராடுகிறாள் என்று தெரிந்தது.

இதழ்கள்.. காற்றில் துடிக்கும் ரோஜாவைப் போல நடுங்கின. அழுகையை அடக்க முயற்சிக்கிறாள் போல...

பின்பு ஒவ்வொரு வார்த்தையாய்.. நிதானமாய் சொன் னாள்.

''அப்படியே நடக்கட்டும்.. நீங்கள் வீணாவை மணந்து நிம்மதியாக இருங்கள்... நான் மனோஜை மணந்து கொள்கிறேன்... ஆனால் நான் உங்களை வாழ்த்தப்போவ தில்லை. ஏன் தெரியுமா.. பகலில் பார்த்த கிணற்றில் ராத்திரி போய் விழுகிற மாதிரி.. வீணாவைப் பற்றித் தெரிந்தும்... அவளைக் கட்டிக்க நினைக்கிறீர்களே... அதுக்குத்தான்...



அவளோட நீங்க சந்தோஷமா இருப்பீர்களா என்பதே சந்தேகம்... எதற்காக வாழ்த்தணும்...'' என்றவள்.. அங் கிருந்து புறப்பட்டாள்... கொஞ்ச தூரம் சென்றதும் நின்று.. திரும்பி அவனைப் பார்த்து சொன்னாள்.

''நாளை நான் புறப்படுகிறேன்... தாத்தாவிடம் சொல்லி விடுங்கள்...'' என்று சொல்லிவிட்டுச் செல்ல..

ஏதோ ஒன்று சட்டென்று தன்னிடம் இருந்து பிரிந்து சென்றதுபோல பிரமை... தன்னில் பாதியா.. தன் உயிரா...

தனக்குள் ஏதோ காலியாகிவிட்டதுபோல உணர்வு.. வெறும் கூடாய் நிற்பதுபோல இருந்தது அவனுக்கு. அப் படியே தலையைப் பிடித்துக் கொண்டு அமர்ந்தான் ராஜ் குமார்.

ஏர்போர்ட்டுக்கு சென்று ஊர்மிளாவை வழியனுப்ப ராஜ்குமார் போகவில்லை...

ஏன்.. அவள் கிளம்பும்போது அவன் வீட்டிலேயே இல்லை.

எங்கே கண் கலங்கி.. தன்னைக் காட்டிக் கொண்டு விடு வோமோ என்ற பயம்தான்.

ஊர்மிளாவும் தான்.. ராஜ்குமாரிடம் விடை பெற முடியாமல் தத்தளித்தாள்.

தன் கலக்கத்தை வெளிக்காட்டிக் கொள்ள தன்மானம் இடம் தரவில்லை.

அவனைப் பொறுத்தமட்டில் நான் சந்தோஷமாய் புறப்படுவதாய் இருக்க வேண்டும் என்று எண்ணினாள்.

பாட்டியிடமும்.. அஞ்சலையிடமும் விடை பெறும்போது தான் சங்கடப்பட்டாள்.

Uploaded by Naghu

கோகிலா ஊர்மிளாவை அரவணைத்து "அடுத்த தடவை வரும்போது புருஷனோடு ஜோடியா வரணும்" என்று சொல்ல...

அஞ்சலை இன்னும் ஒருபடி மேலே போய்...

"கையில் ஒரு பாப்பாவோடன்னு சொல்லுங்கம்மா" என்றாள்.

ஊர்மிளாவிற்கு அதைக் கேட்கவும் பிடிக்கவில்லை. முகத்தைத் திருப்பிக் கொண்டாள்.

"அட.. வெட்கத்தைப்பாரு" என்றாள் அஞ்சலை.

அவளையும் அறியாமல் கண்கள் ராஜ்குமாரைத் தேடின...

அதை உணர்ந்த கோகிலா... "ராஜ்குமார் வீணா வீட்டுக்கு போயிருக்கான் ஊர்மிளா... மேனேஜரிடம் சொல்லிவிட்டு போயிருக்கிறான்... ஏர்போர்ட்டுக்கு உன்னை அழைத்து செல்லும்படி..." என்றார்.

ஊர்மிளாவின் முகம் ஏமாற்றத்தால் வாடியது.

தன்னை வழியனுப்பவும் மனம் இல்லையா.. அந்த அளவில் என்மீது கோபமா... உள்ளூர வெம்பினாள் அவள்.

கிளம்பும் முன் பாட்டிக்கு கன்னத்தில் முத்தமிட்டு விட்டு "வரட்டுமா பாட்டி..." என்றதும் கோகிலா நெகிழ்ந்து போனார்... ஊர்மிளாவின் பிரிவு அவருக்கும் வேதனை தந்தது.

இத்தனை நாள் வீட்டில் மான்குட்டியாய் உற்சாகத்துடன் வளைய வந்த குழந்தை கிளம்பி போய்விட்டால் வீடு களையிழந்து விடுமே... வாழ்க்கையும் வெறுமை தான்...



ராஜ் வீணா வீடு.. வேலை என்று இருந்துவிடுவான். நான் இனி கந்தபுராணமே கதி என்று கிடப்பேன்... கலகலப்பும்.. சந்தோஷமும் இனி இல்லைதான்.. கலங்கிய கண்களைத் துடைத்துக் கொண்டார் கோகிலா.

படிகளை விட்டு இறங்கியதும் திரும்பி ஒரு தடவை அந்த வீட்டைப் பார்த்தாள் ஊர்மிளா.

ஜன்ம ஜன்மங்களாய் அந்த வீட்டில் வாழ்ந்தது போல ஏதோ ஒரு ஒட்டுதல்.. அந்த வீட்டுடன்..அந்த வீட்டிலுள்ளவர்களுடன்...

இப்போது அங்கிருந்து செல்வது தன் உயிரையே கழற்றி வைத்துவிட்டு செல்வது போல உணர்ந்தாள்.

"திரும்பவும் வரணும்மா..." ஜோசப் அவளது சூட்கேஸை எடுத்துக் கொண்டு சொன்னான்.

Uploaded by Naghu

மூன்றாவது மனிதர்.. இந்தப் பெரியவருக்கு இருக்கும் பாசமும் பற்றும் கூட ராஜ்குமாருக்கு இல்லாமல் போனதே... உள்ளம் கனத்ததால் உடம்பும் பளுவாய் தோன்றியது.. கால்கள் துவண்டன.

காரில் ஏறி அமர்ந்ததும்... கார் புறப்பட்டது. கையசைத்து விடைப் பெற்றுக் கொண்டாள்.

கார் கண்ணிலிருந்து மறையும் வரை அஞ்சலை கையசைத்துக் கொண்டிருந்தாள்.

ஒவ்வொரு இடமும் பழைய நினைவுகளை கிளறியது.. குதித்து திரிந்த இடம்... மழையில் நனைந்த இடம்.. வாண்டு நண்பர்களுடன் கொட்டம் அடித்த மைதானம்.. ராஜ் குமாரும் அவளும் குதிரை சவாரி செய்த வெட்டவெளி.. ஒவ்வொன்றாய் கண்ணில் பட.. மதகு திறந்துவிட்டதும் பொங்கி வரும் நீர்வெள்ளமாய் அழுகை வந்தது... கஷ்டப்பட்டு அதை அடக்கிக் கொண்டாள்.

'இனி ராஜ்குமாரை பார்க்கவே முடியாது' என்று நினைக்கும் போது.. ஏதோ இம்சை அவளை குடைந்தது.

கண்களை மூடிக்கொண்டாள்.

வரும்போது துள்ளிக்குதித்து வந்தவள்.. இப்போது துவண்டு போய் செல்கிறாள்... ஊருக்கு வந்தபோது பஞ்சாய் இருந்த உள்ளம்.. ஊருக்கு திரும்பும்போது கனப்பது ஏன்.. ராஜ்குமார் குடியேறி விட்டதாலா...

''சொட்''... முத்துக்களாய் நீர்த்துளிகள் மடியில் விழுந்த போது தான் அழுகிறோம் என்று தெரிந்தது.

உடனே அழுத்தமாய் கண்களைத் துடைத்துக் கொண்டாள். அழக்கூடாது.. எதற்கு அழ வேண்டும்...

கண்களை மூடிக் கொண்டு... காதுகளைப் பொத்திக் கொண்டு வீணா மந்திரத்தை ஓதிக்கொண்டிருப்பவருக்காக கண்ணீர் சிந்துவதும் வீண்...

நான் பழைய ஊர்மிளாவாக ஊருக்குச் செல்ல வேண்டும்... செல்வேன்...

மனதுக்குள் தீர்மானித்துக் கொண்டாள்.

கார் ஏர்போர்ட்டுக்குள் நுழைந்தது.

வீணாவிற்கு ஆனந்தமோ ஆனந்தம்...

சொல்லமுடியாத பரமானந்தம்!

ராஜ்குமார் தன்னைத் தேடி வந்துவிட்டார்... அது போதும்... ஆக... தன்மீது கோபமோ... வெறுப்போ இல்லை என்று தெரிந்துவிட்டது எல்லாம் அந்த ஊர்மிளாவினால் வந்த வினை.

பாவி.. போய்த் தொலைந்தாள்...

Uploaded by Naghu



இனி.. கவலை இல்லை... என்னையே சுற்றி வருவார்... மகிழ்ச்சியில் துள்ளாத குறையாய் வந்து ராஜ்குமாரின் கரம் பற்றி வரவேற்றாள் வீணா.

ஆனால்... அவன் வந்த காரணத்தை அறிந்ததும் காற்றுப் போன பலூனாய் உற்சாகம் எல்லாம் வடிந்து போனது அவளுக்கு.

''இந்த திருமணம் நடக்காது.. கல்யாணத்திற்கு அடிப்படையான அன்பு இருந்தால்தான் சேர்ந்து வாழமுடியும். இல்லறமும் சிறக்கும்... காதல் இல்லாத கல்யாணம்.. கண்ணில்லாத குருட்டு வாழ்க்கை மாதிரி.. அந்த வாழ்க்கை வேண்டவே வேண்டாம். வீணாவின் மீது தனக்கு காதல் வரவே இல்லை.. எனவே.. இந்த திருமணம் வேண்டாம்''

அவன் சொன்ன செய்தி இடியாய் அவள் தலையில் இறங்கியது.. வீணாவிற்கு மயக்கம் வருவது போல இருந்தது.

ஜக்கில் இருந்த நீரை வடித்து மளமளவென்று குடித்தாள்...

நாக்கு வறட்சி தீர்ந்தது நிஜம் ஆனால் உள்ளம் வரண்டு போனதே...

ராஜ்குமார் என்னைக் காதலிக்கவே இல்லை...

இந்த உண்மை சுட்டது.. தகித்தது... எரித்தது... தாளவும் முடியாமல் அவள் கேட்டு விட்டாள்.

''ஏன் ராஜ்... எதனால் இந்த திடீர்மாற்றம்.. சரி.. இத்தனை நாளும் இல்லாத சந்தேகம் இப்போ எப்படி வந்தது... எனக்குத் தெரியும் ராஜ்... என்னைப் பற்றி ஒரு தப்பான எண்ணம் வரக்காரணம்... ஊர்மிளா தான்.. அதான்

அன்றைக்கு அப்படி ஒரு நாடகம் ஆடினாள்.. ப்ளீஸ் ராஜ்.. அன்றைக்கு நான்.. நானாக இல்லை... என்னை நம்புங்கள்''

''இல்லை.. வீணா.. எனக்கே விருப்பம் இல்லை... நல்லவனாகப் பார்த்து திருமணம் செய்துகொண்டு அவனுடன் சந்தோஷமா வாழ்க்கை நடத்து...''

''அப்போ... நீங்க... ஊர்மிளாவைத் திருமணம் செய்து கொள்ளும் உத்தேசமாக்கும்.''

அவன் மௌனமாக இருந்தான்.. மௌனம் சம்மதத்தின் அர்த்தமாயிற்றே...

வீணாவின் நெஞ்சுக்குள் அக்னி கனன்றது. ஊர்மிளா வென்று விட்டாளே என்ற சினமும்... என்னை உதாசீனப் படுத்துகிறானே என்ற சீற்றமும் சேர்ந்து அவளை கொதிக்கச் செய்தது.

''ஊர்மிளா சின்னப்பாப்பா.. அவளுக்கு ஓடியாடவே சரியாக இருக்கும்.. அவளைப் பிடித்து இழுத்து வருவதிலேயே உங்க வாழ்நாள் கழியப் போகிறது... பாருங்கள்... அப்போது புரியும்... உங்களுக்கு ராஜ்... என்னோட அருமை..''

அவன் எதுவும் சொல்லாமல் புறப்பட்டதும்... என்ன செய்கிறோம் என்று உணராமல் அவனது சட்டையைப் பிடித்து உலுக்கினாள்.

''என்னை என்ன ஏமாளின்னு நினைத்தீர்களா... நினைக்கறப்போ ஆசையா வந்து பேசுவதற்கும்.. வேண்டாம் என்றால் 'ச்சீ' என்று ஒதுக்குவதற்கும்.. நான் உங்களை சும்மா விடமாட்டேன்.. உங்களை சந்தி சிரிக்க வைப்பேன்...'' என்று கத்தினாள்.

மெல்ல அவளது கரத்தை விலக்கினான் ராஜ்குமார் அவளைப் பார்த்து நிதானமாக சொன்னான்.



''வீணா.. ஒரு நாளும் உன்னிடம்நான் காதல்.. காதல் என்று உளறியதில்லை. உன்னைக் காதலித்தால்தானே சொல்லுவதற்கு... பணம்.. அந்தஸ்து.. பழக்கம்.. இந்தப் பொருத்தம் போதும் என்றுதான் இந்த திருமணத்திற்கு நான் ஒப்புக் கொண்டது... ஆனால்.. அது மட்டும் போதாது.. இருவருக்கும் இடையில் பரஸ்பரம் பிரியமும்.. மனப் பொருத்தமும் அவசியம்... அதுதான் தாம்பத்தியத்திற்கு அஸ்திவாரமும் கூட என்பதை இப்போது புரிந்து கொண்டேன். இங்கே அன்பே வரண்டு போயிருக்கிறது. என்னை மன்னித்து விடு.. வீணா... மறந்துவிடு.. வருகிறேன்...''

''ராஜ்... ப்ளீஸ்... நில்லுங்க ராஜ்...''

வீணாவின் அலறலைக் காதில் போட்டுக் கொள்ளாமல் அவன் வெளியேறினான்.

வெளியே வந்தபோது... சொல்ல முடியாத இதம் மனசுக்குள்... இதுநாள் வரை அழுத்தியிருந்த பாரம் 'சடக்' என்ற விலகினாற் போல.. ஒரு உணர்வு.

தன் வீட்டினுள் நுழைந்தபோது.. அங்கிருந்த அமைதி அவனை உறுத்தியது...

ஊர்மிளா இல்லை!

வீடு கலகலப்பின்றி வெறிச்சோடிக் கிடந்தது.

பாலை வனம் போல...

இனி.. இதுதான் வாழ்க்கை... இது தான் நிதர்சனம்.

உயிர் இல்லாத நடைப்பிணமாக தன் அறையை நோக்கி நடந்தான் அவன்.



Uploaded by Naghu



## 22

**ஊ**ர்மிளா மும்பாய் போய் ஒரு மாதம் ஆகிவிட்டது. அவள் வந்து சேர்ந்ததற்கு சோமநாதர் தகவல் அனுப்பி விட்டார். ஊர்மிளாவிடம் இருந்து எந்தத் தொடர்பும் இல்லை. கோபமாக இருக்கலாம் என்று நினைத்தான்.

ஒருவேளை.. மும்பாயின் பரபரப்பான சூழ்நிலையும்... மனோஜின் அண்மையும் அவளை மாற்றியிருக்கலாம் என்று கூடத்தோன்றியது...

எல்லாமே மறக்க வேண்டியதுதான்.. அதான் முடியவில்லையே...

நாளுக்குநாள்... விஷ ஜுரம்போல.. ஊர்மிளாவின் நினைவு அவனைக் காய்ந்தது.

ராஜ்குமாருக்கு வீட்டிற்கு வரவும் பிடிக்கவில்லை...

''பார்க்கும் இடம் எல்லாம் நந்தலாலா... உன் பச்சை நிறம் தோன்றுதடா நந்தாலா...'' என்று பாடியதுபோல... எங்கு திரும்பினாலும் ஊர்மிளா தெரிந்தாள்.

மாடியிலிருந்து புள்ளி மானாய் குதித்து வரும் ஊர்மிளா... டைனிங் டேபிள் முன் செல்லமாய் கெஞ்சும் ஊர்மிளா... பாட்டியின் கழுத்தை கட்டிக் கொண்டு ஊஞ்சலாடும் ஊர்மிளா... தோட்டத்தில் ஏணி வைத்து ஏறி.. இளநீரைப் பறிக்கும் ஊர்மிளா...

இப்படி எல்லாப்பக்கத்திலும் ஊர்மிளாதான்...

Uploaded by Naghu



அது மட்டுமா... ஏஞ்சலைப் பார்த்ததும் அவளின் நினைவு தான்.. குதிரை சவாரியும் அவனுக்கு சலித்துப்போனது.

அவனிடம் தெரிந்த மாற்றத்தை பெற்றவளும் கவனித்தார்...

ஏன் இப்படி வாட்டத்துடன் இருக்கிறான் பிள்ளை... உடம்பு கூட மெலிந்தாற்போல தெரிகிறதே... ஒரு வேலை அலைச்சலோ என்று நினைத்தாள்.

ஆனால்.. சில நாட்களிலே மகனின் வாட்டத்திற்கும் மெலிவிற்கும் காரணம் தெரிய வந்தது.. தெரிந்ததும் அதிர்ச்சி!

இரவு வெகு நேரம் கழித்து வந்த மகனை. காலை வெகு நேரமாகியும் அவன் எழுந்திருக்காததால்... அவனது அறைக்கு சென்று பார்த்தாள். நினைவின்றி அரற்றிக் கொண்டிருந்தான் ராஜ்குமார். ஜுரவேகத்தில் உடம்பு கொதித்ததைக் கண்டு பதைத்துப் போனாள் தாய்.

அதைவிட திகைப்பு... அவனது வாய் ஊர்மிளா... ஊர்மிளா என்று புலம்பியது தான்.

ஊர்மிளாவா... ஜுரத்தில் 'அம்மா.. அப்பா' என்றுதான் அரற்றுவார்கள்.. இவன் ஊர்மிளா என்கிறானே...

அப்படியென்றால் அவளை விரும்புகிறான் என்று அர்த்தமா... கடவுளே... இதற்காக அழுவதா.. இல்லை சிரிப்பதா என்று தெரியவில்லையே...

யாரோ ஒருவனுக்கு நிச்சயிக்கப்பட்டவளையா இவன் விரும்பவேண்டும் என்ற வருத்தம் வந்தது.

மகன் வீணாவை மணக்க இருக்கிறான் என்ற எண்ணத்தில் ஊர்மிளாவிடம் அவன் சகஜமாகப் பழகியதை சாதாரணமாக எடுத்துக்கொண்டார்... அது இந்த அளவுக்கு வரும் என்று நினைத்தும் பார்க்கவில்லை.

இப்போது என்ன செய்வது என்று தெரியாமல் விழித்தார். சோமனாதருக்கு விஷயத்தை சொல்லி.. நடக்க இருக்கும் திருமணத்தை நிறுத்த முடியுமா.. அது தவறாகப் படாதா...

அவரே பதினொரு வயது மூத்தவனுக்கு என் பேத்தியைக் கேட்கிறாயே.. இது நியாயமா என்று முகத்தில் அறைவது போல சொல்ல மாட்டார் என்பது என்ன நிச்சயம்.. தலைக்குள் வண்டு குடைவது போல இம்சை.. தலையில் கை வைத்துக் கொண்டு உட்கார்ந்துவிட்டார்.

மெல்ல அவனது காய்ச்சல் இறங்கியது.. காய்ச்சலில் அவன் பிதற்றியதைப் பற்றி மூச்சு விடவில்லை பெற்றவள்.

தன்னுடனே அந்த ரகசியம் இருந்துவிடட்டும் என்று முடிவு செய்தார்.

அவன் குணமாகி.. எழுந்து நடமாட ஆரம்பித்தபோது தான் ஊர்மிளாவின் திருமண அழைப்பிதழ் வந்து சேர்ந்தது...

இந்த வேதனையை எப்படி மகன் தாங்கப் போகிறோனோ... மனதளவில் சுருண்டு போனவன்.. இன்னும் இறுகி விடுவானே... ஈசுவரா... பெற்ற மனம் துடிதுடித்தது.

சோமனாதர் போன் செய்து.. திருமணத்திற்கு கண்டிப்பாய் வரவேண்டும் என்ற அன்புக்கட்டளையிட... என்ன சொல்வது என்று தெரியாமல் விழித்தார் கோகிலா.

ஒருவாறு சமாளித்துக் கொண்டு.. தன் பிள்ளை காய்ச்சல் கண்டு பலவீனமாய் இருப்பதால்.. திருமணத்திற்கு வர இயலாது என்று தெரிவித்து விட்டார்.

மணக்கோலத்தில் ஊர்மிளாவைப் பார்க்க சகிக்கமாட்டானே பிள்ளை... அதைவிட இங்கிருப்பதே மேல்...

தெய்வமே... நடைப்பிணமாய் உலவும் என் மகனை பழைய ராஜ்குமாராக மாற்று.. அவன் பழைய உற்சாகத்



துடன் வளையவரணும்.. நடந்ததெல்லாம் கனவாக நினைக்கும் பக்குவம் வந்துவிடணும்.. மனமுருக வேண்டினார் அந்த அன்னை.

திருமணம் இன்னும் ஒரே வாரத்தில்... அப்புறம் செல்வி ஊர்மிளா... திருமதியாகிவிடுவாள்... கடவுளின் சித்தம் அதுதான் என்றால்.. வேறு என்ன செய்ய முடியும்.. கண்ணீரைத் துடைத்துக் கொண்டார் கோகிலா... அன்று.. அதிசயமாய் ஊர்மிளாவிடம் இருந்து போன்.. "பாட்டி.. எப்படி இருக்கீங்க.. ராஜ் எப்படி இருக்கிறார்" என்று பாசக்குரலில் விசாரித்ததும்.. உடைந்து போனார் கோகிலா... மகனின் நிலையைக் கூறினார்.

எல்லாவற்றையும் கேட்டவள் "சரி.. பாட்டி... திருமணம் முடிந்ததும் வந்து பார்க்கிறேன்.. கவலைப்படாதீங்க.. எல்லாம் சரியாகிவிடும்.. கண்டிப்பா நான் வருவேன் பாட்டி..." என்று சொல்லிவிட்டு வைத்தாள்.

பாவம்.. சிறுபெண்.. அவள் என்ன செய்வாள்.. ஏதோ மனம் பொறுக்காமல் கொட்டிவிட்டேன்.. இதையெல்லாம் ராஜூவுக்கு சொல்லக் கூடாது.. ஊர்மிளா பேச்சே கூடாது.. தீர்மானித்துக் கொண்டார் அவர்.

நாட்கள் குதிரை வேகத்தில் பறந்தன. ஊர்மிளா மனோஜுக்கு மனைவியாகி பதினைந்து நாளாகி விட்டதா.. ஆம்...

இனி அவளை நினைப்பதும் தப்பு.. ஆனால் பாழாய் போன நெஞ்சம் கேட்கமாட்டேன்கிறதே.

திரும்ப திரும்ப அவளையே நினைத்து... அவளது பெயரையே அசைப்போட்டு.. அவளையே ஜபித்துக் கொண்டிருக்கிறதே..

இப்போது அவள் வேறொருவனுக்கு மனைவி என்ற உண்மை அவனை உலைக்களத்தில் போட்டமாதிரி தகிக்க வைத்தது...

சுனாமியாய் தன் வாழ்க்கையில் வந்தவள் போகும்போது என் இதயத்தையும் சுருட்டிக் கொண்டு போய்விட்டாளே...

அவளைச் சொல்லிக் குற்றமில்லை.. அவள் மீது எந்தத் தவறும் கிடையாது. எவ்வளவு கெஞ்சினாள்...

ஏற்றுக்கொள்ளுங்கள் என்று அடம்பிடித்தாளே... மறுத்து விட்டு இப்போது மறுகி என்ன பிரயோசனம் அவளை மறக்க வேண்டும்...

மறந்துவிடு... மனமே... அவளை மறந்துவிடு...

இயலாமையில் அருகில் இருந்த தூணை முஷ்டியால் குத்தினான்.

கழியும் ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு யுகமாகத் தெரிந்தது. எப்போதும் அவளையே நான் நினைத்துக் கொண்டிருப்பதுபோல... அவளும் என்னை நினைப்பாளா... இருக்காது.. புது வாழ்க்கையை ஆரம்பித்திருக்கும் அவளுக்கு இப்போது மனோஜ் மட்டுமே உலகம்... நிச்சயம் என்னை தன் நினைவிலிருந்து அழித்து விட்டிருப்பாள்...

மெல்ல மெல்ல ராஜ்குமார் என்ற பெயரும் மறந்து விடும்... இருக்கட்டும்.. எனக்கு அவளுடன் கழித்த கொஞ்ச காலம்... என் வாழ்க்கையின் வசந்தகாலம்.. அதை நினைத்துக் கொண்டு என் வாழ்நாளைக் கழித்துவிடுவேன்.

ஆகா.. அந்த நாளும் மீண்டும் வந்திடாதோ...

அந்த இன்பம்.. சந்தோஷம் திரும்பாதா...

என் ஊர்மிளா மறுபடியும் வரமாட்டாளா...

ஊர்மிளா.. என் ஊர்மிளா.. அன்பே!

அவள் பெயரே அவனுக்கு சுவாசக் காற்றாய் மாறிப் போனது!



மேலும் ஒரு மாதம் கழிந்தது.

திடீர் என்று சோமனாதரிடம் இருந்து செய்தி...

ஊர்மிளா தன் கணவனுடன் வருகிறாளாம்...

தன் கணவனை அனைவருக்கும் காட்ட வேண்டுமாம்...

''ஏர்போர்ட்டுக்கு போய் அவர்களை அழைத்து வர வேணுமேப்பா...'' எதுவும் நடக்காதது போல சொன்னார் கோகிலா.

''என்னால் அது முடியாதும்மா... யாரையாவது அனுப்புங்கள்'' என்று சொல்லிவிட்டு அகன்றான் மகன்.

ஊர்மிளா வரும் நாள் நெருங்க.. நெருங்க... நிலை கொள்ளாமல் அவன் தவிப்பது தெரிந்தது. நெருப்பு வளையத்தினுள் சிக்கிக் கொண்ட வாயில்லா ஜீவனைப் போல...

அன்றைக்கு அவள் வரும் நாள்...

அவள் மட்டுமா.. தாலிக்கட்டிய கணவனும் தான்..

அங்கும் இங்கும் நடை பழகினான் ராஜ்குமார்.

தன் உயிரில் கலந்த உயிரான ஊர்மிளா.. இன்னொருவனின் தாலியை சுமந்து கொண்டு.. அவனது கரம் பற்றி வருவதைப் பார்க்கப் பிடிக்காமல் வீட்டை விட்டு வெளியேறினான்.

''டெவில்'' மீது அமர்ந்து.. அதை விரட்ட.... எஜமானின் 'மூட்'டை உணர்ந்ததுபோல.. அது காற்றாய் பறந்தது. எஜமானின் எண்ணத்தை அறிந்தது போல 'பிக்னிக்' ஸ்பாட்டிற்கு வந்து சேர்ந்தது.

அதே மரத்தின் கீழ்.. கைகளை தலைக்குப் பின்னே கோர்த்த வாறு சாய்ந்து கொண்டு கண்களை மூடிக் கொண்டான்.

''இல்லே.. நான் அடித்தது பவுண்டரிதான்...'' ஊர்மிளாவின் குரல் காதில் ஒலிப்பது போல பிரமை...

இதமான காற்றும்.. வந்த களைப்பும் சேர்ந்து அவனை உறக்கத்தில் ஆழ்த்தியது...

உறக்கத்திலும் ஊர்மிளா வந்தாள்...

அழகான கனவு அது...

மரங்கள் அடர்ந்த சோலை அது.. அதனூடே நடந்து சென்று இருக்கிறான்... கண்கள் யாரையோ தேடி அலைகின்றன... யாரையோ என்ன.. அவனது உள்ளம் கவர்ந்த ஊர்மிளாவைத்தான்.

''ஊர்மிளா.. எங்கே இருக்கிறாய்...'' என்று கூவி அழைக்கிறான்.

பதில் இல்லை... மறுபடியும் அவள் பெயர் சொல்லி அழைக்க... ''ராஜ்.. இங்கே.. இதோ இங்கே தான் இருக்கிறேன்'' என்று குரல் மட்டுமே கேட்கிறது.

''ஊர்மிளா.. இந்தக் கண்ணாமூச்சி விளையாட்டு வேண்டாம்.. வா...'' என்று அவன் சொன்னதும்..

கலகலவென்று சிரித்தவாறு எதிரே நிற்கிறாள்...

''என்னைத் தேடினீர்களா.. நல்லா வேணும்...'' என்கிறாள்.

அவன் அவளையே பார்த்துக் கொண்டிருக்கிறான்... எங்கே மறைந்து விடுவாளோ என்ற பயம்...

ஆனால் அவள் மறையவும் இல்லை.. ஓடி ஒளியவும் இல்லை புன்சிரிப்புடன் தன் இரு கைகளை அவன் பக்கம் நீட்டுகிறாள்... ''என்னை ஏற்றுக் கொள்ளுங்கள்'' என்பது போல....

''ஊர்மிளா என் உயிரே...'' என்று அவளை நோக்கி விரைகிறான்.



ஆனால் தாழ்ந்த கிளை ஒன்று.. அவனது தலையை தட்ட.. கீழே விழுந்து விடுகிறான்... அதிர்ச்சியில் கண்களை மூடிக் கொண்டிருக்கும் அவனிடம் ஓடிவரும் ஊர்மிளா...

''ராஜ்... என்னைப் பாருங்களேன்...'' என்று கத்துகிறாள். அவள் அழைப்பது மெல்லியதாய் காதில் விழுகிறது. அவனால் கண்களைத் திறக்கவும் முடியவில்லை...

''ராஜ்.. கண்களைத் திறங்களேன்.. ராஜ்'' இப்போது காதருகில் அவளது குரல்... தெளிவாக.

மெல்ல கண்களைத் திறக்கிறான்...

ஊர்மிளா குனிந்து அவனைப் பார்க்கிறாள்.

சட்டென்று உறைக்கிறது.. இது கனவல்ல.. உண்மையில் ஊர்மிளா தான்.. என் இதயத்தை கிள்ளி எடுத்துச் சென்று பந்தாடிய ஊர்மிளாவேதான்.

ஏர்போர்ட்டில் முதன் முதலாக சந்தித்த போது அணிந்திருந்த அதே உடை... ஜீன்ஸும்.. அதே டீ ஷர்ட்டும்...

அவனால் தன் கண்களை நம்பமுடியவில்லை.

''ஊர்மிளா..'' மெல்லிய குரலில் முணுமுணுக்க...

''ஆம்.. ஊர்மிளாவேதான்.. ஏன் ஏர்போர்ட்டுக்கு வரவில்லை ராஜ்.. அன்றைக்கு கோணவிழி... குண்டுப் பெண்ணை வரவேற்க வந்தீர்களே... இன்றைக்கு ஏன் வராமல் இருந்துவிட்டீர்கள்.. என் மீது கோபமா.. இல்லை.. வரப்பிடிக்க வில்லையா...''

அதற்கு நேரடியாய் பதில் சொல்லாமல்... விசாரித்தான்.

''மனோஜ் எங்கே... வீட்டில் விட்டுவிட்டு வந்தாயா... எப்படி வந்தாய் ஊர்மிளா'' என்றவன் கண்களில்.. சற்று தூரத்தில் ஏஞ்சல் நிற்பதைக் கண்டான்...

''முதலில் என் கேள்விக்கு பதில் சொல்லுங்கள் ராஜ்... பிறகு உங்களுக்கு பதில் சொல்கிறேன். ஏர்போர்ட்டிற்கு எங்களை வரவேற்க ஏன் வரவில்லை... அதைச் சொல்லுங்கள்...'' விடாப்பிடியாய் அவள் கேட்டாள்.

''எங்களை''யா.. அப்போ... மனோஜும் வந்திருக்கிறான்... பொறாமைத் தீயில் வெந்துபோனான் அவன்.

''என்னால் வரமுடியவில்லை...'' என்றான் முகத்தைத் திருப்பிக் கொண்டு.

''வர மனமில்லை என்று சொல்லுங்கள் ராஜ்... ஏன்னா... என்னை நீங்க காதலிக்கிறீங்க...''

''இல்லை...'' என்ன பேச்சு இது.. யாராவது கேட்டால்...

''பொறாமையில் குமைகிறீங்க...''

''இல்லை.. இல்லை...'' அழுத்தமாய் மறுத்தான்...

''இல்லையென்றால்.. ஊர் விட்டுப் போனதும் ஊர்மிளா வேண்டாதவளாகிப் போனாள்... அப்படித்தானே''

''ஏன் இப்படிப் பேசுகிறாய்... ஊர்மிளா..''

''அப்போ.. உண்மையை ஒத்துக் கொள்ளுங்கள் ராஜ்... ஏன் இன்னும் உங்கள் உள்ளத்தை ஒளித்து வைக்கப்பார்க்கிறீர்கள்...''

அவன் ஏதும் பேசாமல் எங்கோ வெறித்தான்.

அவன் அருகில் அமர்ந்து அவனது கரத்தைப் பற்றினாள் ஊர்மிளா...

''என்னைப் பாருங்கள்... ராஜ்'' அவனது கரத்தை தன் கன்னத்துடன் வைத்துக் கொள்ள... அவன் கையை இழுத்துக் கொண்டான்.



''என்ன விளையாட்டு இது ஊர்மிளா.. இனியும் நீ சின்னப் பெண் இல்லை.. இன்னொருத்தனின் மனைவி.. இப்படி என்னைத் தொட்டுப் பேசுவதெல்லாம் சரியில்லை...'' கண்டிப்புடன் அவன் சொன்னதும்...

''என் ராஜை நான் தொடுவேன்.. யார் என்ன சொல்வது...'' என்று கேட்டாள் அவள்.

''ஊர்மிளா'' என்று கூவினான்.. அதட்டும் குரலில்...

''ஆமாம் ராஜ்.. நான் அப்படித்தான்... உங்களை இப்படித் தொடுவேன்.. இப்படி உங்கள் மீது சாய்ந்து கொள்வேன்.. ஏன்... உங்களுக்கு.. இந்த மாதிரி முத்தமும் கொடுப்பேன்...''

உண்மையில் இவளுக்கு புத்தி பேதலித்து விட்டதா என்ற ஐயம் அவனுக்கு வந்தது.

கல்யாணம் முடிந்து.. கணவனுடன் வந்திருப்பவள்.. காதல் என்று கொஞ்சுவதாவது.. இது என்ன விபரீதம்.. யாராவது பார்த்துவிட்டால்... அவளது வாழ்க்கையே நாசமாகிவிடுமே...

பயத்தில் அவளது கைகளை உதறிவிட்டு எழுந்தான். அவனது பதற்றத்தைக் கண்டு 'களீர்' என்று சிரித்தவள்.

''அய்யே.. பயந்தாங்குளி நீங்க... ராஜ்...'' என்று சொல்ல...

ராஜ்குமார் அவளை முறைத்தான்.

''இந்த விளையாட்டு போதும் ஊர்மிளா... வீட்டுக்கு போ.. நான் வருகிறேன்'' என்றான்.

''இருங்க.. இருங்க ராஜ்.. உங்கள் கேள்விக்கு நான் இன்னும் பதில் சொல்லவில்லையே... மனோஜ் வீட்டில் இல்லை... ஏன் என்றால் அவன் என்னுடன் வரவில்லை...

அதுவும் ஏன் என்றால் அவன் எனக்குக் கணவன் இல்லை... போதுமா விளக்கம்..."

அவன் அதைக் கேட்டுவிட்டு சிலையாகிப் போனான்... கால்களில் வேர் வளர்ந்து.. அது பூமியில் ஊன்றிவிட்டது போல அவன் அசையாமல் நிற்பதைப் பார்த்து குறும்பு சிரிப்பை உதிர்ந்தாள் ஊர்மிளா...



## 23

"ராஜ்" அவனை உலுக்கினாள் ஊர்மிளா...

அதிர்ச்சியில் இருந்து இன்னும் மீளாமலே அவன் கேட்டான்.

"என்ன சொல்கிறாய் ஊர்மிளா... விளையாட்டுப் பேச்செல்லாம் வேணடாம்..."

"எனக்குத் திருமணம் ஆகவே இல்லை என்கிறேன்... இது சத்தியம்... சத்தியம்... சத்தியம்... போதுமா..."

கன்னத்தில் குழிவிழ புன்னகைத்தாள்.

"ஏன்.... ஏன்..." குழப்பத்துடன் அவன் கேட்க...

"ஏன் என்றால் எனக்குப் பிடிக்கலை..." என்றாள் அவள் இன்ப அதிர்ச்சி! அதே சமயம். அவனால் நம்பவும் முடிய வில்லை.



உண்மைதானா... இல்லை... எப்போதும் போல இதுவும் குறும்புத்தனமா...

சந்தேகத்துடன் அவளை உற்று நோக்கினான்.

"இன்னும் நம்பிக்கை இல்லை... அப்படித்தானே ராஜ்... நடந்ததை முழுவதுமாய் சொல்கிறேன்... இருங்கள்.. ஊருக்குப் போயும் உங்க ஞாபகமாகவே இருந்தேனா. ஒரு நிமிடம் என்னால் உங்களை மறக்கவும் முடியவில்லை.. அழுகை அழுகையாக வந்தது... நீங்க கொடுத்த நாய் பொம்மையைப் பார்த்த போதெல்லாம் ஏதேதோ நினைவு வந்து இம்சை செய்யும்... நான் சோர்ந்திருப்பதைப் பார்த்து தாத்தா கேட்டதும்.. "ஓ" என்று அழுது விட்டேன்... மனசில் இருப்பதையெல்லாம் கொட்டி விட்டேன்.. தாத்தாவும் என்னை சரியாகப் புரிந்து கொண்டு விட்டார். "அவ்வளவு தானேம்மா... மனோஜின் பெற்றோருக்கு சொல்லி விடுகி றேன்..." என்று சொல்லி விட்டார். "ராஜ் வயது வித்தியாசம் என்கிறார் தாத்தா..." என்று நான் குறைப்பட்டுக் கொண்ட தற்கு என்ன சொன்னார் தெரியுமா ராஜ்.

"காதலுக்கு வயசு இல்லேம்மா... எனக்கும் உங்க பாட்டிக்கும் பதிமூன்று வயசு வித்தியாசம்... தெரியுமா நாங்க சந்தோஷமா வாழவில்லையா... இதை ராஜ் குமாருக்கு நான் எடுத்துச் சொல்கிறேன்" என்றார்.

"அப்போ... அந்த திருமண அழைப்பிதழ்..."

"கவிர்" என்று சிரித்துவிட்டுச் சொன்னாள் அவள்.

"அது என்னோட ஐடியா... உங்களுக்கு மட்டும் அச்சடிக் கப்பட்ட அழைப்பிதழ்... ஒரு பொருளை இழந்துட்டோம் என்றபோதுதான் அதனோட அருமை தெரியும்னு தாத்தா அடிக்கடி சொல்வார். அந்த இழப்பு என்ன என்று நீங்கள் உணர வேண்டும் என்றுதான் செய்தேன். என் தாத்தாவும்

ஒத்துழைத்தார்... வேண்டும் என்றே உங்களை திருமணத்திற்கு வரச் சொன்னார்..."

"ஓ... இதில் அவரும்.. கூட்டா..."

"ஏன்... பாட்டியும் தான்..."

ஆச்சர்யமும்... திகைப்புமாய் பார்த்தான் அவன்.

"என் தாயாரா... இதென்ன புதுக்கதை..."

"ஆமாம்... இங்கே என்ன நிலைமைன்னு தெரிந்து கொள்ள பாட்டிக்கு போன் செய்தேன்... பாட்டி உங்க நிலையை சொன்னார்.. "பித்துப் பிடித்தவனாட்டம் இருக்கிறான் ஊர்மிளா... சரியா சாப்பிடுவதும் கிடையாது.. எதையோ பறி கொடுத்தவன் மாதிரி... கலகலப்பில்லாமல் இருக்கிறான்... என்னன்னு தெரியலே... வீணாவை மறுத்து விட்டு வந்துவிட்டான் தெரியுமா..." என்றார் பாட்டி.

"அதனால் நம்பிக்கை வந்ததாக்கும்..."

"அதற்கு மேலும் ஒரு விஷயத்தைப் பாட்டி சொன்னதைக் கேட்டு முழு நம்பிக்கையும் வந்தது... அது உங்களுக்கே தெரியாத உண்மை... ராஜ்" ஏதோ மர்ம நாவலின் முடிவு போல சஸ்பென்ஸுடன் நிறுத்தினாள் அவள்.

ராஜ்குமாரின் புருவங்கள் மேலேறின... நான் அறியாத உண்மையா... அது என்ன... மலைத்தான்.

"நீங்கள் காய்ச்சலில் கிடந்தபோது... நினைவிழந்து போன நிலையில் என்ன பிதற்றினீர்கள் தெரியுமா ராஜ். "ஊர்மிளா... ஊர்மிளா"ன்னு என் சகஸ்ரநாமம்தான்! அப்போதுதான் பாட்டிக்கும் தெரிய வந்ததாம்... நீங்க என்னைத்தான் விரும்பறதுன்னு..."

உண்மையில் இந்த விஷயம் அவனுக்கு அதிர்ச்சியாக இருந்தது... இத்தனை நாளும் எல்லாம் தெரிந்தும் ஒன்றுமேத் தெரியாதவர் மாதிரி நடித்திருக்கிறார் அம்மா!



இதெல்லாம் அவன் எதிர்பாராதது... எதிர்பாராதது எல்லாம் நடப்பது தான் வாழ்க்கையாயிற்றே...

தன் காதல் வெட்ட வெளிச்சமானதை நினைத்து அவன் முதலில் வெட்கப்பட்டாலும்... அதுவும் ஒருவிதத்தில் நல்லது தான் என்று தேற்றிக் கொண்டான்...

இதயம் இப்போது இனிய ராகத்துடன் ஒலிப்பது போல தோன்றியது...

"இப்போ புரிந்ததா ராஜ்... நான் ஓடிவந்த காரணம். உடனே வந்தால் உங்களுக்கு சந்தேகமாக இருக்கும் என்று தான் தாமதமாக இங்கு வந்தேன்... போதுமா விளக்கம்" என்றாள் ஊர்மிளா.

"ஒரே ஒரு கேள்வி... எங்களை என்றாயே... உன்னுடன் வந்திருப்பது யார்..." என்று அவன் கேட்டதும்...

"என் தாத்தா தான்... உங்களை சந்திக்க விரும்பி வந்திருக்கிறார்... சரி... இப்போது என்னை மனைவியாக ஏற்றுக் கொள்ள தயக்கம் ஏதும் இல்லையே" என்றாள் அவள்.

அவன் ஏதோ தயங்குவது கண்டதும்... அவள் திரும்பினாள்.

"ஊர்மிளா... எங்கே புறப்பட்டாய்..." என்று அவன் கேட்டதும்...

"இன்னும் நீங்கள் தயங்கறதைப் பார்த்தால்... என் முயற்சியெல்லாமே வீணோ என்று தோன்றுகிறது ராஜ்... அதான் புறப்பட்டேன்... வருகிறேன்..." என்று ஏஞ்சலை நோக்கி சென்ற அவளைத் தடுத்தான் ராஜ்குமார்.

"நான் ஏன் தயங்கினேன் தெரியுமா ஊர்மிளா... நீயும் நானும் டெவில் மீது போனால்... ஏஞ்சல் தனியாக வரவேண்டுமே... என்றுதான்..." அழகாய் சிரித்தான் அவன்.

''ராஜ்!'' மகிழ்ச்சியில் கூவினாள் அவள்.

''ஆமாம்... டார்லிங்... உன் மீது எனக்கிருக்கும் காதலை இனி மறைக்கவும் மாட்டேன்... அதை மறுக்கவும் போவதில்லை...''

''அப்போ... காட்டுங்களேன் ராஜ்... நான் காத்துக் கொண்டிருக்கிறேன்...'' சீண்டினாள் ஊர்மிளா...

''காட்டணும் என்ற ஆசைதான்... ஆனால் எப்படி என்று தான் தெரியவில்லை... டார்லிங்...''

''ஈஸி ராஜ்... இதோ இப்படி...'' என்று அவனது கரங்களை எடுத்து தன் சின்ன இடையில் சுற்றிக் கொண்டாள்.

''அப்புறம்.. இப்படி...'' தன் கைகளால் அவனது கழுத்தை வளைத்து... அவனது உயரத்திற்கு எம்பி... தன் இதழ்களை... அவனது உதடுகளில் பதிக்க...

அவனது அணைப்பு இறுகியது.

சில வினாடிகளுக்குப் பிறகு தலை நிமிர்ந்த ராஜ்குமாரின் முகத்தில் பரவசம்... கண்களில் பளபளப்பு...

''மை காட்! ஊர்மிளா... உனக்கு வெட்கம்... நாணம் எல்லாம் மறந்து விட்டதா என்ன...'' என்று சிரித்தவன்...

மீண்டும் அவளை நோக்கி குனிய...

டெவில் கனைத்தது...

ஊர்மிளாவை அணைத்தவாறு அமர்ந்திருந்தான் ராஜ்... அவளது தலை அவனது மார்பில் சாய்ந்தபடி... அவன் ஏங்கிய அதே நிலையில் இருவரும் டெவில் மீது சவாரி...

தன் எஜமானனையும்... அவரது உயிருக்கு உயிரானவளையும் சுமக்கும் கர்வத்துடன் தலை நிமிர்ந்து அது நடக்க... அருகே ஏஞ்சல் அழகு நடை போட்டது.